

# ஈழக் கதவுகள்

சூரியதீபன்

# ஈழக் கதவுகள்

தோழமை [illegible]
அரவிந்தன் அவர்கள்.
[illegible]
5.3.07

## சூரியதீபன்

தோழமை வெளியீடு

**ஈழக் கதவுகள்**

© சூரியதீபன்


| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | சனவரி 2007 |
| வெளியீடு | : | **தோழமை வெளியீடு**<br>5 D, பொன்னம்பலம் சாலை<br>கே.கே.நகர், சென்னை-78<br>கைபேசி : 9444302967 |
| ஒளிஅச்சு | : | ஐரிஸ் கிராபிக்ஸ்<br>கோவை-15. பேசி: 0422-2577941 |
| வடிவமைப்பு | : | அடவி வரைகலை, சென்னை-78.<br>பேசி: 24742886 |
| அட்டை வடிவமைப்பு | : | **ஓவியர் புகழேந்தி** |
| அச்சு | : | ஜோதி எண்டர்பரைசஸ், சென்னை-5 |
| விலை | : | **ரூ.100/-** |


**Eelak kadavugal**

**© Suryatheeban**


| | | |
|---|---|---|
| First Edition | : | January 2007 |
| Publisher | : | **Thozhamai Veliyeedu**<br>5D, Ponnambalam Salai<br>K.K.Nagar, Chennai-78.<br>Mobile : 9444302967 |
| Typesetting | : | Iris Graphics, Coimbatore-15<br>Ph: 0422-2577941 |
| Layout | : | Adavi Graphics, Chennai-78<br>Ph: 24742886 |
| Wrapper Design | : | **Oviar Pugazhendhi** |
| Printed by | : | Jothy Enterprises, Chennai-5 |
| Price | : | Rs. **100/-** |

## பதிப்புரை

மண்ணையும் மக்களையும், ஈரமும் வீரமும் மாறாத மொழியில் தம் படைப்புகளில் வெளிப் படுத்துகிற கரிசல் இலக்கிய கர்த்தாக்களில் ப.செயப்பிரகாசம் (சூரியதீபன்) தனித்துவமான இடத்தைப் பெற்றவர். வறண்ட வாழ்வின் சுவாரசியமான கூறுகளை சொலவடைகள், வட்டார வழக்குகளோடு எழுத்தில் பதியமிடுகிற இவரது படைப்புகள் கவித்துவ நடையால் மற்றவர் களிடமிருந்து வேறுபடுகின்றன. 'தெக்கத்தி ஆத்மாக்களில்' கள்ளங்கபடமற்ற கரிசல் மனிதர்களின் ஆத்மாவை திறந்து காட்டிய இவர், சிறுகதை, கவிதை, கட்டுரை என படைப்புலகின் அனைத்து வெளிகளிலும் சலியாது இயங்கி வருகிறவர். தமிழின் சிறந்த சிறுகதைகளில் இவரது 'ஒரு ஜெருசலேம்,' 'காடு,' 'வேரில்லா உயிர்கள்' போன்றவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

மக்களை நேசிக்கிற இவர் சமூகப் பிரச்சினைகள் எழும்போதெல்லாம் உரக்கக் குரல் கொடுப்பதில் முன்னணியில் நிற்பவர். தலைதூக்கும் அதிகாரங்களை நோக்கி தம் எழுதுகோலை ஆயுதமாக தாங்கிப் போராடும் மதிப்பிற்குரிய ப.செயப்பிரகாசம் தமிழீழத்தின் மீது அக்கறையும், கருணையும் காட்டி வருகிறவர்.

ஒரு சிறப்பு அழைப்பின் பேரில், ஈழம் சென்று வந்த அனுபவத்தை மட்டுமே பகிர்ந்து கொள்ளாமல் பல்வேறு தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்களையும் சுட்டிக் காட்டி, தன்னுடைய பயண அனுபவத்தை, 'ஈழக்கதவுகள்' மூலமாக ஒரு விவாதமாக மாற்றிக் காட்டுகிறார்.

ஒரு சமூகப் பொறுப்புள்ள படைப்பாளியின் **ஈழக் கதவுகள்** என்ற நூலை வெளியிடுவதில் தோழமை வெளியீடு பெருமை கொள்கிறது. இதுபோன்ற நேர்த்தியும் அடர்த்தியும் மிக்க படைப்புகள் சமகாலத்தின் முகமாக எதிர்காலத்தை விசாரிக்க உதவும்.

தோழமை
பதிப்பாளர்

# திறந்த கதவுகள்

## இன்குலாப்

யாழ் சென்று வரவேண்டும் என்ற நோக்கத்தில் தான் முதன்முதலாகக் கடவுச்சீட்டு(passport)க்கு விண்ணப்பித்தேன். ஆனால் யாழ்ப்பாணம் என் முதல் பயணமாக அமையவில்லை. இப்போதைக்கு என் கடைசிப் பயணமாக யாழ் போய் வந்தது அமைந்தது.

19.10.2002இல் தொடங்கிய 'மானுடத்தின் தமிழ்க்கூடல்' ஐந்து நாள் மாநாட்டுக்கு நாங்கள் போய் வந்தோம். அரசியல் இயக்கத்தின் தலைவர் திருமாவளவன் கதாசிரியர் பா.செயப்பிரகாசம் (சூரியதீபன்), ஓவியர் மருது, திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், நான் இப்படி ஒரு பன்முகத் தன்மை கொண்டதாக-தமிழகத்திலிருந்து புறப்பட்ட எங்கள் குழு அமைந்திருந்தது. சில பயணங்களில் உடன் வந்தவர்களின் நட்பற்ற தன்மை என்னை வருத்தியதுண்டு. ஆனால் இந்தப் பயணம் அப்படி இல்லை. அனைவரும் எனக்கு முன்பே அறிமுகமான தோழர்கள். பயணத்தின் போது ஒருவருக்கொருவர் உதவும் மனத்துடனும், மகிழ்ச்சியுடனும் வந்தார்கள்.

இந்தக் குழுவில் எழுத்தை முதன்மையாகக் கொண்டவர்களாகத் தோழர் செயப்பிரகாசமும் (சூரியதீபன்) நானுந்தான் இருந்தோம். எனினும் பயணத்தில் கண்டவற்றைக் குறிப்பெடுத்து எழுத்தாக்க வேண்டும் என்று நான் முனைய வில்லை. செயப்பிரகாசம் (சூரியதீபன்) சிறிதும் சோம்பலின்றிக் குறிப்பெடுத்துக் கொண்டு வந்தார். அந்தக் குறிப்புகளின் பின்னணியான அனுபவங்களும் செய்திகளும்தான் 'ஈழக் கதவுகளாக' இப்பொழுது திறக்கின்றன.

போய்வந்தபின் உணர்வுகள் சிலவற்றைக் கட்டுரைகளாகவும் கவிதைகளாகவும் பதிவு செய்துள்ளேன். ஆனால் அது பயணநூல்

இல்லை. சூரியதீபன் செய்திருப்பது பயண இலக்கியம். கொழும்பு நகரத்தின் பொலிவையும், மலையகத்தின் இயற்கைக் காட்சி களையும், சுவைத்து எழுதிய பயண இலக்கியம் இல்லை. அந்த மண்ணின் காயத்தையும் கண்ணீரையும் உணர்த்தும் ஓர் அனுபவ இலக்கியம்.

கொழும்பு கட்டுநாயக விமான நிலையத்தில் இருந்து மறுநாள் யாழ் புறப்பட்டதும், யாழில் நாங்கள் கண்ட காட்சிகளும் வெறும் விவரணத் தொகுப்பாக இந்நூலில் செய்யப்படவில்லை. மானுடத்தை நேசிக்கும் ஒரு கலைஞனின் ஊடறுத்துச் சென்ற பார்வையின் காட்சிப் படிமங்களாக இந்த எழுத்துகள் இயங்குகின்றன.

சூரியதீபனுடன் தான் நான் பயணம் செய்தேன். எனினும் அவர் எழுத்துகளில் ஊடாடும்போது, நான் மீண்டும், ஒரு புதிய பார்வையுடன் இந்தப் பயணத்தைச் செய்வது போல இருக்கிறது.

பல இடங்களில் சூரியதீபன் வெறும் பார்வையாளனாக நிற்காமல், தோற்றத்துக்குப் பின்னுள்ள சூத்திரக் கயிறுகளைப் பிடித்து இழுத்துப் பார்க்கும் ஒரு சமூக விஞ்ஞானியாகவும் நிற்கிறார். ஆனால் வறட்சியான சூத்திரங்களாகச் சொல்லாமல் தேர்ந்த இலக்கியவாதியின் கலை வெளிப்பாடாகச் சொல்லிச் செல்கிறார்.

மாநாட்டு வருணனை, யாழுக்குள் நுழையுமுன் நிகழும் சோதனைச் சாவடியின் கெடுபிடிகள், இராணுவத்தின் பிடியில் யாழ், சொல்லியும் சொல்லாமலும் இயங்கும் யாழ் மக்களின் வாழ்க்கை, செம்மணிப் படுகொலை, அதன் பின்னணி இப்படிப் பல்வேறு களங்களில் கண்ட காட்சிகள் எல்லாம் மிகமிக நுட்பமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அனைத்துப் போராளி இயக்கத்தவர்களையும் சந்திக்க முடியாவிட்டாலும் வேறுபட்ட சில இயக்கத்தவர்களைச் சந்திக்க முடிந்தது. கொழும்பு விமான தளத்திலிருந்து நாங்கள் வெளியே வந்தபோது 'இன்குலாப்' என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். புன்னகை தவழும் முகத்தோடு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேம் சந்திரன். நான் அவர் முகத்தை மறந்திருக்கலாம் என்ற நினைவோடு "நான் சுரேஷ் பிரேம் சந்திரன்" என்றார். கொழும்பில் நாங்கள் தங்கியிருந்த விடுதியில் எங்களை வரவேற்றவர் சிவாஜிலிங்கம். தமிழீழ விடுதலை

அமைப்பின் நாடாளுமன்றத் தலைவர். மானுடத்தின் தமிழ்க்கூடல் மாநாட்டில், அந்தோணி ஜீவா, டொமினிக் ஜீவா, வ.ஐ.ஜெய பாலன், புதுவை ரத்தினதுரை, கவிஞர் சு.வில்வரத்தினம், தெளிவத்தை ஜோசப், செ.யோகநாதன் இப்படிப் பல்வேறு தளங்களில் நின்றவர்களின் சங்கமம் அது.

தோழர் சுரேஷ் பிரேம் சந்திரன் என்னையும் சூரியதீபனையும் தம்முடைய அலுவலகத்துக்குத்தான் முதலில் அழைத்துச் சென்றார். அலுவலகத்தில் பத்மநாபாவின் படம். அத்துடன் களச்சாவு எய்திய பலரது படங்கள். ஒருகணம் நிலைகுலைந்து போய் நின்றேன். என்னுடன் வந்தவர்கள் என்னைக் கவனித்தார்களோ என்னவோ?

எங்களால் ரஞ்சன் என்று அன்புடன் விளக்கப்பட்ட பத்மநாபாவின் படம் என்னுள் பல நினைவுகளைக் கிளறியது. எனது அன்புக்கும் மரியாதைக்குரிய தோழராக அவர்தான் முதலில் அறிமுகமானார். இருப்பினும் தமிழகம் வந்த அவரை இந்திய அரசின் 'ரா' (RAW) அரவணைத்துக் கொண்டது. அவர்கள் தொடங்கிய தேவநேயப் பாவாணர் அச்சகத்தில் நான் என் மாலைப் பொழுதுகள் பலவற்றைக் கழித்தேன். சில நாட்களில் தோழர்களின் முகம் மாறியது. என் வருகையை விரும்பாத போக்கு தலை தூக்கியது. 'ரா'வின் வழிகாட்டல் அப்படி.

அதன்பிறகு அமைதிப்படை யாழில் நுழைந்தபோது அமைதிப் படையின் உளவுப் பிரிவாக இ.பி.ஆர்.எல்.எப். தோழர்கள் செயல்பட்டனர். நாங்கள் முகம் கொடுத்துப் பேசமுடியாதபடி பிரிந்தோம்.

அந்த பத்மநாபாவின் அலுவகத்தில் நான் விருந்தாளியாக நின்றேன். தமிழீழ விடுதலைப் போராட்டம் பல களங்களைக் கடந்துள்ளது. புலிகள் பாரிய வெற்றிகளைச் சாதித்துள்ளனர். ஆயினும் சுரேஷ் பிரேம் சந்திரன், சிவாஜிலிங்கம் போன்றோரை ஈர்த்ததைத்தான் பெரும் வெற்றியாகக் கருதுகிறேன்.

ஈழப்போரில் காயமுற்றுச் சென்னையில் சிகிச்சை பெற்று வந்தவர் தோழியர் கௌதமி. அவர் கனடா சென்று விட்டார் என்று இருந்தேன். போரில் ஊனமுற்று பெண்களின் மறுவாழ்வு இல்லத்தில் தோழியர்களோடு உரையாடியபோது கௌதமியைப் பற்றிக் குறிப்பிட்டேன். உடன்வந்த தோழர் சேரலாதன், கௌதமி பக்கத்தில்தான் இருப்பதாகச் சொன்னார். அவரைப் போய்ப் பார்த்தேன். அன்பும் அறிவும் மிளிரும் முகம் கௌதமியினுடையது.

அவரைச் சந்திக்காமல் திரும்பி இருந்தால் என் ஈழப்பயணம் முழுமை பெற்றிருக்காது.

சென்னையில் பேபி சுப்பிரமணியமாக இருந்தவரை, இளங்குமரனாக அங்கு சந்தித்தேன். யாழ் தமிழர்களுக்குச் சமஸ்கிருதத்தில் பெயர் வைப்பதில் ஒரு மோகம் ஒரு காலத்தில் இருந்தது. நாங்கள் போனபோது பெரும்பாலான பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக இருந்தன. தமிழினி, அலைமகள், கலைமகள் இப்படிப் பலர். உடலால் ஊனமுற்ற வீரர்களும் வீராங்கணை களும் மனசால் ஊனமுறாமல் உலா வந்தார்கள். இளங்குமரன் கல்வித் துறைக்குப் பொறுப்பாளராக இருக்கிறார். வரலாற்றை மீட்டெழுதிப் பாடநூல்களாக அறிமுகம் செய்ததில் அவரது பங்கு முதன்மையானது.

மாநாட்டின் ஒவ்வொரு இரவிலும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. போர் வாழ்க்கையை கலைத்துவமாகச் சித்தரித்த சில நாடகங்களைக் கண்டு வியந்து நின்றேன்.

வெளிநாட்டுப் பயண அனுபவங்களில் யாழ்ப்பாணம் தனித்துவமானது. நாங்கள் பார்த்த யாழ், போரால் காயமுற்றுக் கிடந்தது. கட்டிடங்கள் வலுவற்று நின்றிருந்தன. மணல் எங்கும் செல்குப்பிகள். சாலை எங்கும் மிதிவெடி எச்சரிக்கைகள். இந்தச் சிதிலங்களுக்கிடையிலும் மண்ணில் பசுமை துளிர் விடுகிறது. மக்கள் நம்பிக்கையோடு இயங்குகின்றனர்.

இந்தச் செய்தியை நான் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். என்னிடமிருந்து சில கவிதைகள் வந்தன. இன்னும் வரும். சில கட்டுரைகள் எழுதினேன். இன்னும் எழுதலாம்.

தோழர் சூரியதீபன் இடையிடையே அவர் மேற்கோள் காட்டும் பஞ்சாபிக் கவிதைகள் தமிழ் அனுபவத்துக்கு நெருங்கியதாக இருக்கிறது. இன்று பஞ்சாப் அடங்கியதாகத் தோன்றுகிறது. ஆனால் போராளிகளின் தியாகமும் போராட்டமும் ஈழவிடுதலைப் போரை உயிர்ப்புடன் முன்னிறுத்திக் கொண்டிருக்கிறது.

போர் நடந்த அந்தப் பூமியை தோழர் சூரியதீபன் அள்ளிக் கொண்டு வந்திருக்கிறார். அந்த மண்ணின் கதவுகளைத் திறந்து விட்டிருக்கிறார். இது தமிழகத்தின் மனங்களை அசைக்கும் என்று நம்புகிறேன்.

## ஈழக் கதவுகள்

சூரியதீபன்

உலகில் வேறெந்த மண்ணிலிருந்தும் இத்தனை பேர் புலம்பெயர்ந்து போயிருக்கமாட்டார்கள். உள்நாட்டு யுத்தம் அல்லது இன்னொரு நாட்டு ஆக்கிரமிப்பில் எந்த நாடுகளிலும் இந்த சின்னஞ்சிறு நாட்டில் போல இத்தனை பேர் பலி கொண்டிருக்கப் பட்டிருக்கமாட்டார்கள்.

நடந்தது. அந்த மக்கள் தம் மண்ணில் வாழ்ந்ததும் ஒரு கனவாக ஆகியது. பனிக்குடம் உடைந்து சூலிலிருந்து குழந்தை வெளிப் படுகிற வேளையில், தாய்க்கு ஒரு ஆசுவாசம் தோன்றுமே, அது போலொரு மகிழ்ச்சியின் தருணமாக விடிவின் கீற்று தென்பட வில்லை. தாங்கள் பிறந்ததற்காக சபித்துக் கொண்டே வெளியேறினார்கள்.

இன்னொரு பக்கம் மண்ணில் வாழ்ந்தவர்கள் போராடி னார்கள்; போராடியபடியே மரணித்தார்கள். வாழ்தல் போராடுதலுக் கென்றும், போரிடுதல் வாழ்வதற்கென்றும் நடைமுறையானது. அவர்கள் யுத்தத்தையே வாழ்ந்தார்கள்.

கூப்பிடு தூரத்தில் தான் இருக்கிறது ஈழம்.

வியட்நாம் அழைத்ததா? நாம் போனோம். க்யூபா கூப்பிட்டதா? நாம் போனோம்; பாலஸ்தீனம் அழைத்ததா? போனோம். பூமிப் பரப்பில் கொடூரம் விதைக்கப்படும் எந்த மண்ணும் அழைக்காமலே, மானுடநேயராய் குரல் தந்தோம்.

கூப்பிடாத குரலுக்கு நாமொரு சாட்சியாய் நடந்தோம்.

ஈழம் அழுது அழுது கூப்பிட்டபோதும் கேட்காத காதுகள், இரக்கமில்லா இதயத்துடன் நின்றோம்.

சூரியதீபன்

போய் இறங்கிய போது கூட, ஆப்பம் பகிர்ந்து கொடுத்த அடாவடிக் குரங்காய் நடந்து கொண்டது இந்தியா.

கதவு திறந்தால் உள்ளே இருப்பவைகள் காட்சியாகின்றன. உள்ளிருப்பவருக்கு வெளியே நடப்பது காட்சியாகிறது. வீதிதாண்டி ஊர், ஊர் கடந்து நகர் என ஏற்கெனவே மனசுக்குள் இறங்கியிருக்கும் ஒவ்வொன்றாய் புலனாகிறது.

உள்ளே இருப்பவைகளை வெளியேயும், வெளியே நிகழ்பனவற்றை உள்ளேயும் காட்டுவது கதவு.

செய்தி இதழ்கள், தொலைக்காட்சிகள், ஊடகங்கள் என்பது வாசற்கதவு. உலகெங்குமுள்ள ஊடக சக்திகள் தங்கள் நலனை முன்வைத்து எவ்வாறு கதவடைத்துக் கொள்ளுமோ அது போலவே தமிழகத்திலும் நடந்தது. ஈழமக்கள் போராட்டம் பற்றி இங்குள்ள ஊடகங்கள் உண்மை பேசவில்லை. நடுவில் இரும்புக் கதவுகளை நட்டுக் கொண்டன.

அரசியல் கட்சிகள் தெரிந்தே அதே வேலை செய்தன. சுயநலன், தனிமனிதனுக்கு மட்டுமல்ல, இயக்கங்களுக்கும் உண்டு என நிரூபிப்பனவாய் நடந்தன. ஒவ்வொரு பிரச்சினையையும் தன்னிலையாக அளவிடுகின்ற கட்சிகள் அதே அளவுகோலை ஈழத்துக்கும் எடுத்து வந்தன.

ஈழத்தின் கிழக்குப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலைப் பண்பாட்டுத்துறைப் பேராசிரியர் மௌனகுரு, இன்னொரு இடத்தில் வேறொரு விசயத்தை விளக்க வருகிறபோது "படித்தவர்கள் கண்களைத் திறப்பது தானே இன்று பெரும் கஷ்டமாக இருக்கிறது" என்றார்.

நமது இதழியல் தர்மமோ, அரசியல் அறமோ(?) உலகம் கொண்டு வந்து சேர்க்கிற தகவல்களின் நெஞ்சை வகிர்ந்து உண்மையை உள்ளிருந்து தெண்ணி எடுக்கும் போக்கை கைக் கொள்வதில்லை; அவ்வப்போதைய தன்னிலைக்காக, அவ்வப் போதைய தேவைக்காக தமக்குள்ளிருக்கும் சிந்தனையாளரை மூழ்கடித்து விடுகிறார்கள்.

இந்த முன்னுரையைத் தயாரித்துக் கொண்டிருக்கிற இன்றும் ஒரு செய்தி *(13.5.05)*

“இலங்கையின் இறையாண்மையை, ஒற்றுமையைச் சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையையும் இந்தியா ஆதரிக்காது. அதே நேரத்தில் இலங்கத் தமிழர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும்”

இலங்கையின் இறையாண்மை, ஒற்றுமை என்பது யாது? தமிழர் நலன் என்பது யாது?

இரண்டும் அருகருகே நிற்காத - ஒன்றுக்கொன்று முரண்கொள்கிற விசயங்கள்.

சிங்களப் பேரின வாதம் பௌத்தப் பேரினவாதமாக பரிமாணம் கொண்டுவிட்டது. பிரித்தானியர்கள் தாமாகவே கை உதறிவிட்டுப் போன 1949லிருந்து இலங்கையின் ஒற்றுமையைப் படிப்படியாக அறுக்கும் வேலையை இலங்கைப் பேரினவாத அரசு செய்தது.

“விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு பயங்கரவாத ஆபத்து மிக்க உயிர்ச்சேதம் ஏற்படுத்தக் கூடிய நன்கு பயிற்சி பெற்றவர்கள் கொண்ட ஒரு அமைப்பு.” இந்திய அரசு அறிக்கையின் தொடர்ச்சி இது.

இந்திய அரசு உதிர்த்த இந்தச் செய்தியை ஆரம்பப் பள்ளிகளில் சொல்வார்களே ‘ஈயடிச்சான் காப்பி’ அதுபோல் ஊடகங்கள் அப்படியே முன் வைக்கின்றன.

பிரச்சினைகள் ஒரு போதும் முளைப் பருவத்திலேயே தங்கியிருப்பதில்லை. தனிநபர் வீரமாகத் தொடங்கி, கொரில்லா அமைப்பாக முன்னடந்து, மரபுவழி படைக் கட்டமைப்பாக தனக்கென தனி நிர்வாக வட்டாரத்தைக் கொண்டதாக மாற்றம் பெற்ற விட்டது விடுதலைப் புலிகள் இயக்கம்.

இந்த வளர்நிலைக்கு காது கொடுக்காதவை இந்திய ஊடகங்கள்.

ஈழ விடுதலைப் போர் பற்றிய வெளிப்பாட்டில் இழவுக் கொட்டு அடிக்க மட்டுமே தேர்ந்திருந்தன தமிழ் ஊடகங்கள்.

ஒரு கதவு அடைக்கப்படுகிற போது இன்னொரு சிறு சாளரம் திறக்கப்படுகிறது. எங்கள் ஈழப் பயணத்தில் அந்த அதிசயம் நடந்தது. முன்னரும் இப்போதும் ஊடகங்கள் பல கதவுகளை மூடியபோது, 2002 அக்டோபர் 18,19,20,21 ஆகிய நான்கு நாட்கள், யாழ்நகர் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வுற்ற ‘மானுடத்தின் தமிழ்க்கூடல்’ மாநாட்டில் எங்களுக்குப் பல சாளரங்கள் திறந்தன. அதன் வழி

தெரிந்த ஒரு காட்சி- ஈழப் போராட்டம் பற்றி இங்குள்ள இதழ்கள், தொலைக்காட்சிகள், அறிவாளர்கள் உண்மை பேசவில்லை என்பது; இன்னுமொன்று உண்மை தேடாத மொட்டை மூளையாளர்கள் உலகெங்கிலு மிருக்கிறார்கள் என்பது.

நேரடியாய் நாங்கள் ஈழத்தில் கால் வைத்தபோது, இந்த அறிவு வங்கிகளின் கற்பனை முடிந்து போயிருந்ததைக் கண்டோம்.

ஒருவேளை அமைதிப் பேச்சு வார்த்தை முடிவு பெற்று அந்த பூமி இயல்பாய் உடுத்திக் கொள்ள ஆரம்பித்திருந்தால் இன்னும் சில ஆண்டுகள் கழித்து- நாங்கள் கால் பதித்திருந்தால், அதன் தற்போதைய முகம் எங்களுக்கு கிடைத்திருக்காது. போரில் அம்மக்கள் இருந்த இருப்பை, போரையே அவர்கள் வாழ்ந்ததை, கந்தல் கந்தலாக்கப்பட்ட உறவுகளை, இடிபாடுகளை நாங்கள் கண்டோம். யுத்தம் கெதியாய் நடந்து கொண்டிருக்கிற காலத்திலோ, யுத்தத்தின் அழிவுகள் சீரமைவு செய்யப்பட்டுவிட்ட காலத்திலோ இல்லாமல், சரியான தருணத்தில் அழைக்கப்பட்டுச் சென்றிருந்தோம்.

வரலாறு தன் போக்கில் நிகழ்வதில்லை. அது நிகழ்த்தப் பட்டுக் கொண்டிருப்பது. நமக்கு முன்னே நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் வரலாற்றை பயில் நிலமாக ஆக்கி, கற்றுக் கொள்ள நிறைய உண்டு.

இது வரலாற்று ஆய்வு அல்ல; வரலாற்றைப் பதிவு செய்யும் வேலை. ஒரு வரலாறு நிகழ்ந்த போது, இங்குள்ளோர் கண்களுக்கு அது மறைக்கப்பட்டது எவ்வாறு என்ற அந்த ஒரு பக்கத்தை தூசு போகத் தட்டி எடுத்து வைப்பது.

சமுதாயத்திற்குள்ளிருக்கிற பல்வேறு சக்திகள் தமக்குள் முரண்பட்டு, தம் நலனை முன்னிறுத்தி காரியங்களை முன்னெடுக்கிறபோது வரலாறு விளைகிறது. முரண்பட்ட சக்திகளின் இயங்குதல் திட்டமிடப்படாதது அல்ல.

பிரதானமாக ஈழ வெகு மக்களுடைய நலன்களும் சிங்களப் பேரினவாத ஆதிக்கப் போக்கின் நலன்களும் முட்டிக் கொண்டு யுத்தமாய் நின்றபோது அந்த அடக்குமுறைகள், கொடூரங்கள், சிதைவுகளை மக்களின் வாழ்க்கையிலும் நிலத்திலும் கண்டோம். மக்களுக்காய் போராளிகள் எதிர்கொண்ட முறைமைகளையும்

கண்டோம். நாங்கள் காண நேரிட்டதும் அந்த நேரத்தில் நாங்கள் பரிமாறிக் கொண்டதுமான உணர்வுகளின் தொகுப்பு இது.

எங்கெங்கோ காணாமல் போன சிதறடிக்கப்பட்ட வாழ்க்கையை அந்த மக்கள் இனி ஒன்று கோர்க்க வேண்டும். அதற்கு ஐம்பது, நூறு ஆண்டுகள் எடுக்கலாம். எவ்வளவோ முட்டியும் முயன்று பார்த்தும் சிலரது வாழ்வு மீட்டெடுக்கப்பட முடியாமல் போகலாம். வாழ்ந்தும் வாழாமல் அலைகிற அவர்களின் கதைகள் எதிர்வரும் தலைமுறையினருக்கு நூற்றாண்டுகளுக்கும் மேலாய் சொல்வதற்கு நீளும்.

அந்தத் துயரக் கதையை, துயரத்திற்குள்ளிருந்து முளைத்த வீரவரலாற்றை உடனே சொல்லிவிட முயன்றேன். இரு ஆண்டுகள் கடந்து போயின. இப்போதேனும் முடித்தற்காக என்னைப் போலவே இன்குலாபும் மகிழ்ச்சி கொண்டிருப்பார். நாற்று முடிபோல் ஒரு மதிப்புரையை வழங்கிய நண்பர் இன்குலாபுக்கு நன்றி சொல்கிறேன்.

1. ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை -எஸ்.எம். கோபு

2. நினைவலைகள்- கே.ஜி.மகாதேவா, மித்ரா பதிப்பகம.

3. இருபதாம் நூற்றாண்டின் அடிமைத்தனம்- ஈரோஸ் அமைப்பின் மலையக மக்கள் பற்றிய ஆய்வு

இந்நூல்கள் எனக்கு ஆதாரமான சில தரவுகளைத் தந்துதவின. இந்நூலாசிரியர்களுக்கு நன்றிகள். குறிப்பாக செம்மணிப் புதை குழிகள்- பற்றிய குறிப்புகளை தந்துதவிய திராவிடன் செய்தியகம் மதிவாணன் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

நான் எழுதிய தெளிவில்லாக் கோடுகளை அச்சுப்பதித்தது போல் தன் எழுத்தால் நகலெடுத்துக் கொடுத்த என் தம்பி மகள் தீபாவுக்கு, என் பல்வேறு படைப்புகளை சலிக்காமல் , சளைக்காமல் தட்டச்சு செய்து கொடுக்கிற தோழர் வசந்தன் அவர்களுக்கு நன்றிகள்.

சூரியதீபன்

## புதிய சொல்லாடல்

அடக்குமுறையாளர்களை வீரர்களாகப் பதிவு செய்கிறது சரித்திரம். மனிதநேயனாக, மாண்புமிக்கோராக, மாவீரர்களாக சமுதாயக் கண்ணாடி முன் பொய்யுருக்களை நிறுத்துகிறது. போற்றித் துதி நிலைக்கு மக்களை எடுத்துச் செல்கிறது.

மாவீரன் அலெக்ஸாண்டரிலிருந்து, வரலாற்றின் கரும்புள்ளி தொடங்குகிறது. நாடு பிடிக்கும் ஆசை அவனது வீரப் பிரதாபங்களை நிரூபிக்கும் ஒரு வடிகாலானது. அன்றைய ஆரிய இந்தியாவுக்குள் நுழைந்து பஞ்சாப் நதிக்கதையில் புருஷோத்தம மன்னனை வீழ்த்தினான். உண்மையில் ஆக்கிரமிப்பாளனை எதிர்த்து வீழ்ந்த புருஷோத்தமன் மாவீரன். பள்ளிப் பிள்ளைகளின் தலையில் பதிய வைக்கப்பட்ட அலெக்ஸாண்டர் மாவீரன் என்ற பிம்பம் இன்றும் தொடர்கிறது. வரலாற்றாசிரியர்களும் மாற்றி எழுதும் வல்லமை கொள்ளவில்லை.

*"காலனி யாதிக்கத் தழும்பை*

*பூமியின் முகத்தில் எழுதிய புல்லன்"*

- தமிழ்ப் பேரரசனான இராசராசசோழனை பற்றிய இவ்வரிகள், மக்கள் பார்வையில் வரலாற்றைப் பார்க்க வேண்டும் என்ற முன்னெடுப்புக் கொண்டு கவிஞர் இன்குலாப் எழுதியவை.

கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் என ஆதிக்க விஸ்தரிப்பாளர்களுக்கு பட்டம் சூட்டுவதில், உள்ளூர மகிழ்ச்சியும் இனப்பெருமையும் பெருக்கெடுக்கலாம். அந்தக் கிளுகிளுப்பு, ஆதிக்க சக்தியாக நாம் உருக்கொள்ள வேண்டும் என்ற அடிமன ஊற்றின் வடிவமே தவிர வேறில்லை. இங்கே மற்றவர் ஆதிக்க

நிலை வகித்தால் எதிர்ப்புநிலை. அது நாமாக மாறினால் வரவேற்பு நிலை.

சோழர்கால ஆதிக்க விரிப்பு, கோயில் பெருக்கம், பார்ப்பனிய மேலாண்மை, பிரம்ம தேயம் போன்றவையெல்லாம் இந்துக் களுக்கு பெருமைக்குரியதாக இருக்கலாம்; ஆனால் தமிழர்களுக்கு புகழ்தருவதாக ஆனது எவ்வாறு? சோழப் பேரரசு காலத்தில் கொடுமையான விரிவிதிப்புக்கு ஆளான மக்களும், நிலம் பிடுங்கப்பட்ட உழவர்களும் கோயில்களைத் தாக்கி இடித்த வரலாறு ஏன் தமிழர் வரலாறாகப் பேசப்படவில்லை? 'சமணப் பெண்டிரை கற்பழிக்கத் திருவுளமே' என்று பாடிய சைவ சமயக் குரவர்களும் எண்ணாயிரம் சமணர்களை கழுவேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தவர்களும் நம்முடைய வரலாறானது எவ்வாறு?

வரலாற்றில் தொடரும் சொல்லாடல்களை நாம் மாற்றி எழுதியாக வேண்டும்.

உலகில் எல்லா நாடுகளின் இருப்பையும் கேள்விக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது ஒற்றை ஏகாதிபத்தியமாக உருக்கொண்டு விட்ட அமெரிக்கா. மற்ற ஏகாதிபத்தியங்களையும் தனது துணைக் கோள்களாக கக்கத்தில் இடுக்கிக் கொண்டுள்ளது. தனக்கு வாழ்வு; மற்றவர்க்கு மரணம்- அதன் கொள்கை. மூன்றாம் உலக நாடுகள் அனைத்துக்கும் மரணத்துள் வாழ்வு என்று அழித்தொழிப்புக் கோட்பாட்டை தன்னுரிமையாக்கிக் கொண்ட அமெரிக்கா வீசியெறிந்த ஹைட்ரஜன் குண்டுகள் முதன்முதலில் நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களை சாம்பல் குழிகளாக்கின. நாப்பாம் குண்டு வீசியபோது வியட்நாமின் எரியும் குழந்தைகள் உலகம் தெரிய ஓடிவந்தார்கள்.

ஒருமுறை உலகப்படம் வரைந்து தருமாறு குழந்தைகள் கேட்டன. பஞ்சாபில் பிறந்து பிரிவினைக்குப்பின் பாகிஸ்தானுக்குப் போய் வாழ்ந்த எழுத்தாளர் சதத் ஹாசன் மாண்ட்டோ சொன்னார்:

"முதலில் இந்த உலகத்தில் நிலைத்திருக்கக் கூடிய நாடுகளின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள்"

நாடுகளை அபகரி-கடந்த இரு நூற்றாண்டுகளில் காலனி யாதிக்கத்தின் கொள்கையாக இருந்தது. நாடுகளை அழி- ஏகாதிபத்தியக் கொள்கையாக வளர்ந்து விட்டது.

"இந்த உலகத்தில் அமைதியைக் கொண்டுவர, இந்த பூமியின் முகத்திலிருந்து இன்னும் எத்தனை நாடுகளை அழிக்கப் போகிறீர்கள்" என்று சதத் ஹாசன் மாண்ட்டோ கேட்டார்.

வரலாற்றுச் சொல்லாடல்களை புரட்டி எழுதியாக வேண்டும். மாண்டோ எழுதிக் காட்டினார். "நாடுகள் பிரிந்தன என்று சொல்லாதே; இருநாடுகள் உதயமாகின என்று எழுது."

இந்தியா- பாகிஸ்தான் என இரு நாடுகள் உதயமான போது, இரு பக்கமும் மதவெறிப் பாசிசம் நட்டுக்க நின்று சாமியாடியது: எந்தக் கொட்டுக்கும் அடங்கவில்லை மதவெறிச் சாமி. இந்துக்கள் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். இசுலாமியர்கள் ஒரு லட்சம் பேர் கொலையானார்கள். அப்படித்தான் ஊடகங்கள் எழுதிக் காட்டின.

சதத் ஹசன் மாண்ட்டோ சொல்கிறார்: "இந்துக்கள் ஒரு லட்சம்பேர் கொல்லப்பட்டார்கள்; இசுலாமியர்கள் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள் என்று எழுதாதே. இரண்டு லட்சம் மனிதர்கள் கொல்லப்பட்டார்கள் என்று எழுது."

சதாத் ஹசன் மாண்ட்டோ வழியில் நாம் பதிவு செய்தாக வேண்டும். நடந்தோமானால் வரலாற்றைப் பதிவு செய்யும் பயணத்தில் நாம் கடக்க வேண்டிய தூரம் அதிகமுள்ளது. தேசபக்தி, யுத்தம், நாட்டைக் காப்பது ராணுவம், மக்களைக்காப்பது காவல்துறை, கற்பு, விலைமகள், தீண்டத்தகாதவர், பேரரசன் - முதல் அனைத்துச் சொல்லாடல்களையும் தலைகீழாய் கவிழ்த்தாக வேண்டிய கட்டாயம் நம் முன் நிற்கிறது. அடிமட்டத்து மக்களின் கதைகளை வரலாறாக எழுதியாக வேண்டும். மையத்திலிருந்து (அதிகார மையங்கள்) எழுதப்பட்ட வரலாற்றை, இனி விளிம்பு களிலிருந்து தொடங்கியாக வேண்டும்.

மானுடத்தின் தமிழ்க் கூடல் மாநாடு 2002ஆம் ஆண்டு அக்டோபர், 19 முதல் 22 முடிய நடைபெற்றது. மாநாட்டின் இரண்டாம் நாள் அரங்கில் அக்டோபர் 20 நாள் உரையாற்ற பணிக்கப்பட்டு இருந்தேன். என் முன்னால் அரங்கத்தில் அமர்ந்திருப்போரை, என்னுடன் மேடையில் இருப்போரை எப்படி அழைப்பது?

ரத்தத்தின் ரத்தங்களே என அழைக்கலாமா? அது இங்கொரு தலைவர் தன் தொண்டர்களை அழைத்தது. இன்றைக்கு அசுத்த ரத்தங்களாய் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள்.

உடன் பிறப்புகளே என விளிக்கலாமா? கூடாது.

*"நீங்கள் ஒரு தோணியாக இருக்கலாம்*
*நீங்கள் ஒரு நூற்பு ராட்டினமாக இருக்கலாம்*
*நீங்களொரு பலவண்ண*
*முக்காலியாகக் கூட இருக்கலாம்*
*ஒரு போதும்*
*நாற்காலியாக மாறிவிடாதீர்கள்"*

என்ற பஞ்சாபிக் கவிஞனின் எச்சரிக்கையைப் போல உடன் பிறப்புக்கள் நாற்காலிக் கனவுகளில் நுழைந்தார்கள். பிறகு நாற்காலியாகவே மாறிவிட்டார்கள்.

புரட்சியாளர்களே என்று அழைக்கலாமா?

தமிழகச் சூழலில் சில வார்த்தைகள் கெட்டவார்த்தைகளாகி விட்டன. புரட்சித் தலைவர், புரட்சித் தலைவி, புரட்சிக் கலைஞர் என்பவையெல்லாம் உச்சரிக்க முடியாத அர்த்தம் கொண்டு விட்டன.

மானுடத்தின் தமிழ்க் கூடல் அரங்கில் குழுமியவர்கள் தாயக விடுதலை நேசிப்பாளர்கள். தமிழீழம் எங்கள் தாகம் என்ற முழக்கத்துடன் களத்திலே நின்று போராடுபவர்கள். கருத்துப் போராளிகளும் களப்போராளிகளும் அரங்கில் நிறைந் திருந்தார்கள்.



போராளிகளுடன் நாங்கள்

உச்சரித்து, உச்சரித்து ஒன்றுமில்லாக் கூடாகிப் போன, சமகாலச் சொல்லாடல்களை நீக்கி, பொருத்தமான சொல்லாடலால் அழைப்பது சரியாக இருக்கும்.

"நீங்கள் மனிதத்தின் மாண்பு தொலையாமல், காப்பாற்றி வருகிறீர்கள். எனவே உங்களை மனிதர்களே என்றழைக்கிறேன். மனித மாண்பு விடுதலையின் நிறைவிலே சாத்தியம். மானுடம் காக்கும் போரில் நிற்கிறீர்கள். எனவே உங்களைப் போராளிகளே என்று விளிப்பேன்."

புதிய சூழலில், போரிடும் உணர்வு தந்த புதிய நிலைமைகளில் புதிய சொல்லாடல் மட்டுமே பொருத்தப்பாடுடையது.

# இராணுவச் சோதனை

*அக்டோபர் 18, 2002.*

எங்கள் மாலைப் பொழுதுகளை யாழ்ச் சகோதரர்களுக்கு அளிப்பதற்காக போய்க் கொண்டிருந்தோம்.

ஐவர் கலந்து கொள்ளச் சென்றோம். ஒருவர் கவிஞர் (இன்குலாப்), ஒருவர் ஓவியர் (மருது), மற்றொருவர் திரைத்துறை இயக்குநர் (புகழேந்தி), நான்காமவர் அரசியல் இயக்கத் தலைவர் (தொல்.திருமாவளவன்), ஐந்தாவது ஆள் எழுத்தாளர் (நான்)- சரிவிகித உணவுக்கலவை போல் வெளிப்பட்டிருந்தது எங்கள் பங்கேற்பு.

நினைத்தபடியெல்லாம் நீங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்ள அனுமதிக்க முடியாது என்ற நினைப்பின் உருமானங்களாக சிங்கள சோதனைச் சாவடிகள் நின்றன.

ஈழத்தின் வரலாற்று உயரம் எங்களுடைய துப்பாக்கியின் கருணையால் அளவிடப்பட்டுள்ளது என்று அறிவித்துக் கொண்டிருந்தனர் சிங்களச் சிப்பாய்கள்.

நாங்கள் சென்றது அமைதிப் பேச்சுவார்ததைக் காலம். ஆகவே துப்பாக்கிகளை கொஞ்சம் உள்ளே இழுத்து வைத்திருந்தார்கள். யுத்த காலத்தில் இராணுவ சோதனைச் சாவடிகள், துப்பாக்கிகள் தாராளமாய் நீளம் கொண்டு பொதுமக்களை அரண் (பயம்) கொள்ளச் செய்திருந்தன.

ராணுவ சோதனைச் சாவடிகள் என்ற சொல் சரியானதல்ல. ராணுவ நிலைகள் என்ற சொல்தான் சரியானது என்பதை எங்களைச் செய்த சோதனைகளால் உணரமுடிந்தது.

சமாதான காலம்! நடமாட்டத்துக்காக திறந்து விடப் பட்டிருந்தது யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் ஏ-9 சாலை. மக்கள் இந்தத் தடுப்பு அரண்களுக்கிடையே ஊர்ந்து சர்க்கஸ்காரனைப் போல்தான் இதற்குமுன் போயிருக்கிறார்கள். தரையில் துப்பாக்கியை ஊன்றி நிற்கிற ஒருவனின் கவுட்டுக்கிடையே, நுழைந்து செல்லும் தண்டனை போலத்தான் அவர்கள் கடந்து போயிருக்கிறார்கள். பலருக்கு, பல நேரங்களில், பல நாட்கள் அந்த சோதனைச் சாவடி சிறைமுகாமாக மாறியிருக்கிறது. சிறைமுகாம் என்பதின் பொருளுக்கும் சித்திரவதைக்கூடம் என்பதின் அர்த்தத் துக்கும் அதிக தூரமில்லை. அதன் உள்ளே போன சிலர் திரும்பி வந்ததில்லையாம். தொடக்கத்தில் சிலராக இருந்தவர்கள் கெடுபிடிகள் குவியக் குவிய பலர் ஆயினர். வாட்டசாட்டமான இளைஞர்கள், வாலிபத்தின் நுழைவுப் படியிலிருக்கிற பெண்கள் என காணாமல் போனவர்கள் நிறைய.

யாழ்ப்பாணத்திலிருந்து சில கி.மீ. தூரமுள்ள சாவகச்சேரிக்குள் நுழைந்தபோது மாலை நாலரை மணி. சாவகச்சேரிக்கு முன் விடுதலைப் புலிகளின் அரண் முடிவடையும் பளை- என்ற இடத்திலிருந்து ஒரு கி.மீ. தூரம் O-zone என்று சொல்லப்படுகிற பிறநாட்டு அமைதிக்குழுவும் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து ஏற்படுத்திய அமைதிவெளி. அதிலிருந்து யாழ் வரை இராணுவத்தின் கட்டுப்பாடு! எங்களுடன் புறப்பட்டு எங்களுடன் தொயந்து வந்த விடுதலைச் சிறுத்தைகள் திருமாவளவன், இயக்குநர் புகழேந்தி ஆகியோர், இன்னொரு வாகனத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்துடன் வந்தார்கள். இடையில் மாவீரர்கள் துயிலுமிடத்தைக் காண விலகி விட்டார்கள். அவர்கள் வருகைக்காக சாவகச் சேரிக்குள் ஓரிடத்தில் காத்திருந்தோம்.

காலியாக இருந்தன வீடுகள்; ஒவ்வொரு வீடும் வாழ்வு புதைக்கப்பட்ட மயானமாகியிருந்தது. வசதியாயிருந்தவர்கள், வசதி யற்றவர்கள் என எல்லோரும் குடிபெயர்வுக்கு ஆளாகியிருந்தார்கள். இரு தரப்பினரும் போரின் உச்சத்தில் தப்பி ஓடியிருந்தார்கள். பலவீடுகள் ராணுவ முகாம்களாக ஆக்கப்பட்டிருந்தன. போர் ஓய்வுக்காலத்தில் அசைந்து, ஊர்ந்து கொண்டிருந்த வாழ்வு போர்க் காலத்தில் எப்படி ஊர்ந்ததோ நாங்கள் அறியோம்.

சோதனை என்ற சொல்லுக்கு அடியில் நசுங்கிச் சப்பழிந்து வேதனையை அனுபவித்திருக்கிறார்கள் ஈழத்துத் தமிழர்கள் என்பதை எங்களின் சோதனைப் படலத்திலிருந்து உணர்ந்து கொண்டோம். உண்மையில் இரண்டு மைல் தூர அளவு விரிந்திருக்க சிங்களச் சிப்பாய்களின் சோதனையிடுதலினூடே எங்களுக்குள் அச்சம். வனாந்தரத்தின் அடர்த்தியில் காட்டு மிருகத்தின் பாய்ச்சலில் கதிகலங்கும் அச்சமாக ஓடியது.

வெளிநாட்டுக்காரர், உள்நாட்டுக்காரர் என்ற வித்தியாசம் ராணுவம் அறியாதது. துப்பாக்கியின் திசையில் ஒற்றை நடைமுறை மட்டுமே அவர்களுக்குத் தெரியும். வரலாறு, எங்களையும் ராணுவப் பாதுகாப்பு அரண்கள் வழியாக நடக்க வைத்தது. அதைத் தொட்டுத் தொட்டு தொடருகையில் ஒரு வெளிச்சம் 'சட்' டென அடித்தது- அவை போராளிகளின் சோதனைச் சாவடிகள்.

எங்கள் வருகை தமிழர் பகுதியின் வன்னி சோதனைச் சாவடியில் போராளிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதுதான் காரணம் என இல்லை. சாதாரண மக்களும் வானத்துப் பறவை களைப் போலத்தான் மகிழ்ச்சியில் பறந்தார்கள். இங்கே அவர்களுடைய வானம் விரிந்திருந்தது.

சோதனைச் சாவடியிலிருந்த போராளிகளின் பெயர்கள் நினைவிலில்லை. காகிதத்திலிருக்கிற எழுத்து தான் மனதுக்கு மாறுகிறது. அப்போதே குறித்து வைத்திருக்க வேண்டும். யாழ் போய்ச் சேருகிற வரை என் கையில் குறிப்பேடு எதுவும் இல்லை. வரலாற்றுக்குள் பயணம் போகிறோம் என்ற முன்னெச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டிருந்தால் குறிப்பேடு கைகளில் இருந்திருக்கும்.

சிங்களச் சிப்பாய்கள் போலவே, போராளிகளும் சீருடையில் இருந்தார்கள். ஆனால் அர்த்தம் வேறாக இருந்தது. சிங்களச் சிப்பாய்கள் வாங்குகிற சம்பளத்துக்காக யுத்தம் நடத்தினார்கள். கடனே என்று போரில் செத்தார்கள்.

போராளிகள் முகத்தில் ஒரு புன்னகை இருந்தது. எப்போதும் மக்களுக்கான புன்னகையோடு இருந்தார்கள். எதிரிகளோடு ரௌத்திரம் பழகினார்கள்.

போராளிகள் கைகளில் துப்பாக்கி இருந்தது. அருகிலேயே ஒரு புல்லாங்குழலையும் வைத்திருந்தார்கள். எதிரிகளுக்குத் துப்பாக்கி; மக்களுக்குப் புல்லாங்குழல்.

சோதனைச் சாவடியில் பொறுப்பிலிருந்த போராளி, மானுடத்தின் தமிழ்க்கூடல் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுச் செல்கிறோம் என்பது அறிந்து ஆர்வத்துடன் உரையாடினார். அவரிடத்து இலக்கியச் சுவாசம் ஓடியது. இன்குலாபையும் என்னையும் தெரிந்திருந்தது. இலக்கிய ஏடுகளையும் அவைகளின் தற்கால வெளிப்பாடுகளையும் அறிந்திருந்தார். ஜூ.வி. இதழில் என் எழுத்தில் வெளியான 'தெக்கத்தி ஆத்மாக்கள்' நூல் பற்றி குறிப்பிட்டார்.

போர்க்காலச் சீருடைக்குள்ளும் கலைநேசம் அமர்ந்திருக்கும் என்பதைக் கண்டோம்.

தேநீர் வந்தது; சூடாக ஆமை வடையும் (மசால் வடை) கிடைத்தது.

திரும்பு காலில் சந்தித்து நீண்ட நேரம் உரையாடுவோம் என்ற உறுதிமொழியுடன் அந்த இலக்கியப் போராளியை பிரிந்தோம்.

எல்லாத் திசைகளிலும் பொழுதடைவது ஆறரை அல்லது ஏழு மணி: இராணுவத்துக்கு ஐந்து மணி.

*மலைமேல் சூரியன்*
*மாகாதேவன் வாயில சோறு*

- என்ற கதைதான்.

கொழும்பிலிருந்து புறப்படுகிறபோது, சாயந்திரம் ஐந்து மணிக்குள்ளாக யாழ்ப்பாணத்துக்கு முன்னிருக்கும் சோதனைச் சாவடி என்ற கண்டத்தை தாண்டி விடவேண்டும் என்று அவசரப் படுத்தினார்கள். இந்தக் கண்டத்தை தாண்டிவிட்டால் பிறகு எல்லாம் சுகமே.

ஆனால் எங்களுக்குப் பின்னால் வந்த அணியினர் மாவீரர் துயிலுமிடத்தைக் காண இடையில் விலகிப் போனதால் வரத் தாமதமாகிவிட்டது. அவர்கள் இராணுவத் தடுப்பு அரணைத் தொடுகிறபோது மாலை ஆறு மணி. கூட வந்த சிவாஜி லிங்கம், தான் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடையாள அட்டையைக்

காட்டினார். வெட்டரிவாளுக்கென்ன, குளிரா, வெயிலா? இராணுவ அதிகாரிகளிடம் அசைவில்லை. பிறகு கொழும்பிலுள்ள முக்கிய அமைச்சரிடம் பேச அங்கேயுள்ள இராணுவத் தலைமை அதிகாரி தடுப்பு அரணிலிருந்து இராணுவ அதிகாரியிடம் பேசிய பிறகே கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். இராணுவத்துக்கு ராணுவமே கட்டளையிட வேண்டும். அமைச்சர்களின் அதிகாரம் கூட செல்லுபடியாகாது.

பாராளுமன்றத்தின் மூலமாகவோ, அமைச்சர்கள் வாயிலாகவோ வருபவை ஆலோசனைகள் தாம்; கட்டளைகள் அல்ல! ஆலோசனைகளை ராணுவம் தாங்கிப் பிடிக்க வேண்டுமென்றாலும் அல்லது உதறிவிட வேண்டுமென்றாலும் எதுவும் செய்யலாம். இராணுவத்துக்கு அதன் அதிகாரமே வழிநடத்துகிறது.

உண்மையில் பிரதமர், அதிபர் என்ற பெயருடையவர்களுக்குப் பின்னால் இராணுவம் ஆட்சி செய்கிறது. இராணுவத்தில் நூற்றுக்கு நூறு சிங்களர்கள். பேருக்கு ஒரு தமிழன் கூட இல்லை. காவல்துறையில் ஒரு விழுக்காட்டுக்கும் குறைவு. அதிகார ஓரின ஆட்சி. மற்ற இனம், மற்ற மதம் இலங்கை என்ற நாட்டில் இருப்பிலுள்ளது என்பதை சிங்களர் கணக்கிலெடுத்துக் கொள்ளத் தயாரில்லை.

நாடாளுமன்றம் கையில் வைத்திருக்கும் கொஞ்ச நஞ்ச ஆட்சியதிகாரத்தையும் ராணுவத்துக்குக் கையளித்து விட்டதின் உச்சபட்ச காட்சி தான் ராணுவ சோதனைச் சாவடி.


யாழ்ப்பாணத்தில் இன்னும் முப்பத்தைந்தாயிரம் சிங்களச் சிப்பாய்கள் நிலைகொண்டிருந்தார்கள். யாழ் கோட்டை அவர்கள் தலைமையிடம். சாவகச்சேரி, பலாலி சாலை, திருநெல்வேலி எங்கெங்கும் இராணுவம் நிறைந்து, தங்கள் அரண்களைப் புதுப்பித்துக் கொண்டிருந்தார்கள். பதுங்கு குழிகளை பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அமைதி ஒப்பந்த காலம் என்பது ஓய்வெடுக்கிற காலம். ஆனால் இராணுவத்தை ஓய்வெடுக்க விட்டால் கொழுப்பேறி மந்தப்பட்டுப் போவார்களாம். சாப்பிட்டுச் சாப்பிட்டு செயலற்ற நிலை என்னும் மந்தம் (அஜீரணம்) வந்துவிடுமாம். ஆகவே கட்டளைகள் பிறப்பித்து, சும்மாவாவது இந்தக் குழியைத் தோண்டு, அந்த மேட்டை வெட்டிப்போடு என்று ஏதாவது ஒரு

வேலை கொடுத்து, விரட்டிக் கொண்டிருந்ததை சாவகச்சேரி முதல் யாழ் நகரம் முழுதும் கண்டோம்.

பலாலி சாலையில் தபால்பெட்டிக்கடை சந்திப்பு. அந்த இடத்தில் கண்காணிப்பாக காவல் செய்தது ராணுவம். அங்கு நின்றோம்; நின்றோம் என்பதை விட ஊர்ந்தோம். கொஞ்சந் தொலைவு போய் நிறுத்தி, அந்த இடத்தைக் காணச் செய்தார் சிவாஜி லிங்கம். 23.7.1983இல் ராணுவ லாரியில் வந்த 13 சிங்களச் சிப்பாய்களை கண்ணிவெடி வெடிக்கச் செய்து களப்பலி எடுத்தது அந்த இடம்தான். பிரபாகரன் தலைமையிலான போராளிகள் முதல் கண்ணி வெடியை வெடிக்கச் செய்தது அந்த இடம். யுத்தம் தொடங்கியது என்று அறிவித்தது அந்தச் சந்திப்புதான்.

உடனே வெறியெடுத்து விட்ட ராணுவத்தின் கொடூர வேட்டையில் வீரவேங்கை லெப். செல்லக்கிளி அம்மன் சுட்டுக் கொல்லப்பட்டார். ராணுவத்தினரைக் கொன்று போட்டார்களாமே என கொழும்பில் தொடங்கியது வெறியாட்டம். ஐயாயிரம் தமிழர்களைக் கொன்று, தீக் கொளுத்தி, டயர் போட்டு எரித்து, கண்ட துண்டமாய் வெட்டி கொழும்பு நகரம் உலகுக்கு தன்னை அறிமுகம் செய்துகொண்டது.



'மானுடத்தின் தமிழ்க் கூடல்' மாநாடு நடைபெற்ற யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்.
1974-ல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது பலியானோர் நினைவுச் சின்னம்

# காலிழந்த ராமன்

கொழும்பு விமான நிலையத்திலிருந்து தொடங்குகிறது அந்த வலி. சீழ் கட்டிய சிலந்தி (கட்டி) ஜவ், ஜிவ்வென்று தெறிக்குமே அதபோல அதிகாரக் குவிப்பின் ஆட்டம் அதிகப்படியாய் நிமிண்டியது. அதனாலே கட்டிய அறுத்து சீழை வெளியேற்றும் மருத்துவத்தைக் கையிலெடுத்தார்கள் இளைய தலைமுறையினர்.

விமான நிலையத்தில் இறங்கியதும் பெட்டியைச் சோதனை செய்வார்கள் என எதிர்பார்த்தோம்.

பயணம் முடித்து திரும்பி வருகையில் கொழும்புவில் அதிகாரம் அதிகமாகத் தெரிந்தது. விடுதியிலிருந்து புறப்பட்டு சாதாரண வேகத்தில் விமான நிலையம் வந்து கொண்டிருக்கிற போது, நடுவழியில் ராணுவத்தால் நிறுத்தப்பட்டோம். ஏன் வேகமாய் வருகிறாய் இரவு நேரத்தில் வேகம் கூடாது என்ற இராணுவ விதியை அந்தச் சிப்பாய் நினைவுபடுத்தினான். வாகன ஓட்டியின் உரிமம், எங்களுடைய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) எல்லாவற்றையும் எடுத்துக்காட்டச் சொன்னான். உள்ளே நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இருந்தார். அவரைக் கை காட்டினார் வாகன ஓட்டி. “அதனாலென்ன எங்களுக்கு எல்லாரும் ஒன்றுதான்.

இராணுவ ஆட்சியின் அசலான இதயம் வெளிப்பட்டது. நாடாளுமன்றம், சட்டமன்றம் நகர்மன்றம் என்று எத்தனை வகை சனயாக உறுப்புகள் வேண்டுமானாலும் இருக்கலாம். மேலே ஒரு பிரதமரும் குடியரசுத் தலைவரும் இருக்கலாம். ஆனால் இலங்கையில் ராணுவத்தின் கட்டளைக்கு மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் உள்ளடங்கியவர்கள். அதிகாரம் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் இல்லை. தேர்வு செய்யப்படாத அதிகார உறுப்புகளிடம் இருக்கிறது.

யாழ்ப்பாணம் நோக்கிய அந்த ஏ-9 சாலை, வவுனியா, கிளிநொச்சி, ஆணையிறவு, சாவகச்சேரி என யுத்தத்தின் ரணத்தைச் சுமந்து கிடந்தது. சாலையோரக் காட்சிகள் பொதுவாக ரணம் தாங்கிக் கிடந்தாலும், ஒவ்வொரு பிரதேசத்தின் வலியும் வித்தியாசப்பட்டது.

சோதனைச் சாவடியில் ஒவ்வொரு இடமாக எங்கள் கடவுச் (பாஸ்போர்ட்) சான்றிதழ்களைக் காட்டிக் கொண்டே நடந்தார் சுரேஷ் பிரேம சந்திரன். நாங்கள் அமைதியாக வேனில் இருந்து பார்த்தோம். ஒரு இடத்தில் மேலாதிகாரி இருந்தான். அவனிடம் போகச்சொல்லி கைகாட்டினான் சிப்பாய். அவனிடம் போய் சுரேஷ் சில சான்றிதழ்களைக் காட்டினார். அந்த அதிகாரிக்கு எதிரிலேயே, எங்கள் வாகனம் சோதனையிடப்பட்டது. பெட்டிகள் திறக்கப் பட்டன. பிறகு அடுத்த கட்டத்திற்கு ஊர்ந்தது வாகனம்.

எங்கள் கண்முன்பாக ஒரு குடும்பம் வந்த வேனிலிருந்து பெட்டிகளை வெளியே இறக்கச் செய்தார்கள். பெட்டிக்குள்ளே இருக்கும் எல்லாச் சாமான்களையும் எடுத்து வெளியே போட்டார்கள். மெட்டல் டிடெக்டர் கொண்டு சோதித்தார்கள். கடைசிக் கட்டத்தில் மெட்டல் டிடெக்டர் பொருத்தப்பட்ட மேடை வழியாகத்தான் வாகனம் போயாக வேண்டும். சாதாரண காலத்தில் இதுபோல் வருகிற பயணிகளின் உடைமைகளை அப்படியே குப்புறக் கொட்டுவார்கள். சில வெளிநாட்டுப் பொருள்களையும் விலையுயர்ந்த சாமான்களையும் அவரவர்கள் இஷ்டத்துக்கு சிப்பாய்கள் எடுத்து வைத்துக் கொள்ள மீதிதான் பயணிகளுக்குக் கிடைக்கும் என்றார் சுரேஷ்.

கடைசியாய் வெளியேறும் வாசலில் ஒரு இராணுவ உயர் அதிகாரியைக் காண சுரேஷ் போயிருந்தார்.

இந்த வேதனை நாங்கள் அறியாதது. தமிழ்ச் சமூகம் அறியாதது.

சோதனைச் சாவடியிலிருந்து வெளியேறி சாலையில் இறங்கிய போது ஒவ்வொரு ஐநூறு அடியிலும் ஒரு அறிவிப்பு.

"***உங்கள் காலடியில்***
***மிதி வெடிகள்***
***எச்சரிக்கை***"

பலகையில் வரையப்பட்ட படம், கன்னிவெடிகள் புதைக்கப் பட்டிருக்கின்றன, இன்னும் அகற்றப்படவில்லை; நடமாட்டத்தில் கவனமாயிருங்கள் என்ற எச்சரிக்கை.

கிளிநொச்சி புலிகளின் கைவசம் உள்ளது. தமிழீழ அரசியல் தலைமையகம் கிளிநொச்சியில் இயங்குகிறது. ஏற்கெனவே 1996ஆம் ஆண்டு ஜூலை வரை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி அது. 1996ஆம் ஆண்டு முல்லைத் தீவு சிறீலங்கா படைத்தளம் புலிகளின் "ஓயாத அலைகள்" நடவடிக்கை மூலம் தாக்கியழிக்கப்பட்ட போது, புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கிளிநொச்சியை கைப்பற்ற ஆணையிறவு சிறீலங்கா இராணுவத்தளத்திலிருந்து "சத்ஜய படை" நடவடிக்கை ஆரம்பமானது. சிங்களப் படை கிளிநொச்சியைக் கைப்பற்றி பாதுகாப்பு வேலி அமைத்தது. அமைப்பதின் நோக்கம் முல்லைத்தீவு படைத்தளம் போல் ஆணையிறவு இராணுவத் தளத்தையும் இழந்துவிடக் கூடாது என்பதற்காக.

கிளிநொச்சியை 1996-இல் சிறீலங்காப்படை கைப்பற்றியதால் அங்கிருந்த ஒரு லட்சம் மக்கள் பல்வேறு இடங்களுக்கும் குடிபெயர்ந்தார்கள். பல்வேறு துன்பங்களுக்கிடையில் தங்கயிருந்த மக்கள் ஒரு நேர உணவுக்குக் கூட இல்லாத நிலையில் அலைந்தார்கள். கிளிநொச்சி மண்ணில் தாங்கள் விட்டு வந்த பொருட்களையாவது எடுத்து வரலாம் என அவ்வப்போது முயன்றனர். இவ்வாறு கிளிநொச்சிக்குச் சென்ற 184 தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணாமல் போனார்கள்.

ஒரு மீட்டருக்கு ஒரு மிதிவெடி; ஐந்து மீட்டருக்கு ஒரு மிதிவெடி இணைப்பு; பல்லாயிரக்கணக்கில் மிதிவெடிகள் கிளிநொச்சி எங்கும் விதைக்கப்பட்டிருந்தன. இராணுவத்தின் முன்னணி அரண்பகுதிகளில் இன்னும் கூடுதலாக புதைக்கப் பட்டிருந்தன.

மிதிவெடி புதைத்து வைக்கப்பட்டுள்ள பகுதிகளில், தங்கள் பொருட்களை மீட்டுவர முயன்ற மக்கள் உயிருடன் திரும்பியது இல்லை. கிளிநொச்சி நகரில் மட்டும் 90 பேர் மிதிவெடிகளில் சிக்கி கால்கள் முடமாகியுள்ளார்கள்.

அவலம் சுமந்த கிளிநொச்சி 1998இல் மீண்டும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு, புதுப்பொலிவுடன் மிளிர்கிறது. இன்று கிளிநொச்சி பகுதியில் மனித எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்படுகின்றன. கிணறுகள், வாய்க்கால்கள், மலக் கிடங்குகள், பாழடைந்த வீடுகள், ஆற்றுப் படுக்கைகள்

இங்கிருந்தெல்லாம் மீட்கப்படுகின்றன. கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணமுடியாத நிலையில் தமிழீழ காவல் பணிமனையில் பாதுகாக்கப்படுகின்றன.

சாவகச் சேரிக்கு முன் முகமாலை என்ற இடத்தில் கடைசி இராணுவ சோதனைச் சாவடி. இராணுவ சோதனைச் சாவடியிலிருந்து நீங்கியவுடன் சிறுநீர் கழிக்க வாகனத்திலிருந்து இறங்கினோம். மறைவான இடம் தேடிப் போகையில் சுரேஷ் எச்சரித்தார் "ரொம்ப தூரம் போகாதீர்கள். புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் காத்திருக்கும்." அவர் கை நீட்டிய இடத்தில் எங்களுக்குப் பக்கத்திலேயே "மிதிவெடிகள் எச்சரிக்கை" என்ற அறிவிப்பு. எங்களுடைய காலடிகள் மட்டுமல்ல எவருடைய காலடிகள் பட்டாலும் வெடிப்பதற்குக் காத்திருந்தன.

"ராமன் காலடி தீண்டி
உயிர்த் தெழுந்தாள்
அகலிகை;
காலடிகள் பட்டதும்
கல்லுக்குள் உயிர் மலரும் எனில்,
அயோத்தி ராமரே, புனிதனே
மிதிவெடிகளின் தலையில் பாதம் வைத்தருளும்
பதினான்கு ஆண்டுகளாய்
பரதன் தலைசுமந்து காத்திருக்கும்
மிதியடிகளுக்காவது பாதம் மிஞ்சுமா?"

யாழ்நகர் போய்ச் சேர்ந்த அன்றிரவு இந்தக் கவிதையை குறித்து வைத்துக் கொண்டேன்.

இரவு ஒரு கனவு வந்தது. தலையில்லாத முண்டம் போல, பாதமிழந்த ராமன் கனவில் தோன்றினான்.

# புகையிரதம் காணாத தலைமுறை

கொழும்பிலிருந்து, மாநாடு நிகழுறும் யாழ்நகருக்கு விமானப் பயணம் இருந்தது. விமானத்தில் பயணம் செய்து யாழ்நகரை அடைந்திருக்க முடியும் அல்லது தொடர்வண்டியில், ஈழத் தமிழில் சொல்வதானால் புகையிரதம். புகையிரதப் பயணத்தை வவுனியா வரையிலாவது தேர்வு செய்திருக்க முடியும். எங்களை அழைத்துச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜி லிங்கமும், சுரேஷ் பிரமேச்சந்திரனும் சாலைப் பயணத்தை தேர்வு செய்தார்கள். முதல் காரணம், சாலைவழி போனால் போரின் பாதிப்புகளை இரு பக்கமும் நேரடிக் காட்சிகளாக மனசில் பதிவு செய்துகொண்டே போகமுடியும்.

கொழும்பிலிருந்து வன்னி வழியே யாழ்நகர் வரை புகையிரதம் ஓடியது. அது ஒரு காலம்.

சாலையோரம் வாகனத்தை நிறுத்திவிட்டு, 'வாங்க போவோம்' என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். ஏரிக்கரை தெரிந்தது. மதுராந்தகம் ஏரிக்கரை அளவுக்கு உயர்ந்து, இருபுறமும் வனம் அடர்ந்த கரை. ஏரிக்கரை மேடா அல்லது நதிக்கரையா என அனுமானிக்க முடியவில்லை. சீன நெடுஞ்சுவர் போல் நெடுக ஓடிக் கொண்டிருந்தது. கரை உச்சியில் ஏறி நின்று பார்த்தபோது, அந்தப் பக்கம் ஏரி தெரியவில்லை. கரையில் எங்கள் காலடியின் கீழே இருப்பது என்ன?

"உங்கள் காலடிக்குக் கீழே இருக்கிறது ரயில் தண்டவாளம்" தெளிவுபடுத்தினார் சுரேஷ்.

நம்பமுடியவில்லை. இருப்புப்பாதை இருந்த இடம், மரங்களும் செடி கொடிகளும் பெருகிய மேடாகியிருந்தது.

"இந்தத் தலைமுறைக்கு, ரயில் தெரியாது. பாடப்புத்தகத்தில் படித்துத்தான் தெரிந்து கொள்ளவேணும்."

சுரேஷ் பேசினார். ரயிலில் பயணம் போகாமல், ரயிலைப் பார்க்காமலேயே ஒரு தலைமுறை கழிந்துவிட்டது. இனிவரும் குழந்தைகளுக்கு ரயில் வரலாற்றுப் பாடத்தில் ஒரு குறிப்பாக இருக்கும். மூதாதையர் காலத்தில் தரை மார்க்கமாக ஓடிய, உலவிய, பறந்த ரயில் அவர்களுக்கு தொன்மமாக மாறியிருக்கும். அவர்கள் தங்கள் மூத்தவர்களிடமிருந்து ரயில் பற்றிய கதைகளைக் கேட்பார்கள்.

சீனப் பள்ளிகளில் பாடப்புத்தகத்தில் ஒரு குறிப்பு பதியப் பட்டிருக்கிறது. ரயில் வந்த விதம் என்பது பாடத் தலைப்பு. ரயில் வண்டிகள் முதன்முதலாக சீனத்துக்குள் எப்போது நுழைகின்றன? வனப் பகுதியில் கஞ்சா பயிரிட பெருவாரியான தொழிலாளர்கள் தேவைப்பட்டார்கள். தொழிலாளர்களை கஞ்சாப் பிரதேசத்தில் இறக்குமதி செய்ய, உற்பத்தி செய்த கஞ்சாவை உலக முழுவதும் ஏற்றுமதி செய்ய காலனிய ஆட்சிக்கு ரயில் போக்குவரத்து அவசியமாகிறது. காலனியத்தின் வர்த்தக ஆட்டத்தை, அதிகாரப் பரப்பலை தண்டவாளங்கள் விரிந்து பரந்து சீனாவுக்குள் எடுத்து ஓடின.

இந்தக் குறிப்புகளுடன் தொடங்குகிறது பாடம். இந்த விளக்கத்துக்குப் பின்னர்தான், ரயில் இஞ்சின் இயங்கும் முறை, அதன் பாகங்களை விளக்குகிறார்கள்.

இந்து மதம் பெரும்பான்மையாக உள்ள இந்திய சமூகத்தில் புதிய தடத்தில் புதிய ரயில் விடப்படுகிறபோது அல்லது கப்பல் புதிதாய் விடப்படுகிறபோது சூடம் கொளுத்தி தேங்காய் உடைப்பது, மந்திரம் ஓதி வழிபாடு செய்வது, புரோகிதர்கள் வேள்வி நடத்துவது என நடத்தாமல் எதுவும் ஓடுவது இல்லை. அறிவியல் கண்டுபிடிப்புகள் அவை. ஆனால் அதன்மேல் அசைக்க முடியாத மூடநம்பிக்கைகள் உட்கார்ந்திருக்கின்றன.

1978ல் பூமி காணாத ஒரு சூரிய கிரகணம் ஏற்பட்டது. பகல் இரண்டு மணிக்குத் தொடங்கியது. பட்டப்பகலிலேயே பறவைகள் கூடடைந்தன. இருள் சூழ்ந்தது. பகலில் தொடங்கிய சூரிய கிரகணம் இரவாய் ஐக்கியமாகியது. வேறு உபகரணங்களால் பார்த்தாலும் கண்பார்வை பழுதாகிவிடும் என்று எவரும்

வெளியில் தலைகாட்டவில்லை. சாலைகளின் அங்காடிகள் மட்டுமல்ல. வீடுகளின் கதவு, சன்னல்களும் இறுகச் சாத்தப்பட்டு உள்ளே கிடந்தார்கள். உலகம் சூனியமாகியிருந்தது.

கொனாரக் என்ற ஊரில் இதற்கென சிறப்புவகையில் உருவாக்கப்பட்டிருந்த ஆராய்ச்சி நிலையத்தில் தங்கள் ஆராய்ச்சியைத் தொடர்ந்து கொண்டிருந்தார்கள் இந்திய விஞ்ஞானிகள். சூரியகிரகணம் பற்றி அவர்கள் வெற்றிகரமாக ஆராய்ச்சி செய்து முடித்தார்கள். இனிப்பு வழங்கினார்கள். அப்போது சில விஞ்ஞானிகள் இனிப்பை எடுத்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள். கிரகணம் முடிந்து குளிக்காமல் எதையும் சாப்பிடக்கூடாதாம். கிரகணம் முடிந்ததும் குளித்துவிட்டுச் சாப்பிடவேண்டும் என்பது நம்பிக்கை.

சீனம் அங்கே இருக்கிறது. இந்தியா இங்கே இருக்கிறது.

ஆனால் இலங்கைத் தலைநகர் கொழும்பில் இதன் நேர்மாறான இன்னொரு காட்சியைக் கண்டோம்.

நாங்கள் தங்க வைக்கப்பட்டிருந்தது கடற்கரையை ஒட்டிய 'வெஸ்ட்டர்ன் ஒட்டல்'. அந்த விடுதியை ஒட்டி கடற்கரை ஓரமாகவே இருப்புப்பாதை. ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை நகரப் பயணிகள் ரயில் போகவும் வரவுமாக இருந்தது.

வெஸ்ட்டர்ன் ஒட்டலை ஒட்டியே இருக்கிறது கடற்கரைச் சாலை. அது போக்குவரத்துக்குப் போதுமானது. நகரப் பேருந்துகளும் ஓடுகின்றன. ஆனால் சாலைக்கும் கடற்கரைக்கும் நடுவே ஆளில்லாத ரயில் பகலும் இரவும் கடற்காற்று வாங்கியபடி ஓடிக்கொண்டிருந்தது. எங்களால் கடலை ரசிக்க முடியவில்லை. மக்களே இல்லாத காலிப்பெட்டிகளைச் சுமந்து கொண்டு ஓடுகிற ரயில் சத்தம், நாங்கள் அந்த விடுதியை விட்டு நீங்கிய பின்னும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

"எவ்வளவு செலவானாலும் என்னுடைய மக்களுக்காகவே ஓட்டுவேன்" என்கிறார் சந்திரிகா. அவருடைய சிங்கள மக்களுக்காக ஓட்டுகிறார் என்று விரிவுரை செய்தார் சிவாஜிலிங்கம்.

ஒரு தேசத்தின் அதிபர் சிங்களவர்களை மட்டுமே தன் மக்கள் என நினைக்கிறார். தேசத்தின் இன்னொரு இனம் அந்நியமாய்

ஆக்கப்படுகிறபோது, அடக்குமுறைக்கு எதிராய் விடுதலைப் போரை மக்கள் தொடங்கியபோது, ராணுவ முகாம்களுக்கு ரயில்களில் ஆயுதங்கள் அனுப்பப்பட்டன. ராணுவவீரர்கள் பயணப்பட்டார்கள். மக்களின் போக்குவரத்திற்கு என்றிருந்த நிலை ராணுவப் போக்குவரத்துக்கு என்று மாறியது. ரயில் பெட்டிகள் ஆயுதக்கிடங்குகளாய் முழுரூபம் கொண்டன. கொழும்பிலிருந்து, சிங்களப் பகுதியிலிருந்து ரயிலில் பயணம் செய்கிற தமிழ் மக்களை சிங்கள வெறியர்களும், பொறுக்கிகளும் துன்புறுத்துவது, அவமானப்படுத்துவது, பெண் சீண்டல் செய்வது எல்லாம் நடந்தது. நடமாடும் குரூரக் கண்காட்சியாய் ரயில் ஆகிவிட்டிருந்தது. ஆகவே போராளிகள் வன்னியில் ரயிலை வெடி வைத்துத் தகர்த்தார்கள்.

கடற்கரையில் ரயில் விட்டதற்கும், தமிழீழத்தில் ரயிலை நிறுத்தியதற்கும் இனவெறி கொண்ட பரம்பரைத் திமிர் காரணமாக இருந்திருக்கிறது.

சீனத்தில் 'ரயில் வந்த விதம்' என்று பாடப்புத்தகத்தில் கற்பதுபோல, ஈழத்தில் 'ரயில் நின்ற வரலாறு' என்று இனி வருந் தலைமுறை வரலாற்றுப் பாடத்தில் கற்பார்கள்.



குண்டுக்குப் பலியான புகையிரத நிலையம் முன்னால்

*"என் பாட்டி அம்மாவிடம் சொன்னாள்*
*இது அரிசிப்பானை*
*இது உளுந்துப்பானை;*
*அம்மா என்னிடம் சொன்னாள்*
*இது அரிசி இருந்த பானை*
*இது உளுந்து இருந்த பானை;*
*நான் என் மகளிடம்*
*இது அரிசிப் பானை இருந்த இடம்*
*இது உளுந்துப் பானை இருந்த இடம்*
*என்றேன்*
*பொங்கலோ பொங்கல்*
*பொங்கலோ பொங்கல்"*

தலைமுறை தலைமுறையாய் பொருளியல் நிலைமைகள் எப்படி வீழ்ச்சிக்குப் போகின்றன என்கிற ஒரு குடும்பத்தின் கதை இது. ஒரு சமுதாயத்தின் கதையும் இது. ஈழத்தின் புதிய தலைமுறை இந்தக் கவிதையை அப்படியே நகல் எடுத்துக் கொள்வார்கள் - இது ரயில் ஓடிய இடம் என்று!

## எதிர்வினைகளின் காலம்

பொதுவுடமை இயக்கத்தின் மூத்த தோழர் கே.டி.கே. தங்கமணி மலேசியா செல்கிறார். மலேசியாவில் பல கூட்டங்களையும், தொழிற்சங்க நிகழ்ச்சிகளையும் முடித்துக் கொண்டு நாடு திரும்ப கப்பல் ஏறுகிறார். கப்பல் ஏறும் முன்னே ஆயுதம் தாங்கிய தோழர்கள் செவ்வணக்கம் செலுத்தி விடைபெறுகிறார்கள். அவர்களிடம் "நீங்கள் யார்?" எனக் கேட்கிறார் கே.டி.கே. தங்கமணி.

ஆயுதம் ஏந்திய அந்த தோழர்களின் பதில் "தங்கள் பாதுகாப்புக்காக மலேசியா கம்யூனிஸ்ட் கட்சி நியமித்த கொரில்லாக்கள்".

ஒரு தோழரின் உயிர் அகில உலகுக்கும் சொந்தம் மட்டுமேயல்ல. எதிர்வரும் தலைமுறைக்கு, ஆற்றவேண்டிய பணிகள் ஆயிரம் அந்த உயிருக்குள் அடங்கிக் கிடக்கிறது என்பது மட்டுமேயல்ல. அன்றைய நான்கு கோடித் தமிழருக்கும் பத்திரமாக அந்த உயிர் திருப்பித் தரப்பட வேண்டும்; இந்த பாதுகாப்புக் கவசத்தின் சூத்ரதாரி மலேயா தொழிலாளர் விடுதலைக்காகப் போராடி தூக்கில் தொங்கவிடப்பட்ட மலேய கணபதி என்ற தமிழன்; பொதுவுடைமைப் போராளி.

தமிழ்நாட்டில் பட்டுக்கோட்டை அருகிலுள்ள தம்பிக் கோட்டையில் பிறந்தவர் கணபதி; நெல்குவியும் தஞ்சை மண்ணிலிருந்து, வயிற்றுப் பசி தணிக்கும் பிடி நெல்கூட கிடைக்காமல் ஒன்பது வயதிலேயே மலேயா பயணமானார்.

தமிழ்நாட்டிலிருந்து மலேயா, சிங்கப்பூர், பர்மா, ரங்கூன் சென்ற தமிழர்கள் தீண்டாமை என்ற நோயையும் இடுக்கிக் கொண்டு சென்றார்கள். தமிழக தேநீர்க் கடைகளில் தாழ்த்தப்பட்ட

மக்களுக்கு தனித் தம்ளர்கள் என்றால், மலேயாவில் தனித் தகர டப்பாக்கள். தமிழர்களைப் பார்த்து மலேசியர்களும் பழகிக் கொண்டார்கள். கடல்கடந்த பின்னும் தொடரும் அவலத்தை துடைத்தெறிய கணபதி தாழ்த்தப்பட்ட மக்களை தன்னுடன் தேநீர்க கடைகளுக்கு கூட்டிப் போனார். பெஞ்சுகளில் சமமாக உட்கார வைத்து தேநீர் அருந்தச் செய்து, தானும் அருந்துவதைத் தொடர்ந்து செய்தார். 1936-38ல் தீண்டாமை எதிர்ப்புக் கனலை உச்சத்துக்கு உயர்த்தி எரியவைத்தார்.

“ஓராங்கிள்ளேங்' என்ற சொல்லுக்கு மலேயா மொழியில், திருடன், கொள்ளைக்காரன், தாழ்ந்தவன் என்று பொருள். தமிழர்கள் ‘ஓராங்கிள்ளேங்’ என்றே மிக இழிவாக அழைக்கப் பட்டார்கள். தமிழர்களைக் குற்ற பரம்பரை போல் கருதிய மலேசிய மக்களின் எண்ண ஓட்டத்தை எதிர்த்து, உலகிற்கு தொன்மையான நாகரீக நீரோட்டம் தந்தவர்கள் தமிழர்கள் என்று போராடினார். இடையறாத போராட்டத்தால் அந்தப் பழிக் கறையை நீக்கி மலேசியா சரித்திரத்தின் பக்கங்களை வெண்மை யாக்கினார்.

எல்லாத் திசைகளையும் உள்ளடக்கி, எல்லாப் பிரச்சினை களையும் உள்செறித்து, நடைமுறைகளில் ஆயிரம் கைகளை விரிக்கும் ஒரு மார்க்சியப் போராளியாக உருவெடுத்தார் கணபதி. மலேயா பல இன மகக்ளின் கூட்டுத் தீபகற்பம். அங்கு தேசிய இனங்களை இணைத்து, வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடுதல், வரலாற்றின் கட்டாயம். வரலாற்றின் கட்டளையை ஏற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் கம்யூனிஸ்டுகளாக இருந்தார்கள். மறைந்திருந்து தாக்கும் கொரில்லாப் போர் முறையினை கையிலெடுத்தார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக் கெதிராக வீரம் செறிந்த விடுதலைப்போரை முன்னின்று நடத்திய கணபதி 1952ல் தூக்கு மேடையேறினார்.

மலேயா கணபதி 1915ல் பிறந்தார். 1952ல் தூக்குக் கயிறு அவரை இறுக்கியபோது, வயது முப்பத்தியேழு. வாழ்வின் ஒரு சிறிய இடம்தான் அவருக்கு அளிக்கப்பட்டது. தனக்கு வழங்கப் பட்ட அந்த சிறிய வாழ்வில் விடுதலைப்போரின் எல்லா சாகசங்களையும் நிகழ்த்தி முடித்திருந்தார்.

கம்யூனிஸ்ட் கொரில்லா வீரர்கள் கே.டி.கே. தங்கமணி அறியாமலே இத்தனை நாளும் அவரைப் பின்தொடர்ந்திருக்

கிறார்கள். அவர் தங்கும் இடம், பேசும் கூட்டம், சந்திக்கும் தொழிற்சங்கங்கள் என்று எல்லா இடங்களிலும் பாதுகாப்பாய் அவர்களிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஒரு விடுதியில் (Hotel) நாங்கள் தங்க வைக்கப்பட்டோம். மாநாடு முடியும்வரை அங்குதான் தங்கல்.

சில நாட்கள் தவிர, எல்லா நாட்களிலும் இரவு எத்தனை மணிக்குத் தூங்கப் போனாலும் காலையில் ஐந்து அல்லது ஐந்தரை மணிக்கு எழுந்து விடுவேன். இரவில் லேசாய்த் தூறல் போட்டு முடிந்திருந்தது. விடியலில் புனு, புனுவென்று தூறல் போட்ட ஓசை கேட்டு விழித்தேன். வெளியே சாலை ஈரமாய் இருந்தது. ஊர்ப்புறத்துத் தாய்மார்கள் சொல்வார்களே அதுபோல, "சல்லுன்னு ஒரு தூத்தல் போட்டு முற்றம் தெளிச்சி" எடுத்திருந்தது. காலை நடை போக வெளியே வந்தேன். நாங்கள் தங்கியிருந்த அறைகளுக்கு எதிரில் படுத்திருந்த சிலர் படபடவென்று எழுந்திருந்தார்கள். தூக்கக் கலக்கம். அதிலும் ஒரு சுறுசுறுப்பு.

"ஐயா நீங்க வெளிக்கிடறீங்களோ?" (வெளியே போகிறீர்களா?)

"ஆமா, ஒரு நடை போய்வரலாம்னு"

"ஐயா, நீங்க கொஞ்சம் உள்ளே இருங்க. நாங்களும் வர்றோம்".

அவர்கள் எங்கள் பாதுகாப்புக்காக அனுப்பப்பட்ட போராளிகள்.

கீழே இறங்கிச் சென்ற என்னுடன் அந்தப் போராளி வந்தார். எல்லோரும் மாநாட்டு வேலைகளில் முதல் நாளிரவிலும் பணியாற்றியவர்கள். களைப்பை தூர எறிந்து சுறுசுறுப்பாய் தயாரானார்கள். அவரும் நானும் நடந்தது இரண்டு கி.மீ. தூரம். தடா முதல் பொடா வரை தமிழகத்தில் அம்மா ஆட்சியில் அநியாயமாக அமுல்படுத்தப்படுவதை அவர் கேட்டுக்கொண்டே வர சொல்லிக்கொண்டே போனேன்; தமிழகத்து நிலைமைகள் பற்றி நிறையவே கேட்டார்.

விடுதிக்கு திரும்பியபோது ஓவியர் மருதுவும், இன்குலாபும் எழுந்து விட்டிருந்தார்கள்.

“நடை போனீர்களா?” இன்குலாப் கேட்டார்.

“சொல்லியிருந்தா நானும் வந்திருப்பேன். நான் சர்க்கரை நோயாளி” என்றார்.

சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் ஒரு அருமருந்து காலை, மாலை நடை. குளுந்த நேரங்களில் கடுமையான நடை நடப்பார் இன்குலாப். அவருடன் எப்போதும் இருந்தது அந்தத் தீராத நடை. “தம்பிகள் சொல்லித்தான் தெரியும்” என்றார். எங்களைச் சுற்றி தம்பிகள் நின்றார்கள். ஒரு நடை போய்வருவதற்குள்ளேயே, மாநாட்டுக்கு எங்களை அழைத்துச் செல்ல காத்திருந்தார்கள்.

விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும், தமிழ்த்தாய் வெளியீட்டகமும் இணைந்து நடத்தும் ‘மானுடத்தின் தமிழ்க் கூடல்’ மாநாடு முடியும்வரை -

அவர்கள் நாங்களாக இருப்பார்கள். நாங்கள் அவர்களாக இருப்போம்.

அத்தனை விலைமதிப்புள்ளதா இந்த உயிர்கள்?

யாருக்கு யார் பாதுகாப்புத் தருவது என்பது வேண்டுமானால் உறுதிப்படுத்த முடியும். ஆனால் யாருக்கு யார் என்ன தீங்கு விளைவிப்பார்கள் என்று உறுதிபடச் சொல்ல முடியுமா?

மானுடத்தின் தமிழ்க்கூடல் இரண்டாம் நாள் மாலை அமர்வின் இடையில் சிறுநீர் கழிப்பதற்காக வெளியே வந்தேன். அரங்கத்தில் நுழையுமுன் இடதுபக்கம் இருந்தன சிறுநீர்ப் புறைகள். மண்டபத்தின் வெளியே சாலையில் சலசலப்பு எழுந்தது. சந்தேகத்திற்கு இடமான முறையில் கைத்துப்பாக்கி யுடன் நடமாடிய ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு போர்நிறுத்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுக் கொண்டிருந்தார். மாலை 5 மணிக்கு இந்த நபர் மண்டபத்தின் பிரதான நுழைவாயிலில் நுழைய முற்பட்டபோது, அங்கு கடமையிலிருந்த ஒருங்கிணைப் பாளர்கள் அனுமதியட்டையைக் கேட்டுள்ளனர். மதுபோதையில் இருந்த அவர் நிலை தடுமாறியுள்ளார். அப்போது அவரிடம் இருந்த கைத்துப்பாக்கி நழுவி விழ, ஒருங்கிணைப்பாளர்களும் பார்வையாளர்களும் மடக்கிப்பிடித்து விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தனர். புலிகள் இவரை அழைத்துச்சென்று போர்

நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் ஒப்படைத்தனர். மோட்டார் சைக்கிளில் அவரை அழைத்து வந்த இன்னொருவர் தப்பியோடி விட்டார்.

போர் நிறுத்த ஒப்பந்தப்படி, ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் போராளிக் குழுக்களைச் சேர்ந்த எவரும் ஆயுதங்களை வைத்திருக்கக்கூடாது. புலிகளும் யாழ்ப்பாணத்தில் ஆயுதங்களின்றியே நடமாடிக் கொண்டிருந்தார்கள். போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பிளாட் உறுப்பினர் ஒருவரிடம் கைத்துப்பாக்கி வந்தது எப்படி? இதன்மூலம் மூவினக் கலைஞர்களும் (தமிழ், சிங்கள, முஸ்லீம்) படைப்பாளர்களும், பத்திரிக்கையாளர்களும் ஒன்றுகூடி நடத்துகிற நிகழ்வின் அமைதியைக் கெடுக்க சதியா என்ற ஐயத்தை அங்குள்ள தமிழ் நாளிதழ்கள் முன்வைத்திருந்தன.

மானுடத்தின் தமிழ்க்கூடல் மாநாடு எல்லோருடைய, ஐக்கியத்தின் அடையாளமாக இருந்தது. யுத்த காலத்தில் எல்லோரையும் கூட்டி இவ்வாறான ஒரு சேர்க்கையை மேலெடுக்க முடியாது. போர் நிறுத்த ஒப்பந்த காலத்திலேதான் அது சாத்தியப்படும் சூழல் உருவாகிறது. மாநாடு தொடங்கு வதற்கு முந்தைய நாள் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை செய்தியாளர் சந்திப்பில் வலியுறுத்தினார். "தற்போது ஏற்பட்டுள்ள அமைதிநிலை நீடிக்கவேண்டும் என்பதையே விடுதலைப்புலிகள் அமைப்பு விரும்புகிறது. மக்களும் விரும்புகிறார்கள். இந்தச் சூழ்நிலையிலேயே மானுடம் தழுவிய சங்கமிப்பை நடத்த முடியும்.

இதற்கு முந்திய காலத்தில், பல்வேறு இடங்களிலுள்ள கலைஞர்கள், அறிஞர்களை ஒன்றிணைக்க முடியாதிருந்தது. ஆனால் இப்போது ஏற்பட்டிருக்கும் சமாதான சூழ்நிலையில் இதனை நடத்துவதே பொருத்தமானது.

இன்று உருவாகியுள்ள சமாதான காலத்தில் எமது போராட்டத்தின் நியாயத்தையும், நோக்கத்தையும் சிங்கள தேசத்திலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு விளக்கும் நோக்குடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எமது போராட்டம் தொடர்பாக, எமது

இயக்கம் தொடர்பாக சிங்கள ஊடகவியலாளர்கள் மத்தியில் நிலவும் தப்பபிப்ராயங்களுக்கு விளக்கமளிக்க மாநாடு உதவும்.

சிங்கள ஊடகவியலாளர்களுக்கும் எங்களுக்குமிடையிலுள்ள பெரும் இடைவெளியை நீக்குவதற்கு இந்த வாய்ப்பு உரிய முறையில் பயன்படுத்தப் பெறும்.

யாழ்ப்பாணத்தில் முன்னர் உலகத் தமிழ் மாநாடு நடந்தது. தமிழ் உள்ளங்களின் சங்கமாகவே அது அமைந்தது. இந்த நிகழ்வு தமிழ், முஸ்லீம், சிங்கள உள்ளங்களின் சங்கமாக அமையப் போகின்றது. சகல இனமக்களின் மத்தியில் இந்த சங்கமம் நிச்சயம் எழுச்சியை உண்டாக்கும். சகலரின் குரல்களும் இங்கு ஒலிக்கவிருக்கின்றன".

புதுவை இரத்தினதுரையின் செய்தியை, அதன் உள்ளிருக்கும் தருக்கத்தை அடுத்த நாள் செய்தி இதழ்கள் புரிந்து வெளியிட்டிருந்தன.

இதே யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் 1974-ம் ஆண்டில் உலகத் தமிழ் மாநாடு ஏற்றத்துடன் நடைபெற்றபோது, மாநாட்டின் எழுச்சியைப் பொறுக்கமுடியாத சிங்கள காவல்துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஒன்பது விலைமதிப்பற்ற தமிழ் உயிர்கள் களப்பலி தரப்பட்டன. "சுட்டேன், சுட்டேன். என் துப்பாக்கி ரவை தீரும்வரை சுட்டேன்" என்று 1919ல் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நடத்திய ஜெனரல் டயரின் வெறி பிடித்த கத்தல் ஒவ்வொரு துப்பாக்கிச் சத்தத்துக்குள்ளிருந்தும் எழுந்து வந்தது.

படுகொலை நடந்தபோது ஆட்சியிலிருந்த ஸ்ரீமதி பண்டார நாயக்கா ஒன்பது பேரின் உயிர்பறிப்புக்கு ஒருவரி இரங்கல் செய்திகூட தர மறுத்தார். விசாரணைக்கு ஆணையிட வேண்டும் என்று மக்கள் வைத்த வேண்டுகோளை புறந்தள்ளினார். படுகொலையை நடத்திய, ஏ.எஸ்.பி. சந்திர சில்வாவுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது மட்டுமல்லாமல், பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றமும் செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட 28 ஆண்டுகளுக்குப் பின்னால் நாங்கள் வீரசிங்கம் மண்டபத்தின் எதிரே முற்ற வெளியில் அவர்களுக்கு நினைவுச்சின்னம் நிறுவப்

பெற்றிருந்ததை நேரில் கண்டோம். 1974ல் நிறுவப்பட்ட அந்த நினைவுச்சின்னம் பின்னர் நிகழ்த்தப்பட்ட சிங்களப் படையெடுப்பின் போது, நொறுக்கப்பட்டது. மீண்டும் நினைவுத் தூண்கள் நிறுவி, தமிழ் மக்கள் தங்கள் உணர்வுகளை மெருகேற்றிக் கொண்டார்கள்.

உலகத்தமிழ் மாநாட்டில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக நினைவுத் தூபிகள் மின்விளக்குகளால் அலங்காரம் கொண்டிருந்தன. நினைவுத் தூபிகளில் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டிருந்தன.

மண்டப முற்றத்தில் நிறுவப்பட்ட கம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியை விடுதலைப்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த பாப்பா ஏற்றிவைத்தார். போரில் மறைந்த மாவீரர் ஒருவரின் தந்தை ஈகச்சுடரை (தியாகச்சுடர்) ஏற்றி வைத்தார். யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் கொடியேற்றப் பாடல் இசைக்க போராளிகள், மாநாட்டு வருகையாளர்கள் அனைவரும் போராட்டத்தில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினார்கள்.

"மானுட விடுதலை என்பது யாது என அறியாதவர் மனிதனாக இருக்கமுடியாது. மனிதன் தன் ஆளுமைக்குரிய மனிதத் தன்மைகளைப் பெறமுடியாதபடி செயற்படுகிற ஒரு சூழலில், நிர்ப்பந்திக்கப்படுகிற ஒரு சூழலில் அவன் அத் தளைகளிலிருந்து விடுபடு மானுடத்தின் குரல் முன்னுக்கு வரும். அது உலகப் பொது நியதியாகும். அந்தக் குரல் பாலஸ்தீனத்தில் கேட்கும். அது பிலிப்பைன்ஸில் கேட்கும். ஈழத்தில் கேட்கும். இந்தியாவில் கேட்கும். அமெரிக்காவில் கேட்கும். அந்த மானுடத்தின் குரல் இங்கே தமிழிலே பேசும் என்பது ஒன்றே தவிர, இந்த மானுடத்தின் தமிழ்க்குரலை வேறு வகையாக எடுத்துக் கொள்ளக்கூடாது". மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார்.

"தமிழர்களின் தொன்மை காரணமாகவோ, அது நீண்ட கால வரலாற்றுப் பண்புடையது என்பதின் காரணமாகவோ, அது மானுடத்தின் குரலாவது இல்லை. அது கட்டுக்களில் இருக்கின்ற மனிதன் தன்னுடைய மனிதத் தன்மைகளை, தன்னுடைய

ஆழமான உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு எப்போது பயன் படுகிறதோ அப்போது அது மானுட விடுதலைக் குரலாக வருகிறது. மானுட விடுதலையின் தளமாக அமைவது அதுதான். மனித உறவுகளை மதிக்கின்ற, மனித அடிப்படைகளைக் கையாளுகின்ற, மனிதனை மனிதன் ஆளுகின்ற குணங்களைக் கொண்டது அது.

"ஈழத்தமிழர்களின் விடுதலைப் போரானது மானுட விடுதலை நோக்கிய திசையில் வந்தது. வருவது. வரப்போவது. இது ஈழத்தமிழர்களின் உரிமைக்கான ஒரு போராட்டமும், தேடுதலுமே தவிர, இது எடுக்கும் வடிவங்களை வைத்துக் கொண்டு, அதற்கு எதிராக கூறப்படுவதை வைத்துக்கொண்டு இந்த உரிமைப் போராட்டத்தை மதிப்பிடக் கூடாது.

"அந்த வகையில் பார்க்கிறபோது, இலங்கையில் ஈழத்தமிழர்களின் போராட்டம், எப்போது உரிமைப் பற்றினால் தொடங்கி எப்போது மானுடப் போராட்டமாக மாறுகிறது என்பது கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்.

"ஏறத்தாழ 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய தேசிய உணர்வுகள் காரணமாக ஒவ்வொரு இனமும் தன்னுடைய இன அடையாளங்களை, தனது தனித்துவங்களை முதன்மைப் படுத்தவும், பேணிக் கொள்ளவும், எடுத்துக் கூறவும் முயலுகின்றது. 1920ல் இருந்து அரசியல் வடிவில் தமிழர்களின் உரிமைகள் பற்றி எடுத்துக் கூறுகின்ற ஒரு குரல் காணப்படுகிறது. இந்த நாட்டில் தமிழ் மக்கள் வாழுகிறார்கள் என்ற பதிவே இல்லாமல் செய்யும் முயற்சி 1948-லிருந்து தீவிரப் படுத்தப்பட்டது. தமிழினம் என்ற ஒன்றே இல்லாமல் செய்வதற்கான முயற்சிகளின் எதிர்வினையாகவே ஈழத் தமிழ் மக்களுடைய குரல் எழுந்து வரத் துவங்கியது. அப்போது இளைஞர்களுடைய வருகையும், இடர் களைய அவர்கள் மேற்கொண்ட உக்கிரமும், இந்தப் போராட்டத்தை, ஒரு மானுடப் போராக்கிவிட்டது".

தமிழ்க் கூடல் மாநாட்டில் தொடக்கவுரையாற்றிய பேராசிரியர் கா. சிவத்தம்பியின் உரையில் எதிர்வினை என்ற சொல் மிக முக்கியத்துவம் கொண்டதான ஒரு சொல்லாகும்.

இது எதிர்வினைகளின் காலம். இது எதிர்வினை யாற்றுவோரின் யுகம்.

# நோபல் பரிசு

எதிர் வினையாற்றல் எப்போது, எங்கிருந்து தொடங்குகிறது?

குழந்தை பிறந்ததிலிருந்து அது தொடங்குகிறது. "பிறந்த குழந்தைகூட, அழுகைப் புரட்சி செய்து தன் தேவையை நிறைவேற்றிக் கொள்கிறது" என்று கூறுகிறார் விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜி.

தன் தேவையை நிறைவேற்றிக் கொள்ள குழந்தை அழுகை என்ற ஆயுதத்தைக் கையிலெடுக்கிறது. வாய் - அந்தப் பச்சை மண்ணின் கையிலுள்ள ஆயுதம்.

குழந்தையின் வளர்ச்சி - ஒவ்வொரு கட்டத்திலும் எதிர் வினையாற்றலின் பரிணாமமே.

வினையாற்றுதலில் தான் வாழ்வின் அசைவு நடக்கிறது. வாழ்வின் அசைவைத் தடுக்கிற ஏதொன்றும் - உயிர் வாழ ஆதாரங்களைப் பெறுவதிலிருந்து உரிமைக்காற்றை சுவாசிக்கும் வரை எதுவொன்றும் தடைப்படுகிறபோது எதிர்வினையாற்றும் உந்துதல் உண்டாகிறது. தடையைத் தகர்க்கும் ஆற்றல் வளர்கிறது. இந்த எதிர் சிந்தனைதான், எதிர்வினைதான் மானுட வாழ்வின் உயிர்ப்பாக இருக்கிறது.

எதிர்வினை ஆற்றும் ஆற்றலற்றவர்கள் அடிமை ரூபம் கொள்வார்கள். இண்டு இடுக்குகளில் கொதிப்பு அலை கொப்பளிக்கிறபோது எந்த ஒரு சமுதாயம் எதிர்வினையாற்றும் வக்கற்றுக் கிடக்கிறதோ அப்போது, அது ஒரு அடிமைச் சமுதாயமாகிறது.

ஒரு இனக்குழு, இடம் விட்டு இடம் பெயராமல் ஓரிடத்தில் நிலையாக வாழ ஆரம்பிக்கிறபோது, அந்த இடம் தாய் மண்ணாகிறது. தாய்பூமி நேசிப்புக்குரியது. காடாக இருந்தாலும், மேடாக இருந்தாலும் அது தாய்பூமி.

“ஓட்டாரங்காடு ஒடங்காடு
ஓடிவருதாம் என் குதிரை”

நாட்டுப் பாடல் வரிகள் சொல்கிறதுபோல், அது கட்டாந்தரையோ, மொட்டாந்தரையோ, உடைமரக் காடோ, கருவேலங் காடோ, எதுவாக இருந்தாலும் சொந்த மண்ணை நோக்கிச் செல்லும் பாதையைப் போல், இனிமையானது வேறெதுவும் இல்லை.

அங்கே உயிர்த்துக் கிடப்பது காடல்ல. மனசுக்குப் பிரியமான உறவு.

இயற்கை வளமும் இணைந்துவிட்டால், மனப்பிரியம் உறவுகளினூடே கொழுகொழுவென்றாகி ஆட்டம் போடுகிறது.

“நான் உலகம் முழுதும் சுற்றியிருக்கிறேன்.
எங்கேயும் தண்ணீர்
இவ்வளவு சுவையாய் இருந்ததில்லை
நலந்தரும் பஞ்சாபிக் காற்றைப் போல்
நான் எங்கும் சுவாசித்ததில்லை”

- ஒரு பஞ்சாபிக் கவி தன் தாய்பூமியை இவ்வாறு நேசிக்கிறான்.

தண்ணீர் அத்தனை சுவையாக இருக்கிறதா? காற்று, அவ்வாறு நலந்தரும் காற்றா? காற்றில் பஞ்சாபிக் காற்று, அஸ்ஸாமிக் காற்று, மலையாளக் காற்று, தமிழகத் தென்றல் என்று காற்றின் அசைவிலும் வேறுபாடு அசைகிறதா? எதனால் இந்த நேசிப்பு?

மொழி, இனம், வாழ்விடம், உறவு எனும் ஆதாரங்களி லிருந்துதான் இந்த நேசிப்பும் பிரியமும் பிறப்பெடுத்தது.

வாழத் தகுதியற்ற நிலவியல் அமைப்புடைய பூமியே ஆனாலும் அங்கு என் மனிதர்கள் வாழுகிறார்கள். அந்த மண்ணுக்குள்ளிருந்து ஊற்றெடுப்பது தண்ணீரல்ல; என் இரத்தம். அந்தக் காடுகளில் அலைவது காற்றல்ல. என் உறவு என்ற உணர்வுதான் தாய்நாட்டு நேசிப்புக்கு மூலம்.

வன்னி வழியாக யாழ்நகர் நோக்கி வருகிறபோது கண்ணில் தெரிந்த காட்சிகள் மூச்சிழக்க வைத்தன. இதுதான் யுத்த பூமியா என்றலறச் செய்தது. இதுவே, இதுவே யுத்த பூமி என்ற பதில்

மிதந்து வந்தது. மக்களின் வாழ்வு தீய்ந்த வாசனை மூக்கில் மோதியது. காற்றில் ஈரம் இல்லை, கனல் இருந்தது.

"காற்று ஈழத்தின் கனலாய் வீசுகிறது.
கரைகளில் நாங்கள்
இனியும் கைகட்டி நிற்கவோ?"

என்ற இன்குலாபின் வாசகம் உறுதிப்பட்டது. இத்தரையிலிருந்து பார்க்கிற எந்தக் கவிஞனுக்கும் ஈழக்கரை தெரியாமல் இருக்காது. நுண்ணுணர்தல் கவிஞனுக்கு அல்லது கலைஞனுக்கு மட்டுமே சாத்தியம் என்றிருந்தாலும் சமூக அக்கறையுள்ள எவருக்கும் நுண்ணுணர்திறன் கைவசப்படும்,

"கரும்புத் தோட்டத்திலே... ஆ
கரும்புத் தோட்டத்திலே"

எட்டயபுரத்திலிருந்த பாரதி, ஜாவா, சுமத்திரா பீஜித் தீவுகளிலே மானுடர்படும் பாட்டைக்கண்டு கத்திக் கதறி அழுதது, இந்த சமூக அக்கறையால்தான்.

"அவர்
விம்மி விம்மி விம்மியழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே - துன்பக்
கேணியிலே யெங்கள் பெண்களழுத - சொல்
மீட்டு முறையாயோ"

மானுடத்தின்மீது அக்கறை கொள்ள மானுட சாதிக்கேயுரிய இயல்பான நுண்ணுணர்வு போதுமானது.

"ஒரு அரசு அல்லது ஒரு நாடு, ஒரு நிறுவனம், ஏன் ஒரு தனி மனிதன், ஒரு வாழ்க்கைத்துணை, ஒரு சிநேகிதன் அல்லது ஒரு சகோதரன், எந்த ஒரு தத்துவத்தின் பெயராலும் தங்குதடையற்ற அதிகாரத்தைத் தன்னகத்தே குவித்துக் கொள்கிறபோது அத்து மீறல்களுக்கு இட்டுச் செல்லும்" எழுத்தாளர் அருந்ததிராய் கூறுகிறார். அவர் சொல்வதுதான் எந்தவொரு எதிர்வினை யாற்றுலுக்கும் மூல காரணமாகிறது.

ஆக்கிரமிப்பு, அத்துமீறல் எப்போதும் ஆதிக்க குணத் திலிருந்து வருகிறது. அதிகாரம் என்பதே மேல், கீழ் எனும் படிநிலையின் உச்சிதான். அதிகார நிலையைக் கைக்கொள்கிற

அனைவரும் ஆதிக்க சக்திகள்தான். யுத்தத்தின் முதல் எழுத்து இந்த அதிகார அகராதியில் காணப்படுகிறது.

சொந்த நிலத்திலிருந்து ஒரு இனத்தை துடைத்தெறிவதற்கான அத்துமீறல் நாற்பதுகளிலேயே சிங்களப் பேரினவாதத்தால் தொடங்கப்பட்டது. சிங்களப் பேரினமும் சிங்கள அரசும் வேறு வேறல்ல. இதிலிருந்து புத்தமதமும் வேறானதல்ல. மதப் பேரினவாதம் என்ற புதிய வடிவத்துக்கு சிங்களப் பேரினம் தன்னை உருமாற்றம் செய்து கொண்டது.

தங்களுடைய பூமியில் தாங்கள் அந்நியராக்கப்படுகிறோம், தாங்கள் எங்கிருக்கிறோம் என்பது அறியப்பட முடியாத தவிப்பு தமிழர்களிடையே நிலவியது. வாழ்வு கருகிய பாலையிலிருந்து இதந்தரும் காற்றை சுவாசிக்க முடியாது. அடிமை நிலை உருக்கொள்ளும் இடத்தில் தண்ணீர் சுவையாக இருக்காது, நலந்தரும் காற்றும், சுவைதரும் நீரும், குளிர்ச்சி பொங்கும் நிலமும் இத்தனையும் இல்லாமல் போகும்.

- 20 லட்சம் ஈழத்தமிழர்களும், 18 லட்சம் தோட்டத் தொழிலாளித் தமிழர்களும் வாழ்கிற நாற்புறமும் கடல் சூழ்ந்த ஈழத்தமிழர்களின் வாழ்வு ஒரு கண்ணீர்க் கல்லறையாகி விட்டது. உலக வரைப்படத்தில் அது பெரிய கண்ணீர்த்துளி.
- இலங்கையின் அந்நியச் செலாவணியில் 60 சதவீதத்துக்கு மேல் ஈட்டித் தருவது தேயிலை. அது பச்சைத் தங்கம்! தேயிலை, ரப்பர் தொழிலில் ஈடுபட்டிருப்பது மலையகத் தோட்டத் தமிழர்கள், மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருப்பது ஈழத் தமிழர்கள்.
- தினம் உழைத்து தேயிலைக் கொழுந்துக்கு தீ நிறத்தை தந்தவர்கள் எரிக்கப்படுகிறார்கள். தேசப் பொருளா தாரத்தில் 90 சதவீதத்தை உருவாக்கித் தருவோர் கொலை செய்யப்படுகின்றனர். வீடுகளும் கடைகளும் சூறையாடப்படுகின்றன. பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்படுகிறார்கள். 1949-ல் ஆங்கிலேயர் வெளியேறிய பின் சிங்களவர் கட்சியான அய்க்கிய தேசியக் கட்சி, ஆட்சியைக் கைப்பற்றியபோது தமிழர்களுக்கு இருந்த உரிமைகளும், சலுகைகளும் ரத்து

செய்யப்பட்டன. குடியேற்றத் தமிழர்களின் வாக்குரிமையும், குடியுரிமையும் பறிக்கப்பட்டது. இலங்கையின் ஆட்சி மொழியாக சிங்களம் ஆக்கப் பட்டது. அரசாங்க மதமாக புத்த மதம் அறிவிக்கப் பட்டது. மலையகத் தோட்டப் பகுதி களிலிருந்து தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டு சிங்களத் தொழிலாளர்கள் நிரப்பப்பட்டனர். விரட்டி யடிக்கப்பட்ட தமிழர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் சென்று பிச்சையெடுத்துப் பிழைத்தனர்.

- தமிழ்நாட்டில் உழைக்கும் மக்களை அடக்க அத்தியாவசியத் துறைகளில் வேலை நிறுத்த தடைச்சட்டம் கொண்டுவந்த அம்மா போல், இலங்கை ஜெய வார்த்தனேயும் கொண்டு வருகிறார். சட்டச் சங்கிலிகளால் - அடக்குமுறைத் தளைகளால் போராட்டத்தை அடக்க முடியாதபோது - வாழ்வுக்கான போட்டியில் சிங்களருக்குரியதையும் தமிழ் மக்கள் எடுத்துக் கொள்வார்கள், ஒட்டுமொத்தமாய் இலங்கையையே பறித்துக் கொள்வார்கள் என்று பௌத்த சிங்களவர்களை நம்பச் செய்தார்கள்.
- இலங்கையின் அதிஉத்தம சனாதிபதியாக இருக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனேயும் அவருடைய அய்க்கிய தேசியக் கட்சியும் இனக்கலவரங்களுக்கு அடிப்படை அமைத்தன. இன்று அந்த இடத்தை ஜே.வி.பி. எடுத்துக் கொண்டது. இன்னொரு இடம் ஜாதிக ஹெல உறுமய கட்சி. புத்த சந்நியாசிகள் நாடாளமன்ற உறுப்பினர் களான அதிசயம் அங்குதான் நடந்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தனேயின் கட்சிப் பத்திரிகையான சியரட்ட என்னும் நாளிதழ் ஒரு கட்டத்தில் எழுதியது.

  *"சிங்கள இளைஞர்களே கிளர்ந்தெழுங்கள்! நாட்டின் நலனுக்காக உங்கள் உயிரைத் துச்சமென எண்ணி, முடிந்த அளவு தமிழர்களைக் கொல்லுங்கள். நாட்டின் பெயரால் விரைவோம். கொல்வோம்".*
- இதுவரை *1956ல், 1958ல், 1974ல், 1976ல், 1977ல், 1981ல்* இனக்கலவரங்கள் நடந்துள்ளன. இப்போது 1983ல்; அப்போதெல்லாம் ஆங்காங்கு தமிழ் இளைஞர்களை

நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தாமலேயே பல வருடங்கள் சிறையில் அடைத்து தொடர்ந்து சித்திரவதை செய்தார்கள். கொன்றார்கள்.

அமைதிக்கான நோபல் பரிசு இதுகாலம் வரை யார் யாருக்கு வழங்கப்பட்டு வந்திருக்கிறது? அடக்குமுறை நபர்கள், அவர்களின் செயல்களுக்கு ஊட்டம் கொடுத்த மேதைகள் யாரோ அந்த மேதைகளுக்கு.

1973-ம் ஆண்டில் சிலி நாட்டில் சனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அலேண்டே அரசு, அமெரிக்காவின் வேட்டை நிலமாக தன்னை ஆக்கிக்கொள்ள இசையவில்லை. யாரோ ஒருவருக்காக தன் சொந்த மக்களையே வேட்டையாடத் தயாராக இல்லை. மக்களால் உண்டாக்கப்பட்ட மக்களின் அரசைத் தூக்கியெறிந்து அலண்டே போன்ற தலைவர்களை பச்சைப் படுகொலை செய்ய இராணுவத் தளபதி பினோசா தூண்டிவிடப்பட்டான். இந்த வெறியாட்டத்தை நிகழ்த்திட அமெரிக்காவுக்கு அறிவுத்தானமும் ஆலோசனைகளும் தந்தவன் அப்போதைய அமெரிக்க வெறியுறவுத் துறை அமைச்சர் ஹென்றி ஹிசிஞ்சர்.

அவனுக்கு உலக அமைதிக்காக நோபல் பரிசு வழங்கப் பட்டது.

இஸ்லாமிய மக்கள் வளைகுடா நாடுகளெங்கணும் நிறைந்திருக்கிறார்கள். இந்த அரபு நாடுகளின் எதிர்ப்பையும் மீறி யூத இன மக்களுக்காக யூத இன வெறியர்கள் ஜியோனிஸ்டுகள் என அழைக்கப்பட்டவர்களின் அறிவுரையினை ஏற்று பிரிட்டிஷ் அரசு (அப்போது உலகத்தின் தாதாவாக இருந்த காலம்) இஸ்ரேலை, பாலஸ்தீனத்தில் உருவாக்கியது. தாய்நாடு அபகரிக்கப்பட்ட பாலஸ்தீனர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள்.

போராட்டத்தை முன்னெடுத்தது பற்றி, பிரிட்டிஷ் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சர்ச்சில் சொன்னார், "தொட்டியில் கிடக்கும் நாய், வெகு நீண்ட காலமாக கிடந்ததால், தொட்டியின்மீது அதற்கு மட்டுமே உரிமை உண்டு என்பதை ஒப்புக் கொள்ளமாட்டேன். உதாரணத்துக்கு அமெரிக்கக் கண்டத்தின் செவ்விந்தியர்களுக்கும், ஆப்பிரிக்காவின் கறுப்பினத்தாருக்கும் பெரும் தவறிழைக்கப்

பட்டது என நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். அம்மக்களை விட சக்திவாய்ந்த, உயர் மதிப்புள்ள, உலக ஞானம் அதிகமுள்ள ஒரு இனம் உள்ளே நுழைந்து, அவர்களுடைய இடத்தைப் பிடித்துக்கொண்டது என்பதாலேயே அவர்களுக்குத் தீங்கிழைக்கப்பட்டது என்பதை நான் ஏற்கமாட்டேன்".

தாய்நாட்டுக்குரிய மக்களை நாய்கள் என்று பெயரிட்ட வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

நோபல் பரிசு நிறுவனர்களுக்கு மட்டுமல்ல. நமது அறிவாளிகள், வரலாற்று ஆசிரியர்களுக்கும் இது மாதிரியான உதாரண புருசர்களே வரலாற்று வீரர்கள்.

*1949*-லிருந்து ஒரு இனத்தின் அடையாளமே இல்லாமல் செய்தொழிக்கும் வரலாற்றுப் பாத்திரத்தை குறைவில்லாது நிறைவேற்றிவரும் பண்டார நாயக்கா, சிறிமாவோ பண்டார நாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனே, பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்கா - இவர்களுக்கு அமைதிக்கான நோபல் பரிசு இன்னும் ஏன் வழங்கப்படவில்லை?

வழங்கப்பட்டால் ஆச்சரியம் கொள்ள இல்லை.

## புத்தர் யாரா இருந்தார்?

மக்கள் எப்போதும் தங்கள் வாழ்க்கைக்கான வினை யாற்றுதலில்தான் இருக்கிறார்கள், தாமுண்டு, தம் வாழ்க்கை உண்டு என்று இயல்பான வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள். உழைப்பது, சம்பாதிப்பது, உள்சண்டை, சமாதானம், தூக்கம் என்ற தினப்படியான காரியங்களைத்தான் செய்து கொண்டிருந்தார்கள்.

யுத்தத்தை அவர்கள் வேண்டி விரும்பிப் போகவில்லை. ஆனால் யுத்தம் எப்போதும் மேலிருந்து திணிக்கப்படுகிறது. யுத்தம் என்பதே ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டது. ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட எதுவும் மேலிருந்துதான் இறங்கும். யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டிய இடத்துக்கு, பொருதிப் பார்க்கவேண்டிய கட்டாயத்துக்கு மக்கள் தள்ளப்படுகிறார்கள். மிண்டர் என்ற பஞ்சாபிக் கவிஞன் இதை தெளிவுபடுத்துகிறான்.

"என் தோள்களில் ஒரு போர்வை இருந்தது
என் கைகளில் ஒரு புல்லாங்குழல் இருந்தது
நான் எங்கும் செல்லவில்லை
ஏதொன்றும் செய்யவில்லை
என் தோள்களில் துப்பாக்கி வந்தது எப்படி?
என் கைகளில் பிணங்களைத் தந்தது யார்?"

- ஈழத்தமிழர்கள் தம்மியல்பான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் வேறெதுவும் செய்யவில்லை. எங்கும் செல்லவில்லை. சிங்கள - பௌத்த தேசிய வாதம் 1949-லிருந்து ஒவ்வொன்றாக, மேலிருந்து கீழாக தமிழர்கள் மீது இறங்கியது. போர்வை இருந்த தோள்களில் துப்பாக்கி வந்தது.

தந்தை செல்வா காலத்திலிருந்து அறப் போராட்டம், ஊர்வலம், சமாதானம் எனும் புல்லாங்குழல் ஏந்திய கரங்களில் பிணங்கள் வந்தன.

தோள்களில் புறாவோடும், கைகளில் புல்லாங்குழலோடும் இசைக்கப்பட்ட எல்லா சாத்வீகப் பாடல்களும், ஆக்கிரமிப் பாளர்களின் காதுகளைச் சென்றடையவில்லை.

தங்கள்மீது ஏவப்பட்ட பேரினவாதப் பேயை ஈழ இளைஞர்கள் எதிர்கொண்டார்கள். போர்வையை, புல்லாங் குழலைத் தூக்கி எறிந்து புதிய மொழி பேசினார்கள்.

"கட்டுண்ட உரிமைகளைப்
பறித்தெடுக்க
இனி விரல் நகங்கள் போதாது
இயந்திர நகரங்கள் வேண்டும்"

-வண்ணச் சிறகு என்ற ஈழக் கவிஞன், தனது மக்களின் மொழியை, தன் கவிதையில் பதிவுசெய்தான். வஞ்சிக்கப்பட்ட கவிஞன் அவன். சிறிமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்தால் மலையகத்திலிருந்து நீலகிரி மலைகளுக்கு விரட்டப்பட்டவன்; தமிழகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்ட லட்சோபலட்சம் தமிழர்களில் அவன் ஒருவன். வண்ணச் சிறகு பேசிய துப்பாக்கி மொழி பேரின அடக்கு முறையாளர்களுக்கு உடனே கேட்டது. அடக்குமுறையின் அநாகரிகச் சவுக்குகளை மீண்டும் மீண்டும் கையிலெடுத்தார்கள்.

மக்களுக்கே வியப்பாகத்தான் இருந்தது. தாங்கள் விதைத்தது ஒன்றாகவும், விளைந்தது ஒன்றாகவும் இருப்பது கண்டு ஆச்சரிய மடைந்தார்கள்,வேதனைச் சிரிப்பு உதிர்த்தார்கள். என்ன கண்கட்டி வித்தை அது? எப்படி நடந்தது அது?

"சகோதரர்களே, அது எப்படி?
உழுது பதப்படுத்திய வயல்களில்
நீங்கள் கோதுமை விதைக்கிறீர்கள்
வாள்கள் முளைக்கின்றன
சோளம் விதைத்தீர்கள்
துப்பாக்கிகள் வளர்கின்றன"

*(அஜாயிப் கமால் - பஞ்சாபி)*

பிறகு நேர்மாறான நிலைமைகள் உருவாகின, உறவு, அன்பு, சிநேகம், காதல், குடும்ப உறவுகள், பாசம் - என்ற பண்பாட்டு மதிப்பீடுகள் சிதையூட்டப்பட்டன. யுத்தத்தில் எல்லாமே மேல்கீழாக குலுக்கி எடுக்கப்பட்டது.

சிலுவை இயேசுவை சிலந்தி மூடிற்று
பிள்ளையார் பீடத்தில் களிம்பு படர்ந்தது
மாமர ஊஞ்சல்கள் இற்று வீழ்ந்தன
சருகடர்ந்த முற்றத்தில் பாம்புகள் அசைந்தன

*-ஹம்சத்துவணி*

முற்றத்தில் படர்ந்திருந்த
நெருஞ்சிகளின் சாம்பலை
அள்ளிச் சென்றது காற்று
அச்சம் துறந்த ஆட்காட்டிகளின்
பாடலில் நிரம்பி வழிந்தன வெளிகள்

*-அன்ரன் அன்பழகன்*

இலங்கை அனுராதபுரத்தில் புத்த விகாரையில் புத்தரின் பல் இருக்கிறது. அன்பு செய், அன்பு தான் இன்ப ஊற்று, உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற புத்தரின் சொல் அங்கு மட்டுமல்ல, ஏதொரு இடத்திலும் இல்லை. சக மனிதரிடம் தோழமை காட்ட முடியாத சகல மனங்களிலிருந்தும் புத்தர் வெளியேற்றம் நிகழ்வது உண்மையாயின், இலங்கையிலிருந்துதான் அவர் முதலில் வெளியேறியவராக இருக்கவேண்டும்.

இலங்கை ராணுவத்தின் சோதனைக் கெடுபிடிகளைக் கடந்து கடைசி சோதனைச் சாவடியான முகமாலையைத் தாண்டி சாவகச்சேரி போய்ச் சேர்ந்தபோது, அப்போதுதான் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகி சில மாதங்களே கடந்திருந்ததால் ஒரு சிலர்தான் வீடுகளுக்குத் திரும்பியிருந்தார்கள். தகர்க்கப்பட்டுக் கிடந்த வீட்டை, சொந்த வீதியை, ஊரை மெல்ல மெல்ல நெருங்கிக் கொண்டிருந்தார்கள். வாழ்வை படிப்படியாய் உயிர்ப்பித்துக் கொள்ள முயன்றார்கள்.

மயானம் என்றோ, ஆளரவமற்ற காட்டுப் பிரதேசம் என்றோ, கண்ணுக் கெட்டிய தூரம் துயரக் கானல் நெளியும் பாலை என்றோ ஒப்புமை பேசி அந்த சித்திரத்தைத் தீட்டிவிட முடியாது.

"குண்டு துளைக்காத ஒரு சுவரும்,
காயம் படாத வீடும்
சாவு விழாத ஒரு குடும்பமும்
எங்கும் இல்லை"

-இதுதான் மொத்த ஈழமாக இருந்தது.

ஈழத்தின் மொத்தச் சிதைவைக் காட்டும் ஒரு புகைப்படம் சாவகச்சேரி. போரை, அதன் குரூரத்தை, அதே நேரத்தில் விடுதலைத் துடிப்பின் ஆன்மாவைக் காட்ட சாவகச்சேரி என்ற ஒரு புகைப்படம் போதும். யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டுக் கருத்தரங்கின் இறுதிநாள் அரங்கில் கவிஞர் புதுவை இரத்தினதுரை சொன்னதுபோல,

"வன்னி பட்ட வேதனை யாழ் அறியாதது
யாழ்பட்ட வேதனை வன்னி அறியாதது
வல்வெட்டித் துறை பட்ட வேதனை
கிளிநொச்சி அறியாதது
நாங்கள் பட்ட வேதனை யாரும் அறியாதது"

இரண்டு நாள் அமர்வில், கலையன்பன் என்று அழைக்கப் படும் புதுவை அன்பன் "போராட்டம் எம் மக்களுடன் பின்னிப் பிணைந்தது, எல்லாம் போர் மயம், எல்லா மக்களும் போருக்காக" என்று கூறியது, எல்லாப் பொருத்தத்தோடும் அமைந்தது. "வரிகளுக்குள்ளும் வார்த்தைகளுக்குள்ளும் அடங்காத சோகம் எங்கள் மக்கள் அனுபவித்தது" என்றார்.

"எப்போதும் ரண ஈரம் அழியாத பச்சைப்புண் எமக்கு ஏற்பட்ட அனுபவம். நினைக்கையில் என் இதயத்தில் இப்போதும் நெருப்புப் பொடியாக இருந்து காந்துகிறது. நாங்கள் ஒரு கிராமத்தில் நின்று போராடிக் கொண்டிருந்தபோது, ஒரு தாயிடம் சென்று சோறு கேட்டோம். முதல்நாள் மறுத்தார். இரண்டாம் நாளும் மறுத்தார். என்னுடைய ஒரே ஒரு பிள்ளையையும் கூட்டிக்கொண்டு போய் சண்டையில் சாகடித்து விட்டீர்களே, பாவிகளே என்பதுதான் அவர் சோகம்.

அந்த சோகம் தந்த கோபத்தில் எங்களுக்குச் சோறு போட மறுத்தார். மூன்றாவது நாள் எங்களை அழைத்து அவரே சோறு அளித்தார். இந்தத் தாய்மார்களையே நாங்கள் எல்லா இடத்திலும் தரிசித்தோம்.

இன்னொரு ஊரில் ஒரு தாய்க்கு ஒரு கடிதம் வந்தது, யுத்தத்திலே நிற்கிற அவரது மகன், ஒரு தற்கொலைப்படைப் போராளி. கடிதத்தில் எழுதியிருந்தான் "இக்கடிதம் உன் கையில் கிடைக்கிற நேரம் நான் வெடித்துச் சிதறியிருப்பேன்".

புதுவை அன்பன் சித்தரித்தபோது, மாநாட்டு அரங்கில் அமர்ந்திருந்த இரு பெண்கள் அழுதார்கள். அது அவர்களுடைய வாழ்க்கையாக இருக்கும். அரங்கில் அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த எல்லோரது வாழ்க்கையிலும், ஆக்கிரமிப்புப் போரின் வடு, பச்சைப் புண்ணாக உட்கார்ந்திருந்தது.

எல்லாக் கட்டிடங்களும், மக்கள் விட்டுச் சென்ற எல்லா வீடுகளும் ராணுவ முகாமாகியிருந்தன. சிக்காமல் மீதியிருந்த வீடுகள் மூச்சடைத்து திணறின.

தென்மராட்சி பேருந்து நிலையம் அருகிலுள்ள தளங்கிளப்பு சாலையில் மொட்டைச் சுவர்களுடன் ஒரு மசூதி. செல்லடியில் சிதறிப் போயிருந்தன மாடிப்படிகள். மசூதி, சர்ச், கோயில் எதுவும் ராணுவத்தின் அதிரடிக்கு விலக்கல்ல. நல்லூர் கந்தசாமி கோயிலில் இந்திய ராணுவம் நடத்திய அட்டகாசங்கள் என்றைக்கும் நீங்காத காட்சி.

நல்லூர் கந்தசாமி கோயிலில் துயரப்பட்ட மக்கள் எல்லாக் காலத்திலும் அடைக்கலமாகியிருக்கிறார்கள். எல்லாக் காலத்திலும் துயரத்திற்கு, வடிகால் தேவைப்படுகிறது. அது மட்டுமேயல்ல. ஓராயிரம் ஆண்டுகளின் வரலாற்றுக் காட்சியாகவும் அந்தக் கோயில் நிற்கிறது. கி.பி. 948-ஆம் ஆண்டில் அமைச்சர் புவனேசபாகு என்பவரால் கோயில் கட்டப்பட்டது. சுப்புமல் குமாரன் என்ற சிங்கள அரச பரம்பரையில் வந்தவன் படையெடுத்து அழித்தான். பின்னர் அவனே இந்தக் கோயிலை மறுபடி கட்டி முடித்தான் என்கிறார்கள். 1949-ல் இருபெரும் நிலப்பிரபுக்களால் மறுகட்டுமாணம் செய்யப்பட்டது.

இந்திய அமைதிப்படை வந்திறங்கியபோது மருத்துவக் கல்லூரித் திடலிலே ஹெலிகாப்டரில் வந்திறங்கினார்கள். பக்கமாயுள்ள நல்லூர் கந்தசாமி கோயிலின் முன்புற வெளியில் ஆர்ப்பரித்து வரவேற்ற மக்களைத் திரட்டி சோறு போட்டார்கள். விடுதலைப்புலிகள் இந்திய ஆக்கிரமிபுப் படையினை எதிர்த்துப்

போராடத் துவங்கியபோது அதே படை, அதே கோயிலுக்குள் பல்லாயிரக்கணக்கான மக்களை அடைத்து சோறு போடாமல் பட்டினி போட்டார்கள். ராணுவத்தைச் சுற்றி வளைத்து புலிகள் தாக்கத் தொடங்கிய பிறகே மக்களை இறுக்கிய கரங்களைத் தளர்த்தினார்கள்.

கோயில் எதிரே பெரிய திடல். திடலின் இடது பக்கம் படர்ந்து உயர்ந்த மரம். இந்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து ஆக்கிரமிப்பாளனின் அட்டூழியங்களை முறியடிக்க மருத்துவப் படிப்பைக் கைவிட்டு புலிகளில் தன்னை இணைத்துக்கொண்ட திலீபன் உண்ணா நோன்பிருந்த இடம் அந்த மரத்தடி. உண்ணா நோன்பு தொடங்கிய நாள் *15.09.1987*. பன்னிரண்டு நாட்கள் உண்ணா நோன்புக்குப் பின், அவர் உயிர்பிரிந்த நாள். *26.09.1987*. காலை *10.48* மணிக்கு அவர் உயிர் பிரிந்தது.

பிரபாகரனின் மடியில் தலைவைத்தபடி அவர் உயிர் நீங்கியது.

அந்த நாளில் பிரபாகரனும், அனைத்துப் போராளிகளும் உள்ளுக்குள் ஒரு சபதம் ஏற்றுக்கொண்டார்கள். அதே 26-ந் தேதி, யாழ் கோட்டையைக் கைப்பற்றி, தமிழீழக் கொடியை பறக்க விட்டு, திலீபன் நினைவு நாளைக் கொண்டாடினார்கள்.

# மாவீரர் துயிலுமிடம்

*யாழ்நகரை ஒட்டியுள்ள கோப்பாயில் உள்ளது மாவீரர் துயிலுமிடம். யாழ் மாவட்டத்தில் தீவகம், கோப்பாய், தென்மராச்சி, வடமராச்சி - நான்கு இடங்களில் மாவீரர் துயிலுமிடங்கள் உள்ளன.*

*அங்கு நாங்கள் நின்றபோது உமி தூவுவதுபோல் மழை தூறியது. இன்று போலவே முன்பொருநாள் 10.10.1987-ல் இந்திய ராணுவம் ஆக்கிரமிப்பு நோக்கத்தோடு யுத்த தயாரிப்புகளுடன் யாழ் நகர் விட்டு நீங்கி கோப்பாய் வந்தடைந்த போதும், மழை தூறிக் கொண்டிருந்தது. மன்னாரைச் சேர்ந்தவர் லெப்டினென்ட் மாலதி. 19 வயது மாலதி தலைமையிலான மகளிர் புலிப்படை இந்திய ராணுவத்தை எதிர்த்துத் தாக்கியது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன்முதலில் வீரச்சாவு அடைந்த பெண் போராளி லெப்டினென்ட் மாலதி.*

*விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழக வெளியீடான வெளிச்சம் 78-வது இதழில் வெளியான உரைச் சித்திரம் அந்த நிகழ்வைச் சித்தரிப்பது- அது அவ்வாறே இங்கு தரப்படுகிறது.*

**புதிய கதைகள்**

**புதிய நிஜங்கள்**

*1*

*யாரிடமும் அச்சமில்லை. போர் அனுபவம் அதிகமில்லை. எனினும் விடுதலை முனைப்பு அதிகமாக இருந்ததால் இதைப் பற்றி அவர்கள் கவலை கொள்ளவில்லை. கோப்பாய் கிறேசரடியில் அவர்கள் எதிரிக்கான வலையை விரித்தார்கள்.*

*(அதைத் தொடர்ந்து தாயகமெங்கும் இழுத்து விரிக்கப்பட்ட வலைகளில் சிக்கிய அசோகச் சக்கரம் உருளமுடியாமல் திணறியது தனிக்கதை).*

பவான் நடவடிக்கையைத் தொடங்கிய இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாண நகரப்பகுதியிலிருந்து நகரத் தொடங்கி விட்டிருந்தனர். இதைச் சற்றும் எதிர்பார்த்திராத மக்கள், நம்ப முடியாத அதிர்ச்சியுடன் வாசல்களைப் பூட்டிக்கொண்டு வீடுகளுக்குள் அடைந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் ஒரு அணி, 2ம் லெப் மாலதி, கஸ்தூரி, தீபா, விஜி இன்னும் சிலர் கோப்பாய் வெளியில் எதிர்நடவடிக்கைக்குத் தயாராகிக் கொண்டனர்.

ஐப்பசி மாதம் மழைக்காலம், எனினும் அன்று வானத்து நட்சத்திரங்கள் இருட்டடிப்புச் செய்யப்படவில்லை. நிலவு, தலைக்கு மேலேயே மிதந்து கொண்டு இருந்தது. கண்களைக் கூசச் செய்யும் ஒளியுடன் கோப்பாய் - கைதடி வீதியில் திரும்பியது இந்திய ராணுவம். காவற் கடமையில் நின்றவர் யாருடைய ஊர்தி என்று அறிவதற்காக எழுந்து நின்றனர். வந்த ஊர்திகள் சடுதியில் நின்றன. அதில் வந்த இந்திய இராணுவத்தினர் குதித்தனர். நூறு நரிகள் சேர்ந்து ஊளையிடுவது போன்றதொரு ஒலியை எழுப்பியவாறு இவர்களை நோக்கி ஓடிவந்த படையினரை இவர்களின் துப்பாக்கிகள் வரவேற்றன.

இரவின் அமைதியைக் குலைத்தவாறு அந்த வெளியில் சண்டை நடந்தது. இந்திய இராணுவம் தன் வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு பெண்கள் படையோடு மோதியது. பெண்கள் பற்றி அவர்களிடமிருந்த கற்பனைத் தத்துவங்கள் உடைந்து விழுகின்ற அளவுக்கு அந்த சண்டை நடந்தது.

தனது தொடையில் ஏற்பட்ட காயத்தின் நிலைமையைப் புரிந்துகொண்ட மாலதி தன் கையிலிருந்த சுடுகலனை வீரவேங்கை விஜியிடம் கொடுத்தார்.

"இதைக் கொண்டுபோய் அண்ணையிட்டைக் குடு. நான் குப்பி கடிக்கப் போறன்".

மாலதியை விட்டுவிட்டுப் போக விஜி தயாராக இல்லை.

"நான் உன்னை விடமாட்டேன் மாலதி".

விஜி மாலதியை இழுத்துப் போக முயற்சித்தார். ஆனால் மாலதியின் உறுதியே வென்றது.

"இதைக் கொண்டு போய் அண்ணையிட்டைக் குடு".

அந்த நேரம் மிகவும் அரிதாகவும், எல்லோரது நேசிப்புக்கும் உரியதாக இருந்த M16ஐ தங்களெல்லோருக்கும் தருவதற்காக தலைவர் எடுத்த முயற்சிகளைப் புரிந்துகொண்டதனால், அன்றைய சூழலில் உலகின் நான்காவது வல்லரசுடனான போரில் அந்த ஆயுதம் ஆற்றவேண்டிய பங்களிப்பைப் புரிந்துகொண்டதனால் வந்த வார்த்தைகள்.

**2**

திண்ணை மாநாட்டில் ஒன்று கூடியவர்களுக்கு இதை நம்பச் சற்றுச் (சற்று என்ன சற்று? முற்ற முழுதாகவே) சிரமமாகவே இருந்தது.

"உந்தப் பெரிய இந்தியக்காரன் நடுச்சாமத்தில் முன்னாலை வந்து நிக்கேக்கை உந்தப் பொடிச்சிகள் அவங்களைச் சுட்டிருக்குங்களோ?"

சீக்கியப் படைப்பிரிவினரின் அரைப்பனை உயரமும் எங்கள் பெண்களின் ஐந்தடி உயரமும் அவரைக் கேள்வி கேட்க வைத்தன.

ஏற்கனவே லெப், கேணல் விக்ரர் அவர்கள் வீரச்சாவடைந்த மன்னார் - அடம்பன் சண்டையில் மகளிர் படையணி பங்கேற்றி யிருந்ததான கதைகளை அரைகுறையாகக் கேள்விப்பட்டிருந்த போதும், அவர்களது ஐயங்கள் தெளியவில்லை. கேள்விகளோடு மாநாடு தொடர்ந்தது.

**3**

அங்கம் - பருத்தித் துறை துறைமுகத்தடி

காலம் - 1993 நடுப்பகுதி.

பார்வையாளர்கள் - துறைமுகத்தடியில் நின்ற திண்ணை மாநாட்டாளர்கள்.

நடிகர்கள் - கடலில் கைகளை வீசிக் கால்களை அடித்தவாறிருந்த சில தலைகள்.

காட்சி புள்ளிகளோ, கோடுகளோ விழாமல் மிகத் தெளிவாகத் தெரிகின்றது. கடலில் கொஞ்ச மனிதர்கள் நீந்து கின்றார்கள்... அது தெரிகிறது. யார் அவர்கள்? அரைக்காற் சட்டைகளை அவர்கள் அணிந்திருந்தார்கள். ஆம்பிளையளோ? தலையிலே முடி கொண்டையிட்டிருப்பது போலவும் தெரிகின்றது.

"பொம்பிளையளோ?"

"என்ன பொம்பிள்ளையளா?"

"அதுவும் காற்சட்டையளோடையே?"

"கடல் பொங்கி ஊரை அழிக்கிறதுக்குத்தான் இந்தக் கூத்தெல்லாம் நடக்குது".

"அப்படியெண்டா வெள்ளைக்காரனின்ரை கடலுமெல்லே பொங்கவேணும். அங்கை எல்லோரும்தானே குளிக்கினம்?"

இது ஒருவர்.

"அது ரோசமில்லாத கடல். பேசாமக் கிடக்கும். எங்கட கடல் அப்பிடியா?"

இது மற்றவர்.

திண்ணை மாநாட்டாளர்களின் அனல் பறந்த கருத்துப் பரிமாறல்களுக்கிடையில் கடற்புலிகள் மகளிர் படையணி ஐந்து மைல் நீச்சலை நிறைவு செய்து, தனது கடல் நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டிருந்தது. மாநாடு முடிவுறவில்லை.

கிளாலிக் கடல் நீரேரியில் பயணம் செய்த மக்களைத் தாம் விரும்பிய நேரங்களிலெல்லாம் கொன்று குவித்துக் கொண்டிருந்த சிறிலங்கா கடற்படைக்குச் சவால் விட்டவாறு கடற்புலிகளின் படகுகள் விரைந்து கொண்டிருந்தன.

மக்களுக்கான பாதுகாப்புப் பணியில் லெப் கேணல் பாமா தலைமையிலான படகுத் தொகுதி ஒன்றும் ஈடுபட்டவாறிருந்தது. அவர்களின் படகுகள் காற்றைக் கிழித்தவாறு நீர் மட்டத்தை விட்டு மேலெழும்பியவாறு எதிர்ப் படகுகளை மிரட்டிக் கொண்டிருந்தன. மக்களை நெருங்கமுடியாத சிறிலங்காப் படகுகள் தள்ளியே நின்று கொண்டன.

இருளில் கரும்புள்ளிகளாக விரைந்து சாகசம் காட்டுகின்ற இவர்களின் படகுகளில் போகின்றவர்களை உற்று உற்றுப் பார்த்தவாறு சாவு அச்சமற்ற நிம்மதியுடன் திண்ணை மாநாட்டாளர்கள். ஒரு தொடுகையில் (இயந்திரப் படகொன்றுடன் கயிற்றால் பிணைக்கப்பட்டு கட்டி இழுக்கப்படும் ஏனைய பயணிகள் படகுகள்) பயணம் செய்வதை கண்டு கொண்ட கிளாலிக் கடல் நீரேரிக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. தனது அலைக்கரங்களை அடித்தவாறு அது உருண்டு உருண்டு சிரித்தது.

நடந்த புதினத்தை கேள்வியுற்ற மீனினங்களும் திண்ணை மாநாட்டாளர்களின் முகங்களைப் பார்ப்பதற்காக நீர்மட்டத்துக்கு மேலே துள்ளித் துள்ளிக் குதித்தன."

தென்மராச்சியில் முக்கிய நகர்களில் ஒன்றான சாவகச்சேரி, எங்களிடம் இழந்த நகரை மீளப் பிடிப்பதற்கான கடும் முயற்சியில் சிறீலங்காப் படையினர், மட்டுப்படுத்தப்பட்டளவில் நின்ற எம்மவர்களுக்கும்- மலையான பலத்துடன் நின்ற படையினருக்கு மிடையே அன்று கடும் மோதல் தொடங்கியது.

கட்டிடக் காட்டிடையே பக்கம் பக்கமாக இருதரப்பும் நின்று மோதிக் கொண்டன. ஒவ்வொரு காப்பரணும் தமது நிலைமையைச் சொல்லிச் சொல்லிச் சண்டைப் பிடித்தது.

'எங்களில் ஒரு ஆள் காயம்'

'ரெண்டு பேர் வீரச்சாவு'

'நானும் காயம்'

'..................'

'....................'

பெரும்பாலான எமது காப்பரன்கள் விழுந்துவிட்டன. விழுகின்ற கடைசி நிமிடத்திலும் எதிரிகளை விழுத்தின. அந்த ஒரு காப்பரன் மட்டும் விழவேயில்லை. அங்கிருந்து படையினரை நோக்கி எதிர்தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. அதற்குள் நின்றது மேஜர் கயல்விழி.

கயல்விழி இன்னமும் முழுமையாகப் படையினரால் சுற்றிவளைக்கப்படவில்லை. எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அவர்கள் வருவதற்கு ஒரு பாதை இன்னமும் பாதுகாப்பாகவே இருந்தது. அந்த ஒரு பாதையால் வெளியேறி வருமாறும், உதவி அணிகளை அழைத்து அணிகளை மீளமைத்துக் கொண்டு போய் அடித்து இடங்களைப் பிடிக்கலாம் என்றும் வழக்கப்பட்ட கட்டளையை கயல்விழி ஏற்றுக் கொள்ளவில்லை.

"கடைசி வரைக்கும் சாவக்கேரியை விடவேண்டாம்" என்ற தனது அணியினரின் கடைசி வேண்டுகோளையே அவர் ஏற்றுக் கொண்டார்.

"நான் பின்னுக்கு வரமாட்டேன். அந்தப் பாதையால ரீமை உள்ளுக்கு அனுப்புங்கோ நான் நிக்கிற இடத்திலிருந்து அடிச்சுக்கொண்டு போய்ப் பிடிப்போம். விட்டா, திரும்பிப் பிடிக்கிறது கஸ்ரம்"- இது கயல்விழி.

உதவியணிகள் அரியாலையிலிருந்தும், வாதரவத்தையிலிருந்தும் கொழும்புத் துறையிலிருந்தும் வந்து சேரத் தாமதமாகும் என்பது கயல்விழிக்குத் தெரியாததல்ல. எவ்வளவு நேரமானாலும் அவர்கள் வந்து சேரும்வரை தமது நிலையைத் தக்க வைத்திருப்பதென கயல்விழியும் கயல்விழியோடு நின்றவர்களும் முடிவெடுத்தனர்.

இப்போது இவர்களைச் சூழவும் படையினர்தான்.

"ரவுண்ட் -அப்புக்குள்ள நிக்கிறம். நாங்கள் சமாளிப்பம். நீங்க ஆக்களைத் தாங்கோ"

இவர்கள் நின்ற வீட்டின் மதிலோடு படையினரின் தலைகள் தெரிந்தன.

"மதிலோடை வந்து நிக்கிறவங்களைச் சுட்டுக் கொண்டிருக்கிறம். ஆக்களை அனுப்புங்கோ."

மதிலைக் கடந்து உள்ளே குதித்த படையினர் மதிலுக்கும் இவர்கள் நின்ற காப்பரணுக்குமிடையே வெட்டப்பட்டிருந்த நகர்வகழிக்குள்ளே இறங்கினார்கள். "பக்கத்தில் வந்திட்டாங்கள் நாங்கள் சுட்டுக் கொண்டிருக்கிறம்."

படையினரின் PKLMG அடி இவர்களின் காப்பரண் சுவரை அதிர வைப்பது கயல்விழியின் தலைத்தொடர்புக் கருவியூடே எல்லோருக்குமே கேட்டது.

மிகநெருங்கிய படைவீரன் ஒருவன் இவர்கள் வீசிய குண்டு வெடித்து சிங்களத்தில் அலறியதும் கேட்டது. அவர்களின் நிலைமை எல்லோருக்குமே விளங்கியது.

சாவகச்சேரி நகரை இழக்கக் கூடாது என்ற முடிவில் உறுதியோடு கடைசி வரை முயன்ற கல்விழியின் குரல் கடைசியாக ஒலித்தது.

"எங்களுக்குக் கிட்ட அவன் வந்திட்டான். இனி எங்கடை தொடர்பு உங்களுக்கு இருக்காது"

காற்று தனது வீரவணக்கத்தைச் செலுத்தியது.

அந்தத் தந்தையால் நம்பவே முடியவில்லை. எனது மகள் வீரச்சாவா? அதற்குள்ளாகவா? இப்போதுதானே போனாள்? அதற்குள் எப்பிடி அவள் ஒரு மேஜராக...?

அவர் தனது கேள்விகளைக் கேட்டு, அழுது ஆறுவதற்கு அவரது மகளின் வித்துடல் அங்கே வரவில்லை. அவரின் மகளை அறிந்தவர்கள் வந்தார்கள். அந்தச் சண்டையில் அவரது மகள் வெளிக்காட்டிய ஆற்றலைச் சொன்னார்கள்.

என் மகளா? என் மகளா?

கேள்வி அவரிடம் மட்டுமல்ல அவரருகிலிருந்த திண்ணை மாநாட்டாளர்களிடமும் தான். அவர்களுக்கு எல்லாமே புரிந்தது போலவும் இருந்தது. ஒன்றுமே புரியாதது போலவும் இருந்தது. கொஞ்சக் காலமாகவே நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் கேள்விகளுக்கும் ஆச்சரியங்களுக்கும் அப்பாற்பட்டதாகவே இருப்பதை அவர்களும் உணர்ந்து தான் இருந்தார்கள்.

எப்போது இந்த அனைத்துக்கும் அப்பாற்பட்டவைகள் நிகழத் தொடங்கின? அங்கயற்கண்ணி காலத்திலிருந்தா?

கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் அம்மா அழுது ஓய்ந்தபின் மகளை நினைத்து ஆச்சரியப்படத் தொடங்கினார்.

"நாப்பத்தைஞ்சு அடி ஆழக் கடலிலை தனியப் போனவளோ? அவ்வளவு ஆழத்தில நிலம் இருட்டா இருக்குமே? என்னெண்டு போனவள்? என்னோடை இருக்கும்மட்டும் இரவில வீட்டுக்கு வெளியாலை போறதுக்கு நான் வேணும் அவளுக்கு. அவள்... என்னெண்டு...?"

அப்போதும் அருகிருந்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த திண்ணை மாநாட்டாளர்கள் இப்போது எல்லாவற்றையும் கடந்த நிலைக்கு, இயல்பு நிலைக்கு வந்துவிட்டிருந்தனர்.

திண்ணையில் கூடியிருந்து கதைத்துக் கொண்டிருந்தவர்களின் கவனம் வீட்டுக்குள் கேட்ட சத்தங்களால் கலைந்தது. நிலத்தில் தடியால் அடிக்கும் ஒலி.

அவர் திடுக்கிட்டு எழும்பினார். ஏதேனும் பூச்சி பொட்டோ? இவன் சின்னவன் கண்டுவிட்டு அடிக்கிறானோ? பெரிய பிள்ளை மூலை மேசையில் இருந்து படிக்கிறாள். பயந்துவிடப் போகிறாள்.

பாய்ந்தடித்து வீட்டினுள் ஓடியவர் திடுக்கிட்டு அலறினார். குறை உயிரில் கிடந்த பாம்பைத் தடியில் தூக்கியபடி மகள் வந்து கொண்டிருந்தாள்.

"மண்ணெண்ணெய் எடுத்து வாங்கோ. கொழுத்துவம்" என்றாள்.

★ ★ ★

நாங்கள் கோப்பாய் மாவீரர் துயிலுமிடத்தைப் பார்வையிட்ட போது - அமைதி ஒப்பந்தகாலம். ஆங்காங்கே சோதனைச் சாவடிகள் தாண்டி வரவேண்டி நேர்ந்தாலும், போராளிகளின் பூமியில் காலடி பதித்து நடக்கிறோம் என்ற உணர்வே மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தந்தது. மாவீரர் துயிலுமிடம்

இலங்கை ராணுவத்தாலும் இந்திய அமைதிப்படையாலும் மாற்றி மாற்றிச் சிதைக்கப்பட்டன என்று அறிந்தபோது, எங்களிடம் குடியேறிய மன அமைதியும் சிதைந்து போனது.

யாழ்ப்பாண மக்கள் இரண்டு மகா குடிபெயர்வுகளைச் சந்தித்திருக்கிறார்கள். இலங்கை ராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது, யாழ் மக்கள் குடிபெயர்ந்து வன்னிக்கு குடியேறினர். இது 29.10.1995ல் நடந்தது.

யாழ் நகரம் காலியானதும், இலங்கை ராணுவம் கோப்பாய் மாவீரர் துயிலுமிடத்தின் நடுகற்களையும், கல்லறைகளையும் இயந்திரக் கலப்பையால், பொக்ரெய்ன் இயந்திரத்தால் இடித்து உழுது புரட்டினர்.

அமைதிக்காலம் என்பதால் உழுது புரட்டித் தகர்த்த கல்லறைகளை புதுப்பித்துக் கொண்டிருந்தனர் புலிகள். 675 கல்லறைகள் 122 நடுகற்களையும் புதிதாய் நிறுவிக் கொண்டிருந்தார்கள்.

யுத்த காலத்தில் மட்டுமல்ல. போரில்லா அமைதிக் காலத்திலும் மக்களுக்காக பணி செய்வோம் என்கிறார்கள் போராளிகள். போரினாலும் மக்களுக்குப் பணி செய்தார்கள். போரில்லாத இடைவெளியிலும் மக்களுக்குப் பணி செய்கிறார்கள்.

நாங்கள் கோப்பாய் மாவீரர் துயிலுமிட முகப்பில் நின்றபோது மழை லேசாக முணுமுணுத்தது. முந்திய நாள் மழை பெய்திருந்தது. யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அமர்ந்திருந்தபோது அந்த மழையைக் கண்டோம். விட்டகுறை, தொட்டகுறை என்று மறுநாளும் தூறிக் கொண்டிருந்தது. மழையில் நனைந்தபடியே இரு போராளிகள் சீரமைப்புப் பணியை மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் பெயர் அந்தோணி. வயது 25. 1996ல் 19 வயதில் போராளிகளுடன் இணைந்தார். இருபத்து மூன்று வயதில் ஸெல்லடியில் தன் வலது காலை இழந்தார்.

போராளிகள் ஒருபோதும் ஓய்வை விரும்புவதில்லை.

இழந்து போனவை கால்கள். அந்தோணிக்கு விரிந்து பரந்து கிடக்கும் கல்லறைச் சகோதரர்களை அணைக்கிற கரங்கள் இருந்தன.

புதையுண்ட இரண்டாயிரத்து ஐநூறு மாவீரர்களோடு பேசுவதில் ஈடுபட்டிருந்தார்.

எங்கள் முன் ஈரம் காயாத ஒரு மண்மேடு. இனிமேல்தான் கல்லறை அமைக்கப்பட வேண்டும். விடுதலைப் போரில் ஈடுபட்டு சுகவீனமாகி ஐந்து நாட்களுக்கு முன்பு மறைந்த மேஜர் கஸ்தூரி புதைக்கப்பட்டிருந்தார். மாவீரர் துயிலுமிடத்திலுள்ள மைய மண்டபத்தில் மேஜர் கஸ்தூரியின் உடல் வைக்கப்பட்டு இயக்க மரபுப்படி அவருடைய வீரவாழ்வு வாசிக்கப்பட்டு, வேட்டுக்கள் வெடித்து வீரவணக்கம் செய்து மண்ணுக்குள் விதைத்தார்கள்.

இந்திய ராணுவத்துடன் முதல் யுத்தம் தொடங்கிய இடம் இந்தக் கோப்பாய். லெப்டினெண்ட் மாலதி. பத்தொன்பது வயது, இந்திய ராணுவத்தை எதிர்கொண்டு தடுத்து தாக்கிய மகளிர் அணிக்குத் தலைமையேற்ற மாலதி குண்டடியால் இரண்டு கால்களிலும் காயம்பட்டார். எதிரிகளிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக இயக்க முறைப்படி சயனைட் குப்பி கடித்து வீரச்சாவு அடைந்தார்.

அந்த முதற் பெண்புலி மரணமடைந்த நாள் 10.10.1987. இன்று நூறு நூறு பெண்கள் தரைப்புலிகளாய், கடற்புலிகளாய், கரும்புலிகளாய் வீரச்சமர் புரிந்துகொண்டிருப்பதற்கு அது தொடக்கம். அந்த நாளை பெண்புலிகளின் நாளாக நினைவு கூர்ந்து கொண்டாடி வருகிறார்கள்.

மாவீரர் நாள் நவம்பர் இருபத்து ஏழு. ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. விடுதலைப் போரின் முதல் மாவீரர் சங்கர் சத்தியநாதன். இவர் இலங்கைப் படையினரால் கொல்லப்பட்ட நாள் 27.11.1982.

முதல் களப் போராளியின் நினைவாக, ஒவ்வொரு ஆண்டும் புத்துயிர்ப்பை ஏற்றிக் கொள்கிறார்கள் போராளிகள்.

*- வெளிச்சம் இதழ் 78*

# விதை முளைக்காத கல்லறை ஏதுவுமில்லை

ஆயிரங்கால் மண்டப வரிசை போல் கல்லறைகள், நடு கற்கள்.

வீரச் சாவு எய்திய பின், உடல்கிடைத்து புதைக்கப் பட்டவர்களுக்குக் கல்லறை; களச் சாவு கண்டு உடல்கிடைக்கவோ உடல் எடுத்து வரவோ முடியாமற் போகிற போராளிகளுக்கு நடு கற்கள்.

கோப்பாய் மாவீரர் துயிலுமிடத்தினை சிதைவுகளிலிருந்து புலிகள் சீரமைத்துக் கொண்டிருந்ததுபோலவே, அவர்கள் கட்டுப் பாட்டிலிருந்த, கட்டுப்பாட்டிலில்லாத பகுதிகளிலிருந்த மாவீரர் துயிலுமிடங்களை அனைத்தையும் புதுப்பித்துக் கொண் டிருந்தார்கள்.

2002 சூன் மாதம் அமைதிப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மூன்று மாதம் கழித்துத்தான் கோப்பாய் மாவீரர் துயிலுமிடத்தைச் சீரமைக்க, அமைதிக்குழு மூலம் அனுமதி வந்தது. கோப்பாய் இலங்கை ராணுவக்கட்டுப்பாட்டில் இருக்கும் பக்தி.

நாங்கள் போயிருந்த நாள்வரை போரில் வீரச்சாவு அடைந்த போராளிகள் 17,600. பலியான பொதுமக்கள் எழுபதாயிரம் பேர்.

கனகமடு, விசுவமடு, அலம்பில், முள்ளியவளை, வன்னி விளாங்கும், ஆலங்குளம், முழுங்காவில், கோப்பாய், தென்மராச்சி, வடமராச்சி, கொடிகாமம் ஆகிய இடங்களில் மாவீரர் துயிலுமிடங்கள் பாதுகாக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்ட வாரியாக மாவீரர் துயிலுமிடங்களின் போராளிக் கல்லறைகளின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| யாழ் மாவட்டம் | - | 6337 |
| மன்னார் மாவட்டம் | - | 1252 |
| முல்லைத் தீவு மாவட்டம் | - | 1252 |
| வன்னி மாவட்டம் | - | 2462 |
| மட்டக்களப்பு மாவட்டம் | - | 2418 |
| திருகோணமலை மாவட்டம் | - | 2516 |

இந்திய அமைதிப் படையும் இலங்கைச் சிப்பாய்களும் இணைந்து நாசக்காடு பண்ணிய இடம் கீரிவில்: மாவீரர்கள் புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட 12 போராளிகளை 1987ல், இந்தியப் பெருங்கடலில் இந்திய ராணுவம் கைது செய்தது. அத்தனை பேரையும் இலங்கை ராணுவத்தினரிடம் ஒப்படை செய்தது. கைது செய்யப்பட்ட போராளிகளை இலங்கை ராணுவத்தினரிடம் ஒப்படைக்க மாட்டோம் என முதலில் அறிவித்த இந்திய ராணுவத்தினர் இலங்கைப் படையினரிடம் ஒப்படைத்தனர்.

இலங்கைப் படையிடம் ஈழப் போராளிகளை இந்தியப்படை கையளித்த இடம் கீரிவில்; விரிந்து பரந்த மைதானம் அது. இலங்கை அரசு விடுதலை செய்ய மறுத்ததால், போராளிகள் 12 பேரும் சயனைட் குப்பி கடித்து மரணத்துக்குள் புகுந்தார்கள்.

லெப் கேணல் குமரப்பா
லெப் கேணல் புலேந்திரன்
மேஜர் அப்துல்லா
காப்டன் கரன்
காப்டன் நளன்
லெப் ரெஜினோல்ட்
லெப் தவக்குமார்
லெப் ஆனந்த குமார்
லெப் அன்பழகன்
காப்டன் பழனி
காப்டன் மிரேஸ்
காப்டன் இரகுவப்பா

இந்தப் பன்னிரு போராளிகளை நினைவுகூரும் வகையில் அந்தப் பரந்த மைதானத்தில் நினைவுச் சின்னங்கள் எழுப்பியிருந்தனர். நினைவு சின்னங்களையும் இலங்கை ராணுவம் உடைத்து நொறுக்கி நாசமாக்கியிருந்ததைக் கண்டோம்.

பரந்த பெரிய மைதானம் நடுவில் ஒரு மேடை, அங்குதான் மக்களைத் திரட்டி மாபெரும் கூட்டங்களில் போராளிகள் உரையாற்றியிருக்கிறார்கள். அந்தத் திடலில் வஞ்சகமாய் கொல்லப்பட்ட பன்னிரண்டு பேருக்கும் நினைவுச் சின்னம் புதிய வடிவில் எழுப்பப்பட்டிருந்தது.

களச்சாவு அடைந்தவர்களை புதைப்பதுதான் வழக்கமாக இருந்தது.

"இல்லை, இல்லை விதைப்போம்" என்றார் பிரபாகரன்.

அந்த அறிவிப்புக்குப் பின்னர் மாவீரர் துயிலுமிடங்கள் உருவாகின. புதிய பெயர் ஒரு புதிய பண்பாட்டை அடையாளப் படுத்தியது.

கலப்பை கொண்டு மண்ணை உழுதால் அவன் உழவன், புல்டோசர் கொண்டு கல்லறைகளை உழுதால் அது இலங்கை ராணுவம், இந்திய ராணுவம்; 1995-ல் யாழ்நகர், கோப்பாய், கைதடி என்று அடுக்கடுக்காய் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டே நடந்த இலங்கை ராணுவம் கோப்பாய் கல்லறைகளை, புல்டோசர் கொண்டு சீரழித்திருந்தது. இந்தியப் படைகளும் இலங்கைக் காடையர்களும் எங்கெங்கு மாவீரர் துயிலுமிடங்கள் உண்டுமோ அங்கெல்லாம் மாற்றி மாற்றி அழித்துப் போட்டிருந்தார்கள்.

கல்லறைகள் அழித்தொழிப்புக்கு, மூலநோய்க் கூறுகளைக் கண்டறியமுடியும். படை என்ற பாதுகாப்பு அமைப்பு (அவர்களின் சொல்லாடல்) உருவெடுக்கிறபோதே, இதற்கான காரணமும் உண்டாகிவிடுகிறது. படையணிகளின் மரணம் இயல்பாய் பதிவு செய்யப்படுவதில்லை. போரில் உயிர்பறிக்கப் படுகிறபோதும் (போர் என்பதும் அவர்களின் சொல்லாடல்) அவர்களின் பெயர்கள் சம்பளப்பட்டியலில் மட்டுமே இருந்தது. சரித்திரச் சான்றுகளில் இருப்பதில்லை.

அவர்களுக்கு கிடைக்காதது எதுவோ அது போராளிகளுக்கு கிடைக்கிறது. போராளிகள் அடைவது வீரச்சாவு. சிப்பாய்களுக்கு வருவது ஒரு மனித உயிராய் வாழ்ந்து மறைந்தான் என்பது தவிர வேறெந்த அடையாளமும் இல்லை. தம்மை இக்கதிக்கு ஆளாக்கி, அலையவிட்டார்களே என்ற எரிச்சல்; எரிச்சலும் பொச்செரிப்பும் கொண்டு ஒவ்வொரு சிப்பாயும் ஒவ்வொரு

போராளியின் கல்லறையை வன்மம் வைத்துச் சிதைக்கிறான். குறைந்தபட்சம் போராளியின் கல்லறையையாவது வேட்டையாட முடிகிறது என்ற மனநிறைவு அவனுக்கு.

கேப்டன் இரவீந்திரன் வல்வெட்டித் துறையைச் சேர்ந்தவர். 1985-ம் ஆண்டு வீரமரணம் அடைந்தார். வீரமரணம் அடையுமுன் தன் சகாக்களுடன் சேர்ந்து 500 சிங்களச்சிப்பாய்களை உண்டு, இல்லை என்று செய்தவர். பழி எடுக்க சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தது ராணுவம். 1987ல் சிங்கள ராணுவம் வடமராச்சியைத் தாக்கியபோது, கேப்டன் இரவீந்திரனின் தாய் வயதான மூதாட்டி என்றுகூட பார்க்காமல் கண்ட துண்டமாக வெட்டி வீசியெறிந்தார்கள். "எல்லாப் போராளிகளின் குடும்பங்களுக்கும் இதுதான்" என்றார் எங்களுடன் வந்த போராளி.

"இறந்து போனவர்களையே நிம்மதியாகத் தூங்க விடவில்லை. இவர்கள் உயிருள்ளவர்களை எப்படி வாழவிடுவார்கள்?"-பிரபாகரன் சொன்னார்.



யாழ் மாவட்டம் 'கோப்பாய்' மாவீரர் துயிலும் இடம்

"ஓ அரசர்களே, அதிகாரிகளே
அவர்களெல்லாம்
வேறு இளைஞர்களுக்குள்ளே ஜீவிக்கிறார்கள்
உங்களை எதிர்த்து
மீண்டும் போர் செய்யத் தயாராக
அவர்களெல்லாம்
சகோதரர்களுக்குள்ளே வாழ்கிறார்கள்.
விடுதலைக்காக கொலை செய்யப்பட்ட கல்லறைகளில்
விடுதலை விதை வளராத கல்லறை எதுவுமே இல்லை
இந்த விதைகளெல்லாம்
மீண்டும் விதைகளை உருவாக்கும்
காற்று தொலை தூரம்
சுமந்து போய்
மறுபடியும் விதைக்கும்
மழையும் பனியும் போஷித்து வளர்க்கும்"

- வால்ட் விட்மன்

# கிட்டு பூங்கா

சின்னா பின்னமாகிக் கிடந்தது கைதடி மருத்துவமனை. ஸெல்லடியில் சிதைவுபட்ட சுவர்கள், பயன்படுத்தல் இல்லாமல் துருப்பிடித்த கட்டில்கள், தூசி மண்டிய அறைகள். கொடுப் போரும் கொள்வோரும் என எப்போதோ அங்கு இருந்தனர் செவிலியர், மருத்துவர்கள், பணியாளர், நோயாளிகள்.

நண்பர் இன்குலாப் குறிப்பிட்டார், "மருத்துவமனையே நோயாளியாகி இருக்கிறது".

கவித்துவ நேர்த்தியிலும், வாசகத்துள் மண்டிய அவலத்திலும் உறைந்து நின்றோம். சிதைந்த மருத்துவமனைக்கு ஊடாக இரு பெண்கள், சைக்கிளில் போய்க் கடந்தார்கள். இது பொது வழி அல்ல என்று அறிவிப்பு காணாமல் போயிருந்தது. எல்லோரும் போய் வரும் வழியாக மாறிக் கிடந்தது.

காமுகர் நெஞ்சில் தாயென்றும் தங்கையென்றும் பேதமில்லை போலவே யுத்தத்தில் மருத்துவமனையென்றோ, ஆலயம் என்றோ, கல்வி நிலையங்கள் என்றோ பேதமில்லை.

கைதடியைத் தாண்டிச் சென்றால், நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு சற்றே முன்புறம் மாவீரன் கிட்டு பூங்கா. முன்னர் கிட்டுவின் சிலை கம்பீரமாய் எல்லோவையும் பார்த்தது. சுடர்மிகு பார்வையின் கீழே சிறுபிள்ளைகள் பயமற்று விளையாடினார்கள். சிறுவர்கள், அறிவியலை விளையாட்டாய் கற்றுக்கொள்ளும் கருவிகள், உலக இயக்கத்தை, இயற்பியலை, வேதியியலை, புவியியலை விரும்பிக் கற்கும் வடிவமைப்புகள். உடற்பயிற்சிக் கூடம் என அஃதொரு அறிவியல் பூங்காவாக வடிவமைக்கப் பட்டிருந்தது.

இப்போது கிட்டுவின் சிலையை சிதறடித்து, சிலையின் தலையை ஒரு கம்பியில் குத்திவைத்து விட்டு குத்திவைக்கப்பட்ட சிலையை சிங்கள ராணுவம் காவல் காக்கிறது.

1. பொழுதுபோக்கு இடம்
2. தூய்மையான காற்று
3. குழந்தைகள் கும்மரிச்சம் போட, குதூகலிக்க வாய்த்த வட்டாரம்.
4. தனிமையிலும் கூட்டாகவும் இனிமை காணும் நிலம்.

இது பூங்காவைப் பற்றிய பொதுச்சித்திரம். நுழையும்போதே நமக்குள் ஏற்கனவே இருந்த மனநிலையை கழற்றி வைத்து விட்டு, புதிய உற்சாக மனநிலையை உடுத்திக்கொள்ளச் செய்கிறது பூங்கா. முக்கியமான இன்னொரு அம்சம் தனிமை. பூங்காவின் அமைதி, தனிமைக்குத் தோள் தருகிறது.

மரம், செடி, கொடி, காற்று எல்லாமும் நமக்கொரு புதிய மொழியைக் கற்றுத் தருகிறது. தடைகளற்று இயற்கையோடு புதுமொழியில் உரையாடுகிறோம். நகரக் குடியிருப்புகளுக்குள் எவை கிடைக்காதோ, அவை கிடைக்கின்றன.

சிங்கப்பூர் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு நகர நாடு. உடற்பயிற்சிக் களம், விளையாட்டுத் திடல், நூலகம், நீச்சல் குளம், பெரிய பெரிய பூங்கா ஒவ்வொரு வட்டாரத்திலும் திட்டமிட்டு உருவாக்கியிருக்கிறார்கள். ஒரு பூங்காவின் மூலையில் பறவைகளுக்கு தனி இடம் ஒதுக்கி "பறவைகள் இசைக்கும் பகுதி" எனப் பலகை மாட்டியிருந்தார்கள். அதிகப்படியான மனித நடமாட்டம் பறவைகளைக் காணாமல் அடித்திருந்தது. கத்தி, கல், வில், அம்பு, ஈட்டி, துப்பாக்கி இவை கொண்டு வேட்டையாடி விரட்டத் தேவையில்லை. பறவைகளை வசிப்பிடத்திலிருந்து விரட்ட மனித நடமாட்டம் போதுமானது.

வித்தியாசமாய் ஒரு பூங்கா. அது தமிழ்நாட்டில் விருதுநகரில் இருக்கிறது.

விருதுநகரில் நான் கண்ட பூங்கா ஆய்ஞ்சி மாய்ஞ்சி, அலுத்துச் சலித்து வருகிறவர்களுக்கு புகலிடம் மட்டுமல்ல; புலனறிவுக்கு வேலை கொடுக்கிற விசையைக் கொண்டிருந்தது. நாலு பக்கமும் முள் கம்பி அடைக்கப்பட்ட சுற்றுவேலியில் ஓவியங்களுடன் எழுதித் தீட்டி வைத்த பலகைகள் பேசின.

| | | |
|---|---|---|
| ராஜபாளையம் | - | ஆலைத்தொழில் (ஆலை, தொழிலாளர்கள் ஓவியம்) |
| சாத்தூர் | - | தீப்பெட்டிக் கம்பெனி, பேனா, நிப்புத்தொழில். (தீப்பெட்டிக் கம்பெனிகளில் வேலை செய்யும் ஓவியம்) |
| திருவில்லிபுத்தூர் | - | ஆண்டாள் கோயில் (ஓவியம்) |
| விருதுநகர் | - | காமராசர் பிறந்த இடம் |
| நரிக்குடி | - | மருதுபாண்டியர் பிறந்து, வாழ்ந்த பூமி |
| திருச்சுழி | - | ரமண மகரிஷி பிறந்த ஊர் |
| விருதுநகர் | - | வணிகம். |

விருதுநகர் மாவட்டத்தின் சிறப்பம்சங்களைத் தொகுத்து வரிசைப்படுத்தித் தந்திருக்கிறார்கள். பொழுதுபோக்கப் போகிற போதும் அங்கிருந்து என்ன் எடுத்து வருகிறோம் என்பது முக்கியம். புதியன அறிதல், அதற்கான தேடல் என்பது உறைந்து, தேங்கிப் போகிற காட்சிகளால் வராது. அறிதலும் தேடலும் அசைதல், வளருதல் குணம் கொண்டது. நிலவியல், இயற்கையியல், அறிவியல் பற்றிய தகவல்களை தொடர்ந்து மாற்றித் மாற்றித் தரலாமே எனச் சொன்னபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளாகத்திலுள்ள அந்த பூங்காவின் பாதுகாப்பாளர் "வைக்க ஆசைதான்" என்றார். அரசு நிர்வாகம், படைப்பு ஊக்கமான மனதை அனுமதிக்காது என்பது அவருடைய குரல் இழுப்பில் வெளியானது.

பொழுதுபோக்கு என்பது மனநிலையில் படரும் ஒரு தனிக் குணமாற்றம்; எந்த உழைப்பாயினும் உழைப்புக்குப் பின் ஓய்வு அவசியம்.

எந்தவொரு உழைப்புக்குப் பின்னும் பயனுள்ள, அறிவார்ந்த தன்மையில் தேவைப்படுவது தான் பொழுதுபோக்கு. பொழுது போக்கு மனநிலை என்பது உல்லாசம் அல்ல; அஃதொரு அறிவார்ந்த மனநிலை.

1995-ல் இந்திய அமைதிப் படையினர் நுழைந்து கிட்டு பூங்காவைச் சிதைத்து, அரும்பொருட் காட்சியகத்தை நொறுக்கி

அழித்தார்கள். கிட்டுவின் மார்பளவுச் சிலையை உடைத்து, தலையை ஒரு கம்பியில் நட்டு வைத்து போனார்கள். அவர்கள் செய்து முடித்த அழிவை, ஆர்ப்பாட்டத்தை இச்செயல்களில் வல்லமை வாய்ந்த சிங்கள ராணுவத்திடம் அப்படியே கையளித்துச் சென்றிருந்தார்கள்.

அரைத்து மென்று விழுங்கும் ராணுவப் பற்களுக்கிடையில் தென்மராச்சி இருபது வருடமாய் தன் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறது. வீடுகள், கட்டிடங்கள், சாலைகளைச் சரிசெய்ய ராணுவத்தின் பூட்சுகள் அகன்ற பிறகும் இருபதாண்டுகள் எடுக்கலாம். வரலாற்றின் சிதைவுகளைப் புதுப்பித்து புத்துயிர்ப்புக் கொள்ள அரை நூற்றாண்டு ஆகலாம்.

மறுபடி பூங்கா உருவாகி, மறுபடி புத்துணர்ச்சி மீட்டெடுக்கப் படலாம். கிட்டு பூங்கா சிதைக்கப்பட்ட வன்ம நாடகத்தின் காட்சிகள் சின்னஞ்சிறு மனசுகளில் கதைகளாய் மேலெழுந்து வரலாம்.

# வல்வெட்டித் துறை

தென்மராச்சியின் சுங்கத்தரனை சாலையிலுள்ள மருத்துவமனை மீண்டும் எழுப்பப்பட எவ்வளவு காலம் ஆகும்? எவ்வளவு காலமெடுக்கும் என்பதிலும் எவ்வளவு செலவாகும்? இந்தக் கணக்குக்கு சாட்சியாக வல்வெட்டித்துறை நகராட்சிக் கட்டிடம் நின்றது. ராணுவத்தின் தாக்குதலில் உருச்சிதைந்திருந்த நகராட்சிக் கட்டிடம் 35 லட்சம் ரூபாயில் கட்டியது. இப்போது அதை சீரமைக்க ரூபாய் ஒரு கோடி ஒதுக்கியுள்ளது இலங்கை அரசாங்கம். அதிலும் அது அடைபடுமா என்று தெரியவில்லை என்றார் சிவாஜிலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்.

சொந்தமக்கள் மீது ஆக்கிரமிப்புப் போரை நடத்தி, பொருளாதாரம், மன உறுதி, படைவலி - எல்லாவற்றிலும் நெஞ்சுக்குத்து வந்து தவித்துக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு - தானொரு நோயாளியாய் கடைசி மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறது இலங்கை அரசு - இன்னொரு நோயாளியைக் காப்பாற்ற முடியுமா?

வல்வெட்டித்துறை நகராட்சி அலுவலகத்துக்குள் அதன் தலைவர் பத்மநாபன் எங்களை அழைத்துப் போனார்.

குண்டுத் தாக்குதலில் நொறுங்கிப் போயிருந்தது போக மிச்சம் மீதி இருந்த கட்டிடம் வல்வெட்டித்துறைக்கு பராமரிப்பு நிழல் தந்து கொண்டிருந்தது. அந்த கட்டடத்து இடிபாடுகளுக்குள் தங்களை ஒடுக்கிக் கொண்டுதான் அலுவலகப் பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள் பணியாளர்கள். முதல் மாடிக்குச் செல்கிறபோது, மாடிப்படிகளில் கைப்பிடிச் சுவரைக் காணோம். படிக்கட்டுகளில் ஏறி, இரண்டாம் தளத்தில் நுழைகிறபோது முனையில் நின்று எதிரே வீதியைப் பார்த்தோம்.

"அங்கே பார்க்காதீங்க"

எங்களை அவசரப்படுத்தினார் பத்மநாபன்.

"ஏன்" என்ற கேள்வியுடன் திரும்பிப் பார்த்தபோது சொன்னார்.

"அங்க நின்று பார்த்தாலே ஆமிக்காரன் சந்தேகிப்பான்"

அவர் சொன்னது சரியாக இருந்தது. ஆமி பங்கரிலிருந்த துப்பாக்கி முனைகள் எங்களை நோக்கித் திரும்பின. சுட்டுவிடுவேன் என்று இரட்டைக் கண்களால் பார்க்கிற பீரங்கி முனையும் துப்பாக்கியும் அலுவலகத்துள் வந்து போகிற எல்லோரையும் பார்த்து நீட்டிக் கொண்டிருப்பது நிரந்தரக் காட்சி. சற்றே தள்ளியிரும் பிள்ளாய் என்று பங்கரிலிருந்த துப்பாக்கி முனையை இடது கை கொண்டு தட்டிவிடலாம் தான். எனது கையும் யதார்த்தமும் அந்த அளவுக்கு நீளவில்லை. மனசில் வெக்கரித்து, மேலெழுந்த வெறுப்பை உமிழ்நீராக்கி, தொண்டைக் குழிக்குள் சுருட்டிக் கொள்ள மட்டும் முடிந்தது.

"பார்த்தால் என்ன செய்வான்?"

"பிடிச்சிட்டுப் போய் விசாரிப்பான்?"

"நீங்க நாடாளுமன்ற உறுப்பினர். நீங்க எங்க பாதுகாப்புக்கு வரமாட்டீங்களா?"

" அதப்பற்றி அவன் கவலைப்பட மாட்டான். நாடாளுமன்ற உறுப்பினர் என்றால் ஆமிக்கென்ன கவலை? அதான் செக் போஸ்டில் பாத்தமில்ல".

யாழ் பிரதேசத்தில் நுழைவதற்கு முன்னால் ஆமிக் காரங்களுடைய சோதனைச் சாவடியில் பட்டபாடு ஞாபகத்துக்கு வந்தது.

கே. சிதம்பரநாதன் பிரிட்டனில் அகதிகள் பணியகத்தில் அகதிகள் விவகார ஆலோசகராகப் பணியாற்றுகிறார். லண்டனில் மனித உரிமைகளுக்கான வழக்குரைஞராக இருப்பவர். வடக்கு - கிழக்கிற்கு (ஈழத்திற்கு) சென்றபோது அவரது மன உணர்வு எவ்வாறு இருந்தது என்ற கேள்வி அவரிடம் முன் வைக்கப்பட்டது.

"நான் பல இடங்களில் வழிமறிக்கப்பட்டு சோதனையிடப் பட்டேன். கேள்விகள் கேட்கப்பட்டேன். எனது கடவுச் சீட்டு (பாஸ்போர்ட்) பலமுறை சோதிக்கப்பட்டது. எமக்கென்று ஒரு நாடு கிடைத்தாலொழிய இலங்கைக்குத் திரும்புவதில்லை என்ற முடிவுடன் நான் லண்டனுக்குப் புலம்பெயர்ந்தேன். எனது முடிவு எவ்வளவு சரியானது என்பது இங்கு நான் வந்த பிறகு மேலும் உறுதியாகியுள்ளது".

பிரிட்டனிலிருந்து ஈழத்திற்கு போய்த் திரும்பும் ஒரு ஈழத் தமிழனுடைய முடிவும், இங்கிருந்து ஈழம் போய் வந்த எங்களின் அனுபவமும் சமமான கோட்டிலேயே பயணித்தது. சிதம்பரநாதன் மேலும் கூறினார்.

"வடக்கு - கிழக்கில், அதாவது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தவிர்த்து, நான் சென்ற இடமெல்லாம் ஒரு இராணுவ முற்றுகைக்குள்ளான இடங்களில் பயணித்தது போன்ற உணர்வே ஏற்பட்டது. பல இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள், பத்து தமிழர்களுக்கு ஒரு இராணுவச் சிப்பாய் என்ற ரீதியில் படையினர் விதைக்கப் பட்டிருந்தார்கள்".

தமிழகத்திலிருந்து புறப்படுகிறபோதே, மாநாட்டுக்குப் போய்ச்சேர முடியுமா என்பதற்கான சந்தேகக் குறிகள் தென்பட்டன. சென்னையிலிருந்த இலங்கைத் தூதரகத்தில் அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் பயணச் சீட்டு எடுக்கப்பட்டு விட்டது. பயணச் சீட்டை எங்கள் கையில் திணித்துவிட்டு, மதுரா டிராவல்ஸ் வி.கே.டி. பாலன் "ஒன்னும் கவலைப்படாதீங்க. சுற்றுலா போகிறீர்கள். பயணச்சீட்டு வாங்கியாகிவிட்டது. விமான நிலையத்தில் கேட்டால் சுற்றுலா போகிறோம் என்று சொல்லுங்கள். பதினைந்து நாள் என்று சக்கென்று முத்திரை வைத்துத் தந்துவிடுவான்" என்று தைரியம் தந்தார்.

கொழும்பு விமான நிலையத்தில் அந்தச் சிரமம் கூட ஏற்படக் காணோம். ஒரு மாதத்துக்கு முத்திரை போட்டுக் கொடுத்தான்.

தமிழ்நாட்டில் 'கியூபிராஞ்ச்' என்று விதண்டாவாதம் செய்வதற்கென்று ஒரு தனிப் புலனாய்வுப் பிரிவு இயங்குகிறது. சென்னை விமான நிலையத்தில் கியூ பிராஞ்ச் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு வலைவிரித்து விட்டிருந்தது. விமான நிலைய முகப்பில் திருமாவளவனுக்காக நாங்கள் காத்திருந்தபோது காரிலிருந்து இறங்கியதும் நண்பர் மூலம் சொல்லி அனுப்பி விட்டார்.

"என்னைக் கண்டுகொள்ள வேண்டாம். நீங்கள் புறப்படுங்கள்".

அவர் சொன்னதுபோலவே, அவருக்கு முன்னாலேயே வந்திருந்தார்கள் கியூ பிராஞ்ச் போலீசார்.

"எதற்காகப் போகிறீர்கள்?

ஏன்?

எத்தனை நாள் தங்கல்? யார், யாரைச் சந்திப்பீர்கள்?"

எல்லாக் கேள்விகளுக்கும் ஒரே பதிலாய் யாழ்ப் பல்கலைக் கழகத்திலிருந்து வந்த அழைப்பிதழைக் காட்டுகிறார் திருமாவளவன். பிறகு அவருடன் உள்ளே வந்து விமான நிலைய உணவுக் கூடத்தில் சிற்றுண்டி வாங்கிக் கொடுத்து அனுப்பி வைத்தார்கள் கியூ பிராஞ்ச் போலீசார்.

முதல் நாளிரவு, இதே கியூ பிராஞ்ச் இன்குலாபிடம் தொலைபேசியில் விசாரிதிருக்கிறார்கள். "ஆமாம், போகப் போகிறேன். நீங்கள் போகச் சொல்கிறீர்களா? கூடாது என்று சொல்லப் போகிறீர்களா?" கேட்டார் இன்குலாப்.

"இல்லை நீங்கள் போய் வாருங்கள்... யார் யார் வருகிறார்கள்?".

"எனக்கு வந்த அழைப்பிதழில் என் பெயர்தான் இருந்தது"- இன்குலாப்.

"நல்லது" - என்று பேச்சை முடித்துக் கொண்டார் போலீஸ் அதிகாரி.

நாங்கள் யாழ் நகரத்தில் புலிகளின் அரசியல் பிரிவு அலுவலகத்தில் போய் இறங்கியதும், புதுவை இரத்தினதுரை தான் கேட்டார். விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் தலைவரான அவர், மறுநாள் முதல் நான்கு தினங்கள் நடைபெறும் மானுடத்தின் தமிழ்க்கூடல் மாநாட்டுக்கு பொறுப்பாளர்.

"உங்களுக்கு புறப்படுவதற்கு முன் இடைஞ்சல் ஏதாவது வந்ததா?"

ஒவ்வொருவராகக் கேட்டார். நடந்ததை விளக்கிச் சொன்னோம்.

மாநாட்டுக்கு எங்களுடைய வருகை அவர்களுக்கு முக்கியமாகப்பட்டது. சிங்களப் பகுதியில், ஈழத்தமிழர்களின் போராட்டம் பற்றிய நியாயமான உணர்வு, பங்களிப்பு ஏற்பட வேண்டுமென்பதற்காக, இலங்கையிலிருந்து செய்தியாளர்கள், அறிஞர்கள், இலக்கியவாதிகள் என பலரையும் அழைத்திருந்தனர். தமிழகத்தின் பங்களிப்பு இல்லாமல் போய்விடக் கூடாது. நாங்கள் ஐவர் அழைக்கப்பட்டுச் சென்றோம்.

# விளக்குத் தூண் போல் மக்கள்

நிலம், நீர், காற்று மனித குலத்தின் அடிப்படை ஆதாரங்கள். இவைகளின்மீது கட்டமைக்கப்படுகின்றன கல்வி, வேலை வாய்ப்பு போன்ற வாழ்வுரிமைகள். அடிப்படை ஆதாரங்களி லிருந்து பிரிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வுரிமைகள் வழங்கப்பட வேண்டுமா? ஆதிக்க சக்திகளுடைய கேள்வி இது.

அடிப்படை ஆதாரங்களிலிருந்து, வாழ்வுரிமைகளிலிருந்து அறுத்தெறியப்படுவதை மக்கள் சக்தி எளிதில் ஏற்றுக் கொள்ளாது.

வல்வெட்டித் துறை போராளிகளின் கைவசம் இருந்த காலம், சுற்று வட்டாரங்களில் போர்க்களத்தில் குண்டடிபட்டு ஆபத்தான நிலையில் இருப்பவர்களுக்கு உடனே அறுவைச் சிகிச்சை தேவை. வல்வெட்டித்துறை மருத்துவமனையின் கீழே, நிலத்தடி மருத்துவமனை ஒன்றை அறுவை மருத்துவக்கூட வசதியுடன் புலிகள் உருவாக்கியிருந்தார்கள். காயம் பட்டவரை சுமந்து வேன், நேரே நிலத்தடி அறுவைக்கூடத்திற்கு வந்து நிற்கும். எந்நேரமும் தயார் நிலையில் இருக்கும் மருத்துவர்கள், செவிலியர், பணியாளர்கள் உடனே அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாய் முடித்து அனுப்புவார்கள். போராளிகள் காயத்திலிருந்து மீண்டெழுந்து மறுபடியும் களத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்கள். 1991-லிருந்து 95 வரை இது நடந்து கொண்டிருந்தது.

1995-ல் இந்தியப் படை வல்வெட்டித்துறைக்குள் நுழைந்தது. நிலத்தடி மருத்துவமனையைத் தகர்க்கப் போகிறார்கள் என்ற சேதி மக்களிடம் பரவியது. அதற்காக ராணுவத்தினர் வந்திருக் கிறார்கள் என்பதறிந்து மக்கள் திரண்டார்கள். ராணுவ அதிகாரியிடம் நேரில் போய் விவாதித்தார்கள்.

"உயிர் காக்கும் மருத்துவமனையை குண்டு வைத்து தகர்ப்பது என்ன நியாயம்?"

"இதனால் உங்களுக்கு எந்த ஆதாயமும் இல்லை. புலிகளுக்குத்தான் ஆதாயம்" அதிகாரிகள் மறுதலித்தார்கள்.

"வைத்திய சாலை எங்களுக்கு வேணும்" - மக்கள் கேட்டார்கள்.

நிலத்தடி மருத்துவமனையை தனியே தகர்க்க முடியாது, கீழே குண்டு வைத்துத் தகர்க்கிறபோது, மேலே இயங்குகிற மருத்துவமனையும் இடிந்து நொறுங்கும்.

"இல்ல, புலிகள் வந்த அடிச்சிட்டுப் போயிடுவாங்கள்".

"இப்ப மட்டும் முடியாதா என்ன?"

மழை பெய்து கொண்டிருக்கிறது. இரவு மழையினூடேயே தகர்த்துவிட்டுப் போய்விடலாம் என்று வந்த இந்திய ராணுவத்துக்கு, மழையில் நனைந்து கொண்டே போராடிய மக்கள் தடையாய் நின்றார்கள். மக்களுக்கும் இந்தியப் படைகளுக்கும் கலகம் முட்டிக் கொண்டு நின்றது. கேள்விப் பட்டு, ராணுவ முகாமிலிருந்து வெளிப்பட்டு ஒரு வட இந்திய ராணுவ அதிகாரி மக்களுடைய கொந்தளிப்புக்கு எதிராக எதையும் செய்யக்கூடாது என்று ராணுவத்தைப் பின்வாங்கச் செய்தான்.

மக்கள் சக்திக்குள் போராட்ட உணர்ச்சி தங்கிநின்றது, ராணுவத்தை எதிர்த்து வாதாடியபோது, போராளிகளுக்கு கவசமாய் நின்றார்கள் என்ற உண்மை இருந்தது. மக்களுக்கு கவசமாய் போராளிகள்; போராளிகளுக்குக் கவசமாய் மக்கள் - என்ற யதார்த்தம் எங்கும் நிலவியது.

ராணுவத்தை பின்வாங்கச் செய்த வட இந்திய ராணுவ அதிகாரி, புத்திசாலி. மக்களின் உணர்வுகளுக்கு எதிராக ஒரு அடி நகர்ந்தாலும், அந்தக் காரியம் அதள பாதாளத்தில் கொண்டு போய்விட்டுவிடும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது.

வரலாற்றின் சந்திப்புகளில் மக்களின் பாத்திரத்தை அங்கீகரிக்கிறார் வங்கத்துக் கவி தாகூர். ஆதிக்க சிந்தனையாளர்கள் மற்றும் தனி மனிதர்களால் தான் வரலாறு நடக்கிறது என்ற வாதத்தை பிடித்துக்கொண்டு தாங்குவார்கள்; மக்களின் ஆற்றலும், போர்க்குணமும் ஒரு தலைமைக்கான தேவையை முன்னகர்த்துவதும், தலைமை தன்னைத் தகுதியாக்கினபடியே மக்கள் சக்தியை முன்னகர்த்துவதும் இரண்டும் இணைவான போக்குகள்.

தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளாத முன்னோடிப் பாத்திரக் காரர்கள் வீழ்வார்கள் என்பது பொதுவிதி. சிறப்பு விதியும் கூட.

தாகூர் ருசியா சென்றார். அது சோவியத் ருசியா, அவர் சென்றபோது மக்கள் எனும் ஊற்று புதிய ருசியக் கட்டுமானத்தில் பொங்கிப் பீறிட்டு அடித்த காலம். ருசியாவிலிருந்து எழுதிய அவர் கடிதம் பேசியது.

"காலம் காலமாய் நாகரீகமடைந்திருந்த சமுதாயங்களில் ஊர், பெயர் தெரியாத மக்கள் குழுவினர் அடங்கியிருந்தார்கள். அவர்கள் தாம் பெரும்பான்மை மக்களாக இருந்தார்கள். அவர்கள் மிருகங்களைப் போல தாங்க முடியாத பளுவை தோளில் சுமக்க வேண்டியிருந்தது".

"அவர்கள் மனிதராவதற்கு நேரமே இல்லை. சமுதாய செல்வத்தின் மீதி மிச்சங்களில் எஞ்சியிருப்பவைகளைக் கொண்டு அவர்கள் போதாத வாழ்க்கை நடத்துகிறார்கள். மிகக் குறைந்த அளவு உணவு, மிகக் குறைந்த உடை, பெயரளவுக்குக்கூட இல்லாத கல்வி வாய்ப்பு கொண்டு மற்றவர்களுக்கு ஊழியம் செய்கிறார்கள். அவர்கள்தான் அரும்பாடுபட்டு உழைக்கிற வர்கள். அவர்கள்தான் மிக அதிகமாக அல்லல்படுகிறவர்கள்.

"அவர்கள் ஒரு விளக்குத் தூண் போல் நிற்கிறார்கள். தலையில் நாகரிகம் எனும் ஒளிவிளக்கைச் சுமந்துகொண்டு நிற்கிறார்கள். மேலே இருப்பவர்களுக்கு அந்த விளக்கின் ஒளி கிடைக்கிறது. அவர்களோ ஒழுகும் எண்ணெயினால் சிக்குப் பிடித்து நிற்கிறார்கள்".

- வரலாற்றில் மக்களின் பாத்திரத்தை தாகூர் நிறைவுபட வைக்கிறார்.

காலத்தின் எழுத்தை மக்கள்தாம் வரைகிறார்கள் என்பதற்கு, வல்வெட்டித் துறை மருத்துவமனையைக் காக்க இந்தியப் படைகளுடன் மக்கள் மல்லுக்கட்டியது ஒரு அழியாத உதாரணம்.

பல இடங்களில் இந்தியப்படையை எதிர்த்து, பெண்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மக்கள் எழுச்சிகளில் மகளிர் முன் வரிசைக்கு வந்தார்கள். முதலில் சிங்கள ராணுவம். பிறகு இந்திய ராணுவம் இவர்களின் தொடர் அட்டூழியங்கள் பொறுக்க மாட்டாத பெண்கள் முன்னணிக்கு வந்து அன்னையர் முன்னணி அமைத்து அடுக்கடுக்காய் போராட்டங்களை வைத்தார்கள்.

இந்திய ராணுவத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டமா? அதுவும் பெண்களா? இங்கே தமிழக எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு சுருக்கென்றது.

*"புலிகள் பெண்களின் பின்னால் ஒளிந்து கொண்டு போராடுகிறார்கள்"*

பகடி செய்தார்.

இந்திய விடுதலைப் போராட்டம் பல தொடர் அத்தியாயங்களைக் கடந்த வேளையில் அதன் இறுதி அத்தியாயத்தை எழுதி முடித்தனர் இந்தியக் கப்பற்படை வீரர்கள். 1946 பிப்ரவரியில் நடந்தது இந்தியக் கப்பற்படை எழுச்சி. பம்பாய்த் துறைமுகத்தில் தல்வாரிஷ் என்ற கப்பலில் தொடங்கிய புரட்சி, பம்பாயில் முகாமிட்டிருந்த அறுபது கப்பல்களுக்கும் பரவியது. பத்தாயிரம் மாலுமிகள் "வெள்ளையனே வெளியேறு, இந்து, முஸ்லீம் ஒற்றுமை ஓங்குக" என்ற முழக்கங்களுடன் இன்குலாப் ஜிந்தாபாத் என்ற முழக்கத்தையும் இணைத்தார்கள். எல்லாக் கப்பல்களிலும் பிரிட்டிஷ் கொடியை இறக்கி, காங்கிரஸ், முஸ்லீம்-லீக் கொடிகளோடு செங்கொடியையும் இணைத்து உயர்த்தினார்கள்.

அதிகார ஆணைகள், வெடிமருந்து, துப்பாக்கி, இவைகளின் கூட்டின் பெயர்தான் வன்முறை. அவைகளை ஒருபோதும் மக்கள் கைகளுக்கு மாற்றுவதில்லை அரசாங்கம். ஆனால் இப்போது வெடிமருந்து, துப்பாக்கி - கப்பற்படை வீரர்களின் கையில் இருந்தன.

வெள்ளையர் யாரை நம்பினார்களோ அவர்களே போராளிகளாகி விட்டது கண்டு மூர்க்கம் கொண்டார்கள். கப்பல் களிலும், அனைத்துக் கடற்படைப் பயிற்சி நிலையங்களிலும் நிலைகொண்டுவிட்ட வீரர்களைக் கப்பலுக்குள் நுழைந்து சுட்டுத் தள்ளுமாறு பலூச்சி படைப் பிரிவுக்கு உத்தரவிட்டார்கள். பலூச்சி வீரர்கள் மறுத்தார்கள். பலூச்சி படை திரும்பப் பெறப்பட்டது.

கூர்க்கா படைப்பிரிவை அனுப்பினார்கள். எங்கள் மக்களை நாங்கள் சுடமாட்டோம் என மறுத்தார்கள்.

வேறு வழியின்றி வெள்ளைப் பட்டாளமே துறைமுகத்துக்கு வந்தது.

கப்பற்படை வீரர்களுக்கு ஆதரவாக, தொழிலாளர்கள், மாணவர்கள், பெண்கள், மக்கள் அனைவருமே வீதிக்கு வந்தார்கள். வெள்ளைச் சிப்பாய்களை முன்னேற விடாமல் வீதிகளில் தடுப்பு அரண்களை உண்டாக்கினார்கள். போராடும் மக்களை நோக்கிச் சுட்டது வெள்ளைப்படை.

கப்பற்படை நிலையங்களிலும் கப்பல்களிலும் இருந்த உணவுப்பொருட்கள் காலியாகிவிட்டன. ஒவ்வொரு வீட்டிலும் சப்பாத்திகளைச் சுட்டுக் குவித்து கூடைகளில் நிரப்பி கடற்கரைக்குக் கொண்டு போயினர் மக்கள். அவை படகுகளில் ஏற்றி மாலுமிகளுக்குக் கொண்டு போய்த் தரப்பட்டன.

போராடும் வீரர்களுக்கு ஆதரவாய் மக்கள் பேரணி நடத்தி, கூட்டங்கள் நடத்த திட்டமிட்டனர். கூட்டத்தில் கப்பற்படைப் போராட்டக் குழுவின் தலைவர்களைப் பேசிட வைக்க ஏற்பாடு நடந்தது. வித்தியாசமாய் திடலின் நடுவில் மேடை, மேடையைச் சுற்றி வட்டமாய்ப் பெண்கள் கூட்டம், அடுத்து ஆண்கள் பின்னால் உள்ளே வெள்ளைப் படை வந்தால் நொறுக்கித் தீர்க்க இளவட்ட வளையம். யாரென்றே அடையாளம் காணமுடியாமல் போராட்டத் தலைவர்கள் உரையாற்றிவிட்டு, பத்திரமாய்த் திரும்பினர்.

போராடுகிறவர்களுக்கு முதலில் பெண்கள் பாதுகாப்பு என்பது புதிய போராட்ட முறை. வழக்கமான நடைமுறையை மாற்றியமைத்து வகுத்த புது வியூகம்.

ஜெயகாந்தனுக்கு பெண்களுக்கு பின்னால் ஒளிந்து கொண்டு போராடிய கப்பற்படை வீரர் வரலாறு தெரியும். கப்பற்படை போராளிகளின் எழுச்சியை அங்கீகரிக்காது காட்டிக் கொடுத்த தேசியத் தலைவர்களையும் (காந்தி, பட்டேல், நேரு, அருணா ஆசப் அலி, மௌலானா அபுல்கலாம் ஆசாத்) அவர் அறிவார். எழுச்சி கொண்டு மக்கள் எப்போது ஆயுதங்களை ஏந்து கிறார்களோ, அப்போதெல்லாம் போராட்டங்களை ஆதரிக்காத உள்மனம் தான், இந்த வார்த்தை வித்தகருக்குள்ளும் உலவியது.

வரலாற்றை மூடி மறைத்து சுருக்கிக் கொள்கிற மனம் தேச பக்தி என்ற பெயரில் அரச பயங்கரவாதத்துக்கு வாழ்த்துப் பாடுகின்றது.

# கேப்டன் மில்லரின் காலடிகளின் கீழே

நெல்லியடி என்ற இடத்தில் மிகப்பெரிய சிங்கள ராணுவ முகாம். ராணுவ முகாம் ஒரு குகை போல; குகையிலிருந்து புறப்படும் மிருகம் ரத்த தாகம் தீர்த்து வேட்டையாடி உணவெடுத்து விட்டு, திரும்பி குகைக்குள் நுழைந்து கொள்ளும். ராணுவத்தின் செயல்பாடும் அது போன்றது. மக்களை, போராளிகளை வேட்டையாடிய பின் பாதுகாப்பாய் சிங்கள ராணுவம் நெல்லியடி முகாமில் ஒதுங்கிக் கொண்டது.

இங்கே 1979-ல் தமிழகத்தில் வட ஆற்காடு (தற்போது வேலூர்), தருமபுரி மாவட்டங்களில் சித்திரவதை முகாம் என்ற குகையை அமைத்திருந்தது வால்டர் தேவாரம் தலைமையிலான போலீஸ். சிங்கள ராணுவம் பகலில் வேட்டையாடிவிட்டு, இரவில் பதுங்கிக் கொண்டது, இந்த மிருகம் இரவில் தேடுதல் வேட்டை நடத்திவிட்டு பகலில் பாதுகாப்பாய் ஒடுங்கி நிற்கும். போலீஸ் மோதல்கள் என்ற பெயரில் தேவாரம் நடத்திய படுகொலைகளை, அப்பாவி மக்கள் மீது நடத்திய வெறியாட்டத்தைக் கண்டித்து, அன்று சட்டமன்ற உறுப்பினரா யிருந்த பழ. நெடுமாறன் முதலில் தருமபுரி மாவட்டத்தில் கண்டன யாத்திரையை மேற்கொண்டார். இது தமிழக அரசியல் வரலாற்றில் நினைவில் கொள்ளப்பட வேண்டிய அம்சம்.

ஒரு லாரி நிறைய வெடிகுண்டுகளை நிரப்பிக்கொண்டு இருபத்தொரு வயது கேப்டன் மில்லர் ராணுவ முகாம் தடுப்புச் சுவர் மீது மோதி வெடிக்கச் செய்தார். இந்த அழித்தொழிப்பு வேலையை மேற்கொண்டதில் வித்தியாசமான ஒரு போர் வடிவத்தை கேப்டன் மில்லர் தொடங்கி வைத்தார்.

விலையற்றது மனித உயிர். அதை விலையாகக் கொடுப்பது ஈடுசெய்ய முடியாததொரு சோகம்.

மயானக் காடாக்கப்பட்ட ஈழத்தமிழர்களின் வாழ்வை மீளவும் அதன் சொந்த இருப்பில், அது இருந்த இடத்தில் வைப்பதற்கான போராட்டமாக உருவெடுத்த ஈழப் போரில் உயிரிழப்பு தவிர்க்க முடியவில்லை.

ராணுவத்துக்கு தீனியாகி ஒவ்வொரு நாளும் சோகங்களை ஏற்றுமதி செய்வதைவிட, அதற்கு முடிவு காண்பது என கேப்டன் மில்லர் நினைத்தார்.

ஆதிபத்திய சக்திகள் யுத்தத்தை நடத்துகிற வடிவமே அதை எதிர்க்கும் வடிவங்களையும் தீர்மானிக்கிறது. வியட்னாமில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெறிச் செயல்களை எதிர்த்து ஒரு தந்தை தன் குழந்தையுடன் தீக்குளித்தார். தீக்குளித்தல் ஒரு போராட்ட வடிவமாக, வரலாற்றில் முதல்முதலில் பதிவு செய்யப் படுகிறது. உலகம் அதைக் குறித்துக் கொண்டது, பிறகு புத்தபிக்குகள், நகர வீதிகளில் தீக்குளித்து ஏகாதிபத்தியத்தின் மூஞ்சியில் அறைந்தார்கள்.

தன்னைத் தானே அழித்துக் கொள்ளல் என்பதல்ல. அதனாலேயே எதிரிகளையும் அழித்தல் என்ற புதிய போராட்ட முறையை ஈழப்போராளிகள் கையிலெடுத்தார்கள். கேப்டன் மில்லர் இராணுவம் தங்கி இருந்த கட்டிடத்தின் மீது வெடி மருந்து நிரப்பிய லாரியை மோதி வெடித்தார். இருநூற்றுக்கும் மேற்பட்ட சிங்களச் சிப்பாய்களின் சாம்பல் மிஞ்சியது. மில்லர் என்ற வல்லிபுரம் வசந்தன் இந்தப் புதிய போர்முறையை செயல் படுத்திய நாள் 5.7.1987. அது கரும்புலிகளின் நினைவுநாளாகத் தொடர்ந்து புலிகளால் நினைவு கூறப்படுகிறது.

மக்களைக் காப்பதற்காக தங்களை ஈகம்செய்து அழிகிறவர்களை - போராளிகள் என மக்கள் தங்கள் அகராதியில் குறித்துக் கொள்கிறார்கள். தற்கொலைப் படை என்கிறது ஆதிக்கச சக்திகளின் அகராதி.

கேப்டன் மில்லரின் சிலை அங்கு நகராட்சிப் பள்ளி வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சிங்கள இராணுவத்தின் இடத்தை இந்திய அமைதிப்படை எடுத்துக் கொண்டபோது மில்லர் சிலையைத் தகர்த்து விடுவார்கள் என்ற சேதி மக்களை எட்டியது. எது கருதி அது முன்னேறிவருகிறது என்பதை அறிந்து கொண்டதும் மக்கள், இரவோடு இரவாக மில்லர் சிலையை

எடுத்து ஒரு கிணற்றுக்குள் போட்டு மறைத்தார்கள். இந்தியப் படை ஈழத்திலிருந்து வெளியேறியபின் பாதுகாப்பாய் மறுபடியும் சிலையை எடுத்து வந்து அதே பள்ளியில், அதே இடத்தில் வைத்தார்கள் மக்கள்.

கேப்டன் மில்லர் உருவச் சிலையின் கீழே இந்த வாசகம்:

"கரும்புலிகள்- எங்கள்
போராட்டத் தடை நீக்கிகள்"

மில்லரின் காலடிகளிலிருந்து எழுந்து இந்த வாசகம், கிரியா ஊக்கியாய், போராடும் நிலப் பகுதியெங்கும் நடந்து உயிர்த்துடிப்பை வழங்கியபடியே சென்று கொண்டிருக்கிறது. அநீதியை எதிர்த்துக் கலகம் செய்ய மக்களுக்குப் புதிய முகத்தை தந்தபடியே பயணம் தொடர்கிறது. கிணற்றுக்குள் போட்ட சிலையை, புலிகளின் கைப்பிடிக்குள் அந்தப் பகுதி வருகிற காலம் வரை ரகசியம் போல் காத்தார்கள் மக்கள். கிணற்றுக்குள் போட்ட கல் மாதிரி இருந்து மௌனமாய் காத்த அந்த மக்கள் திரள் போன்ற பகுதியினரை "உப்புச் சப்பில்லாத, ஆராய்ந்து அறியும் திறனில்லாத அடிக்கடி மாறும் தன்மையுள்ள பிராணிக் கூட்டம்".

- என்கிறான் சார்லஸ் பர்கூசன் என்கிற அமெரிக்க சிந்தனையாளன். முதலாளியப் போக்குள்ள எல்லா சிந்தனையாளர்களும் இப்படியேதான் இருப்பார்கள் போல.

கேப்டன் மில்லரின் தாக்குதலுக்குப் பழி எடுக்கப் புறப்பட்டது சிங்கள ராணுவம்.

பலி கொள்ளாமல் பழி வாங்கல் இல்லை. வல்வெட்டித் துறையில் ஆயிரம் இளைஞர்களைப் பொறுக்கி எடுத்து கடற்கரைக்கு நடத்திக்கொண்டு போனார்கள். எல்லோரையும் பயப்படச் செய்ய, ஐந்து பேரை வரிசையாக நிறுத்தினார்கள்.

ஐந்து பேரைக் கொன்ற பின் அந்த இடத்திலிருந்து இருநூறு அடி தூரத்தில் ஒரு கட்டிடத்தில் ஐம்பது பேரை பிரித்து அடைத்தார்கள். கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தார்கள்.

குண்டுகள் சத்தம் எழுப்பியபோது பின்புலத்தில் குபுக்கென்று பொங்கி எழும் கடல் அலைச் சத்தம் பயந்து அடங்கியது. கடற்கரைக்கு வெளியே சாலை ஓரத்தில் நின்ற தாய், தந்தை, மனைவி, சகோதரி, குழந்தைகளின் கூக்குரலைக் கேட்டு கடல் அடங்கிப் போயிருக்கவேண்டும்.


இராணுவம் மிருகவிதியை நடைமுறைப்படுத்திக் கொன்ற அந்த ஐம்பது பேரில் ஒரு ஊமைப் பையனும் இருந்தான். ஆயிரம் பேரில் 55 பேராக எஞ்சிய இளைஞர்களை இராணுவ முகாமுக்கு அள்ளிக் கொண்டு போனார்கள்.

பிறகு, அவர்கள் திரும்பவேயில்லை.

புத்தரும் திரும்பவேயில்லை; இரத்தத்தின் நெடி தாங்காமல், அவர் இலங்கையிலிருந்து வெளியேறி வெகுகாலமாகிவிட்டது.

"சிவப்பு...
பாயும் கங்கைகளிலும்
கைமுனுவும் எல்லாளனும்
பொருதிய போதே பிறிட்ட ரத்தம்.
புத்தன் வந்த தேசம் -
தேசத்தின் ஆழ்மனப் படிவுகள்
குரோதங்கள் தானென்றால்
புத்தனாவது சித்தனாவது...
முக்திகூட இரத்தத்திலோ
திக்கெங்கும் தெறிக்கின்றது
இன்றைக்கும்"

- கி.பி. அரவிந்தன்



கேப்டன் மில்லர்

## ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை

ஒரு ஆட்சி சனநாயக நடைமுறையிலான மக்கள் வெளிப்பாடுகளை எதிர்கொள்கிறபோது, கறுப்புச் சட்டங்களை ஏந்திக் கொள்கின்றது. சனநாயகப் பிறழ்வு ஏற்படுகிற கால கட்டங்களில் அவசரநிலை அறிவிப்பு, ராணுவ ஆக்கிரமிப்பு, சனநாயகத்தின் நான்காவது தூணாகிய கருத்துச் சுதந்திரத்தை தகர்ப்பது என காரியங்கள் நடைபெறுவதைக் கேள்விப் பட்டுள்ளோம். ஆனால் நகரிலிருந்து வெளியான ஈழமுரசு நாளிதழ் அலுவலகத்தையே இந்திய அமைதிப்படை குண்டு வைத்துத் தகர்த்தது என்பது நம்பமுடியாத ஒன்று.

யாழ்ப்பாணத்திலுள்ள இணுவில், கோண்டாவில் பகுதிகளில் இந்திய இராணுவம் பாலியல் வன்முறைகளை தொடர்ச்சியாக நடத்தியது. நேரடியாகவே அப்பகுதிகளுக்குப் பயணித்து மக்கள் உணர்வுகளைப் பதிவு செய்து வெளிப்படுத்தியது ஈழநாடு பத்திரிகை.

இந்தியப் படையின் அத்துமீறல்கள், பாலியல் வன்முறை, கொடூரம் பற்றி மக்கள் கொடுத்த புகார்களை, ஈழநாடு நிர்வாக இயக்குநர் ராஜலிங்கம், ஈழநாடு ஆசிரியர் குழுவைச் சார்ந்த கே.ஜி. மகாதேவா ஆகியோர் பட்டியலிட்டு அவைகளைத் தடுக்குமாறு வேண்டுகோள் வைத்தபோது -

இந்திய அமைதிப்படையின் வட்டார கமாண்டர் ஆக இருந்த காலோன் என்ற அதிகாரி நியாயப்படுத்திப் பேசினார்.

“இராணுவம் என்றால்... அது இலங்கை இராணுவம், இந்திய இராணுவம், பாகிஸ்தான் இராணுவம்... ஏன் அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவம் என்றெல்லாம் வேறுபடுத்த முடியாது.

எல்லா இராணுவமும் ஒன்றுதான். அவிழ்த்துவிடப்படுகிற எல்லா இராணுவச் சிப்பாய்களும் ஒரே மாதிரிதான் இருப்பார்கள். இது தவிர்க்க முடியாதது".

அரணாய் இருந்து, தேவைகளை நிறைவு செய்து, மானுட ஆயுளை நீட்டிக்கிற தங்கபஸ்பம் செய்து தருவதல்ல இராணுவத்தின் வேலை. அட்டூழியங்கள் செய்வது இயல்பு. சற்றே விலகியிரும் பிள்ளாய் என்று நேரடியாக ஈழநாடு பத்திரிகையாளர்களை திருப்பி அனுப்பினார் அந்த இராணுவ அதிகாரி. ஈழநாடு ஆசிரியர் கந்தசாமி கைது செய்யப்பட்டு சிலவருடங்கள் சித்திரவதை அனுபவித்தார்.

ஈழநாடு போலவே ஈழமுரசு நாளிதழ் யாழ் நகரிலிருந்து வந்தது. யாழ் புகையிரத நிலையத்திற்கருகில் ஒரு வீதியில் இடிபாடுகளாய் கிடந்த ஈழமுரசு அலுவலகத்தை நேரில் கண்டோம். பழைய காட்சிப் பொருளாக மட்டுமே நிற்கும் சிதைந்து போன புராதணச் சின்னம் அது.

இந்தியப் படையின் அத்துமீறலை ஈழமுரசு எடுத்து வைத்தது. அந்த எழுத்துக்களை போராளிகளுக்கு ஆதரவானதாக, இந்தியாவுக்கு எதிரானதான பொருத்திப் பார்த்துக்கொண்டது இந்திய இராணுவம்.

1987-ம் ஆண்டு அக்டோபர் பத்தாம் நாள் சனிக்கிழமை; முதல் நாளிரவு ஈழமுரசு அச்சிடும் பணிகள் எல்லாவற்றையும் முடித்துவிட்டு, அதன் பொறுப்பாசிரியர் எஸ்.எம். கோபால ரத்தினம் என்ற கோபு வீட்டுக்குப் புறப்பட்டார். துணை ஆசிரியர் சர்வேந்திராவிடமும், அச்சகப் பகுதி மணியத்திடமும் அலுவலகத் திலேயே தங்கியிருக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றார்.

அந்த கொடூர நிகழ்வு பற்றி எஸ்.எம். கோபாலரத்தினம் விவரிக்கிறார்.

"1987- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பத்தாம் நாள் சனிக்கிழமை அதிகாலை ஐந்துமணி, யாழ்ப்பாண நகரில் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு குண்டுகள் வெடித்தன. குண்டுவெடிக்கும் முழக்கம் சில மாதங்களாக ஓய்ந்திருந்த சமயத்தில் இந்தக் குண்டுகள் வெடித்த சத்தம் நகரைக் கலக்கி விட்டது. "ஈழமுரசு" பத்திரிகை அலுவலகத்தில் குண்டு வெடித்தாகத் தகவல் எட்டியது. அங்கு விரைந்தேன்.

“உலகில் அடக்கு முறைக்கு எதிராகவும் மனித உரிமைகளுக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் பத்திரிகைச் சுதந்திரத்துக்காகவும் குரல் கொடுக்கும் ஆசியாவின் மிகப்பெரிய ஜனநாயக நாடு என்று கூறிக் கொள்ளும் இந்தியாவிலிருந்து, ஈழத்திலிருக்கும் தமிழ் மக்களைப் பாதுகாக்கவும், அமைதியை நிலைநாட்டவும் டில்லி அனுப்பியிருந்த இந்திய அமைதிப்படையினர் ஈழமுரசு பத்திரிகையின் அச்சியந்திரத்தையும் அச்சுப் பகுதியையும் குண்டு வைத்துத் தகர்த்திருந்தனர்.

இரண்டாவது குண்டு ஈழமுரசு அலுவலகத்திற்கு சற்றே தூரத்தில் நகரின் வர்த்தகப் பகுதியிலுள்ள “முரசொலி பத்திரிகையின் அச்சுயந்திரத்தைத் தகர்த்திருந்தது”.

(நூல் - ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை - பக்கம் 23) - எஸ்.எம். கோபாலரத்தினம்)

ஈழமுரசு அலுவலகத்தில் தங்கியிருந்த சர்வேந்திராவையும், மற்றவர்களையும் இரவே இந்தியப்படை கைது செய்துகொண்டு போயிருந்தது. கைது செய்து வெளியேற்றியபின், அலுவலகத்துக்குள் குண்டு வைத்துத் தகர்த்திருந்தனர். அன்று விடிகாலையில் ஈழமுரசு ஆசிரியர் எஸ்.எம். கோபாலரத்தினத்தையும், அச்சு இயந்திரப் பிரிவில் பணியாற்றும் விஜயநாதன், குமார் ஆகியோரையும் கைதுசெய்து இராணுவ முகாமுக்கு கூட்டிப் போனார்கள். யாழ் கோட்டைதான் அது. அதன் அறைகள்தான் இந்தியப்படையின் சித்திரவதை முகாம். அவர்கள் சித்திரவதைகள் செய்கிறபோது, ஏற்கனவே தேர்ச்சி பெற்ற இலங்கை இராணுவத்தினரையும் கூட்டாளிகளாகவே வைத்துக் கொண்டார்கள்.

உலகெங்கும் நிகழ்த்தப்படும் அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் மிகப்பெரிய சனநாயக நாடு என்ற நெற்றிப் பட்டம் அவிழ்ந்து விழுந்தது.

“அமைதிப்படையைச் சேர்ந்த இந்திய இராணுவத்தினர் யாழ் நகருக்குள் நுழைந்தபோதே கண்மூடித்தனமாக பீரங்கி களாலும் துப்பாக்கிகளாலும் இடம், பொருள், ஏவல் என்று பார்க்காமல் சுட்டபடியே வந்திருந்திருக்கின்றனர். அவர்கள் கண்ணில் பட்டவர்கள் எல்லோருமே புலிகளாகவே தெரிந்திருக் கின்றார்கள். சர்வதேச போர் மரபுகளையெல்லாம் அந்தப் படை மீறியிருக்கின்றது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குள்

(மருத்துவமனை) புகுந்து படையினர் ஆஸ்பத்திரியென்றுகூட பார்க்காமல் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகமும் பீரங்கித் தாக்குதலும் நடத்தியதில் நோயைக் குணமாக்குவதற்காக ஆஸ்பத்திரியில் தங்கியிருந்த நோயாளிகள் பலரும் கொல்லப் பட்டனர். பலர் பலத்த காயத்துடன் தப்பியோடினர். நோயாளி களுக்கு சிகிச்சையளித்துக் கொண்டிருந்த டாக்டர்கள் சிலரும் நோயாளிகளைக் கண்ணும் கருத்துமாக கவனித்து வந்த தாதிமார் சிலரும் படையினரின் துப்பாக்கிக்கு பலியானார்கள். இந்திய இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலுக்கு மிகப் பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் தொடர்ந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு வந்தபடியிருந்தனர். மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவியது. அறுவைச் சிகிச்சைகள் நடைபெறவில்லை. எழுபதுக்கு மேலான சடலங்கள் பிரேத அறையில் குவிந்து கிடந்தன.

"தீபாவளி தினமான அக்டோபர் 21-ந் தேதி முற்பகலில் இருந்தே யாழ் ஆஸ்பத்திரியின் சுற்றுப்புறப் பகுதி அனைத்தும் ஷெல் தாக்குதலுக்கும், ஹெலிச்சூட்டுக்கும், குண்டு வீச்சுகளுக்கும் இலக்கானது. ஆஸ்பத்திரி வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவின் மீது ஷெல் விழுந்து சேதமேற்பட்டது. பிற்பகல் ஒன்றரை மணியளவில் எட்டாம் வார்டின் மீது ஷெல் விழுந்ததில் ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

"ஆஸ்பத்திரி எக்ஸ்ரே பிரிவில் பாதுகாப்புத்தேடி கீழே படுத்திருந்தும், பதுங்கியும் கிடந்த நோயாளர்கள், ஊழியர்கள் மீது இந்திய இராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து வகை தொகையின்றிக் கொன்று குவித்தனர். இறந்து போனவர்களின் சடலங்களோடு சடலம்போல் பல மணிநேரம் படுத்துக்கிடந்து சிலர் உயிர் தப்பியிருக்கின்றனர். இந்திய இராணுவம் இப்படியெல்லாம் மனிதாபிமானம் சிறிதுமே யில்லாமல் நடந்து கொள்ளுமென்று எவருமே எதிர்பார்த்த தில்லை. சடலங்களுடன் சடலமாக கிடந்த ஒரு ஆஸ்பத்திரி ஊழியர் இருமிய சத்தம் கேட்டு ஒரு இந்திய இராணுவச் சிப்பாய் ஒரு எறிகுண்டை வீசி அந்த ஊழியரையும் அவருடன் கிடந்த மற்றும் பலரையும் கொன்றார்.

கணேஷரட்ணம் என்ற மற்றொரு டாக்டர் தமது ஸ்டெதாஸ் கோப்புடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்த காட்சி நெஞ்சைப் பதற வைத்தது. நோயாளிகள், பொதுமக்கள், டாக்டர்கள், நர்சுகள்

என நூற்றுக்கணக்கானோரை மருத்துவமனைக்குள்ளேயே கொன்று குவித்த அமைதிப்படை என்ற இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை காலம் மன்னித்தாலும் மறக்கமுடியாத வடுக்கள் இவை. இந்திய இராணுவத்தைச் சேர்ந்த சிலரின் பாலியல் வல்லுறவுகள் சொல்லி மாளாதவை. சில இடங்களில் மூதாட்டிகள் கூடத் தப்பவில்லை. தாயையும், தகப்பனையும் இலங்கை இராணுவத்தினரின் ஷெல்லடியில் ஒரே நேரத்தில் இழந்த இளம்பெண் இந்திய இராணுவத்தினால் மானபங்கப்பட்டு கிணற்றில் பிணமாக மிதந்த சம்பவம் யாழ் நகரில் நடந்தது".

*(ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை - பக்கம் 32, 33)*

ஈழ முரசு ஆசிரியர் எஸ்.எம். கோபாலரத்தினம், சர்வேந்திரா, விஜயநாதன், குமார், யோகநாதன் என ஈழமுரசு குழுவினர் பதின்மூன்று பேர், நூறு நாட்களுக்கு மேலாக இந்திய இராணுவச் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைப் படுத்தப்பட்டனர்.

எழுத்துச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் என்பது இராணுவத்துக்கு ஒரு பொருட்டில்லை. இலங்கை இராணுவம் என்றால் என்ன? இந்திய இராணுவம் என்றால் என்ன? இலங்கை இராணுவத்தையும் கூட்டாளிகளாக வைத்தக் கொண்டு ஈழமுரசு, ஈழநாடு பத்திரிகைகளை வேட்டையாடியும் வெடி குண்டுகளாலும் மூழ்கடித்தார்கள்.

"தமிழர்கள் போர் கேட்டால் போர் தருகிறேன். சமாதானம் கேட்டால் சமாதானம் தருகிறேன்". - இவர் ஜெயவர்த்தனே.

இலங்கை ஒரு நாடு. அதற்குள் வாழ்வது இரு இன மக்கள் என்பதை மறந்துவிட்டு இலங்கைப் பிரதமர் அந்நாட்டின் ஒரு பகுதி மக்களை எதிரிகளாக நிறுத்திப் பேசினார்.

எஸ்.எம். கோபாலரத்தினமும் ஈழமுரசு பத்திரிகைக் குழுவினரும் விடுதலை செய்யப்பட்டபோது, இந்திய இராணுவத் தளபதி கர்னல் பபர் ஒவ்வொருவருக்கும் கை கொடுத்து பிரியா விடை தந்தார். கோபுவுக்கு கை கொடுத்தபோது கர்னல் பபர் சொன்னார்.

"நீங்கள் விடுதலை பெற்று வீடு செல்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். மலையோடு மோதினால் மண்டை தான் உடையும். மலைக்குச் சேதமேற்படாது என்பதை உங்கள் ஆட்களுக்குச் சொல்லி வையுங்கள். நீங்கள் எங்களுடன்

அன்பாக நடந்தால் நாங்கள் அன்பாக நடப்போம். ஆயுதத்தால் பிரச்சனையை தீர்க்க நினைத்தால் அப்படியே தீர்ப்போம்".

இலங்கைக்கு உள்ளே இருக்கிற ஒருவர் உதிர்த்த வாசகங்களும், இலங்கைக்கு வெளியே இருந்து வந்திறங்கிய ஒரு படைத்தளபதி உதிர்த்த முத்துக்களும் ஒரு மாதிரியாக பளபளக்கின்றன.

எஸ்.எம். கோபாலரத்தினம் மானுடத்தின் தமிழ்க்கூடல் மாநாட்டுக்கு வந்திருந்தார். தொடக்க நாளிலேயே அவருக்கு என்னை அறிமுகப்படுத்தினார் வெளிச்சம் இதழின் ஆசிரியர் கருணாகரன். நான்கு நாட்களும் கோபு எங்களுடன் கலந்து உறவாடினார். அவர் எழுதி ஜுனியர் விகடனில் தொடராகவும், பின்னர் நூலாகவும் வெளிவந்த "ஈழமண்ணில் ஓர் இந்தியச் சிறை நூலை" கையெழுத்திட்டு எனக்குத் தந்தார்.

இப்போதும் கோபு என்ற கோபாலரத்தினத்துடனான கடிதப் பரிமாற்றம் தொடர்கிறது.

# செஞ்சோலை

இயற்கை குதூகலிக்கும் பூமி. கேரளா எங்கும் தென்னை என்றால் ஈழமெங்கனும் பனைகள். வன்னிப் பிரதேசத்திலிருந்து அடர்ந்த வனங்கள். தொங்கும் தோட்டங்கள்போல், மேலெழும்பிக் குவிந்த விருட்சங்கள். விருட்சங்களின் தலைமேல் தூக்கி வைத்த குழந்தை போல் வேடிக்கை பார்த்து குதூகலித்தன பச்சைக் கொடிகள்.

இயற்கையின் குதூகலத்தைக் கொன்று போட்டிருந்தான் சிங்கள ஆமிக்காரன். மரங்களுக்கும் ஆகாயத்திற்கும் கூட்டமாய் ஒரே வரிசையில் நீந்தும் பறவைகளும் காணாமல் போயிருந்தன. யுத்தசத்தம் பறக்கும் இனத்துக்கும் வேட்டு வைத்திருந்தது.

"அத்துவான வெளிமீது கத்திக் தொலைகிறது
கரிச்சான் குருவி
காற்றுக்கூட மூச்சுக் காட்டாது முழு மௌனமாக.
ஓ, மனிதர்களே
என்ன நடந்துவிட்டது உங்களுக்கு?
ஆடிப்பாடி என் மேல் கூடிக்குலவிய உங்கள்
குரலொலிகள்... சிரிப்பலைகள்...
அழகிய வீடுவாசல்கள்... ஆடுமாடுகள்
எல்லாவற்றோடு என்னையும் தொலைத்துவிட்டு
எங்கே போனீர்கள்?
இப்போதெல்லாம் முட்கம்பிச் சுருள்களும்
முகம் தெரியாப் பிசாசுகளும்தான் என்மேல்
இன்னும் எனக்குள் நம்பிக்கை
வற்றிப் போய்விடவில்லை
வருவீர்கள் என்றோ ஒரு நாள்

உங்கள் கால்தடங்களைக் காணுவதற்காய்
காவலரண்களையும் தாங்கிக்கொண்டு காத்திருக்கிறேன்".

*(த. பிரபாகரன், ஞானம் இதழ். - அக். 2002).*

கேரளா போல் ஒவ்வொரு வீடும் தனக்கான தேவையைத் தானே நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் இரண்டு பலா, நாலு கொய்யா, நாற்பது வாழை, மா என்று வீட்டைச்சுற்றி தன்னிறைவுக் குடும்பமாக வாழ்ந்தது ஈழம்.

நிலத்திலிருந்து சீறிப்பாயும் பீரங்கிக் குண்டுகள், ஏவுகணைகள், ஆகாயத்திலிருந்து ஹெலிகாப்டரில் கவிழ்ந் தடிக்கும் ஷெல்கள் - எழில் முகம் கொண்ட ஈழத்தை சுடுகாடாக்கி யிருந்தது.

ஷெல்லடிகளால் தலை துண்டிக்கப்பட்ட பனைகள் முண்டமாய் நின்றன. எல்லாப் பனைகளும் எரிந்து, கரிந்து, இரவு நேரப் பயணியை பயமுறுத்தின. சுடுகாட்டுச் சாம்பலில் புரண்டு எழுந்த காலகண்டன் போல்.

தாயொரு பக்கம், பிள்ளையொரு பக்கம்; தலையொரு இடம், காலொரு இடம், ஒரு குடும்பத்தின் உறுப்புகள் தனித் தனியாய் வெட்டி எறியப்பட்டதால் வாழும் விருப்பம் அழிந்த விட்டது. வாழுவேன் என்ற நம்பிக்கையில் மக்கள் உயிர் கொண்டு திரிந்தார்கள். நிர்மூலத்தின் இடத்தில் நிர்மாணம். அழிவை விதைத்தபடி நடக்கும் போரின் நடுவில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணக் கூடம். அனாதரவான குழந்தைகளுக்கு செஞ்சோலை. போரில் காயமடைந்து காலிழந்த, கையிழந்த பெண்களுக்கு மயூரி, போரின் கொடூரம் பிழிந்துபோட்ட சித்தம் கலங்கியவருக்கு மாஞ்சோலை. போராளிகள் கைவசப்படுத்தி உறுதியாய் நின்ற பகுதிகளில் இதுபோல் மறுவாழ்வுப் பணிகள் நடந்திருந்தன.

நாங்கள் மானுடத்தின் தமிழ்க்கூடல் மாநாட்டுக்குப் போயிருந்த அமைதிக் காலத்தில், ஒரு அறிவிப்பு "லட்சம் பனைகள் நடுவோம்" மக்களின் கரங்களுடன் போராளிகளின் கரங்களும் இணைந்து பனை நடும்பணியைச் செய்வோம் என அறிவித்திருந்தார் புலிகளின் தலைவர் பிரபாகரன்.

யுத்த நேரத்தில் மட்டுமல்ல. அமைதி நேரத்திலும் ஆக்கப் பணிகளில் ஈடுபடுவோம் என்பது செஞ்சீனத்தின் சிற்பி மாவோ

தரும் செய்தி. மக்களோடு கை கோர்த்தார்கள். மக்களோடு வாழ்ந்தார்கள். மக்களை போரில் இணைத்தார்கள். மக்களுக்கு கோபமூட்டும் எந்தக் காரியத்தையும் தவிர்த்தார்கள். சீனத்தின் மக்கள் இராணுவம் செய்ததை ஈழத்தின் புலிப்படையும் செய்து கொண்டிருந்தது.

நாங்கள் போய்ச் சேர்ந்தபோது, நிலா சிதறிப் போயிருந்தது. முல்லைத் தீவு கடற்கரையில் எங்களுக்காகக் காத்திருந்தார்கள் கடற்புலிகள். கடற்புலிகளின் தலைமைப் போராளி சூசை அவர்களை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். ஒன்றிரண்டு இடங்களுக்குப் போய் வருவதில் தாமதமாகிவிட்டது என்ற மன்னிப்பு கோரலும் எங்கள் கை குலுக்கலுக்குள் கிடந்தது.

கடற்புலிகள் தங்கள் போர்ப் படகிலிருந்து நவீன பீரங்கிகளைச் சுட்டு எங்களுக்குக் காட்டுவதாக இருந்தது. இருட்டி விட்டதால் அதற்கான வாய்ப்பில்லை. ஆனால் கடல் இருட்டுக்குள்ளும் போர்ப் படகு பாய, செய்முறை நிகழ்த்திக் காட்டினார்கள். படார், படார் என்று வெடிச்சத்தம் தெறிக்க இருட்டைப் பிளந்தன அக்னிப் பொறிகள்.

இருட்டின் போர்வையைக் கீறிக் கொண்டு வெடிகள் பாய்ந்து செல்வதைக் கண்டோம். வெடிச் சத்தம் அடங்கியது. மறுபடி இருட்டு மூடிக்கொண்டது. எல்லாவற்றையும் செயல்பாட்டு ரீதியில் இனி காலையில் தான் காணமுடியும்.

காலையில் சாதாரணப் படகிலிருந்து போர்ப்படகுக்குத் தாவினோம். உண்மையில் தாவுதல்தான் அது. எச்சரிக்கையில்லாது போனால் முரட்டுத்தனமான அலைகளின் தூக்கிப் போடுதலில் படகுகளுக்கிடையே சிக்கி கால்கள் சப்பழிந்து போய்விடும்.

யுத்தப் படகை இயக்கி பீரங்கிகளை வெடிக்கிற கடற்புலிகள் அத்தனை பேரும் பெண் போராளிகள். படகில் ஏறிய பிறகே அதனைக் கண்டோம். விடிந்ததும் விடியாத காலைப் பொழுதிலேயே அவர்கள் எங்களை வரவேற்றார்கள். அவர்கள் முகத்தில் தூக்கக் கலக்கம் தென்படுகிறதா என்று பார்த்தேன். எந்தக் கலக்கமும் தென்படவில்லை. எப்போதும் விழித் திருப்பவர்கள் அவர்கள்.

இனவெறி எதிர்ப்பு யுத்தத்தை முன்னெடுப்பதில் ஆண், பெண் என்ற வேறுபாட்டை அவர்கள் அறுத்தெறிந்தார்கள்.

அதுபோல் தமிழ்பெயர்கள் சூடிக்கொள்வதிலும் பெண் போராளிகள் முன் நிற்கிறார்கள். தமிழினி, தமிழாள், கனலி, தமிழ்ச்செல்வி, முல்லை, தாமரை இவையெல்லாம் பெயர்கள். கடைசிக் காலாட்படை முதல் களப்போராளி வரை அவர்கள் தாம்.

கடலுக்குள் அலைகிற அவர்களின் கையில், கரையில் இருக்கிற தமிழர்களின் காலடி பத்திரமாக இருக்கிறது. கடல் நீலம் கருப்பாய்த் திரளுகிற இரவுகளில் எதிரியின் படைகளைக் கண்காணித்து ரோந்து வருகிறார்கள்.

அது அமைதிப் பேச்சுவார்த்தைக் காலம். ஆதலால் எதிரிக் கடற்படையுடன் யுத்தம் புரிவதுபோல் செய்முறை நிகழ்த்திக் காட்ட அவர்களுக்கு நேரமிருந்தது. இலங்கைக் கடற்படையைத் தாக்கி அழித்து கைப்பற்றப்பட்ட யுத்தக் கப்பல்கள் கடற்கரையிலிருந்து சில கிலோ மீட்டர் தூரத்தில் துருப்பிடித்துக் கிடந்தன. குறிதப்பாது சுடும் வல்லமைக்கு பயிற்சி நிலையங்களாய் அந்த இலங்கைக் கப்பல்கள்.

நாங்களும் அந்தக் கப்பலை நோக்கிச் சுட்டோம். அவ்வளவு நீள, அகல, உயர கப்பல்மேல் படாமல் அது எங்கேயோ போய் விழுந்தது.

அங்கிருந்து, இனவெறி அரசால் காயப்பட்டு பாதிக்கப்பட்ட பெண் போராளிகள் வசிக்கும் மாஞ்சோலை இடத்துக்குச் சென்றிருந்தோம். ஷெல்லடிகளால் இடுப்புக்குக் கீழே சிதைக்கப் பட்ட பெண் போராளிகள், சக்கர நாற்காலிகளில் கொண்டு வரப்பட்டனர்.

முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து புறப்பட்டு மாஞ்சோலையை வந்தடைந்து அரைமணி நேரத்துக்கு மேலாகியது. அரைமணி நேரம் மேலாகியும் அந்தப் போராளிப் பெண்கள் எவரும் வரவில்லை. நேரம் கடத்தல் போல், நகைச்சுவையாய் வெடித்து ஒரு பெண் போராளி மட்டும் பேசிக் கொண்டிருந்தார். எங்களை அழைத்துப்போன சேரலாதனை எடக்கு முடக்காய் பேசி திணற அடித்தார். பிறகுதான் எங்களுக்குப் புரிந்தது நேரக் கடத்தலின் மர்மம். நடக்க முடியாமல், அசையவும் முடியாமலிருந்த பெண்களை நீராட்டி, முகம் துடைத்து, தலைவாரி, உடை உடுத்தி, தயார்ப்படுத்தி எங்கள் முன்னே சக்கர நாற்காலிகளில் ஏந்தி வந்தார்கள்.

குண்டடி பட்டதில் கழுத்துக்கீழே இயக்கமோ, உணர்வோ இல்லாது போன தாமரை என்ற போராளியை படுத்த படுக்கையில் கட்டிலை உருட்டிக்கொண்டு வந்து காண்பித்தார்கள். கழுத்தை மட்டும் திருப்பி எங்களைப் பார்த்தார்.

புன்னகைத்தார். தலையசைக்காது எதிரே பார்க்க முடிந்தது. பார்க்கும் உயரத்தில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி.

சக்கர நாற்காலிகளில் ஏறக்குறைய முப்பது பேர்; சிலருக்கு குண்டுபட்டு ஒரு கண்சிதைவு, சிலர் முகம் கருகி, சிலர் முன்கை இல்லாமல்.

இவர்களை குழந்தையைப் போல் பராமரிக்கிறார்கள் சில பெண் போராளிகள். பெண் போராளிகளுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் கடற்புலிகளின் படகிலிருந்து நாங்களும் சுட்டதை நினைவுபடுத்தினோம். கவிஞர் இன்குலாப் சொன்னார்

"நாங்களும் சுட்டோம். அது எங்கேயோ போயிருச்சி..."

"எங்க இந்தியாவுக்கு போயிருச்சா?"

சட்டென்று பகடி அடித்தார் அந்தப் பெண் போராளி. அந்த நகைச்சுவையில் துள்ளிக் குதித்தோம். சரியான சந்தர்ப்பம் பார்த்து நகைச்சுவை விதைப்பது அவருடைய இயல்பாக இருந்தது. இன்னொரு பக்கம் - போர் நிலைகளில் போராளிகளாய், வாழ்வுப் பிரதேசங்களில் மனிதர்களாய் இயங்கமுடியாமல் முடங்கிக் கிடக்கும் சோகம் அதனுள் கிடந்தது.

எல்லோருடனும் சேர்ந்து நாங்கள் புகைப்படமெடுத்துக் கொண்டோம். அவர்கள் எல்லோரும் சக்கர நாற்காலிகளில்; நாங்கள் சொந்தக் கால்களில்; சக்கர நாற்காலிகள் உருட்டியபடி வந்தாலும் அவர்கள் வீரவேங்கைகள். சொந்தக் கால்களில் நின்றாலும் நாங்கள் முடமாகிப்போனது போல உணர்ந்தோம்.

ஆக்கிரமிப்பு யுத்தம் அவர்களை நடக்க முடியாதபடி செய்திருக்கலாம். அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

# கைப்பிடி அரிசி

போரில் ஈடுபட்டு கடமையாற்றுகையில் களத்தில் ஆயிரக் கணக்கில் மரித்தார்கள். களச் சாவுகள் தவிர, களத்தின் பின்னணி யிலிருந்த மக்கள் மடிந்தார்கள். இவ்வாறு இதுவரை இறந்தவர்கள் மொத்தம் 70,000 தமிழர்கள். இறந்தவர்கள் அல்ல, கொலை யுண்டவர்கள்.

சிங்கள இனவெறி தமிழ்ப் பிரதேச மக்களுக்குத் தாங்க முடியாத இம்சையாக இருக்கிறது. அதைத் தகர்க்கும் ஆவேசத்தில் ஒரு தாய் தன் மூன்று குழந்தைகளையும் ஆதரவற்ற பிஞ்சுகளைப் பராமரிக்கும் "செஞ்சோலையில்" விட்டுவிட்டு, விடுதலைப் போரில் வீரச்சாவு எய்தினார். அதேபோல் மூன்று குழந்தைகளின் தந்தையும் பிள்ளைகளைச் செஞ்சோலைக்கு அனுப்பிவிட்டு போராளிகளுடன் இணைந்தார்.

இவை கதைகளாக மட்டுமே எங்களுக்குள் நின்றன. காணவோ, நடைமுறைக்குக் கொண்டு செல்லவோ இயலாத புனைவுகளாகத் எங்களுக்குத் தென்பட்டன. இது மாதிரியான போராட்டமோ, அதற்கான வாழ்முறையோ அறியாத நிலையிலிருந்தோம் நாங்கள்.

யுத்த முனையில் போராளிகள் போராடிக் கொண்டிருக்கிற போது, அவர்களுடைய குடும்பங்கள் வாழ்வை முன்னடத்தும் ஆதாரம் நின்றுபோய் விடுகிறது. தமிழகமானாலும், ஈழமானாலும் தமிழ்ச் சமூக குடும்பக் கட்டமைப்பில் இது நின்று நிலவும் பலவீனம். ஆண் சம்பாதனையாளன். உழைத்தல், சம்பாதித்தல், குடும்பத்தைக் காத்தல் என்ற சாத்தியங்கள் ஆணுக்கு மட்டுமே

வரிக்கப்பட்டவை. குடும்பத்தில் பங்குபெறும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இயல்பான கடமையே இவை. இருந்தபோதும் பெண்கள் ஆணுடைய இடத்தில் இயங்க அனுமதிக்கப் படுகிறார்களில்லை.

அவனது ஒரு வருமானத்தை நம்பி குடும்ப உறுப்பினர்கள் அசைகிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு தொழில் செய்வது, பணியாற்றுவது என்ற புத்தமைப்பு இன்னும் முழுவீச்சில் உருவம் கொள்ளவில்லை. அடித்தளத்திலுள்ள குடும்பங்களில் மட்டும் பெரும்பாலும் எல்லோரும் உழைப்பது, எல்லோருக்கும் சம்பாதனை என்ற முறை உள்ளது. இது கீழ்நிலையிலுள்ள பொருளாதார அவசியத்தினாலே ஏற்பட்டது. கட்டாயத்தின் பேரில் அல்லாமல், ஆணாதிக்கக் கட்டமைப்புள்ள குடும்பம் இதை ஒருபோதும் அனுமதிக்காது.

போரிடுபவர்கள் போர் நிலைகளுக்கு நடக்கிறபோது, அந்தக் குடும்பங்கள் உயிர் வாழ்தலுக்காக காத்து நின்றன. ஒவ்வொரு வீட்டிலும், உலை ஏற்றுகிறபோது ஒரு கைப்பிடி அரிசியை தனியாக ஒரு பானையில் போடுகிறார்கள். ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு நாளும் சமைக்கிறபோது ஒரு கைப்பிடி அரிசி. எங்கோ ஒரு குடும்பம் அந்த அரிசிக்காக காத்து நிற்கிறது. பானை நிறைந்ததும், நிறைந்த பானையை போர் எழுச்சிக் குழுக்களிடம் கையளித்தார்கள். போர் எழுச்சிக் குழுக்கள், அந்த உணவு தேவைப்படுகிற குடும்பங்களிடம் கொண்டு சேர்த்தார்கள்.

காலம் மனித மாண்புகளைக் கொண்டு வருகிறது. மானுடத்தின் விழுமியங்களை மனிதனின் பைகளில் யுத்த காலமும் நிறைக்கிறது.

இருப்பவர், இல்லாதவருக்கு ஒன்று ஈதல் தர்ம குணமாகக் கருதப்பட்டது.

"உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்". - என்று போதனை செய்யப்பட்டது. அன்று சொத்துடமையைக் காக்க முடியாத நிலை, சேர்த்து வைத்தாலும் பணம் பறிபோகிற காலம்; திருட்டு, கொள்ளை நடக்கும் என்றிருந்த சமுதாயத்தில்

ஈயார் தேட்டை (செல்வம்)

தீயார் கொள்வார் - என்று நீதிநெறிகளால் நிறைந்திருந்தன.

அதை மதித்தும் ஆங்காங்கே சிலர் நடந்தார்கள். இன்று சொத்து சேர்க்கவும், பாதுகாக்கவும் வங்கி, நிதி மூலதனம் என்று பல வழிமுறைகள் கண்டறியப் பட்டுவிட்டன. உள்நாடு போதாது என்கிறபோது, வெளிநாட்டிலும் சொத்து சேர்ப்பது என்று அரசியல் தலைவர்கள், நடிகர், நடிகைகள் எனப் பலரும் இறங்கியுள்ளார்கள்.

இருப்பவர்க்கு இல்லாதவர் ஈதல் என்பது தர்மகர்த்தா முறை. காந்தி முன்னிலைப்படுத்திய தர்மகர்த்தா முறை அவர் காலத்திலேயே சமாதியடைந்து விட்டது. நிலவுடைமையாளர் நிலமில்லாதவருக்கு நிலமளித்தல் என்ற வினோபாவேயின் பூமிதான இயக்கமும் "செல்"லாகிவிட்டது. (செல் - ஆகிவிட்டார் என்பது நாட்டார் வழக்கு. காலமானார் என்பதைக் குறிப்பது).

தர்மத்தைப் போதித்தவர்கள் யாரும் அதன் வழிநடந்ததாக நடப்பு வரலாறு இல்லை. தர்மத்தை, எளிமைக் குணத்தைப் போதித்தி காந்தி, பிர்லா மாளிகையில் தங்க முடிந்ததே தவிர, பிர்லாவை தர்மவானாக மாற்ற முயலவில்லை. டாடா, பிர்லாக்கள், சிம்சன் குழுமங்கள், டி.வி.எஸ்.கள் தொழிலதிபர் களாகத் தான் தொடர்ந்தார்கள். அவ்வாறுதான் அவர்கள் தொடரமுடியும். மூல தன மறு ஆக்கத்தை அழிக்கும் தர்மத்தை அவர்களால் பேண முடியாது.

ஆயிரமாயிரம் ஏக்கர் நிலங்களை உடமையாகக் கொண்ட பண்ணையார்கள் கூட, வினோபாவின் பூமிதான இயக்கத்திற்கு நிலங்கள் தந்தார்கள். வளம் கொழிக்கிற வயல் நிலங்களை தங்கள் வசம் வைத்துக்கொண்டு பண்படுத்த முடியாத, பயன் பாட்டுககு உதவாத தரிசு நிலங்களைக் கை காட்டினார்கள். அதுவும் வினோபாவே பாதயாத்திரை வந்தபோது, சர்வோதயா நிலம் என்று கணக்கில் காட்டப்பட்டது, சர்வோதயா இயக்கம் அவைகளை மறுவிநியோகம் செய்யாதபோது, இயக்கம் தளர்நிசை அடைந்த போது, அந்தக் கணக்கும் வெட்டப்பட்டது. வினோபாவேயின் பூமிதான இயக்கம் வந்தபோது, பண்ணையார்கள், நிலவுடைமை யாளர்கள் "கள்ளக் கணக்கு" மட்டுமே எழுதினார்கள் என்பது நிரூபணமாகிவிட்டது. வடபாதிமங்கலங்கள், மூப்பனார்கள், வாண்டையார்கள், இவர்கள் போல பலரும் இன்னும் நிலப்பிரபுக்களாக நீடிக்கிறார்கள்.

மனித இனம் நெருக்கடிக்கு உள்ளாகையில் இயற்கையால் அல்லது ஆதிக்கப் போரால் அலைக்கழிக்கப் படுகையில், பாதிப்புக்குள்ளான மனிதர் கூட்டம் புதிய நெறிகளை உருவாக்குகிறது.

நாளை நிலைமை மாறுகிறபோது "கைப்பிடி" அரிசி நடைமுறை வேண்டப்படாது போகலாம். ஆனால் அந்த "மாண்பு" உருவாகிய தருணம் முக்கியமானது. குறிப்பிட்ட அல்லது வரையறுக்கப்பட்ட சில காலமே அந்த "மாண்பு" நிலவியிருந்தாலும், மானுட இனத்தின் "விழுமியமாக" குறிப்பேட்டில் பதியப்படும்.

# கொலை கொலையாய்...

மொத்த மொத்தமாய் எடுக்கப்பட்ட உயிர்ப்பலிக்கு இரண்டாம் உலகப்போர் ஒரு சாட்சி, அதன்பின் சில்லரை சில்லரையாய் உலக முழுவதும் கொடுக்கப்பட்ட காவுகளைக் கணக்கெடுகிறபோது அதைவிட அதிகம்;

வியட்நாமை ஆக்கிரமித்த அமெரிக்காவினால் கொல்லப் பட்டோர் 20 லட்சம்.

கொரியா, லாவோஸ், கம்போடியா நாடுகள்மீது அமெரிக்க போர் தொடுத்து அழிக்கப்பட்டவர்கள் பல லட்சம்.

நேரடிக் கொலைகள் மட்டுமல்ல, ஈராக் மீது பொருளாதாரத் தடை விதித்து உணவு, ஊட்டச்சத்து, மருந்துகள் தடையால் ஐந்து லட்சம் குழந்தைகளின் "தோன்றாக் கொலைகளையும்" அமெரிக்கா செய்தது.

எத்தியோபியா, சோமாலியா நாடுகளில் உள்நாட்டு யுத்தங்களைத் தூண்டி இரண்டாம் உலகப் போருக்குச் சமமாக பல லட்சம் மக்களைச் சாகடித்தனர்.

கொலைகாரப் பட்டியலில் 1949-ல் தன் பெயரைப் பதிவு செய்து கொள்கிறது இலங்கை. அந்த நாளிலிருந்து அதிகாரத்தை, தன்னின, தன் மத ஆதிக்கத்தை நிறுவ இன்னொரு இனத்தை கருவறுக்கும் வேலை செய்தது. இதுவரை சாகடிக்கப்பட்ட தமிழர்கள் 70 ஆயிரம், 1983 ஜுலை கலவரத்தில் கொல்லப் பட்டவர்கள் மட்டும் 5 ஆயிரம், விடுதலைத் தரிசனத்துக்கு நேரடிப் பலியாய் ஆன போராளிகள் 17,600.

கடற்கரை நகரான மன்னாரில் சிங்கள கடலோரக் காவல் படை கைது செய்து சிறப்புக் காவல்படை பிரிவுக்கு அழைத்துச்

செல்லப்படுகிறார்கள் விஜிகலா, சிவமணி என்ற இளம்பெண்கள். சிறப்புக் காவல்படை என்பது சித்திரவதைகளில் தனிப்பயிற்சி பெற்ற படை.

விஜிகலா - காவல் நிலையத்துக்குள் சிறப்புப் பயிற்சி பெற்ற இரு போலீஸ் அதிகாரிகளால் வன்புணர்ச்சி செய்யப்பட்டார். கைகள் கட்டப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, நிர்வாணமாக்கப் பட்ட சிவமணி வெளியே இருந்த போலீஸ் வேனில் வன்புணர்ச்சி செய்யப்படுகிறார். பாலியல் வன்முறைக்குப் பிறகு விஜிகலாவும், சிவமணியும் நிர்வாணமாக தலைகீழாகத் தொங்கவிடப் பட்டார்கள். தொங்க விடப்பட்ட அதே நிலையில் பிருஷ்டங்களில் முறுக்கிய கம்பிகளால், தடிமனான சாட்டையால் விளாசப் படுகிறார்கள்.

இலங்கையில் சிறப்புக் காவல்படை, இங்கே தமிழகத்தில் சிறப்பு அதிரடிப்படை. நக்சலைட் வேட்டை என்று 1978, 79 ஆம் ஆண்டுகளில் வேலூர், தருமபுரி, மாவட்டங்களிலும், வீரப்பன் தேடுதல் வேட்டை என்ற பெயரில் 1990 முதல் நேற்று வரை சத்தியமங்கலம் வனப்பகுதிகளிலும் சிறப்பு அதிரடிப்படை கொலைகள் நடத்தியது. 800 கோடி ரூபாய்களைத் தின்று கொழுத்தது. எந்தெந்த காரியங்களில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள் சிறப்பு அதிரடிப்படை என்பது வெளிப்படை.

வாழ்தலுக்கான, வாழ்வின் உரிமைகளுக்கான கிளர்ச்சி செய்தல் மக்களுக்குத் தேசபக்தி. அதை அடக்கி ஒடுக்குவது இராணுவத்துக்கு, போலீஸுக்கு தேசபக்தி. இதுதான் அதன் ஒழுக்க நியதிகள். அயல்நாட்டுப் படைகளுடன் நேருக்கு நேரான போர் என்பது அருகிவிட்டது. காலனியாதிக்கத் திமிரிலிருந்து இன்னும் விடுபடாத அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளே பிற நாடுகள் மீது நேரடியாகப் பாய்கின்ற வேலையைச் செய்கின்றன. இந்தியா தனது வல்லரசு ஆசையைத் தீர்த்துக் கொள்ள ஈழத்துக்குள் நுழைந்தது, இருந்த முகமும் பாழ்பட்டுத் திரும்பியது.

ஒவ்வொரு தேச இராணுவத்துக்கும் சொந்த நாட்டு மக்களின் உரிமைப் போராட்டங்களை அடக்குவது பிரதான வேலை.

தொலைந்து போதல் அல்லது காணாமல் போதல் இலங்கை அரசின் நவீன குற்றவியல் சட்டப்படி குற்றமல்ல, இது வரையிலான எந்தத் தீர்ப்பும் காணாமல் போனதற்குக் காரணமானவர்கள் இவர்கள்தான் என்று நிரூபிக்கப்பட்ட வழக்குகளில் கூட தண்டனை தரவில்லை. இலங்கை குற்றவியல் சட்டப்படி தண்டனை தரமுடியாது. தவறிழைத்தவர்களை தண்டிக்க கூடாத பல சட்டங்களை இலங்கை இராணுவ ஆட்சி தனக்குச் சாதகமாக இயற்றிக் கொண்டது.

காணாமல் போனவர்கள் என்ற பட்டியலில் உலகின் இராண்டாவது இடத்தைப் பிடித்து இலங்கை சாதனை படைத்தது.

★★★

உலகமெலாம் தூங்கிக் கொண்டிருக்கிற இரவில், தூங்காத அன்னையர் இதயங்கள் செம்மணிப் புதைகுழி மேலாக அலைந்தன. மண்ணுக்குள் மக்கிவிட்ட பிள்ளைகளின் இதயத் துடிப்பை அவர்கள் கேட்டார்கள். அவர்கள் காதுகள் கர்ப்பப் பைக்குள் இருந்தன. செம்மணிப் புதைகுழிகளுக்குள்ளிலிருந்து பிள்ளைகளின் "அம்மா, அம்மா" என்ற அழைப்புக் குரல் கர்ப்பப்பையைத் தட்டியது. அன்னையர் விம்மியழும் குரல் காற்றில் நீந்தி காற்றிலேயே கரைந்து போனது.

யாழ்ப்பாணத்திலிருந்து கைதடி சாலையில் உள்ளது செம்மணி மயானம். ஓமக்காலை என்ற ஊர். அவ்வூருக்கு உரித்தான செம்மணி மயானம். மயானக் கரையில் ஓங்கிய அரிவாளுடன், உருட்டு விழிகளுடன் படமெடுத்தாடும் வைரவசாமி.

"ஓமக்காலை வைரவசாமியின் அருள்
யாவர்க்கும் கிடைக்கட்டும்"

அவர் அடைபட்டிருக்கிற இரும்புவேலிக் கதவில் தொங்குகிறது இந்த வாசகம்.

ஓமக்காலை வைரவசாமியின் அருள் இறந்தவருக்கா, இருப்பவருக்கா? செம்மணிப் புதைகுழிக்குள்ளே அழுத்திப் புதையுண்ட வருக்கா? செம்மண்ணியில் அவர்களைக் கொன்று புதைத்துவிட்டு, மேலே உலவுகிறவர்களுக்கா?

யாவருக்கும் என்று சொல்கிறது வாசகம்.

நாங்கள் அந்த இடத்துக்குப் போயிருந்த போது மழைமேக் நிழல் படிந்த காலை நேரம். 1996- ஆம் ஆண்டு அது போலவொரு மந்தமான மாலை நேரத்தில் பள்ளியிலிருந்து சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள் கிருஷாந்தி.

கிருஷாந்தி சுண்டக்குழி உயர்நிலைப்பள்ளியில் பயிலும் பதினெட்டு வயது மாணவி. இராணுவ சோதனைச் சாவடியில் கிருஷாந்தி வழிமறிக்கப்பட்டாள். சைக்கிளை உதறிவிட்டு தப்ப முயன்ற கிருஷாந்தியை அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு இழுத்துப் போனார்கள். இராஜபக்ஷே என்ற இராணுவ கார்ப்பரல் உட்பட பதினோரு பேர் பாலியல் வன்புணர்ச்சி செய்தார்கள். குத்துயிரும் குலைஉயிருமாய் ஆக்கப்பட்ட கிருஷாந்தியை அருகிலுள்ள செம்மணி மயானத்தில் புதைத்தார்கள்.

கிருஷாந்தி இராணுவச் சிப்பாய்களால் வழிமறித்து இழுத்துச் செல்லப்பட்டதை கண்ட ஒருவர் அவளுடைய வீட்டில் போய்த் தெரிவிக்கிறார். குலை பதறிப்போன தாய் இராசம்மா, சகோதரன் பிரவான், பக்கத்து வீட்டுக்காரர் கிருபாமூர்த்தி ஆகியோர் உடனே இராணுவ முகாமுக்கு ஓடுகிறார்கள். இராணுவம் அப்படியொரு பெண்ணை நாங்கள் பார்த்ததில்லை எனக் கைவிரிக்கிறது.

அக்கம் பக்கத்திலுள்ளோர், ஊரிலுள்ள பெரியவர்கள் ஒன்றாயத் திரண்டு கேட்கிறபோது எங்களுக்குத் தெரியாது என்றான் இராக பக்ஷே என்ற சிங்கள "கார்ப்போரல்".

கேட்டுக் கேட்டு சலித்துப்போன ஊரார் கவலையோடு திரும்புகிறார்கள். தாய், சகோதரன், பக்கத்து வீட்டுக்காரர் இராணுவ முகாமுக்கு வெளியே கிடக்கிறார்கள் கண்ணீரோடு, கதறலோடு, புலம்பலோடு.

அந்தி சாயும் பொழுதில் தொடங்கிய துன்பியல் நிகழ்ச்சி இரவிலும் தொடர்கிறது. மூவரும் வெளியே காத்துக் கிடக்கிற போது துடிக்கத் துடிக்க வன்புணர்ச்சி செய்யப்பட்ட கிருஷாந்தி நினைவிழந்தவளாய் உள்ளே கிடக்கிறாள். அவளை வெளியே விட்டால் வினை வந்துவிடும் என்று கொன்று போடுகிறார்கள்.

உள்ளே கிருஷாந்தி பிணமாக, வெளியே பெற்றோர் நடை பிணமாக. மகளைப் பெறாமல் நாங்கள் போகமாட்டோம் என்று

ஆக்ரோஷம் கொண்டு அங்கேயே கிடந்த மூவரையும் கொன்று செம்மணி வெளியில் புதைக்கிறார்கள்.

எப்போதாவது விழிக்கின்றன உலகத்தின் காதுகள்.

கிருஷாந்தி பாலியல் வன்முறை, உயிர்பறிப்பு, மூன்று கொலைகள் எப்போதும் தூங்கிக்கொண்டே இருக்கின்ற உலகத்தின் காதுகளை சிறிதே அதிர வைக்கின்றன. இராணுவத்தின் மொழியில் அவர்கள் "காணாமல் போனவர்கள்". பல வாரங்கள் பின் சதசதத்த புதர்களுக்கு இடையே அவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. கிருஷாந்தியின் உடல் அடையாளம் தெரியாமல் சிதைந்திருந்தது. இலங்கை அரசின் ஆணைப்படி நான்கு உடல்களும் தலைநகர் கொழும்புக்கு விமானத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. இரண்டு மணி நேரத்திற்குள் உடல்களை எரித்து விடும்படி கிருஷாந்தியின் உறவினர்களுக்கு கட்டளையிடப்பட்டது. கிருஷாந்தியின் இந்த வழக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரச்சனைக்குரிய ஒன்றாய் ஆகியது. இராஜ பக்ஷே உட்பட ஐந்து இலங்கை இராணுவத்தினர், ஒரு போலீஸ்காரன், மரண தண்டனை விதிக்கப் பட்டார்கள். மூன்று பேருக்கு இருபதாண்டு சிறைத்தண்டை, ஐம்பதாயிரம் அபராதம். மற்ற இருவர் விடுதலை.

1996 முதல் 1998 வரை நீடித்த வழக்கின் தீர்ப்பை மனித உரிமை கொண்ட உலகின் துடிப்பு விரைவுபடுத்தியது.

மரண தண்டனை வழங்கப்பட்டவுடன் இராணுவ கார்ப்போரல் இராஜ பக்ஷே தான் கொலை செய்ததாகக் கூறப்படுவதை மறுத்தான். விசாரணை முடிவில் அவன் நீதிமன்றத்தின் முன் பேசினான்.

"நான் கொலை செய்தேன் என்பது உண்மையல்ல. குற்றச் சாட்டை மறுக்கிறேன். இராணுவத்தின் மேல்நிலை அதிகாரிகள் உத்தரவுப்படி கொலை செய்யப்பட்டவர்களின் உடல்களை புதைக்கிற வேலையை மட்டுமே நாங்கள் செய்தோம். நீதிமன்றம் அனுமதிக்குமானால் செம்மணியில் நானூறு உடல்கள் புதைக்கப் பட்ட இடங்களைக் காட்டமுடியும்"

உனக்கு ஏன் மரணதண்டனை வழங்கக் கூடாது என்று நீதிபதி கேட்டபோது இராணுவச் சிப்பாய்களில் ஒருவனான கார்ப்போரல் சோமரத்தின சொன்னான்.

"நாங்கள் யாரையும் கொல்லவில்லை. கொன்று அனுப்பப் பட்ட உடல்களை புதைக்கவே செய்தோம். முன்னூறு முதல் நானூறு பேர் புதைக்கப்பட்ட இடங்களை என்னால் அடையாளம் காட்ட முடியும்".

"ஓமக்காலை வைரவசாமியின் அருள்
யாவர்க்கும் கிடைக்கட்டும்"

செம்மணி மயானக் கோயிலின் இரும்பு கேட்டில் தொங்குகிறது வாசகம்.

தூக்கிய கையில் வெட்டரிவாள், கோபம் தெறிக்கும் சிவந்த கண்கள்.

வைரவசாமியின் எதிரில் கிருஷாந்தி பாலியல் பலாத்காரமும் மரணமும்.

வைரவசாமியின் பின்புறத்தில் விரிந்து பரந்து கிடக்கும் ஆயிரம் இளைஞர்களைத் தின்ற செம்மணி.

ஓமக்காலை வைரவசாமியின் அருள் யாவர்க்கும் கிட்டட்டும்.

## செம்மணிப் புதைகுழிகள்

### குற்ற சம்மதம்

தென்னங்கீற்றில் நிலா தொத்திக் கொண்டிருந்தது. செம்மணி மண்ணை உற்றுப் பார்த்தது. மண்ணுக்குள் புதைப்பட்ட சோகத்தை வாசிக்க முயன்றது. மனித எழுத்துக்கள் பூமிக்கு மேல் விரித்து வைக்கப்படாதவையாய் உள்ளே கிடந்தன.

மண்ணை ஊடுருவும் ஆழமான பார்வை கொண்டு வாசிக்கவும், வாசித்ததைச் சொல்லவும் திறனற்ற ஊமை நிலா.

கிருஷாந்தியும், அவளது பெற்றோர்களும் கொல்லப்பட்ட நாளின் இரவு இந்த நிலா வந்து போயிருக்க வேண்டும்.

நிலவும் சூரியனும் விண்மீன்களும் செம்மணி மரணக் குழிகளுக்கு சாட்சியாக நடந்தார்கள். 1995-லிருந்து 1998 வரை அவர்கள் இந்த வயல்வெளிகள், புதர்கள், வனத்துக்கு மேலாக வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அக்டோபர் 1995- ல் ஒரு நாள் யாழ்ப்பாணம் சூனியமாகியது. அரக்கர்களின் "சூரியக்கதிர்" படையெடுப்பு நடவடிக்கையை எதிர்த்து, நொம்பலம் மிகக் கொண்டு யாழ்நகரத்தை காலி செய்து மக்கள் வெளியேறினார்கள். அது "மகா குடிபெயர்வு" எனப் பட்டது. யாழ் கண்டி சாலை வழியாக வன்னிக்கு நடந்தார்கள்.

பக்கத்து மாவட்டங்கள், கிராமங்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று குடிபெயர்வுக்கு ஆளான மக்கள் அண்டி ஒட்டிக் கொண்டார்கள். ஆக்கிரமிப்பு யுத்தத்தின்போது இந்த வேற்றுமை அழிந்து, எல்லோரும் ஓர் இரத்தம் என்ற சகோதரத்துவம் பிறப்பெடுத்து விடுகிறது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய இராணுவம் மறுவாழ்வு தருகிறோம் எனக் கூப்பிட்டது. பாதி ஆசை, பாதிக் கட்டாயம்,

போரின் பாதிப்புகளால் களைப்புற்றிருந்த மக்களில் பலர் வாழ்வுக்காக யாழ்நகரம் மீண்டபோது, நகரின் மூச்சுக்காற்றே இராணுவச் சீருடைகளின் இடுக்குகள் வழியாக ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டார்கள்.

மீண்டவர்கள் வேறு ஏதொன்றும் கேட்கவில்லை. அவர்களுக்கு ஏற்கனவே கிடைத்துக் கொண்டிருந்த உணவு, அவர்கள் வசித்த இருப்பிடம் இவை மட்டுமே கேட்டார்கள். அவர்களுடைய வசிப்பிடங்கள், பொது இடங்கள் எல்லாமும் இராணுவத்தின் தங்கும் நிலையங்கள், சோதனைச் சாவடிகள், சித்திரவதை முகாம்கள் என மாறியிருந்தன. திரும்பி வந்த சில மக்கள்.

"என்ன காலம் இது
நாம் நமது வாசலில்
அமர்ந்து கொண்டே
நமது வீடு எங்கேயென்று
தேடிக் கொண்டிருக்கிறோம்"

*(மஞ்சித்திவானா- பஞ்சாபி)*

என்று அலைந்து அலமந்து போனார்கள்.

உணவுக்காய் கை நீட்டினார்கள். இருப்பிடத்துக்காய் இறைஞ்சினார்கள். கெஞ்சிய முகம் கேள்விகளால் நிமிர்ந்தது. குடிபெயர்வுக்குள்ளான மக்களை மறுபடி வரவழைத்ததே - அவர்களுக்குள் புலிகளும், அவர்களே புலிகளாகவும் இருப்பார்கள் என்ற தேடுதல் வேட்டையை மையப்படுத்தவே எனப் புரிந்துகொண்ட வேளையில், இராணுவம் நடத்திய வேட்டையிலிருந்து மீளமுடியாது எனக் கண்டார்கள்.

கொல்லப்பட்டவர்கள், காணாமல் போனவர்கள் ஆனார்கள். ஆம், மரணிப்பவர்கள் காணாமல்தான் போவார்கள்.

காணாமல் போனவர்களின் பட்டியல் நாளும் நாளும் நீண்டு கொண்டே போனது. மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவ கார்ப்பொரல் ராஜபக்ஷே தான் குற்றவாளி அல்ல என்று மறுப்பதற்காக உண்மை பேசினான்.

"ஒரு நாள் ஒரு மண்வெட்டி கொண்டு வரும்படி கேப்டன் லலித்கவா உத்தரவிட்டார். நான் மண் வெட்டியை எடுத்துச்

சென்றபோது ஆடையின்றி நிர்வாணமாக ஒரு பெண் அவரோடு இருந்ததைக் கண்டேன். அன்று காலையில் இந்தப் பெண்ணும், அவளுடைய கணவனும் முகாமுக்குக் கொண்டு வரப்பட்டார்கள். அந்தப் பெண் லலித்கவாவால் பாலியல் வன்முறை செய்யப் பட்டாள். காரியம் முடிந்ததும் அந்தப் பெண்ணையும், அவளுடைய கணவனையும் மண்வெட்டியால் அடித்துக் கொன்றார். உடல்களை லலித்கவா புதைக்க முயன்றார். அவரால் முடியவில்லை. பின்னர் உடல்கள் செம்மணிக்குக் கொண்டு வரப்பட்டு புதைக்கப்பட்ட உடல்களை என்னால் காட்ட முடியும்".

மாணவி கிருஷாந்தி கொலையில் மரணதண்டனை விதிக்கப்பட்ட இன்னொரு கைதி டி.எம். ஜெயதிலகே "அப்பாவி மக்களின் உடல்கள் புதைக்கப்பட்ட பல இடங்களைக் காட்ட முடியும்" என்றான். நெடுங்குளம், யாழ்ப்பாண அஞ்சல் நிலைய சந்திப்பு, புதுக்காடு பிள்ளையார் கோயில் ஆகிய இடங்களில் மூன்று கிணறுகளில் உடல்கள் புதைக்கப்பட்டன. பிறகு புல்டோசர்களால் கிணறுகள் மூடப்பட்டன.

"சிலர் அடித்தே கொல்லப்பட்டார்கள். சில இடங்களில் குடும்பம் முழுவதுமே கொல்லப்பட்டது. இராணுவ முகாம்கள், கொலை முகாம்களாக மாறியது. நான் ஜுலை 1998 ல் உயர்நீதி மன்றத்தில் உண்மையை வெளிப்படுத்தியபின் புதைகுழிகளை சீர்குலைக்கும் முயற்சியில் இராணுவம் ஈடுபட்டது என்று எனக்குத் தெரிய வந்தது" என்றான் இராஜபக்ஷே.

1998 ஜுலையில் இராஜ பக்சே உயர்நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் உடனடியாக அரசு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. சந்திரிகா அரசாங்கத்திற்கு பெயர் மக்கள் கூட்டணி ஆட்சி. ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு காரணம் கூறி இந்த விசாரணையை மக்கள் கூட்டணி அரசு தள்ளிக்கொண்டே போனது. மூன்று நீதிபதிகளை மாற்றி மாற்றி நியமித்தது. இராணுவத்தின் சதித் திட்டங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மூன்று நீதிபதிகளும் இந்தப் பொறுப்பை ஏற்க ஒருவர்பின் ஒருவராக மறுத்துவிட்டார்கள். "காரணம் வெளி அழுத்தம்" என்றார்கள். இப்போது நேரடியாக இராணுவத்தின் கீழ் குழிகளைத் தோண்டும் பணியைப் பார்வையிட ஒரு நீதிபதியைக் கொண்டு வந்தார்கள்.

புதைகுழிகள் பற்றிய உண்மையை இராஜ பக்சே நீதி மன்றத்தில் வெளிப்படுத்திய நாள் ஜுலை 1998. புதைகுழிகளை அகழ்ந்து கண்டறிய ஆரம்பித்த நாள் 1999 ஜுன் 16. இடையில் முழுசாக ஓராண்டு உருண்டது. பரந்த வயல்கள் மயான அமைதியால் கனத்திருந்தது.

**ஜுலை - 3 1998**

மாணவி கிருஷாந்தியை கடத்தி, பாலியல் வன்முறை செய்தது, கொலை செய்தது என்ற வழக்கில் 5 இலங்கை இராணுவத்தினர், ஒரு போலீஸ்காரனுக்கு மரண தண்டனை. மூன்று இராணுவத்தினருக்கு மூன்றாண்டு கடுங்காவல் தண்டனை, ஐம்பதாயிரம் ரூபாய் அபராதம், இருவருக்கு விடுதலை.

**ஜுலை - 5, 1998**

செப்டம்பர் 1996 -ல் நடத்திய குற்றத்திற்கு இலங்கை இராணுவத்தினருக்கு அளிக்கப்பட்ட தண்டனையை வரவேற்ற உலக மனித உரிமைக் கண்காணிப்பகம், இராணுவமும், போலீசும் நினைத்தால் எத்தகைய மனித உரிமை மீறலும் நடத்தலாம் என்ற மனோபாவத்திற்கு இது ஒரு பயங்கரமான அடி என்றது.

"பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களுக்கு மனித உரிமை மீறலுக்காக தண்டனை அளிக்கப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவை".

லண்டனில் உள்ள மனித உரிமை கண்காணிப்பகம் வரவேற்றது.

"காணாமல் போதல் என்ற பெயரில் நடத்தப்படும் படு கொலைக்கு முற்றுப்புள்ளி வைக்கிற முன்னடி வைப்பு இது. கடந்த இரு ஆண்டுகளாய் அகில உலகமும் இலங்கை அரசுக்குக் கொடுத்த நெருக்கடி இந்த தீர்ப்பு எழுதக் காரணமாயிற்று.

லண்டனிலிருந்து இயங்கும் தமிழ்த் தகவல் மையம் அறிக்கை;

"கடத்துதல், காணமாமல் போதல், கொலை செய்தல் என்பதிலிருந்து சாதாரணமாய்த் தப்பித்துக் கொண்டிருந்தார்கள் இலங்கை இராணுவத்தினர். இந்தத் தீர்ப்பு அதற்கு ஒரு தடுப்புச் சுவர் என்று நாங்கள் கருதுகிறோம்".

*ஜுலை - 8, 1998*

"குவியல் குவியலாய் புதை குழிகள். செம்மணியில் மட்டும் இல்லை. யாழ்ப்பாணத்தை சுற்றியுள்ள வட்டாரங்களில் எங்கெங்கும் புதைகுழிகள் இருக்கின்றன. இவைகளும் கண்டறியப்பட வேண்டும்".

இலங்கை மனித உரிமை அமைப்பு உரத்துக் கூவியது.

*ஜுலை - 11, 1998*

1987 முதல் 1990 வரை ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இருந்தபோது தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற பெயரில் தெற்கு இலங்கையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரக்கணக்கில் புதை குழிகள். ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் கடைசி நாட்கள் அவை. தெற்கு இலங்கையில் ஒரு புதைகுழிக் குவியல் கண்டு பிடிக்கப்பட்ட இடம் எம்பிலிப் பட்டியா. அப்போது எதிர்கட்சியிலிருந்தவர் இப்போதைய அதிபர் சந்திரிகா. இதை மிகப்பெரிய மனித உரிமை மீறல் பிரச்சினையாக எழுப்பினார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சியை இன்னும் வேகப்படுத்தும் அரசியல் ஆயுதமாக இது கையாளப்பட்டது. அதே சந்திரிகா இன்று இலங்கை அதிபராய் புதைகுழிக் குவியல்களுக்குக் காரணமான இராணுவ அதிகாரிகளை பாதுகாக்கிறவராக மாறுகிறார். அவரும் இராணுவமும் வேறு வேறல்ல என்பது உறுதியானது.

"தமிழர் வாழும் பகுதிகளில் 1995ல் இலங்கை இராணுவம் தலையெடுத்த பிறகு நிகழ்ந்த படுகொலைகளுக்கு மட்டுமே சந்தரிகா ஒரு கண் துடைப்பு விசாரணைக் கமிஷன் அமைக்கிறார். 1979 முதல் 1994 வரை பதினொன்றாயிரம் தமிழர்கள் காணாமல் போயிருக்கிறார்கள். அவர்களைப் பற்றியும் விசாரணை நடத்தப்பட வேண்டும்".

மட்டக்களப்பு தமிழர் விடுதலை ஐக்கிய முன்னணி அறிக்கை வெளியிட்டது.

*ஜுலை - 13, 1998*

யுக்தியா சிங்கள வார இதழ்

"இலங்கை இராணுவம் யாழ்குடா நாட்டை கைப்பற்றிய போதிருந்து 1995 முதல் 1998 வரையிலான மூன்றாண்டுகள்

யாழ்ப்பாணத்தை சுற்றியுள்ள வட்டாரம், செம்மணி வயல் நிலங்கள் புதிய மயானங்களாய் உருவாகின. யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணம் போகிறபோது மூன்று கிலோ மீட்டர் தொலைவில் யாழ்நகரம் வரவேற்கிறது என்றொரு வரவேற்பு வளைவு. வரவேற்வு வளைவுக்கும் நாவற்குழி பாலத்திற்கும் இடையே இராணுவச் சோனை சாவடிகள். இராணுவ சோதனைச் சாவடிக் கட்டிடங்கள் தவிர அக்கம் பக்கம் வேறெந்த கட்டிடங்களும் தென்படவில்லை. "சூரியக்கதிர் தாக்குதல்" நடத்தப்பட்ட பிறகு ஒவ்வொரு நாளும் கொல்லப்பட்ட உடல்கள் செம்மணி இராணுவ சோதனை சாவடிகளுக்கு அனுப்பப்பட்டன. புதைத்து விடுமாறு அங்குள்ளவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. உயிரோடு இருந்த சிறைக் கைதிகளும் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டார்கள்".

யுக்தியா சிங்கள வார இதழ் செம்மணி பிரதேசத்தை மட்டுமல்ல, புதைகுழிக் குவியல்கள் உள்ள வேறு இரு இடங்களையும் கண்டறிந்து வரைபடங்களை வெளியிட்டது. அதே நேரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த இராணுவ அதிகாரிகளின் நேரடிக் கட்டளையின்றி இந்தப் படுகொலை நடந்திருக்காது. விசாரணை நடத்தப்படுமானால் இலங்கை அரசின் உண்மையான பிம்பம் வெளியே விழும் என்று அந்த இதழ் தலையங்கம் தெரிவித்தது.

*ஜூலை - 31, 1998*

புதைகுழிகளைத் தோண்டி எடுக்க வெளிநாடுகளிலிருந்து மருத்துவ வல்லுநர்கள் தருவிக்கப்பட வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மனித உரிமை ஆணையம் மேற்கொள்ள வேண்டும் என தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர் சிவசிதம்பரம் கேட்டுக் கொண்டார்.

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சகம் குற்றப் புலனாய்வுத் துறையை புதைகுழிகளை ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொண்டு கேலிக்கூத்து போல ஓர் அறிக்கையையும் வெளியிட்டது. குற்றவாளிகளைத் தண்டிக்கும் சட்டபூர்வ நடைமுறைகளை மேற்கொள்ளவும், மனித உயிர்களைக் காக்கும் கடமையை முழுமையாகச் செய்யவும் இலங்கை அரசு கடமைப்பட்டுள்ளது

என்று அறிக்கை தந்தது. அதன் தொடர்ச்சியாக இலங்கை இராணுவம் புதைகுழிகளை சேதாரப்படுத்தும் முயற்சியை மேற்கொள்ளாது என்றது.

ஆனால் மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசை எச்சரித்தது.

"புதைகுழிகளுள்ள நிலவியல் அமைப்பை உருத்தெரியாமல் ஆக்க சில சுயநல சக்திகள் முயற்சி செய்கின்றன. புதை குழிகளின் நிலப்பகுதி எந்தச் சேதாரமும் இல்லாமல் பாதுகாக்கப்பட வேண்டும்".

மனித உரிமைகள் ஆணையம் வெளிப்படையாகப் பெயர் சுட்டிச் சொல்ல அஞ்சியது. சுயமாகச் செயல்பட வேண்டிய சூழலில் அது ஒரு சுயமான அமைப்பு அல்ல, அரசு அமைத்த அமைப்பு - பாதித்துணிவுடன் பயந்தாங்கொள்ளியாக செயல்படும் என்பதை வெளிப்படுத்தியது. உலகத்திலுள்ள மனித உரிமை ஆர்வலர்களின் நிர்ப்பந்தத்துக்காக ஒவ்வொரு நாட்டிலும் இவ்வாறு அரசுகளால் உருவாக்கப்படுகின்றன மனித உரிமை ஆணையங்கள்.

***ஆகஸ்ட் - 3, 1998***

மூன்று நாட்களுக்குள் செம்மணி வழியாகச் செல்லும் கைதடி - நல்லூர் சாலை மூடப்பட்டது. சாலையின் இரு முனைகளிலும் நடுவிலும் புதிய இராணுவ சோதனைச் சாவடிகள் முளைத்தன.

"இலங்கை இராணுவம் செம்மணி செல்லும் கைதடி - நல்லூர் சாலையை மூடியது ஏன்? மக்கள் நடமாட்டத்தைத் தடை செய்தது எதற்காக? எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் மூடிய சாலையைத் திறக்க வேண்டும்" - என யாழ்ப்பாண மக்கள் சக்தியின் முன்னணித் தலைவரும், யாழ்நகர முன்னாள் ஆணையருமான சி.வி.கே. சிவஞானம் கேள்வி எழுப்பினார். இது யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஐயத்தைக் கிளப்பியுள்ளது என்றார். காணாமல் போனவர்களின் - பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக நிவாரணத் தொகை ஒதுக்கீடு 36% குறைக்கப்பட்டது ஏன் என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

***ஆகஸ்ட் - 3, 1998***

*மனித உரிமைகள் கண்காணிப்பகம், லண்டன்,*

*"குற்றப் புலனாய்வுத் துறையும், மனித உரிமைகள் ஆணையமும் இணைந்து புதைகுழிகள் கண்டறிதல், தோண்டுதல் பணியை மேற்கொள்ளவேண்டும். வெளிநாடுகளிலுள்ள மருத்துவப் புலனாய்வு வல்லுநர்கள் இந்தப் பணிக்காக வர வழைக்கப்பட வேண்டும். குற்றப்புலனாய்வுத் துறையும், மனித உரிமைகள் ஆணையமும் களத்தில் மேற்கொள்ளும் எந்தவொரு ஆய்வும் நடுநிலையாக, சுதந்திரமாக, களத்தில் கிடைத்த சிறு சாட்சியமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதாக அமைய வேண்டும். கிணறுகளில், கழிவுக் கால்வாய்களில், ஓடைகளில் ஒன்றன்மேல் ஒன்றாக வீசி சேதாரம் ஆகாதபடி தோண்டி எடுக்க கவனம் கொள்ள வேண்டும். இதற்கு வெளி நாட்டிலுள்ள வல்லுநர்கள் துணைபுரிவார்கள்"*

***ஆகஸ்ட் - 4, 1998***

*மனித உரிமைகள் பன்னாட்டு அமைப்பு*

*"புதைகுழிகள் உள்ள இடம் எந்த வகையாலும் சீர்குலைக்கப்படக்கூடாது. ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிநாட்டு மருத்துவப் புலனாய்வு வல்லுநர்கள் துணையோடு ஒவ்வொரு அடியும் கவனமாக எடுத்து வைக்கப்பட வேண்டும்".*

***ஆகஸ்ட் - 17, 1998***

*காணாமல் போனவர்களின் பெற்றோர்கள் அமைப்பு, 1995-ல் யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றிய போதே "காணாமல் போதல்" ஒரு தொடர்கதையாக ஆனதால் உருவாகியது இந்த அமைப்பு. பத்தாயிரம் கையெழுத்துகள் சேகரித்து புதைகுழிகள் அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசுக்கு அனுப்பியது.*

***செப்டம்பர் - 25, 1998***

*இலங்கை அரசால் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணையத்தின் அலுவலகத்தை யாழ்ப்பாணத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் முற்றுகையிட்டார்கள். புதைகுழிகள் தோண்டப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.*

புதைகுழிகளை தோண்ட முயற்சி செய்வோம், புதைகுழிகளைத் தோண்டும் பணி தொடங்கும் நாள் அறிவிக்கப்படும் என்று இராணுவத்தின் பாதுகாப்பில் நடக்கிற அரசாங்கம் அறிவித்தது.

*செப்டம்பர் - 27, 1998*

இலங்கை அரசால் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணையம் அடுத்த வாரம் கொழும்பிலிருந்து நகர்ந்து செம்மணிக்கு வருவோம் என்றது. இது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் காரணமாக நடந்தது.

*ஜுலை - 24, 1998*

வெளிக்கடை சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மரண தண்டனைக் கைதி இராஜ பக்சே விசாரிக்கப்படுவான், அவனுடைய வாக்குமூலத்தில் புலனாய்வுக்கான மேல் தரவுகள் இருக்குமானால், அட்டர்னி ஜெனரலுடன் கலந்து உரையாடுவோம் என்று அறிவித்தது மனித உரிமை ஆணையம்.

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் சிறப்புத் தூதுவராக ஏப்ரலில் இலங்கை வந்த பில் ரிச்சர்டுசன், சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி ஆட்சியில் மனித உரிமைகள் நன்கு பேணப்படுகின்றன, அரசின் மனிதஉரிமை நடவடிக்கைகள் பாராட்டத்தக்கன என்றார்.

சந்திரிகாவின் மக்கள் கூட்டணி ஆட்சியில் தமிழ்ச் சிறுபான்மையினர் கணக்கற்ற அடக்குமுறைகளுக்கு ஆளாகினர். தாங்கமுடியாத வறுமை, எண்ணற்ற இளைஞர்களின் கொலை, வேலையில்லாத் திண்டாட்டம், தமிழ் மக்களை நெருக்கடிக்கு உள்ளாக்கி சிங்களச் சுரண்டும் வர்க்கம் இனப்போரை முன்னெடுக்க வைத்தது என்ற உண்மைகள் அமெரிக்காவின் பில் ரிச்சர்டுகனை பார்த்துச் சிரித்தன. கேலிச் சிரிப்போ, பகடியோ, வஞ்சப் புகழ்ச்சியோ, வசவுகளோ என்னை எதுவும் செய்யப் போவதில்லையென்று எல்லாவற்றையும் உதிர்த்து விட்ட அமெரிக்கா சிரித்தபடி திண்டு போல உட்கார்ந்திருந்தது.

*அக்டோபர் - 7, 1998 - தமிழ்நாடு*

யாழ்ப்பாண வட்டாரத்தில் நடைபெற்ற கொலைக் குவியல் எதிர்ப்பு இந்தியப் பிரதேசத்திலும் முகம் காட்டியது. ஆயிரக்

கணக்கான தமிழர்கள் தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். கடலோரத் தென்மாவட்டங்களில் ஆயிரக்கணக்கானவர்களின் போராட்டம் நடைபெற்றது. இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்காவின் உருவ பொம்மை எரிக்கப்பட்டது. ஐம்பதுக்கும் மேற்பட்ட அமைப்புகளும், அவைகளின் தலைவர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் எழுச்சியை அவர்கள் வாழ்த்தி வரவேற்றார்கள்.

**அக்டோபர் - 21, 1998 - நியூசிலாந்து**

இலங்கை இராணுவத்தால் கொன்று புதைக்கப்பட்ட மக்களின் உடல்கள் தோண்டி எடுக்கப்பட வேண்டும் என ஐ.நா. மன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாடு நடைபெறும் அரங்கு முன் ஏராளமான தமிழர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். பதாகைகளை உயர்த்தியிருந்தார்கள். அட்டைகளில் வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன. துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தார்கள். மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் பன்னிரண்டு பக்க அறிக்கை அளித்தார்கள். ஐ.நா.வின் பாராளுமன்ற மாநாடு அதைக் கவனத்தில் கொண்டது.

மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதி கோபமுற்று இவர்கள் தீவிரவாதிகள் என்று சத்தம் போட்டார். தமிழர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக 20 சிங்களவர்கள் கூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

**அக்டோபர், 29, 1998 - பிரிட்டன் ஒளிபரப்பு (பி.பி.சி.)**

அகில மனித உரிமைகள் ஆணையம் தனது பிரதிநிதிகளை அனுப்பப் போவதில்லை என அறிவித்தது. தனது பிரதிநிதிகளுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று பல முறை வேண்டுகோள் விடுத்தும் இலங்கை அரசு செவிசாய்க்கவில்லை என்று குற்றம் சாட்டியது.

புதைகுழிகள் இருப்பதாக சொல்லப்படும் யாழ்ப்பாணம் பகுதியில் அசாதாரண சூழல் நிலவுகிறது. அங்கு இயல்பு வாழ்க்கை திரும்பிய பின் அகில மனித உரிமை ஆணையத்தின் வேண்டுகோள் ஏற்கப்படும் என்று இலங்கையின் அட்டார்னி ஜெனரல் அறிவித்தார்.

அட்டார்னி ஜெனரலின் இந்த அறிக்கை ஒரு தாமதம் செய்யும் தந்திரம் என்று பிரிட்டன் ஒளிபரப்பு தெரிவித்தது.

***நவம்பர் - 28, 1998 அன்னையர் முன்னணி***

*1996 - ல் கைது செய்யப்பட்ட தங்கள் பிள்ளைகளின் கதி என்னவாயிற்று என்று அன்னையர் முன்னணி கேள்வி எழுப்பியது. ஒரு தாய் என்ற அடிப்படையில் அதிபர் சந்திரிகா பதிலளிக்கவேண்டும் என்று சிங்களத்தில் எழுதப்பட்ட விண்ணப்பத்தை சமர்ப்பித்தது. சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்றிருப்பதால் தங்கள் சொந்த மொழியில் எழுப்பபப்டும் கூக்குரல் எட்டாமல் போய் விடுமோ என்று அஞ்சினார்கள். அன்னையர் முன்னணியின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது சந்திரிகா சொன்னார் "ஆறு மாதத்தில் தகுந்த பதில் தரப்படும்".*

*நீங்கள் ஒரு தாயா, இல்லையா? பிள்ளைகளின் கதி என்ன ஆயிற்று வென்றே தெரியாத ஒரு அனுபவம் உங்களுக்கு ஏற்பட்டிருக்குமானால் என்னை செய்திருப்பீர்கள்? இதுதான் அன்னையர் முன்னணியின் வெளிப்பாடு. அதற்கான பதிலை யாழ்ப்பாணம் அறியும், யாழ்ப்பாணத்தைச் சுற்றிலும் ஈழம் அறியும், ஈழத்தைத் தாண்டிய உலகு அறியும்.*

***டிசம்பர் - 16, 1998 வன்னி மக்கள் குழு***

*புதைகுழி இடங்கள் தோண்டி ஆய்வு செய்யப்பட வேண்டும். இதற்குத் துணை செய்ய பல நாடுகள் முன்வந்த போதும் இலங்கை நிராகரித்துவிட்டது. செம்மணி மட்டுமே மயானமாகவில்லை, வசாவிளான், புன்னாலைக்கட்டுவன், பாலாலி இராணுவ முகாம் பகுதி என யாழ்குடாவின் பிறபகுதிகளிலும் இராணுவம் கொன்று குவித்த மர்ம மயானங்கள் உள்ளன. ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகள் பிரிவு தலையிட்டு இலங்கை அரசை, இதில் தீவிர ஆய்வுகளை மேற்கொள்ள முயற்சிசெய்ய வைக்கவேண்டும் என்று வன்னி மக்கள் குழு வேண்டுகோள் வைத்தது.*

*வன்னி மக்கள் குழு கூடுதலாய் ஒரு தகவல் தந்தது. செம்மணிக்கு அருகிலுள்ள "கோப்பாய்" பகுதியில் இரவு நேரத்தில் இராணுவ வாகனங்களின் நடமாட்டத்தைக் கண்டதாகவும் சிதைவுபட்ட உடல்களின் மிச்சம்மீதி எரிக்கப்பட்ட*

வாசனை தங்களை எட்டியதாகவும் மக்கள் தெரிவித்ததாக ஐ.நா. மன்றத்தின் மனிதஉரிமைப் பிரிவுக்கு அளித்த அறிக்கையில் சுட்டிக் காட்டியது.

*ஜனவரி - 8, 1999*

குற்றப் புலனாய்வுத்துறை கண்காணிப்பாளர் புதை குழிகளைத் தோண்டி எடுப்பதற்கான பணியை மேற்கொள்ள கொழும்பிலிருந்தும் ருகுணு பல்கலைக் கழகத்திலிருந்தும் இரு ஆய்வாளர்களை வரவழைப்பதற்கு ஆணை வழங்கும்படியும் நீதி மன்றத்தை அணுகினார்.

"புதைகுழிகள் உருவாகி மூன்று ஆண்டுகள் கடந்துவிட்டது. கனமழையினால் அந்தப் பகுதி நீரில் மூழ்கி இருக்கிறது. எனவே புதைகுழிகளுள்ள இடம் தோண்டி எடுக்கும் பக்குவத்தில் இருக்கிறதா என மண் பரிசோதனை முதலில் செய்யப்பட வேண்டும்." அதன் பிறகே புதைகுழிகள் தோண்டும் பணி நடத்தப்பட வேண்டும் என யாழ் மாவட்ட நீதிபதி ஏகநாதன் கட்டளையிட்டார். தடயங்களை இராணுவம் அழிக்க முயல்வதாக வந்த புகாரின் பேரில்தான் நீதிபதி இந்த உத்தரவை வழங்கியிருக்கக்கூடும். வேறு ஏமாந்த அல்லது நீக்குப்போக்கான நீதிபதியாக இருந்தால் புலனாய்வுத் துறை நினைத்தபடியே நடத்தியிருக்கும்.

தமிழர் வாழும் நாடுகளிலும், உலகெங்கிலும் உள்ள மனித உரிமைகள் அமைப்புகளிடமிருந்தும் நெருக்குதல் கூடிக் கொண்டே போனது.

வேண்டுமென்றே காலதாமதம் என்ற குற்றச்சாட்டை அரசு மறுத்தது, ஆதாரங்கள் சிதைவுபடாமல் காக்கவே அரசுப்படைகள் நிலை கொண்டுள்ளன என்றது.

ஏற்கனவே நிலைகொண்டிருந்ததும் அரச இராணுவத் துருப்புகள் தாம்; இன்று நின்று கொண்டிருப்பதும் அதுதான். முன்னர் மனித உயிர்களைக் காணாமல் பண்ணும் பாத்திரம் வகித்த அரச படைகள், இன்று ஆதாரங்களை அழிக்கும் அதே பாத்திரத்தை வகிக்கக்கூடும் என்ற சந்தேககத்தை மனித உரிமை ஆர்வலர்கள் எழுப்பினர். தடயம் புலப்படாத வகையில் இராணுவம் சிதைத்துக் கொண்டிருந்தது. கடந்த சில மாதங்களாகப் பெய்யும் மழை மேலும் சிதைத்திருக்கும் என அவர்கள் அஞ்சினர்.

இந்த அச்சம் பொருளில்லாதது. 1995 -ல் சூரியக்கதிர் நடவடிக்கையால் இலங்கை இராணுவம் யாழ்குடாவை சுருட்டிக் கொண்ட போதிருந்து கொலைகள் தொடங்கின. முதல் பருவ மழை அடித்து, இரண்டாவது பருவமழை வீசிய அந்த மழை நாட்களின் போதெல்லாம் உண்டாகாத சேதாரம் 1998-ல் அடிக்கிற மூன்றாவது பருவ மழையால் மட்டுமே நடந்துவிடாது.

ஏறக்குறைய எழுநூறு பேர் கொல்லப்பட்டதாக உலக மனித உரிமை ஆணையம் மறுபடி மறுபடி உலகறியப் பறையை ஓங்கி அடித்தது, ஆனால் கொழும்பில், தலைமை நாற்காலியில் அசையாத, அசைவில்லாத ஒரு அதிபர் உருவம்.

*பிப்ரவரி - 18, 1999*

1999, மார்ச் - 5ந் தேதி, புதைகுழிகள் தோண்டும் பணி தொடங்கும் என்று யாழ் மாவட்ட நீதிபதி ஏகநாதன் அறிவித்தார். அது அவருடைய விருப்பத்தைக் காட்டுகிறது என இலங்கை அரசின் வெளியுறவுத்துறை அறிவித்தது. அந்த நாளினை அரசு அறிவிக்கவில்லை என்று மறுத்தது.

அந்த அறிவிப்பை மறுநாள் வெளியுறவுத் துறை திரும்பப் பெற்றது. அரசின் அங்கங்களுக்கிடையில் செய்திப் பரிமாற்றம் முறையாக இல்லாததே காரணம் என்றது. யாழ் மாவட்ட நீதி மன்றம் சனவரி - 8ல் பிறப்பித்த தீர்ப்புக்கு முரணாக - வெளியுறவுத் துறை நடவடிக்கை திசை திருப்புவதாக உள்ளது என்று நீதிபதி ஏகநாதன் தெரிவித்தார். நீதி பரிபாலன ஆணையத்துக்கு இதை எடுத்துச் செல்லப் போவதாக அறிவித்தார்.

*மார்ச் - 2, 1999*

"நீதிபதியைப் பற்றிக் கவலையில்லை

செம்மணிப் புதைகுழிகள் ஆய்வு மார்ச் 5ல் தொடங்கும். மாவட்ட நீதிபதியின் குறிப்பான ஆணை இருந்தாலும், இல்லாவிட்டாலும், பணி நடத்தப்பெறும்" என அட்டர்னி ஜெனரல் அறிவித்தார். மார்ச் 5ம் நாள் நீதிமன்றத்தில் நீதிபதி இல்லையென்றால், குற்றவியல் நடவடிக்கை சட்டத்தில் போலீஸுக்கு வழங்கப்பட்ட அதிகாரப்படி மேற்கொள்ளப்படும் என்றார்.

**மார்ச் - 5, 1999 புதைகுழிக் குவியல் விசாரணை.**

குற்றவியல் ஆய்வாளர்கள், தடயவியல் வல்லுநர்கள், மருத்துவப்புலனாய்வு வல்லுநர்கள் கொழும்பிலிருந்து யாழ்நகரம் வந்தடைந்தனர். புவியியல் சோதனை, மண் பரிசோதனை ஆகியவைகளை மதிப்பிடுவதற்காக இறங்கிய முதல் குழு இது. புதைகுழிகளைச் சிதைக்கும் வேலை நடந்திருந்தாலும் மண்ணியல் ஆய்வில் தெரிந்து விடும்.

"மூன்று வாரங்களக்குள் மண்ணியல் பரிசோதனை முடிவுகள் அறிவிக்கப்பட வேண்டும்" என்றார் நீதிபதி ஏகநாதன்.

**மார்ச் - 6 1999 செம்மணி ஆய்வு - ஒரு அரசியல் நாடகம்**

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் நாளிதழ் பின்வருமாறு எழுதியது, "கள ஆய்வுக்காக நிபுணர்கள் வருகை - ஒரு அரசியல் கபட நாடகம். குருடர்கள் யானையைப் பார்த்த கதைதான் அது. குழுவின் வருகைக்கு அனுமதியளித்த புதிய நீதிபதி அருள் சாகரன் அவசரமாக நியமிக்கப்பட்டு கொழும்பு விலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டார். நிபுணர்கள் மண் பரிசோதனை செய்த இடம் - கைதடி - நல்லூர் பிரதான சாலையின் மிகச் சமீபமாக உள்ளது. நடந்து செல்பவர்களே பார்க்கமுடியும். ஏறக்குறைய அறுநூறு பேருடைய உடல்களை பிரதான சாலைக்கு சில அடித்தூரத்திலேயே அதுவும் ரகசியமாக எப்படிப் புதைக்க முடியும்? புதைத்ததை இராணுவம் எப்படி எவரும் அறியாமல் சிதைக்க முடியும்?

"செம்மணி பல கி.மீ. பரப்பளவுள்ள விரிந்து பரந்த பகுதி, பிரதான சாலையிலிருந்து பல கி.மீ. தள்ளி உள்ளே, மக்கள் அணுக முடியாத, மக்கள் பார்வைபடாத இடங்களில்தான் புதைகுழிகள் இருக்கின்றன. ஓரிடத்துப் புதைகுழி, ஓரிடத்து ஆய்வு, என்னே கண்துடைப்பு" என்றது உதயம் இதழ்.

**மார்ச் 26, 1999**

நீதிபதி வருகை தரவில்லை.

செம்மணியில் எடுக்கப்பட்ட மண் பரிசோதனை முடிவுகளை நீதிமன்றத்தில் வழங்குவதற்கான புலனாய்வுத்துறை அதிகாரி கொழும்புவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது, நீதிமன்றத்தில் நீதிபதி அருள் சாகரன் வரவில்லை. இந்த வழக்கை நடத்துவதற்காக புதிதாய் நியமிக்கப்பட்டவர் அவர். அருள் சாகரன்

கொழும்பிலேயே இருந்துவிட்டார் என்று சொல்லப்பட்டது. ஆனால் தன்னை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்வதாக இருந்த புலனாய்வுத்துறை அதிகாரி அழைத்துச் செல்லத் தவறிவிட்டார் என அருள் சாகரன் குற்றம்சாட்டினார். நீதிபதி அருள் சாகரன் கொழும்பிலுள்ள அவர் வீட்டில் புறப்படத் தயாராக இருந்ததாகவும், அவரை அழைத்துச் செல்லவேண்டிய புலனாய்வுத்துறை அலுவலர் வரவேயில்லையெனவும் நன்கு தகவல் அறிந்த வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

*மார்ச் 31 - 1999*

செம்மணி வழக்கு கொழும்புக்கு மாறுகிறது

அட்டர்னி ஜெனரல் அலுவலகத்தின் மூத்த வழக்குரைஞர் யசந்தா கொதகோடா செம்மணி வழக்கு கொழும்பு நடுவர் மன்றத்தில் நாளை எடுத்துக் கொள்ளப்படும் என்றார்.

அட்டர்னி ஜெனரல் அலுவலகம், வழக்கு விசாரணையை கொழும்புக்கு மாற்றியிருப்பது தனக்குத் தெரியாது என நீதிபதி அருள் சாகரன் தெரிவித்தார்.

செய்தியாளர்கள், புவியியல் ஆய்வாளர்கள், மருத்துவப் புலனாய்வு வல்லுநர்கள், புலனாய்வுத்துறை அதிகாரி ஆகியோருடன் யாழ்ப்பாணம் சென்று வந்த மார்ச் - 5க்குப் பின் அட்டர்னி ஜெனரல் தன்னைத் தொடர்பு கொள்ளவேயில்லை என்றார் நீதிபதி.

*ஏப்ரல் - 7*

விளையாட்டுத் திடலில் எலும்புக் கூடுகள் தோண்டியெடுப்பு யாழ்ப்பாணத்திலுள்ள துரையப்பா விளையாட்டுத் திடலில் இன்று காலை மேலும் இரண்டு உடல்கள் தோண்டியெடுக்கப்பட்டன. யாழ்ப்பாண நீதிமன்ற மருத்துவ அலுவலர் எஸ்.வி. ஸ்ரீராஜேஸ்வரன் முன்னிலையில் தோண்டி கண்டெடுக்கப்பட்டன. ஒன்று பெண்ணுடல், கால்களும் கைகளும் கட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருந்தது. உடைந்த பிளாஸ்டிக் வளையல்கள் கிடந்தன. நல்ல உடல் வார்ப்பு கொண்ட பெண், இராணுவத்தால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டு, கொன்று புதைக்கப்பட்டிருந்தார்.

எட்டு மண்டையோடுகள் அதற்குப் பக்கமாய் ஒரு குழியில் துருத்திக் கொண்டு தெரிந்தன.

கூடுதல் நீதிபதி ஏகநாதனும் நீதிமன்ற மருத்துவ அலுவலர் ஸ்ரீ ராஜேஸ்வரனும் இலங்கைப் போலீஸை விளையாட்டுத் திடலில் புதைக்கப்பட்ட உடல்களை கண்டறியத் துணை செய்யுமாறும், பெண் என அறியப்பட்ட எலும்புக்கூட்டை கொழும்புக்கு மருத்துவ ஆய்வுக்கு எடுத்துச் செல்லுமாறும் பணித்தனர்.

கொழும்புக்கு எடுத்துச் செல்வது தங்களுடைய வேலையல்ல என்றனர் இலங்கைப் போலீசார். அது விமானப் படையினர் வேலை என்று எடுத்துச் செல்ல மறுத்துவிட்டார்கள். நீதிமன்ற மருத்துவ அலுவலர் பெண்ணின் எலும்புக் கூட்டை தனித்தனியாகப் பிரித்தார். ஒரு பெரிய பையில் தனித்தனி எலும்புகளை ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டினார். அந்த இடத்தில் எடுக்கப்பட்ட மண்ணையும் சிறு பொட்டலம் செய்தார். "இவைகளையாவது எடுத்துச் செல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

**ஏப்ரல் - 8, 1999**

துரையப்பா மைதானக் குழிகளில் ஆறு உடல் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டன. அதில் ஒரு எலும்புக் கூடு 14 வயதுப் பெண்ணுடையது என்றார் மருத்துவ அலுவலர் ஸ்ரீ ராஜேஸ்வரன்.

தோண்டத் தோண்ட அருகிலுள்ள இன்னொரு குழியிலிருந்து இரண்டு உடல்கள், உடைந்த எலும்புகள் தெரிந்தன. இன்று தோண்டி எடுக்கப்பட்ட உடல்கள் மொத்தம் ஒன்பது.

**ஏப்ரல் - 19, 1999 மட்டக்களப்பிலும் புதைகுழிகள்**

இதுவரை 23 எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. ஒரு வளையல், இரண்டு கத்திகள், பெரிய, சிறிய மூன்று துப்பாகி ரவைகள், அவைகளோடு கிடத்த சில பொருட்களுடன் இரண்டு குழந்தைகளின் எலும்புக் கூடுகளும் எடுக்கப்பட்டன.

இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சத்துருக் கொண்டான் என்ற ஊரில் புதர்கள் மத்தியில் அழுகிய நிலையில் ஒரு மனித உடல் கண்டெடுக்கப்பட்டது. அவர் ஆறேழு நாட்களுக்கு முன் இராணுவத்தால் கொல்லப்பட்டு புதரில் எறியப்பட்டிருக்கக் கூடும்.

இலங்கை இராணுவ முகாமுக்கு அருகில் குடியிருக்கும் தனது மகளைக் காண பிப்ரவரி - 14 அன்று இரவில் சென்ற ஆறுமுகம், சுந்தரலிங்கம் (வயது 57) மறுநாள் வனத்தில் பிணமாகக் கிடந்தார்.

சனவரி 17-ல் பதினேழு வயது இளைஞர் ஏகாம்பரத்தின் கொலை செய்யப்பட்ட உடல், அக்டோபர் 17ல் ராசரத்தினம் அவருடைய மனைவி நாகேஸ்வரியின் உடல்கள் கண்டெடுக்கப் பட்டன. கணவரும் மனைவியும் வீட்டுக்குள் வைத்தே கொலை செய்யப்பட்டிருந்தார்கள்.

**மே 19, 1999**

சிறையில் ராஜபக்ஷே சித்திரவதை

குற்றப் புலனாய்வுத் துறையினருடன் யாழ்ப்பாணம் வந்தடைந்த நீதிபதியால் செம்மணிப் புதைகுழிகள் தோண்டும் பணி ஜுன் - 16 என குறிப்பிடப்பட்டது. நீதிபதி முன்னிலையில் தரப்படுகிற சாட்சியங்கள், சேகரிக்கப்படும் சான்றுகள், தடயங்கள் மட்டுமே சாட்சியங்களாக ஏற்றுக்கொள்ளப்படும் என்று இலங்கையின் (வி) சித்திரமான நீதித்துறைச் சட்டம் சொல்கிறது.

வெளிக்கடை சிறையிலடைக்கப்பட்ட கார்பரல் ராஜபக்ஷே, ஜுன் 16ல் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டு சாட்சியம் அளிக்க இருந்தான். இலங்கை உள்துறை அமைச்சர், புலனாய்வுத்துறை அதிகாரிகள், சிறை அலுவலர்கள் இணைந்து ஒரு கூட்டுக் காரியம் செய்தனர். அவர்கள் தயாரித்த அறிக்கையில் கையெழுத்திடுமாறு ராஜபக்ஷேயை கட்டாயப்படுத்தினர். 1998 ஜுலையில் உயர் நீதிமன்றம் மரண தண்டனை அளித்தபோது தான் அளித்த வாக்குமூலம் குழம்பிய மனநிலையில் இருந்தபோது அளிக்கப் பட்டது, அதை ஏற்க வேண்டாம், புதிய வாக்குமூலமே உண்மையானது என அவர்கள் தயாரித்த அறிக்கையில் ராஜபக்ஷே கையெழுத்திட மறுத்துவிட்டான். புதிய வாக்குமூலம் பெற சிறை அதிகாரிகள் அவனை வாயில் அடித்தார்கள். சித்திரவதை செய்தார்கள். கடுமையான காயங்களுடன் ராஜபக்ஷே மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டான்.

உலக மனித உரிமைகள் அமைப்புகள் சாட்சிதாரர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்க

வேண்டியது அரசாங்கத்தினுடையது மட்டுமல்ல; அரசால் அமைக்கப்பட்ட இலங்கை மனித உரிமைக் குழுவின் பொறுப்பு என்று சுட்டிக் காட்டியது.

*ஜுன் 8, 1999*

செம்மணி சாட்சியக்காரர்களின் குடும்பங்களுக்கு கொலை மிரட்டல்

ராஜபக்ஷே இந்த வழக்கில் சாட்சியம் அளிக்காமலிருக்கச் செய்வது உன் கடமை என அவனுடைய மனைவிக்கு மிரட்டல் கடிதங்கள் வந்தன. மீறி சாட்சியம் அளித்தால், உன்னடைய உயிருக்கும், குழந்தைகள் உயிருக்கும் ஆபத்து என எச்சரித்தன. இந்த மிரட்டலைத் தொடர்ந்து மனித உரிமைகள் குழுவைச் சார்ந்த இரு உறுப்பினர்கள் அவனுடைய குடும்பத்தைச் சந்திக்க அனுப்பப்பட்டனர்.

*ஜுன் - 16, 1999*

கொலைகாரன்களை அடையாளம் காட்டும் ராஜபக்ஷே

ராஜபக்ஷே உயர்நீதி மன்றத்தில் ஓராண்டுமுன் அளித்த வாக்குமூலத்தை மீண்டும் உச்சரிப்பதை இராணுவமும், இராணுவத்தின் ஷு நாடாக்களால் கட்டப்பட்டுள்ள சந்திரிகா அரசாங்கமும் விரும்பவில்லை.

சந்திரிகா அரசு வழக்கை தள்ளிப் போடுவதிலேயே குறியாக இருந்தது. மூன்று நீதிபதிகளை மாற்றி அனுப்பி ஓராண்டைக் கடத்தியது. அவ்வாறு செய்தால் நீதியைக் கைவசமாக்கி விடலாம் என்ற அதன் மனோலய மிதப்பு உடைந்தது. நீதிபதி அறிவித்த ஜுன் பதினாறை அதனால் தவிர்க்க முடியவில்லை.

சிறைக்குள் தன்மீது வீசப்பட்ட வன்முறை, குடும்பத்துக்கு கொடுக்கப்பட்ட கொலை மிரட்டல், இவைகளைத் தாண்டிய தெளிவோடு, உறுதியோடு ராஜபக்ஷே வாக்கு மூலம் தந்தான்.

நாற்பது பத்திரிக்கையாளர்கள், உலக மனித உரிமை அமைப்பினர், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், புவியியல், மருத்துவப் புலனாய்வு ஆய்வாளர்கள், குற்றப்புலனாய்வுத் துறையினர் ஆகியோருடன் ராஜபக்ஷே மற்ற மரணதண்டனைக் கைதிகள் நால்வருடன், தனி விமானத்தில் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டான்.

தடங்கலோ, தயக்கமோ இல்லாமல் இராணுவ அதிகாரிகளால் நடத்தப்பட்ட படுகொலைகளை விவரித்தான். இராணுவ அதிகாரிகளின் பெயர்களை யார் யார் என தெளிவாக உச்சரித்தான். காலம் அதிர்ச்சியில் உறைந்தது. காலம் உறைந்த அந்த ஒரு மணி நேரத்துக்குப் பின் அவன் சொன்னான். "செம்மணி வயல்வெளிகளில் மட்டுமல்ல, அரியாலையில் சித்திரவதை செய்து, கொல்லப்பட்டு, புதைக்கப்பட்ட இடங்களையும் நான் காட்டுகிறேன்".

அரியாலையில் இயங்கிய இராணுவ முகாமில் அப்போது ராஜபக்ஷே பொது நிர்வாகப் பொறுப்பில் இருந்தான். விடுதலைப் புலிகள் என சந்தேகத்தின் பேரில் அழைத்து வரப்பட்ட வாலிபர்கள், இளம்பெண்கள், பொதுமக்கள் பெயர்களைப் பதிவு செய்யும் பணி அவனுடையது. பெயர்களைப் பதிவுசெய்து கொடுத்ததும் இராணுவத் தளபதி லலித்கெவா, லெப்டினென்ட் விஜி கிரிவர்த்தனா ஆகியோர் அவர்களை இழுத்துப்போய், அவர்கள் வாழும் பகுதிகளைச் சுற்றி வளைத்து வேட்டை நடத்தினார்கள். மேலும் பலரைக் கைது செய்து இழுத்து வந்தார்கள்.

"மேஜர், வீரகோடி, மேஜர் குணசேகரா ஆகியோர் விசாரணைக்கு இழுத்து வந்தவர்களை இரு உளவாளிகள் முன் நிறுத்தினார்கள். இராணுவத்துக்கு தகவல் கொடுக்கும் உளவாளிகள் முகமூடி அணிந்திருந்தார்கள். கண்களை மெல்லிய துணி மறைத்தது. உளவாளிகள் சமிக்ஞை செய்ததும் அவர்கள் புலிகள் என தீர்மானிக்கப்பட்டார்கள். உளவாளிகளால் அடையாளம் காட்டப்பட்டவர்கள் தனியே பிரிக்கப்பட்டவர்கள். கேப்டன் லலித்கவா, லெப்டினன்ட் விஜி கிரிவர்த்தனா கட்டளையின் பேரில் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். பின்னர் கொல்லப்பட்டார்கள். நான் அந்த வட்டாரத்தில் நீண்ட நாள் இருந்ததால் அங்கு உள்ளவர்களை நான் நன்கு அறிவேன். அவர்களுக்கும் என்னைத் தெரியும்".

ராஜபக்ஷே தொடர்ந்தான். "கல்வித்துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த செல்வரத்னம் என்ற அரசு ஊழியரை இராணுவ முகாமுக்கு கூட்டி வந்தார்கள்.

“வேலைக்குப் போய்விட்டு, வேலை முடிந்து குறித்த நேரத்தில் திரும்பவில்லையென்றால், அக்கம்பக்கம் உள்ளவர்களை விசாரிப்பார்கள். இல்லையென்றால் வேலை செய்யும் இடத்துக்குப் போய்க் கேட்பார்கள். அவர் எங்கே போய்வருவதாகச் சொன்னாரோ, அங்கு போய் நிற்பார்கள். இது வாழ்வில் வழக்கமான அவர்களின் தேடுதலாக இருந்தது. இப்போது அவ்வாறான கண்டறிதல் அவர்களுக்கு இல்லை, நேரே இராணுவ முகாமில் போய் நின்றார்கள்.

“செல்வரத்தினத்தின் மனைவி, அன்று மாலை தேடி வந்து என்னிடம் கேட்டார். உண்மையில் செல்வரத்தினம் எங்கு வைத்து கைது செய்யப்பட்டார் என்று எனக்குத் தெரியாது. எங்கு வைக்கப்பட்டிருக்கிறார் என்பதும் தெரியாது. கைது செய்து வந்தவர்களை அடைத்து சித்திரவதை செய்யும் கட்டிடத்துக்குச் சென்ற வேளையில் செல்வரத்தினத்துடன் 25 பேர் சித்ரவதை செய்யப்பட்டிருப்பதைக் கண்டேன். என்னைப் பார்த்ததும் தனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்றும், தன்னை விடுதலை செய்யுமாறும் கெஞ்சினார். அவருடைய கால்கள் கட்டப்பட்டிருந்தன. கேப்டன் லலித் கவாவிடம் அவரை விட்டு விடுமாறு கேட்டேன். ஒத்துக் கொண்டார். ஆனால் மறுநாள் காலையில் செல்வரத்தினம் கொல்லப்பட்டிருந்தார். அவருடன் பத்து சடலங்கள் கிடந்தன.

“அடுத்த நாள் உதயகுமார் என்பவர் கைது செய்யப்பட்டார். தான் குற்றமற்றவன் என்று என்னிடம் முறையிட்டனர். நான் கேப்டன் ஜெயவர்த்தனேயிடம் சென்று உதயகுமாரை விடுதலை செய்யுமாறு கேட்டேன். அன்று மதியம் உதயகுமார் வேறொரு முகாமுக்கு மாற்றப்பட்டார். நான் அங்கு சென்றபோது, அந்த முகாமுக்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு உதயகுமாரை விடுதலை செய்யுமாறு ரேடியோ செய்தி வந்தது. ஆனால் அதற்குள்ளே உதயகுமார் அந்தரத்தில் கட்டி தொங்கவிடப் பட்டிருந்தார். அவருடைய உடல் கிளேடுகளால் கிழிக்கப்பட்டு இரத்தம் கொட்டியது. அந்த நிலையில் அவரை விடுதலை செய்ய முடியாது. பிறகு அவரை துப்பாக்கி ரவையால் தீர்த்தார்கள். அந்தக் கட்டிடத்தில் சித்திரவதை செய்யும் கொல்லவும் பயன்படுத்திய ஆயுதங்களை இப்போதும் நான் காட்டமுடியும்.

சிலர் அடித்தே, சித்திரவதை செய்தே கொல்லப்பட்டார்கள். அவர்கள் இராணுவ அடிகளுக்கும் சித்திரவதைக்கும் தாங்க முடியாது செத்தார்கள். இத்தனைய கொடிய வதைபடல்களின் பின்னும் தாங்கும் உடல் வலிமை கொண்டவர்கள் குண்டு களுக்குப் பலியானார்கள்.

சில பொழுதுகளில் குடும்பமே மொத்தமாக கொன்றழிக்கப் பட்டதையும் நான் கண்டேன். என் கீழுள்ள சிப்பாய்களை வைத்து நான் மட்டுமே முந்நூறுக்கு மேற்பட்ட உடல்களைப் புதைத்துள்ளேன். புதைத்த பத்து இடங்களைக் காட்டமுடியும். என்னுடன் மரண தண்டனை விதிக்கப்பட்ட மற்றவர்கள் வேற இடங்களின் புதை குழிகளைக் காட்டுவார்கள்".

ராஜபக்ஷேயின் ஒருமணி நேர வாக்குமூலம் வெளியானது:

ராஜபக்ஷே சொன்னதுபோல், இன்னொரு மரண தண்டனைக் கைதியான ஜெயதிலகே "என்னால் ஆறு இடங்களைக் காட்ட முடியும்" என்றான். யாழ்ப்பாணம் வட்டாரத்தில் நெடுங்குளம், அஞ்சல் நிலைய சந்திப்பு, புதுக்காடு, பிள்ளையார் கோயில் போன்ற இடங்களில் கிணறுகள், நீர்தேங்கிய குட்டைகள், ஓடைகள், கால்வாய்களில் சடலங்கள் வீசியெறியப்பட்டன. பிறகு புல்டோசர்களால் அவை மூடப்பட்டன என்று ஒப்புவித்தான் ராஜதிலகே.

"இராணுவ மேலதிகாரிகள் இந்தக் கொடூரக் கொலைகளைச் செய்தார்கள். எங்களைக் குற்றவாளியாக்கி அவர்கள் தப்பிக்க முயல்கிறார்கள். நான் எனது தேசத்தை ஏமாற்றமாட்டேன். நான் பணியாற்றிய இராணுவத்திற்கும் துரோகம் செய்யமாட்டேன். எனவே உண்மைகளைப் பேசுகிறேன்" என்றான் ராஜபக்ஷே.

"என் குடும்பத்தினருக்கு அனுப்பப்பட்ட கொலை மிரட்டல்களை நான் அறிந்தேன். என்னிடமிருந்து பொய்கள் வரவழைப்பதற்காக, ஏற்கனவே உயர்நீதி மன்றத்தில் நான் தந்த வாக்கு மூலத்தை மாற்றிப் பேசுவேன் என்பதற்காக, சிறைக்குள் என்னை சித்திரவதை செய்தார்கள். சிறைக்குள்ளிருக்கிறபோதே, செம்மணியில் புதைக்குழிகளைச் சிதைக்கும் முயற்சியை இராணுவம் மேற்கொண்டிருக்கிறது என்ற செய்திகளும் என்னை வந்தடைந்தன.

நான் யாரையும் கொல்லவில்லை. கிருஷாந்தியைக் கூட நான் கொல்லவில்லை. கிருஷாந்தி உடல் புதைக்கப்பட்ட பிறகே, அது கிருஷாந்தியினுடையது என்று அறிந்தேன். உடல்களைப் புதைக்கிற வேலையை மட்டுமே இராணுவ அதிகாரிகளின் கட்டளைப்படி நான் செய்தேன்.

இலங்கையின் நீதித்துறை எனக்கு நீதி வழங்கவில்லையென்றால், நீதி வேண்டி உலக நீதிமன்றத்தின் முன்போய் நிற்பேன்".

கார்பரல் ராஜபக்ஷே தன்னுஷாருடன் உண்மைகளைப் பேசி முடித்தான். பெறுமதியுள்ள ஆயிரம் மனித உயிர்களை அழித்த இராணுவ அதிகாரிகளின் பெயர்களைச் சொல்ல அவன் தயங்கவில்லை. ஒவ்வொருநாளும் செய்யப்பட்ட சித்திரவதைகளின் வகைகளை எடுத்துரைக்க அவன் அஞ்சவில்லை. அவனுக்கு எதிரே நிற்கும் மரணக்கயிறு அவனுக்குள்ளிருந்த அச்சத்தின் கயிறுகளை அறுத்தெறியத் தூண்டியது. அந்த வேளையில் அவனை மூடிய மரணக் கூண்டுக் குள்ளிருந்து உலகுடன் பேச, அந்தச் சிறு கணவாய் ஒன்றுதான் திறந்திருந்தது.

"இராணுவக் கட்டளைகளே வேதம். அதன் ஆக்ஞைகளுக்கு அடி பணிந்த செயல்களே வேதம் ஓதுதல். இராணுவ பக்தியே தேசபக்தி".

என்று கட்டமைத்த கூண்டுகளை ராஜபக்ஷேயும், சக கைதிகளும் உலகுக்கு முன்னே உடைத்தார்கள்.

மரணம் வரையான வாழ்வின் ஏதாவது ஒரு புள்ளியில் மனிதன் தன் பிம்பத்தை வெளிக்காட்டியாக வேண்டும். இராணுவ உடைக்குள்ளும் இராணுவ உத்தரவுக்குள்ளுமிருந்த மிருகம் வெளியேறி, ராஜபக்ஷே என்ற மனிதன் தூக்குக் கயிற்றின் அசைவில் வெளிப்பட்டிருந்தான்.

சரியான கணிப்பில், இத்தனை அளவுக்காவது உண்மை பேசினானே என்ற ஒரு ஆறுதல் தவிர, அவனும் ஒரு சுயநல மனிதனே.

# அமெரிக்கப் பின்னணியும் அன்னையர் முன்னணியும்

'அடங்கி நட'- இராணுவத்தில் மேலிருப்பவன் கீழிருப்பவனுக்கு சொல்லி வைத்துள்ள வாசகம் இது.

அடக்கு - மொத்த ராணுவத்துக்கும் மக்களைநோக்கி இட்ட கட்டளை இது.

அடக்குவதற்காக அடங்கி நடப்பது இராணுவ உள் கட்டமைப்பின் இலக்கணமாக இருக்கையில், வித்தியாசமான இலங்கை இராணுவத்தின் வித்தியாசமான கார்பராலாக ராஜபக்ஷே வெளிப்பட்டான். மரணத் தருவாயில்தான் அவனும் தன்னை மனிதனாக வெளிப்படுத்திக் கொண்டான்.

*1996*-இல் சூரியக் கதிர் நடவடிக்கையின் போது, அதை ஒருங்கிணைப்பாளராக நின்று நடத்தியவன் தளபதி ஸ்ரீலால் வீர்சூரியா. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் யாழ்வட்டாரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பிரிகேடியர் ஜனக பிரேராவும் கருணதிலகாவும் நியமிக்கப்பட்டார்கள். ஜனக பிரேரா பொறுப் பாக்கப்பட்டதும் யாழ் வட்டாரத்தில் ஆயிரம் பேர் காணாமல் போனார்கள்.

பிணங்களை எரித்தால் தொடர்ந்து பிணம் எரியும் வாசனை சுற்று வாட்டாரத்தில் வாழ்வோரைத் தட்டி எழும்பும். ஆகவே புதைத்தார்கள். எரிக்கப்படுவதினும், பூமிக்குள் புதைக்கப்படுவது பாதுகாப்பானது.

அளவானது செம்மணி மயானம். மயானத்தை பக்கத்து காடுகளுக்கும் விரிவுபடுத்திக் கொண்டே போனார்கள்.

இராணுவ முகாம்களுக்கு இழுத்துவரப்பட்டு சித்திரவதை செய்யப்பெற்று கொலை செய்யப்பட்ட உடல்கள் செம்மணி மயானத்தில் புதைக்கப்பட்டன. அல்லது உயிரோடு கொண்டு

வரப்பட்டு எந்த விசாரணையுமில்லாமல் கேள்விமுறையில்லாமல் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்கள். இந்தப் படுகொலை களை நேரில் நடத்தினான் பிரிகேடியர் ஜனக பிரேரா.

1980-ம் ஆண்டு தமிழீழத்தின் மணலாறு பகுதியில் ஜனக பிரேரா, முகாமிட்டிருந்தவன், கிராமம் கிராமமாக சிங்களர்களைக் குடியேற்றினான். கிராமம் கிராமமாய் தமிழர்களைக் காலி செய்ய வைத்தான். இனஅழித்தொழிப்பை வேகப்படுத்திய ஆயிரமாயிரம் தமிழர் வீடுகள் புல்டோசர்களால் இடித்து நொறுக்கப்பட்டன. நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப் பட்டார்கள். மற்ற தமிழர்கள் பயந்து தங்களைத் தாங்களே அப்புறப்படுத்திக் கொள்கிற அச்சத்தை உண்டு பண்ணினான்.

பழைய ராஜாக்கள்போல் சிங்களக் குடியேற்றம் செய்த ஒரு வட்டாரத்தை தன் பெயரால் மாற்றி அழைக்கச் செய்தான். மான்கந்தி மலை என்பது ஜனக் புரா என்று பெயர்மாறியது.

1996 சூரியக்கதிர் நடவடிக்கைக்குக் முன்னால் ஜனக பிரேராவும் சிங்கள ராணுவ அதிகாரிகள் சிலரும் அமெரிக்காவில் பயிற்சி தரப்பட்டனர். ஜனக பிரேரா, ஜெயசிக்குறு, யுத்த நடவடிக்கைக்கு முன்னால் இங்கிலாந்தில் பயிற்சி பெற்றான். இரு ஏகாபதித்திய இராணுவங்களின் பயிற்சி பெற்ற ஒரு கொலைகாரனாகத் திரும்பினான்.

வாசிங்டன் போஸ்ட் என்ற அமெரிக்க நாளிதழ் (1998, ஜூலை12) குறிப்பிட்டது:

"செய்தி வெளியே தெரியாதவகையில், ஆனால் அதிகார பூர்வமாக சிலவெளி நாட்டுத் துருப்புகளுக்கு அமெரிக்க இராணுவம் பயிற்சி தந்தது. உள்நாட்டுப் பாதுகாப்பு, தொலைதூர ரோந்து சுற்றுதல், உளவறியும் தந்திரோபாயங்கள், வான்வழியாக, கடல் வழியாக விரைந்து தாக்குதல், கடலோரக் காவல் எனப் பலமுனைகளில் வெளிநாட்டுத் துருப்புகளுக்கு பயிற்சி கூர்மைப் படுத்தப்பட்டது. வஞ்சிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள் பாக்-ஜலசந்தி வழியாக தமிழ்நாட்டைப் பின்புலமாக ஆக்கி செயல்பட முடியாமல் தடுக்கும் கடலோரக் கண்காணிப்பில் தீவிரப் பயிற்சி சிங்கள இராணுவம் பெற்றது. குறைந்தது 500 இலங்கை ராணுவத்தினருக்கு 115 அமெரிக்க ராணுவத்தினர் பயிற்சி தந்தார்கள்." 1999 ஆண்டு அமெரிக்க காங்கிரஸ் சபையில் வைக்கப்பட்ட விவர அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கொலைகாரப் பயிற்சி

அளிப்பதற்கு தலைப்பு "பிறநாட்டின் முக்கிய இராணுவத் தலைமைகளுக்கு மனித உரிமைக் கருத்துகளிலும் நடவடிக்கைகளிலும் பயிற்சி அளித்தல்."

கொலைகார வரிசையில் உலகின் உச்சத்திலிருக்கும் அமெரிக்கா, கொலைகாரர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்ததில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. செம்மணிக் கொலைகள் ஆயிரம் செய்வதற்கான ஒருங்கிணைப்புப் பயிற்சியை ஜனக பிரேரா இங்கு பெற்றிருப்பான்.

2000-ம் ஆண்டில் இராணுவத்தின் துணைத் தளபதியாக உயர்த்தப்பெற்று, யாழ்ப்பாணம் வட்டார யுத்த நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறான்.

அப்போது பி.பி.சி. என்ற பிரிட்டன் ஒளிபரப்பு நிறுவனம் 'பாராட்டுப்பெற்ற யுத்தவீரர்களில் ஒருவர்' என ஜனக பிரேராவை வாழ்த்தியது.

அமெரிக்காவோ, இங்கிலாந்தோ தங்களிடம் கொலைப் பயிற்சி பெற்ற ஒருவனை மாவீரன் என்று வாழ்த்துவது வியப்பில்லை.

1987 முதல் 1990 வரை தென்னிலங்கையில் நடந்த எழுச்சியை அடக்கி நிறைய புதை குழிகளை உண்டாக்கியவன் ஜனக பிரேரா. 1987 முதல் 1995 வரை அவன் செய்த படுகொலைகளுக்காக ஜனக பிரேரோ முதல் 200 இராணுவத்தினர் வரை நடவடிக்கை எடுக்கப்படும் என்று 1995 தேர்தலின் போது சந்திரிகா வாக்குறுதிஅளித்தார். 1995 முதல் 2000 வரை ஐந்தாண்டுக்காலம் அவர் ஆட்சியிலிருந்த போது எந்த நடவடிக்கையும் இல்லை. இராணுவத்தின் மீதான நடவடிக்கைகள் மக்களிடம் எதிரான கருத்தை உண்டாக்கும் என துணைப் பாதுகாப்பு அமைச்சர் அனுராதா ரத்வத்தே, வலியுறுத்தியதால் சந்திரிகா ஒழுங்கு நடவடிக்கையை கை கழுவினார். அதே ஜனக பிரேராவும் அவன் போன்ற இராணுவ அதிகாரிகளும் பதவி உயர்வு அளிக்கப்பட்டு ஜனக பிரேரா இராணுவ துணைத் தளபதியாக 2000 த்தில் யாழ்ப்பாண வட்டாரத்துக்கு பொறுப்பாக்கப்பட்டான்.

ஜனக பிரேராவின் ஆணைகளினால் கொலையுண்ட ஆயிரம் தமிழர்களின் செம்மணிப் புதைகுழிகள் பற்றி கார்பரொல் ராஜபக்ஷே, யாழப்பாணம் நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் தந்து கொண்டிருந்த வேளையில் நீதிமன்றத்துக்கு வெளியே

பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள் சோகத்துடன் காத்திருந்தனர். உள்ளே அனுமதிக்கப்படவில்லை. ஐநூறு அடிக்கு அப்பால் நிறுத்தப்பட்டனர்.

"எங்கள் பிள்ளைகள் உயிரோடு இல்லை என்பதை நாங்கள் அறிவோம். எங்கள் பிள்ளைகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் இல்லை. ஆனால் விடுதலைப் புலிகள் என்று சொல்லி இழுத்துப் போகப்பட்டவர்கள், பிறகு திரும்பி வரவேயில்லை. கொடூர யுத்தத்தின் பலியாடுகள் அவர்கள். எங்கள் கண் முன்னாலேயே இராணுவம் அவர்களை இழுத்துச் சென்றது. அவர்கள் இந்த மண்ணில் இல்லையென்றால் வேறு எங்குதான் வாழுகிறார்கள்? அவர்கள் சித்திரவதைக்குள்ளாகி கொன்று புதைக்கப்பட்டதால் உண்டான எங்கள் உயிர்வாதையை இராணுவ உடுப்பு உணர முடியாது; ஆனால் எங்கள் விதியை உலகுக்குத் தெரிவிக்க கூடி நிற்கிறோம்"

-கூடியிருந்த பெற்றோர்கள் மத்தியிலிருந்த பத்மநாதன் செல்வராசா, மதுவதா பிரியதர்சனாவிடம் தெரிவித்தார்.

மதுவதா பிரியதர்சனா என்ற செய்தியாளர் உலக சோசலிச கணினி மையத்தின் (World Socialist Website) சார்பில் அனுப்பப் பட்டருந்தார். கொழும்புவிலிருந்து, விமானத்தில் ராஜபக்ஷே கொண்டுவரப்பட்ட அதே விமானத்தில் செய்தியாளர் குழுவில் வந்தார். இராணுவச் சிப்பாய்கள் பிரியதர்சனாவை சோக வடிவாயிருந்த பெற்றோர்களைச் சந்திக்க அனுமதிக்கவில்லை.

ராஜபக்ஷேயின் வாக்குமூலம் முடிவு பெற மதியம் ஆகிவிட்டது. விமானத்துக்கு ஏற்றிச் சொல்ல காத்திருந்த பேருந்துகளில் செய்தியாளர்கள் ஏற்றப்பட்டனர். நீதிமன்றம் முன்னால் கூடியிருந்த பெற்றோரை அவர்கள் சந்தித்துவிடக் கூடாது என்பதில் இராணுவம் உன்னிப்புக் கொண்டிருந்தது. செய்தி யாளர்களும் பலாலி விமான நிலையத்துக்கு தாங்கள் எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதிலேயே கவனம் கொண்டிருந்தனர். பெற்றோர்களிடம் பேசிக்கொண்டிருந்த பிரியதர்சனாவை, இராணுவத்துடன் சேர்ந்து அவர்களும் தடுத்தார்கள்.

ஆனால் மீறி பிரியதர்சனா சில பெற்றோர்களிடம் பேசினார். கை விலங்கு மாட்டப்பட்ட ராஜபக்ஷே நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்ததும், செம்மணியில் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களை அடையாளம் காட்ட பேருந்தில் ஏற்றிச் செல்லப்பட்டான்.

பரந்த சதுப்பு நிலம். முரட்டுப்புற்கள் குத்துக் குத்தாய்க் கிடக்கும் புதர்கள். காவலுக்கு நின்றன கட்டைப் பனைகளும், நெட்டைத் தென்னைகளும். புதைகுழியில் மண் தோண்டி எடுக்கப்படுவதைக் காண தந்தைகளும், அன்னையர் முன்னணி யினரும் வந்துவிட்டனர். பத்மநாதன் செல்வராசா முதல்நாள் புதன்கிழமை மதியமே செம்மணிக்கு வந்துவிட்டார். பிள்ளையோட மக்கிப்போன துணிகளையாவது காண முடியுமே! அவரைப் போலவே அன்னையரும் திரண்டிருந்தனர்.

பிரபாகரனின் தந்தைக்கு மகன் கடைசி நாளில் உடுத்தியிருந்த உடையும், அதன் வண்ணமும் நினைவிருந்தது. வெளிர்நீலச்சட்டை. சாம்பல் நிற முழுக்கால் சட்டை (பேண்ட்). கழுத்தில் சுற்றிய சிறு தங்கச் சங்கிலி. விரல்களில் இரு மோதிரம். கைக் கெடிகாரம். (மௌனத்தில் இயங்கும் கடிகாரம், எத்தனை மணிக்கு அதன் மௌனத்தைப் பூட்டிவைத்துக் கொண்டது என்பதை அவர் அறியார்). மகனிடமிருந்த எந்தப் பொருளையும் அவர்கள் திரும்பித் தரப்போவதில்லை.

வெளிர்நீல சட்டையை, சாம்பல்நிற காற்சட்டையை, அமர்ந்த புன்னகையை, தானிருப்பதே தெரியாமல் அடங்கிய நடையை, அவனது அசைவுகளை அவர் கண்ணுக்குள் பிடித்து வைத்திருந்தார். எவராலும் அவரிடமிருந்து பறித்துவிட முடியாதவை அவை.

"என் மகன் பிரபாகரன். 23 வயது. ஒரு ஆடை அங்காடியில் வேலை, வேலை முடிந்து மோட்டார் பைக்கில் வீடு திரும்பிய போது, செம்மணி இராணுவ சோதனைச் சாவடியில் மறித்துக் கைது செய்யப்பட்டான். இராணுவம் அவனை அழைத்துப் போனதைப் பார்த்த நண்பரொருவர் என்னிடம் ஓடிவந்து சொன்னார். சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடினேன்.

"அப்படியா? யாரையும் நாங்கள் கைது செய்யவில்லை" என்றார்கள் இராணுவத்தினர்.

வெளியே நின்ற மோட்டார்பைக் காட்டிக் கொடுத்தது. பையனின் மோட்டார் பைக் நிற்கிறது எனச் சொன்னேன். அவர்கள் கண்டு கொள்ளவில்லை. அப்போது ராஜபக்ஷே அங்கிருந்ததைக் கண்டேன்."

புதைகுழிகளுக்கு முன்னால் நின்று சொல்லிக் கொண்டிருந்த பிரபாகரனின் தந்தை உடைந்து அழுதார். பிரியதர்சனா என்ற அந்த உலகச் செய்தியாளர் அவரது அழுகையை நிறுத்தும் வழியறியாது திகைத்தார்.

என் நண்பர் ஒருவர் மாரடைப்பில் காலமாகிவிட்டார். தந்தைக்கு எண்பது வயது. சாவு வீட்டுக்குப் போயிருந்தேன். தந்தை அழுது கதறினார். "நா என்ன கேட்டேன். பகவானே இருக்கிற ஆயுளை எடுத்துக்கிட்டு என் பிள்ளைக்கு நீட்டிக் கொடுப்பான்னு தான் கேட்டேன். பகவானுக்குக் கேட்கலையோ?"

இறந்த நண்பருக்கு 58 வயது. அய்ம்பத்தெட்டு வயதுப் பிள்ளையின் சாவை, இயற்கையாய் ஏற்க முடியாமல் நெஞ்சுக்குத்து வந்தது போல் துடிக்கிற தந்தையின் துயர் நிம்மதி இழுக்க வைத்தது. துயரை ஆற்றிக் கொள்ள அந்த இடத்தை விட்டு நீங்கி வரவேண்டியதாயிற்று.

இளவட்ட வயதுப் பிள்ளையை, பதினான்கு வயதேயான பாலகனை, அக்கிரமக்காரர்கள் வங்கொலை செய்கிறபோது ஒவ்வொரு தாயாய் தந்தையாய் பட்ட துயர் எப்படியானது என பிரியதர்சனா சோகம் கவிந்த அந்த முகங்களில் கண்டெடுத் திருப்பார்.

பிரபாகரனின் தந்தை ஒருவர் மட்டுமல்ல. பிரியதர்சனா சந்தித்து அவரைப் போல் பல தந்தையரை, பல அன்னையரை. நீதிமன்றம் முன்னாலும் செம்மணிப் புதைகுழிகள் அருகில் ஆயிரம் பிள்ளைகளைப் பறிகொடுத்த தந்தையர்கள்- அன்னையர்கள்.

"என் மகனைப் பறிகொடுத்த அன்று மட்டுமே 22 இளைஞர்களைக் கூட்டிப் போனார்கள். முதலில் இராணுவ சோதனைச் சாவடிக்கு; இரண்டாவதாய் முகாமுக்கு. கடைசியாய் செம்மணி மயானத்துக்கு."

பெற்றோர்களின் விவரிப்புகள் ஒரே மாதிரியாக, ஒரே அச்சாக இருந்தன. அவர்களின் சாபங்கள் மட்டுமே காரியரூபம் கொள்ளு மானால் சிங்கள இராணுவத்தின் சாம்பல் மட்டுமே காற்றுக்கு எஞ்சியிருந்திருக்கும்.

பிறகு வியாழக்கிழமை மதியம் தெளிவான விடைகளாய் காட்சிகள் கிடைத்தன.

முழுங்கால் மடித்து, முழங்காலுடன் கைகள் கட்டப்பட்டு குனிந்தபடி, ஆறடி ஆழத்தில் உட்கார்ந்த நிலையில் புதைக்கப்பட்ட வாலிபன்.

நான்கடி ஆழத்தில் ஒன்றன் மீது ஒன்றென அடுக்கப்பட்ட இரு உடல்கள். அவைகளுக்கிடையில் ஒரேயொரு பலகை.

கண்கள் இறுகக் கட்டி மண்டையின் பின்னால் இறுக்கி போட்ட முடிச்சு அவிழாத ஒரு எலும்புக்கூடு.

இடுப்புக்குப் பின்னால் கைகள் இறுக்கிக் கட்டப்பட்ட நிலையில் மற்றொரு எலும்புக்கூடு.

29 வயது சதீஷ்குமார்; 23 வயது மகேந்திர பாபு. சுப்பையா ரவி என்பவருடைய பட்டறையில் வேலை செய்த மெக்கானிக்குகள் அவர்கள். 1996, ஆகஸ்டு மாதம் அரியாலை இராணுவ முகாமில் கைது செய்யப்பட்டார்கள். பட்டறை உரிமையாளர் சுப்பையா ரவி அந்த எலும்புக் கூடுகளை அடையாளம் காட்டினார். சதீஷ்குமாரின் மனைவி புகையிலைக் கறை படிந்த பற்களைக் கொண்டு அது தனது கணவன் என்றார்.

இதோ, இதோ என, இங்கே அங்கேயென சத்தங்கள் நடுவே எடுக்க எடுக்க எலும்புக் கூடுகள் வந்து கொண்டேயிருந்தன. படங்கள் செய்திகள் என உலக முழுதும் பயணம் செய்தன. சந்திரிகா கூட்டணி அரசின் உள்நரம்புகள் அதிர்ந்திருக்க வேண்டும். 1999 ஜூன் 18 வெள்ளிக் கிழமை மதியத்துடன் பிணம் தோண்டும் வேலை முடிவுக்கு வந்தாக அரசு அறிவித்தது. ஜூலை 15-க்கு தள்ளி வைக்கப்பட்டது என மறுஅறிவிப்பு வெளியானது.

1977-ல் யாழ்ப்பாணத்தில் மக்கள் தொகை எட்டுலட்சம். 1998-ல் அது ஐந்து லட்சமாகக் குறைந்தது. விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை இலங்கை இராணுவம் கைப்பற்றிய நாளிலிருந்து, நடத்தப்பட்ட படுகொலைகளும் பாலியல் வன்முறைகளும், சித்திர வதைகளும், காணாமல் போதல்களும் மக்களை வேகவேகமாய் வெளியேறச் செய்தது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மக்கள் குடிபெயர்ந்தனர். குடிபெயர்வினும் இராணுவத்தால் கொல்லப்பட்டோர் அதிகம்.

யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் செல்வராசா, யாழ்வட்டார குழந்தைகள் நிலை பற்றி 1996இல் ஒரு ஆய்வு நடத்தினார். ஐந்து வயது அடையுமுன்னரே, குழந்தைகளில் ஐந்துக்கு ஒன்று மரணமடைந்தது. சத்துணவு இல்லாமை, மருத்துவ வசதி இல்லாமை, உயிர்காக்கும் மருந்துகள் இல்லாமை, பொருளாதாரத் தடைகள் இவை குழந்தைச் சாவுக்குக் காரணம் என்கிறார் செல்வராசா. செஞ்சிலுவைச் சங்கம், சத்துணவு இல்லாததால் 58 விழுக்காடு குழந்தைகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கிறது. பிறக்கும் போதே குழந்தைகள் பாதி எடையாய் பிறக்கின்றன.

காணாமல் போதல் சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள் பற்றி கண்டறிந்து அறிக்கை தருமாறு ஐ.நா.வின் மனித உரிமைகள் அமைப்பின் சார்பில் பார்கிரே வேலிடியா (Barcre Walyndiaya) 1997-ல் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்.

நெருக்கடி நிலை முறைப்படுத்தல் சட்டம் (Emergency Regulation Act) பயங்கரவாத தடைச்சட்டம் (Prevention of Terrorism Act) இரு சட்டங்களும் வரன்முறையற்ற அதிகாரங்கள் கொண்டிருப்பதை அவர் கண்டித்தார். நீதித்துறை அமைச்சர் கூட மனித உரிமை மீறல்கள் செய்துவிட்டு, பின் எளிதாகத் தப்பித்து விட இந்தச் சட்டங்கள் வழி செய்கின்றன என்று கண்டித்தார்.

நடப்பு விசாரணைகளை தாமதப்படுத்த, தடுத்துநிறுத்த இந்தச் சட்டங்களில் எல்லா வழிவகைகளும் இருக்கின்றன என்று குற்றம் சாட்டினார். அந்த அறிக்கையை கால் பெருவிரலால் தெண்ணி எறிந்தார்கள் இலங்கை ஆட்சியாளர்கள்.

1995 செப்டம்பரில் நாகர்கோயில் பள்ளியொன்றில் சிறுவர் களைப் படுகொலை செய்த கொடுமையைக் கண்டித்த ஐ.நா.மன்றத்தின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகத்தை எச்சரித்து அகங்காரத்தை வெளிப்படுத்தினார்கள்.

1995-ல் இலங்கை ராணுவத்தின் யாழ்ப்பாணத் தாக்குதலில் நடந்த மகா குடிபெயர்வை ஐ.நா. செயலர் கண்டித்தபோது இலங்கை அரசால் கேவலமாகப் பழித்துரைக்கப்பட்டார்.

1999-ஆம் ஆண்டு செப்டம்பரில் நடத்தப்பட்ட ஒரு படுகொலை தொடர்பாக அறிக்கை வெளியிட்ட ஐ.நா.மன்றத்தை "உன் வேலை உலகில் மலேரியா எய்ட்ஸ் நோய்கள் பரவாமல் தடுப்பது. எமது உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிடாதே" என்று எச்சரித்தார்கள்.

உலகமே அமெரிக்கா என்ற புதிய சூழலை எங்கெங்கும் அமெரிக்கா உருவாக்கியுள்ளது.

அமெரிக்கா மேலெடுப்பான பின், உலகத்துக்கு வேறொரு முகம் வந்துவிட்டது. அமெரிக்காவின் எடுபிடியாக ஐ.நா. மன்றம் ஆக்கப்பட்டுவிட்டது. ஐ.நா.வின் பொதுச்செயலாளர் அமெரிக்கத் தூதராக நாடுகளுக்கு வந்து போகிறார்.

அமெரிக்காவின் ஆதிக்கத்தை விரும்பி அழைத்த நாடு இலங்கை. இந்தியா போல் வல்லரசாக உப்பிப் பெருகுவதற்கான நோய்க்குறியீடு, வாய்ப்பு இலங்கைக்கு என்றென்றும் இல்லை.

வல்லரசாக திரட்சி பெற்றுவரும் இந்தியாவை அண்டி இருப்பதை விட, நேரடியாக ஏகாதிபத்தியப் பேரரசான அமெரிக்காவிடம் சரணடைவது இலங்கைக்கு நல்லது.

கொலையாளிகளான ஜனக பிரேரா முதல் சிங்கள இராணுவ அதிகாரிகள் வரை பயிற்சி அளித்து கொலைகாரர்களாய் அமெரிக்கா திருப்பி அனுப்புகிறது.

இலங்கை இராணுவத்திற்கு மனிதப் படுகொலைகள் புதிதல்ல; ஆனால் தொலைந்து போனவர்கள் எண்ணிக்கையில் உலகிலேயே இரண்டாவது இடத்தை இலங்கை உரிமையாக்கிக் கொண்டபோது, அமெரிக்கக் கொலைகாரன் அந்தப் பட்டத்துக்கு பின்னணியிலிருக்கிறான் என்பது வெளிச்சமாகிறது.

இழப்பு ஒன்றுதான் எல்லோரையும் ஒன்றிணையச் செய்கிறது. அன்னையர் முன்னணி உருவானது.

உலக வரலாற்றில் இதற்குமுன் நாம் கண்டதில்லை அன்னையர் முன்னணி என்ற காட்சியை.



# வரலாற்றின் கண்ணாடி

பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலித்திடப் பிறந்த பாரதி நடந்த தெரு, சென்னை திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு. அங்கு பாரதியார் வாழ்ந்த இல்லம். பாரதி ஒரு ஒண்டுக் குடித்தனக்காரர், நீண்ட, சதுர அமைப்புள்ள அக்ரஹார வீட்டில், ஒரு இடுக்கில் ஒரே ஒரு அறையும் சமையற் கட்டுமுள்ள பகுதியில் பாரதி வசித்தார். அவர் வாழ்ந்த இல்லம் அரசுடைமை யாக்கப்பட்டு, ஏகப்பட்ட பணச்செலவில் புதுப்பிக்கப்பட்டு, இன்று அரண்மனை போல் நிற்கிறது. இவ்வளவு பெரிய அரண்மையிலா பாரதி வாழ்ந்தார் என பார்வையாளர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

"ஏழை எளியர்வர்கள் வீட்டில் - இந்த

ஈன வயிறு படும் பாட்டில்"

இது பாரதி கவிதை,

"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்

சோற்றுக்கோ வந்த திந்தப் பஞ்சம்"

- இன்னொரு கவிதை.

"புலவர் தம்மொழி பொய்ம்மொழியன்று காண்

பொருளில்லார்க்கு இனமில்லை, துணையில்லை

பொழுதெல்லாம் இடர்வந்து ஏற்றுமால்..."

- அவர் எழுதிய தன் வரலாறு.

கேலி செய்வது போல் இன்று மாளிகையாய் பாரதியார் இல்லம் நிற்கிறது. பாரதி செப்பிய வாசகம் வெளியேற்றப்பட்டு விட்டது.

நிகழ்ந்த வரலாற்றை புனைவாக ஆக்கமுடியும், அவர்கள் இருந்த இருப்பை புனைவினால் "பப்பளா பளபளா" வென்று டாலடிக்கச் செய்வதால், விடுதலை வீரர்களின் வாழ்வின் தாத்பரியம் எதுவோ, அதை மறைத்து விடமுடியும். வாழ்ந்த வாழ்வு, சொன்ன சொல்லின் சாரத்தில் மனது பதிக்காமல் சுற்று வட்டங்களில் அதிகார சக்திகள் கவனம் கொள்ளும் என்பதற்கு பாரதியார் இல்லம் ஒரு சாட்சி.

நாங்கள் சென்றபோது - வல்வெட்டித்துறையின் அந்த வீதி நடமாட்டம் அற்றுக் கிடந்தது. இயல்பாய் நடமாடிய காற்றை யாரோ அப்புறப்படுத்தியது போலிருந்தது. வேறு யாருமல்ல, நான் தான் என்று கடுங்கோபத்தில் மதியவெயில் எங்களைப் பார்த்து முறைத்துக் கொண்டு நின்றது. மதிய வெய்யிலின் இறுக்கம் நிறைந்த தெருவின் தொடக்கத்தில் தனியாய் நின்றது அந்த வீடு. வீட்டுக்கு முதுகு திருப்பி உட்கார்ந்திருந்தது ஊர். வீடும் வீடு இருந்த வீதியும் வீதி நின்ற ஊரும் ஓர் அசாதாரண நிலையை காட்சிப்படுத்தின.

வீட்டின் முன்னே இரண்டு சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஏழெட்டு வயசிருக்கும். அந்த வீட்டைக் காட்டிக் கேட்டோம்.

"இங்க ஊர்க்காரங்க யாரும் வர்றதில்லையா?"

"வர்றதில்லை"

"ஏன் வரமாட்டாங்க"

"வந்தா பிடிச்சிட்டுப் போயிருவாங்க"

சட்டென புலப்பட்டது, வல்வெட்டித் துறையில் இராணுவம் நிலை கொண்டிருந்தது.

எங்களுக்கு பதில் சொல்வதைவிட சிறுவர்களுக்கு விளையாட்டில் மும்மரம் கூடுதல். பிறகு விளையாட்டைக் கொஞ்சம் நிறுத்தி விட்டு எங்களைப் பார்த்தார்கள். அவர்கள் பார்வையில் சந்தேகத் துளி. இவர்கள் யார்? "ஆமிக்" காரங்களா? அமைதிப் படைக்காரங்களா? சண்டையடித்துக் கொள்ளும் போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்களா? சொடக்குப் போடும் நேரம்தான். அந்த இடத்திலிருந்து அவர்கள் பறந்து விட்டார்கள். சிறுவர்களிடம் எங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி மீதி இருந்தது.

"பிரபாகரனைப் பார்த்திருக்கறீர்களா?"

எங்களைப் போல் சிலர் அந்த வீட்டை பார்த்துப் போயிருக்கலாம். வரலாற்றின் முக்கியமான சந்திப்பில் நின்றிருந்த அந்த வீட்டை இனி பலர் தரிசிக்க வரலாம்.

மாற்றி மாற்றி சிங்கள ஆமிக்கும், இந்திய அமைதிப் படைக்கும் அந்த வீடுதான் இலக்காக இருந்தது. மொட்டைச் சுவர்கள், உள்ளெங்கும் மனிதக் கழிவுகள், சிங்கள ஆமிக்காரனும், இந்தியப் படையும் விட்டுச் சென்ற எச்சம்.

சுவர்களில் சில கரிக்கோட்டு வாசகங்கள்

"தம்பி பிரபாகரன்

எமக்கு அண்ணன்"

"பிரபாகரன் என்றென்றும் எம்முடன்"

ஷாகிர், அம்ரான் - கொழும்பு

இஸ்லாமிய சமுதாயம் போராளிகளை ஏற்றுக் கொள்ள வில்லை. வெறுப்பின் எல்லைக்கும், அந்த எல்லையிலிருந்து எதிர்ச் செயல்பாடுகளுக்கும் போய்க் கொண்டிருக்கிறது என்பன போன்ற விதையைத் தூவியபடி நடக்கிறவர்கள் இருக்கிறார்கள்.

அகநிலை முரண்பாடுகள் எல்லாக் கால கட்டத்திலும் இருக்கவே செய்யும். புறநிலையிலள்ள பிரதான முரண் பாடுகளால், அகநிலை முரண்பாடு கூர்மையடையவே செய்யும். சுயநல விரும்பிகள், ஆதிக்க சக்தியினர் இந்தக் கூர்மையை இன்னும் கூர் ஏற்றிக் கொண்டே போவார்கள். அகநிலை முரண்களைத் தீர்ப்பதில் சரியான வழிமுறையைக் கையாளுகிற கடமை விடுதலைச் சக்திகளுக்கு உண்டு. அவ்வாறு கையாள்வதில் விடுதலைச் சக்திகள் எப்போதும் முனைப்பில் நிற்பார்கள்.

இஸ்லாமிய சமுதாயத்தின் நிலைப்பாடு எது என்று ஒவ்வொருவராய் அணுகி விசாரிப்பதினும் மேலான சாட்சிகளாக நாங்கள் இருக்கிறோம் என்று கரிக்கோட்டில் பொறித்து வைத்திருந்தார்கள் ஷாகிரும், அம்ரானும்.

மானுடத்தின் தமிழ்க்கூடலின்போது, வெளிவந்த புலிகளின் கலை பண்பாட்டுக்கழக இதழ், (ஆடி - ஆவணி 2002) அட்டை முகப்பில் ஒரு செய்தியைத் தாங்கியிருந்தது. சங்கிலி என்னும் தமிழ் மன்னனின் அரண்மனையின் எஞ்சிய எச்சம், மந்திரிமனை என இன்றைய நிலையை அட்டைப்படம் தாங்கியிருந்தது. இன்றைக்கு அந்த வரலாற்று எச்சங்கள் வண்ணமிழந்து

கிடந்தாலும், புராதன வரலாற்றுச் சின்னங்களைக் காப்போம் என்ற வாசகத்தால் எதிர்வரும் காலத்தில் வண்ணம் கொடுப்போம் என்ற புதிய நோக்கு வெளிப்பட்டிருந்தது.

"வரலாற்றின் ஆதாரங்களும்
தொன்மையின் எச்சங்களும்
தொலைந்து போகின்றன
காப்பது எம் கடமை"

என அந்த வாசகம் அறிவிப்புக் கொடுத்தது. வெளிச்சம் இதழ் அட்டையில் பிரபாகரனின் வீடு "தேசியத் தலைவர் பிறந்த இல்லம்" எனவும் குறிக்கப்பட்டிருப்பதும் காணமுடிந்தது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற யாழ்நகர் அருகில் மாவீரர் துயிலுமிடங்களைப் புதுப்பிக்கிறார்கள். அதுபோல் இந்த வீட்டையும் அமைதிக் கண்காணிப்புக்குழுவின் அனுமதி பெற்று புதுப்பிக்கலாம்.

"இப்போது இந்தப் பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தானே இருக்கிறது. இதை நீங்கள் நினைவுச் சின்னமாக பராமரிக்கலாம்".

எங்களுடன் வந்த போராளிகளைக் கேட்டோம்.

சிங்கள ஆமி, இந்தியப்படை என மாற்றி மாற்றி வந்து வீட்டைத் தாக்குவார்கள். அவர்கள் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். என்னைக் கைப்பற்ற முடியாதபோது, என் வீட்டையாவது பிடிக்க முடிந்ததே என்ற கோபத்தை வடித்துக் கொள்வார்கள். வரலாற்றுப் போக்கில் தீர்மானகரமாய் ஒரு முடிவு வருகிற வரை, அந்த வீடு அப்படியே இருக்கட்டும் என்பது பிரபாகரனின் உள்மனதாக இருக்கும்.


முதலில் யுத்தத்தை ஒரு இடத்தில் நிறுத்துவோம். யுத்தம், இன்னொரு முறை மூர்க்கம் கொண்டு எழாதபடி ஏதாவது ஒரு வகையில் கட்டிப் போடவேண்டும். அப்போது இந்த இல்லத்தையும் பராமரிப்பது பற்றி யோசிக்கலாம் என்பது அந்தப் போராளியின் உள்ளக்கிடக்கை எனக் கண்டபோது வியந்தோம்.

இன்று சமாதானப் பேச்சு, அமைதி, இந்த வேளையைப் பயன்படுத்திக்கொண்டு, மாவீரர் துயிலுமிடங்களை, புலேந்திரன், குமரப்பா போன்ற மாவீவரர்களின் சிதைக்கப்பட்ட நினைவுச்

சின்னங்களை புதுப்பிக்கும் பணியில் தீவிரப்பட்டுள்ள முனைப்பு ஒரு தலைமைப் போராளியின் இல்லத்தை மொட்டையாய் விட்டிருக்கிறதே என்ற ஆதங்கத்துடன் புறப்பட்டோம்.

அந்த வீடு அனாதியாய் இரவும் பகலும் கிடப்பதுபோல் தெரிகிறது. உடைந்த மேற்கட்டுமானத்துடன், மொட்டைச் சுவர்களுடன் மல்லாக்கப் பார்த்து நின்று கொண்டிருக்கிறது. இந்த யுத்தம் தீர்ந்துவிட்டாலும் அது அப்படியே வானத்துடன் பேசிக் கொண்டிருக்கும்போல் தெரிகிறது.

தங்கள் குடையின்கீழ் தமிழீழம் வந்த பிறகு, அந்த வீட்டை புதிதாகக் கட்டிப் புதுப்பிக்க வேண்டிய அவசியம் உருவாகலாம். அப்படியே விட்டுவிடுங்கள் என அவர் தனது இல்லத்தை மட்டுமே சொல்லலாம். எவ்வாறாக ஆயினும் வாழ்வதற்கு தகுதியானதாக மாற்றப்படுவதைவிட, வரலாற்றைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக அது நிற்கும். வசிப்பதற்கு தோதாய் மாற்றப்படுவதினும் - வரலாற்றை வாசிக்கும் முக்கிய எழுத்தாய் அது நிற்கும்.



பிரபாகரன் இல்லம்

# அங்கு வாழ்ந்ததில்லை அவர்கள்

ஹட்டன் ஒரு மலை நகரம். ஹட்டனைத் தொட்டபடி நிற்கிற நுவரலியா, தூரமாய் நிற்கிற கண்டி - அவைகளின் ஓரங்களில் வாழும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவை இன்னொரு நகர நாடுகள் போலத்தான். நகர எல்லையை அவர்கள் தொட்டிருந்தாலும் அதன் வாழ்க்கையைத் தொட்டதில்லை. 180 வருடங்களாய் நகர வாழ்க்கை மணம் மலையகத் தமிழர்கள் மேல் தீண்டியதில்லை.

நகரங்களில் வாழ்வதற்காக
சிவப்பிந்தியர்கள்
படைக்கப் படவில்லை
எவரும் அங்கு
நிலை கொள்வதில்லை
சிலர்
அங்கு குடியிருக்கலாம்
எவரும் அங்கு
வாழ்வதில்லை

அமெரிக்கா சிவப்பிந்தியர்களின் நாடு, அமெரிக்காவின் பூர்வகுடியினர் அவர்கள். வனவளங்களில் சுவாசித்தார்கள். வளங்களாய் நடமாடினார்கள். அந்நியர்கள் சிவப்பிந்தியர்களை விரட்டி சொந்த நாட்டுக்குள்ளேயே நாடு கடத்தினார்கள். மத்திய அமெரிக்காவின் ஓகலேகோமா என்ற வட்டாரத்தில் சிவப்பிந்தியர்கள் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டார்கள். ஷெரோகி என்ற அவர்களின் கவிஞன் வரைந்தது மேலே காட்டிய கவிதை.

நகர வாழ்க்கை மட்டுமல்ல
வாழ்க்கையின் மணம்கூட அவர்கள் அறிவார்களா?
சந்தேகமே.

இதனை உள்கிரகித்துக் கொண்ட வலியினூடாக ஹட்டன் என்ற மலை நகரத்தின் மாலை நிகழ்வுக்கு நடந்தோம்.

ஹட்டனில் அன்றைய மாலை நிகழ்ச்சி வித்தியாசமானதாக இருந்தது. பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா போல் தான் நடந்தது. இடையிடையே கூடுதல் அம்சமாக மாணவர், மாணவியரின் ஆட்ட பாட்டம். அங்கும் தமிழ்நாட்டில் போலவே திரைப் பாடல்கள் போட்டு, மாணவ மாணவிகள் இசைத்தட்டு நடனம் ஆடும் கூறு கெட்ட வேலையை ஏற்பாட்டாளர்கள் செய்திருந்தார்கள்.

எங்களின் மலையகப் பயணத்தை ஒழுங்கு செய்திருந்த அப்போதைய அமைச்சர் சந்திரசேகரன் விளக்கினார். "மலை நாட்டிலிருந்து கல்வி கற்று வருபவர்கள் மிக மிக சொற்பம். அதுவும் தேயிலை, இரப்பர்த் தோட்ட லயன்களிலிருந்து தொழிலாளர் குழந்தைகள் படித்து வருவது அபூர்வம். கல்வி கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. பள்ளிப்படிப்பு முடிந்து வருகிற மலையகக் குழந்தைகளின் தரம் பல்கலைக்கழகத்தில் சேரத் தகுதியாக இல்லை. பிறபகுதிகளின் பிள்ளைகளின் தரத்துக்கு ஈடாக இருப்பதில்லை".

"மலையகத்துப் பிள்ளைகளுக்கு இத்தனை சதம் என்று பல்கலைக்கழகங்களில் இடஒதுக்கீடு வைக்கலாமே?".

"அப்படியில்லை, கல்வியிலிருந்து முற்றாக விலக்கப் பட்டிருக்கிறோம் நாங்கள். இப்போது தான் தண்ணீருக்கு மேலே வந்து மூச்சு விடுவதுபோல் கொஞ்சம் கொஞ்சமாய் மேலே வந்து கொண்டிருக்கிறோம். பல்கலைக்கழகங்களில் சேருவதற்கே குறிப்பிட்ட மதிப்பெண்கள் வேண்டும் என்று தர நிர்ணயம் இருக்கிறது. பள்ளி இறுதி வகுப்பு முடித்த மாணவ, மாணவியரை இங்கே இருக்கிற சில தனியார் பயிற்சி நிலையங்கள் இந்தத் தகுதிக்கு தயார்ப்படுத்துகிறார்கள். தகுதியடைந்து பல்கலைக் கழகங்களில் சேர்க்கை கிடைத்த மாணவ, மாணவிகளுக்குத்தான் இந்தப் பாராட்டுவிழா".

அப்போது ரணில் விக்கிரமசிங்கே பிரதமராக இருந்தார். அந்த அரசில் மலையக அமைச்சர்கள் மூவர் இருந்தார்கள். பட்டமளிப்பு

நடத்துவதுபோல் பல்கலைக்கழகத்தில் சேருவதற்கான சான்றிதழ்களை மாணவ, மாணவிகளுக்கு அமைச்சர்கள் வழங்கினார்கள்.

தமிழகத்தில் இருப்பதுபோல் ஏகப்பட்ட கல்லூரிகள் இல்லை அங்கு. பல்கலைக்கழகங்கள் மட்டுமே உண்டு. பல்கலைக் கழகங்களில் தான் பட்டப்படிப்பு முதல் முதுகலை மற்றும் தொழில் படிப்புகள் நடக்கின்றன. ஒரு ஆண்டுக்கு 25 ஆயிரம் மாணவர்கள் பயில்கிறார்கள்.

1977 வரை மலையக வட்டாரத்தில் ஆயிரம் ஓராசிரியர் பள்ளிகள் இருந்தன. பள்ளி என்ற கொட்டடியில் அடைத்து விடுவார்கள். தேயிலைத் தோட்டவேலைக்கு மெனக்கிடு முன் பிள்ளைகளை அங்கே விட்டுச் சென்று விடுவார்கள். பகல் 2 மணிக்குத்தான் ஆசிரியர்கள் திறந்துவிடுவார்கள். இந்திய வம்சா வழியினர் என்ற கந்தல் கந்தலாக்கப்பட்ட மலையகத் தமிழர்களில் இன்றும் கல்வி வாய்ப்பு ஐந்து விழுக்காடு கூட இல்லை.

இலங்கை நாட்டின் மொத்த சனத்தொகையில் இந்திய வம்சா வழியினர் என்று முத்திரை குத்தப்படுகிற மலையகத் தமிழர்கள் ஏழு விழுக்காடு. ஆனால் உயர் கல்விச் சாலைகளில், பல்கலைக் கழகங்களில் ஒரு விழுக்காட்டுக்குக் குறைவாகவே பயிலு கிறார்கள்.

ஆயிரம் ஓராசிரியர் பள்ளிகள் இருந்த மலையகத்தில் 1990-ல் 800 பள்ளிகளாகக் குறைந்தன. நாட்டில் இருக்கின்ற ஏனைய பாடசாலைகளில் இருப்பதுபோல் மனிதவளத்தை மேம்படுத்தும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்களும் அங்கேயே குடியிருந்து, அவர்களுக்காகவே வாழ்ந்து கல்வி கற்றுத் தருவதில்லை. எண்ணூறு பாடசாலைகளில் அரை வாசிப் பள்ளிகள் தொடர்ந்து மோசமான நிலையிலேயே தொடர்கின்றன.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும், சிங்கள, இஸ்லாமிய, தமிழ்ச் சமூகங்களுக்கு உயர்கல்வி பெற கல்வி நிறுவனங்கள் உண்டு. ஆனால் மலையகத் தொழிலாளிகளின் பிள்ளைகள் உயர்கல்வி பெற, ஒரு பல்கலைக் கழக கல்லூரி கூட அங்கு இல்லை.

உடல்நலமில்லாதவர்களை அல்லது மெலிந்து சொங்கிப் போய் வருபவர்களை "என்ன, தாது வருசப்பஞ்சத்திலே அடிபட்டவன் மாதிரி வர்றயே" என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு தாது வருசப்பஞ்சம் தமிழகத்தில் மக்களின் வழக்காறாகவே ஆகிவிட்டது. தாது வருசப் பஞ்சம் 1876-ல் ஏற்பட்டது. கல்லையும் மண்ணையும் புசிப்பதற்குக் காணாமல் மக்கள் தொகை தொகையாய்ச் செத்து விழுந்தார்கள். விழுந்த பிணங்களைப் புதைப்பதற்கும் வக்கற்று, வலிமையற்றவர் களானார்கள். ஒரு பிணம் இன்னொரு பிணத்தைப் புதைப்ப தில்லை.

பிறகு 1890-ம் ஆண்டிலும் அடுத்தடுத்துப் பத்துப் பஞ்சங்கள் படையெடுத்தன.

ஆங்கிலேயன், உலகம் முழுதும் தனது அஸ்தமிக்காத சூரியனைப் பறக்கவிட்டுக் கொண்டிருந்த காலம், சூரியக்கதிர்கள் தொடாத மலைச்சிகரங்களைக் கூட, அவனுடைய அதிகாரக் கதிர்கள் தொட்டுக் கீழிறங்கின. இருட்டைக் கலைத்து விரட்டு வதற்குப் பதிலாய் வெள்ளை இருட்டு கீழே இறங்கியது. வெள்ளையன் கைப்பற்றிய மலைப்பகுதிகளில் காடுகள் அழித்து, மலைகளைச் செப்பனிட்டு தேயிலையும் காப்பியையும் பயிரிடத் திட்டமிட்டான்.

தென்கிழக்கு ஆசியாவிலேயே வனவளம் மிகுந்த நாடு மலேசியா. இரண்டாவது இலங்கை. மலேயாவில் இரப்பர் தோட்டங்களும், 1917-ல் பிரேசிலிலிருந்து கொண்டு வரப்பட்ட போது, தோட்டத் தொழிலாளர்களாக யாரைக் கொண்டு வருவது என்று பிரித்தானிய ஏகாதிபத்தியம் மூன்று வகையாக யோசித்ததாம்.

ஒன்று -

சீனர்களைக் கொண்டுவரக் கூடாது. அவர்கள் தொழிற்சங்கம் உருவாக்கி பொதுவுடைமைக் கட்சியைக் கட்டியமைத்து வளர்த்து விடுவார்கள்.

இரண்டு -

ஆப்பிரிக்கத் தொழிலாளர்களைக் கொண்டு வரக்கூடாது. அவர்கள் குடித்துவிட்டு வேலைசெய்ய மறுப்பார்கள்.

கடைசியாய் -

தமிழ்த் தொழிலாளிகள் மென்மையானவர்கள். உழைப்பில் மேன்மையானவர்கள். இதுவரை சென்று பார்த்த பூமிகளில் உழைப்பைத்தவிர, வேறெதுவும் செய்து அறியாதவர்கள். எந்த நாட்டில் கூலிகளாய் குடியேறினார்களோ, அந்த நாட்டை வளப்படுத்தியிருக்கிறார்களே தவிர, வாழ்ந்ததில்லை.

இலங்கை மலைகளைத் தோட்டங்களாய்ச் சீர்படுத்தி வணிகப் பொருளாதாரத்தை மேம்படுத்த, தாதுப் பஞ்சத்திலே தரித்திரர்களாய் ஆன தமிழர்களே தோது என பிரித்தானிய ஏகாதிபத்தியம் முடிவெடுத்தது.

அவர்கள் அறிவார்கள் - சிங்களர்கள் உடல் உழைப்புக்கு அஞ்சுகிறவர்கள். இஸ்லாமிய சமூகம், மெதக்கமாய் (மேனத்தாய்) மூடுதிரைக்குள்ளே வாழ்வது. வடபகுதித் தமிழர்கள் சைவத்திலும், சாதிப்பெருமையிலும், நிலஉடமை எண்ணங்களிலும் முங்கிக் குளித்துக் கொண்டிருப்பவர்கள் - இந்த மூன்று சமூகங்களை நம்பி மலைகளில் கால்கொண்டு உருப்படமுடியாது. எனவே பஞ்சத்தில் செத்துக் கொண்டிருக்கும் தமிழ்நாடு, உழைப்புச் சுரண்டலின் பின்னிலமாக தயாராக இருக்கிறது எனக் கண்டார்கள்.

குறிப்பாக தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களிலிருந்தும், வடஆர்க்காடு, தருமபுரி, சேலம், தஞ்சாவூர் மாவட்டங்களிலிருந்து கணிசமானோர் கூலிகளாக 1800 களிலேயே, பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். இவர்கள் தாம் இந்திய வம்சாவழித் தமிழர்கள் எனப் படுகிறவர்கள். சிறிமாவோ -சாஸ்திரி ஒப்பந்தத்தால் 1964ல் இந்தியாவுக்கு விரட்டப்பட்ட பல லட்சம் தமிழர்கள் போக, இன்றும் வாழ்கிறார்கள். 15 லட்சம் மலையகத் தமிழர்கள்.

தமிழ்நாட்டிலிருந்து கொத்தடிமைகளாய் கூட்டிச் செல்லப்பட்ட இவர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர் தான் உயர்சாதியினர். பெரும்பாலோனார் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சூத்திர வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். உயர்சாதியினரிலும் பொருளாதாரத்தில் கீழே இருக்கிற கூலி, இயல்பாய் கூலிகள் நிலையில் வாழுகிற சூத்திர சாதிகளோடு கப்பலேறினான் என்ற தமிழ்நாட்டுப் பின்புலம் கவனிப்புக்குரியது.

அன்று காலை தோட்டத் தொழிலாளத் தமிழர்கள் வசிக்கும் "லயம்"களுக்கு அழைத்துப்போனார் முன்னாள் அமைச்சர் சந்திரசேகரன். சமையல் செய்கிறதும், தூங்குறதும், சம்சாரிக்கிறதும் அங்கேதான். தனித்தனி அறைகள் கிடையாது. அதுதான் லயம் வீடு. ஒரு வீட்டில் இரண்டு குடும்பங்கள் வாழ்ந்தன.

சில வீடுகளுக்கு உள்ளே நுழைந்து பார்த்தோம்.

தேயிலைத் தோட்ட முதலாளிகளாயிருந்த வெள்ளைக்காரத் துரைகள், வேலையைப் பார்வையிட குதிரைகளில் வருவார்கள், துரைமார்களும், அவர்தம் குடும்பங்களும் விளையாடவும், மகிழவும் குதிரைப் பந்தயங்கள் நடந்தன. குதிரைகளைப் போஷித்து வளர்த்து அடைக்கும் இடத்துக்குப் பெயர் லாயம். வரிசை வரிசையாய் லாயங்கள். லாயங்களில் ஒரு பக்கத் திறப்பு மட்டுமே உண்டு. இன்னொரு பக்கத் திறப்பு இல்லை. குகையின் வடிவம் தான் லாயம். குதிரைகளுக்கான இந்த லாயம்தான், தமிழகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களுக்கு குடியிருப்புகளாக ஆகின. கூட்டம், கூட்டமாய் கொண்டு வரப்பட்ட தொழிலாளர்கள் அதே வடிவில் கட்டப்பட்டு, அடைக்கப்பட்டார்கள். அது "காம்ப்ரா" எனவும் பெயரிடப் பட்டது. குதிரைகள் அடைக்கப்பட்ட லாயம் தான் தொழிலாளர் குடியிருப்புகளின் "லயன்"ஆக மாறியது.

குனிந்தபடியே கொழுந்து பறித்து, குனிந்தபடியே "லயன்"கொட்டடிக்குள் நுழைந்து நிமிர முடியாமல் போன தமிழர்களின் கதைகள் அங்கே கண்ணீரும் ரத்தமுமாய்க் கிடந்தன.

மலைகளை விடக் கனமான 180 ஆண்டுக்கால வாழ்க்கையின் கனம் அவர்களுக்குத் தெரியும், மலைக் குளிரை விட, மலங்கொசு, அட்டைக்கடியை விட கொடிதான வாழ்வின் வலியை அவர்கள் அறிவார்கள்.

வாழ்வு முழுக்கவே வரலாற்றுச் சாபங்களை அனுபவித்து விட்டார்கள் மலையகத் தமிழர்கள். சிங்கள இனவாதம் மட்டுமல்ல, சொந்தத் தமிழ்த் தலைமைகளும் அவர்களை பாமரர்களாகவே வைத்திருந்து மொட்டையடித்துவிட்டன.

இலங்கையில் சமவெளித் தமிழர்களுக்கு சற்றேக்குறைய சமமாக மலையகத் தமிழர்கள் வாழ்ந்தனர். சமவெளித் தமிழர்களுக்கு இருந்த உரிமைகளும் வாழ்வு ஆதாரங்களும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இல்லை.

1948 -ல் ஆங்கிலேயர் தாமாக வெளியேறியபின் சிங்களவர் கட்சியான அய்க்கிய தேசியக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றிய போது, சமவெளித் தமிழர்களுக்கு இருந்த உரிமைகளும் வாழ்வின் வாய்ப்புகளும் படிப்படியாக இரத்து செய்யப்பட்டன. மலையக மக்கள் ஏற்கனவே உரிமைகளும், வாழ்வு வாய்ப்புகளும் அற்ற கூலிகளாய் ஒடுக்கி வைக்கப்பட்டிருந்தார்கள்.

கல்வி, வெளியுலகத் தொடர்பு, உலக அறிவு போன்ற அடிப்படைத் தரவுகள் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு வாய்க்கப் பெற்றிருந்ததால் தங்களின் வாழ்வும் இன அடையாளமும் படிப்படியாய் பறிக்கப்படுவது கண்டு, முதலில் கொதித்து எழுந்தார்கள். அடிப்படைத் தரவுகள் ஏதுமற்றவர்களான மலையகத் தமிழர்களுக்குப் பேச வாய்ப்பில்லை.

தேயிலை கொழுந்துப் பருவத்துக்கு வருகிற போது இளம் முறுகலில் நெருப்பு நிறம் வரும். கொழுந்தை பக்குவமாய் பறித்து எடுப்பதில் பயிற்சி பெற்றவர்கள் தமிழர்கள். அட்டைக் கடிக்கும் மொலுங்குக் (கொசு வகை) கடிக்கும் கொடுக்கப்பட்ட இரத்தம், தேயிலைக்கு தீ நிறம் தடவியது. இலங்கையின் அந்நியச் செலாவணியில் 60-80 சதவீதத்தை ஈட்டித் தந்தது.

உலகின் ஒன்னாம் நம்பர் தேயிலைகளில் ஒன்று இலங்கை மலையகத் தேயிலை. தமிழகத்தின் நீலகிரித் தேயிலையை விடத் தரமானது.

1999-ல் நடைபெற்ற அனைத்து நாடுகள் உலக வர்த்தக மையக் கூட்டத்தில் (WTO), 1400 பொருட்களுக்கு இறக்குமதி வரியை இரத்து செய்ய வேண்டுமென பரிந்துரை செய்தது உலக வர்த்தக மையம். பரிந்துரை என்பதிலும் ஆணை என்று சொல்வதே சாலப் பொருந்தும். அந்தத் தீர்மானத்தில் கையெழுத் திட்டு வந்தார் அப்போது மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன். கையொப்பமிட்டு வந்த ஓராண்டுக்குள் 714 பொருட்களுக்கு இறக்குமதி வரி இரத்து செய்யப்பட்டு விட்டது. இறக்குமதி வரி இரத்து செய்யப்பட்ட பொருட்களில் சர்க்கரை, மீன், மிளகாய் வத்தல், பாமாயில், பருப்பு வகைகள் எனப் பல.

இறக்குமதி வரி ரத்து செய்யப்பட்டவைகளில் தேயிலை ஒன்று. இதுவரை கல்கத்தா, கொச்சி இரண்டு துறைமுகங்கள் வழியாக மட்டுமே இலங்கைத் தேயிலை இறக்குமதி செய்யலாம்

என்றிருந்த விதி தளர்த்தப்பட்டு சென்னை, தூத்துக்குடி, விசாகப் பட்டினம் என்று எல்லாத் துறைமுகங்கள் வழியாகவும் இறக்குமதி செய்யலாம் என புதுவிதி செய்யப்பட்டது. இறக்குமதி வரி பத்து விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. இதனால் முன்னெக் காலத்தினும் கூடுதலாக இரண்டாயிரமாவது ஆண்டில் மட்டும் ஒன்றரைக் கோடி டன் இலங்கைத் தேயிலை இறக்குமதியானது. நீலகிரித் தேயிலையை விட மலிவாக விற்பனை செய்யப்பட்டது.

நீலகிரியில் படகர் இனம் முதலில் காய்கறித் தோட்ட விவசாயிகளாகத் தான் பிரசன்னமானார்கள். குறிப்பாக உருளைக் கிழங்கு அதிகமாய்ப் பயிரிட்ட விவசாயிகள் அவர்கள். 1960-களின் கடைசியில் உருளைக்கிழங்குக்கு இரு நோய் கண்டது. அதிலொன்று சுருட்டை நோய். வேரிலேயே வெம்பிச் சுருண்டன கிழங்குகள். இது ஏது, என்ன என்று கண்டறிவதற்காக இந்தோ - ஜெர்மன் திட்டம் என்ற ஒன்றை இந்திய அரசு கையெழுத்திட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் இந்த மண்ணுக்கு ஒவ்வாத, இந்த மண் ஏற்காத வேறு வேறு வேதியல் மருந்துகளையும் உரங்களையும் இறக்குமதி செய்து ஜெர்மன் கொள்ளை நடந்தேறியது. மாற்று கண்டுபிடிக்கப்படவேயில்லை. இந்தக் காலத்தில் தேயிலைக்கு விலை கூடிக்கொண்டே போனதால் படகர் இன சிறு, நடுத்தர விவசாயிகள் காய்கறி பயிரிடுதலிருந்து தேயிலைத் தோட்டத் தொழிலுக்கு படிப்படியாக மாறியிருந்தார்கள்.

தாங்கள் உற்பத்தி செய்த உள்ளூர்த் தேயிலைக்கு விலை குறைந்த போது, நீலகிரி விவசாயிகள் வெம்பினார்கள். ஆயிரம் ஏக்கர் பரப்பளவு கொண்ட டாடா தேயிலை எஸ்டேட்டுகள் வாடி வதங்கிவிடவில்லை.

பாதிக்கப்பட்ட நீலகிரி தேயிலை விவசாயிகள் போராட்டத்தில் தீவிரமானார்கள். 1990களின் கடைசியில் அது "தேயிலைக் கலகம்" எனப் பதிவாகியது.

ஓரிடத்துச் செழுப்பம், ஓரிடத்து வெறுமை. தேயிலை இறக்குமதியால் கோடி கோடியாய் இலங்கைக்கு நடக்கும் பணப் பட்டுவாடா என்னவாகிறது? இலங்கையின் முன்புற வாசல் வழியாக வெளியேறிய தேயிலை பின்புற வாசல் வழியாய் ஆயுத தளவாடங்களாய் நுழைந்தது. உலக வர்த்தக மையம் அனுப்பிய தாராளமயம் என்ற "சிட்டை"யால் பணப்பட்டுவாடா மட்டுமே அல்ல, மலையத் தமிழர்களின் குடியேற்ற வாழ்வை ஒடுக்கு

வதற்கு, தமிழர்களை காலி செய்து சிங்களர்களை குடியேற்றம் செய்வதற்கு, சமவெளித் தமிழர்களின் தமிழீழப் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்கு, நவீன ஆயுதங்கள் வாங்கிக் குவிப்பதற்கு அந்த லாபம் மடைமாற்றி விடப்பட்டது.

ஆட்சியதிகாரத்தில் தமிழர் சிங்களவர் 50க்கு 50 என்ற (பாதிக்குப் பாதி) கோரிக்கை பிரிட்டானிய ஆட்சியால் புறந்தள்ளப்பட்டது. ஆட்சி மாற்றத்தை சிங்கள இனத்தினிடம் கையளிப்புச் செய்துவிடுவது என பிரிட்டன் முடிவுசெய்து வெளியேறியது. 1948 -ல் சரிக்கு சரியாக இரு இனத்திடமும் ஆட்சியதிகாரம் கையளிக்கப் பட்டிருக்குமானால் இலங்கையின் வரலாற்று அகராதி இன்னொன்றாக வாசிக்கப்பட்டிருக்கும்.

சிங்கள பூர்ஷாவாக்களிடம் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப் பட்டதும், அவர்களுடன் நயந்து சமரசம் செய்து தங்களுக்கான நலன்களை அடையத் தொடங்கினர் தமிழ்த் தலைவர்கள். அவ்வாறான தமிழ் பூர்ஷாவாக்கள் - ஜி.ஜி. பொன்னம்பலம், தொண்டைமான், நேசையா, எஸ். சுந்தரலிங்கம் என இவர்கள் சிங்கள பூர்ஷாவாக்களுடன் ஆயிரமாயிரம் சுயநலன்களாலும் தொடர்புகளாலும் பிணைக்கப்பட்டிருந்தனர்.

தமிழீழப் பகுதித் தலைவர்களும் மலையகத் தலைமைகளும் தனித்தனியாக வேறுபட்டே நின்றனர். மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது, ஈழத்தமிழர்களும், மலையகத் தமிழர்களும் ஒருங்கிணைந்து போராடியதில்லை. ஈழத் தமிழ்த் தலைவர்களுள் தந்தை செல்வநாயகம் ஒருவரே அந்த மனித உரிமை பறிப்புகளைக் கண்டித்து நின்றார்.

ஒரு கட்டத்தில் மலையகத் தமிழர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பலியிட்டு, இதற்காக ஜி.ஜி. பொன்னம்பலம் அமைச்சர் பதவி ஏற்றார். தொண்டைமான் அமெரிக்காவின் விசுவாசமான முகவராக இருந்ததால், அதன் கையாளான யு.என்.பி. அரசாங்கத்துடன் இணைந்தார். 1960-ல் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் நாடாளுமன்ற நியமன உறுப்பினராகவும் ஆனார்.

மலையகத் தமிழ்த் தலைவர்களின் துரோகத்தால் மலையகத் தமிழர்களின் உரிமைகளுக்கு ஒவ்வொரு வெட்டாக விழுந்தது. 1949-ல் பதிவுக் குடியுரிமைச் சட்டம், இந்திய - பாகிஸ்தானியர் சட்டம் என்ற பெயரில் கொண்டு வரப்பட்டது. அதே ஆண்டில்

கொண்டுவரப்பட்ட தேர்தல் திருத்தச் சட்டம் குடியுரிமை இல்லாதவர்களுக்கு வாக்குரிமை இல்லை என அறிவித்தது.

"மலைவாழ் கடைசித் தமிழனை 24 மணி நேரத்துக்குள் வெளியேற்றுவேன்" எனும் பிரகடனம் உதிர்த்தபடி 1956-ல் ஆட்சிக்கு வந்தார் திருவாளர் பண்டார நாயக்கா. வந்ததும் தனிச் சிங்கள மொழிச் சட்டத்தை நிறைவேற்றினார். கல்வி பெறுதல், அதனால் வேலை வாய்ப்பு, தொழில் முனைவு என்ற சட்டங்களுக்குள் வராத படிப்பறிவு அற்ற பாமர மலையக மக்களை இது எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. சமவெளித் தமிழர்கள் இதை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தினர். ஆனால் வாக்குரிமை பறிப்பு, குடியுரிமை பறிப்பு, மலையக மக்களை இலங்கையின் அரசியல் வாழ்விலிருந்து அப்புறப்படுத்தியது.

மலையகத் தமிழர்கள் தாக்கப்பட்டு, வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பற்ற வெளி உருவாக்கப்பட்டது. அந்த இடங்களில் சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டு நடத்தப்பட்டது.

1964 அக்டோபர் 30ம் நாள் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தின்படி, மலையகத் தமிழர்கள் (அவர்களின் ஷரத்துப்படி இந்திய வம்சாவழியினர்) ஒன்பது லட்சத்து 75 ஆயிரம் பேரில் 5 லட்சத்து 25 ஆயிரம் பேருக்கு 15 ஆண்டுகளுக்குள் இந்தியக் குடியுரிமை வழங்குவது. அதே கால அளவுக்குள் மூன்று லட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவது, மீதியுள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு 1974-ம் ஆண்டு தீர்மானிப்பது.

1974ல் சிறிமா - இந்திரா ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியாவில் 75 ஆயிரம், இலங்கை 75 ஆயிரம் பேர் என பங்கிட்டுக் கொள்ள ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தப் பிரச்சினைக்குப் பாத்தியப்பட்டவர்கள் மலைவாழ் தமிழர்கள்.

இவர்களின் கருத்தைக் கேட்காமல், இரு நாட்டின் தலைமைகள் மனித உயிர்களைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்ட அநாகரிகம் அரங்கேறியது.

1978க்குப் பிறகு தான் 5 சதவீத கல்வியறிவாவது மலையகத் தமிழர்கள் பெற்று வருகிறார்கள். இந்த 5 சதவீதம் ஆரம்பக் கல்வி அளவுதான்.

1956-ல் சிங்களமே ஒரே ஆட்சி மொழி என அரசியல் சட்டத்தில் ஏற்றப்பட்டது. 1972ல் பவுத்தம் ஒன்றே தேசமதம் என அரசியல் சட்டம் வந்தது. 1964-ல் சிறிமாவோ பண்டாரநாயக - சாஸ்திரி ஒப்பந்தம். 1974-ல் சிறிமா - இந்திரா ஒப்பந்தம். 1978-ல் விகிதாச்சாரப் பிரதி நிதித்துவமுறையை அறிமுகப்படுத்தி அரசியல் சட்டம் என சிங்கள வெறியாடிக் கொண்டு போய், எந்தக் கொட்டுக்கும் அடங்காத சாமியாய் ஆடியது. சமவெளி இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தபோதுதான் சாமி மலையேறியது.

வடக்கு, கிழக்கு பகுதிகள், மலையகம் என்று தனிப்படுத்திப் பார்க்காது, எல்லோரும் தமிழர் என்று பார்க்கும் பார்வை இப்போது முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறது. வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கும், மலையகப் பகுதிக்கும் பிரச்சினைகள் அடிப்படையில் வேறுபாடு இருந்தாலும் இரண்டுமே தமிழ்ச் சமூகத்திற்கான பிரச்சினை தாம். மொழி, இனம், பண்பாட்டு அடிப்படையில் இரண்டுமே ஒரு ரத்தத்தின் பிரச்சினைதான்.

வடக்கு - கிழக்கு, மலையக விடுதலை ஒற்றுமைதான் சிங்களப் பேரின வெறியைத் தடுக்கும்.

இப்போது முன்பகுதியில் தரப்பட்ட சிவப்பிந்தியக் கவிதையை மறுபடி வாசியுங்கள்.

# புதிய மனிதன்

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் போராளிகளுடன் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது.

"இங்கு ஈழத்தில் சாதிய உணர்வு மேலோங்கி நிற்பதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொருவரும் சாதியத் தன்னிலையை உள்ளுக்குள்ளும், செயல்முறைகளிலும் வைத்துக்கொண்டு நடமாடுவதாகக் கூறப்படுகிறது. உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்ப் பகுதிகளில் சாதிய செயல்பாடுகள் வெளிப்படுகிறபோது, என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள்? புலிகள் இயக்கத்திலேயே சாதிய வேறுபாடு இருக்கிறதா?"

இன்குலாப் கேட்டார்...

"நான் மலைநாட்டிலிருந்து வந்தவள். எனக்கு என் சாதி தெரியாது, இங்கிருக்கிற யாருக்கும் நான் எந்த சாதியைச் சேர்ந்தவள் என்று தெரியாது. இதோ இருக்கிறாளே தமிழ்விழி, இவள் ஒரு போராளியைத்தான் திருமணம் செய்து கொண்டிருக் கிறாள். அவர் இவளுடைய சாதி என்னவென்று அறியார். எமது இயக்கத்துக்குள்ளே சாதி பாராட்டுவதில்லை. சாதி பாராட்டு கிறவர்கள் இயக்கத்துக்குள்ளே இருக்கமுடியாது".

அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெளிவாகப் பேசினார். சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசமற்ற நடைமுறையின் மீதான விளக்கமாக இருந்தது அவர் பேச்சு.

"இயக்கத்துக்கு வெளியே உங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சாதி வித்தியாசம் நிலவுகிறதாக கூறப்படுகிறது".

"வெளியே இருப்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். எங்களைப் போலவே, மக்கள் இருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எங்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் பிரச்சினைகளில் சாதிப் பிரச்சினை தலையெடுக்குமானால், முதலில் அதைக் களைவதுதான் எங்கள் வேலை. அதை நாங்கள் அனுமதிப்ப தில்லை".

தமிழினி குறிப்பிட்டதுபோல சாதி பாராட்டக்கூடாது என்ற உணர்வு புலிகள் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கு வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் கவனத்திற்கு வருகிறபோது, அங்கு போய் நின்று போராளிகள் கடுமையான நிலைப்பாடு எடுக்கிறார்கள். சமூகநீதியை உருவாக்காமல் சமத்துவ ஈழம் உருவாகாது என அவர்கள் நம்புகிறார்கள்.

தென்மராட்சி பேருந்து நிலையத்தின் கீழ்ப்புறமாய் உள்ள தளங்கிளப்பு சாலையில் உள்ள அந்த மசூதி, ஸெல்லடிகளால் தகர்ந்து இடிபாடுகளாய்க் கிடந்தது. அதைத் தாண்டியதும் ராணுவ அரண். சாலையில் பெரிய பெரிய மணல் மூட்டைகள் கொண்டு மறித்து தடுப்பு உண்டாக்கி, உள்ளில் முடங்கிக் கொண்டிருந்தது ராணுவம். மக்களின் நடமாட்டம் அதறகப்பால் தடை செய்யப்பட்டிருந்தது. அதற்கப்பால் உலகம் இருக்கிறது என்று தெரிவிப்பதுபோல பரந்த வயல்வெளிகள்.

வயல்வெளிகள் மேலே அலை அலையாய் நாரைகள், ஏதோ ஒரு பறவை முன்நடத்த மற்ற நாரைகள் வட்டமடித்து, நரைச்சுருள் போல் நெளி நெளியாய் நீச்சலடித்துச் சென்றன. அவைகளுக்கு கீழே விவசாயிகள் வேலையில் மூழ்கி யிருந்தார்கள். அவர்களுடைய அன்றாட ஜீவிதம் பக்கத்திலிருந்து பயமுறுத்தும் ராணுவ அரணுக்காக நின்றுவிடவில்லை.

பேருந்து நிலையம் முன்பு, இடதுபக்கத்திலிருந்த ஒருவரை எங்களுடன் வந்த போராளி ஒருவர் மிரட்டிக் கொண்டிருந்தார். அந்த மனிதர் உண்மையாகவே இவரைக் கண்டு நடுங்கினார். இடிபாடுகளில் தொங்கிக் கொண்டு கிடந்த மசூதியைப் பார்த்து விட்டு வரும்வரை மிரட்டல் நீடித்தது. விசாரித்தபோது, போராளி சொன்னார்.

"இவர் செருப்புத் தைக்கும் தொழிலாளி, தொழிலையும் ஒழுங்காகச் செய்வதில்லை. தொழிலை ஒழுங்காகச்

செய்தாத்தானே குடும்பத்தை ஒப்பேத்திக் கொண்டு போகமுடியும். குடும்பத்துக்கும் கொடுப்பதில்லை. எப்பவும் குடிதான்".

ஏற்கனவே எச்சரித்திருக்கிறார்கள். ஆனால் அவர் திருந்தவில்லை. மிரட்டல் இதனால்தான்.

யாழ்நகர், தென்மராச்சி, சுங்கத்தரணை, கிளிநொச்சி போன்ற இடங்களில், விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகங்கள் இயங்குகின்றன. இங்கு, தங்கள் குறைகளை, குடும்பப் பிரச்சினைகளை மக்கள் முன்வைக்கிறார்கள்.

"என்ன மாதிரிப் பிரச்னைகள்?"

"சொத்துத் தகராறு, மோசடி, காதல், உறவுகளுக்குள் சண்டை, சச்சரவு என்று எல்லாப் பிரச்சினைகளையும் கொண்டு வருகிறார்கள். வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்து விட்டோரது வீடுகளை ஒப்பந்தம் போட்டு எடுத்துக் கொள்வது, குடியமர்த்துவது என்று பல பிரச்சினைகளுக்கும் ஆலோசனை கேட்டு வருகிறார்கள்".

"தீர்த்துக் கொடுக்கிறீர்களா?"

"ஓம்" - ஈழத்தமிழில் பதில் வந்தது.

நாங்கள் கிளிநொச்சி அரசியல் துறை அலுவலகம் போயிருந்த போது, ஒரு கிராமத்திலிருந்து ஏழெட்டுப்பேர் வந்திருந்தார்கள், சாதியைக் காட்டி திருமண மறுப்புச் சொல்வதாக பெற்றவர்கள் மீது புகார். வெளியே தாழ்வாரத்தில் அவர்கள்; உள்ளே போராளிகள்; அந்தப் பிரச்சினை குறித்து தமக்குள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

மாநாட்டில் நான்காம் நாள் நிகழ்வில் மாலையில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் உரை நிகழ்த்தினார்.

"தனி ஈழம் அமைகிறபோது, புலம்பெயர்ந்து வெளிநாடு களில் வாழுகிற தமிழர்கள் திரும்பி வருவார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே சாதிய உணர்வுகளைக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருப்பவர்கள். அந்தந்த நாடுகளில் தமக்குள்ளே ஊட்டி வளர்த்துக்கொண்ட சாதியுணர்வையும் தம்மோடு அழைத்து வருவார்கள். இன்ன மதம், இன்ன சாதி என்ற உணர்வோடுதான் செயல்படுவார்கள். இதை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்?

"நாங்கள் தான் ராமனைக் கடவுளாக, இராவணனை அரக்கனாகப் பார்க்கிறோம். ராமனைப் புனிதனாக, இராவணனைத் தீயவனாக சித்தரிக்கிற பார்வை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். இராவணன் இந்த மண்ணின் மைந்தன். மண்ணின் மைந்தர்களாகிய நீங்களும் ராவணனை தீயவனாக எப்படிக் காணமுடிகிறது? வரலாற்றை மாற்றி எழுதுவதற்காக நிற்கிற நீங்களும் வரலாற்றை எப்படி மாற்றி உணருகிறீர்கள் என்பதைக் காணுகிறபோதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படை நமக்குள் ஆழமாக வேரூன்றியிருக்கிற இந்துத்துவாக் கருத்துக்கள்தாம். இந்துத்துவாக் கருத்துக்களிலிருந்து விடுபடாமல் ஈழவிடுதலை சாத்தியப்பட்டாலும் உண்மையான அர்த்தத்தில் அது விடுதலையாக இருக்குமா?

"ஈழத் தமிழர்கள் தங்களை இந்துக்களாக உணரக் கூடாது. இந்துமத, வர்ணாசிரமக் கோட்பாட்டில் தான் சாதி வாழுகிறது. சிங்களவர்கள் தங்களை பௌத்தர்களாக உணருகிறார்கள் என்பதாலேயே தமிழர்கள் தங்களை இந்துக்களாக உணரக்கூடாது. தமிழர்கள் தமிழர்களாகத்தான் உணர வேண்டும்".

- என்று குறிப்பிட்டுப் பேசினார்.

திருமாவளவனின் சிறப்புரைக்குப் பின் மாநாட்டுப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் நிறைவுரை - திருமாவளவன் எழுப்பிய ஐயங்களுக்குப் பதிலுரையாக அமைந்தது.

"நாங்கள் ஆயுதங் தாங்கி களத்தில் நிற்கிறோம். நாங்கள் ஆயுதங் தாங்கியது எதற்காக? ஈழத்தின் எல்லைகளை விடுதலை செய்வதற்காக மட்டுமேயல்ல. எமது தேசியத் தலைவர் ஆயுதம் ஏந்தச் சொன்னது முழுமையான விடுதலையைக் காண்பதற்காக. முழுமையான விடுதலை என்பது சாதியற்ற தமிழீழம். சமத்துவம் உருவாக்கப்படுகிற தமிழீழ விடுதலையே எங்கள் எல்லை.

"போராளிகளிடம் சாதிய உணர்வு சிறிதளவும் இல்லை. இருந்தால் போராளிகளாக முடியாது. இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித் தருவதற்காக போராளிகள் இரவும் பகலும் உழைத்தார்கள். அவர்கள் இந்த அரங்கத்தைக் கூட்டிப் பெருக்கினார்கள். நாற்காலிகளைத் துடைத்தார்கள். இவர்கள்

அனைவரும் இயக்கத்தில் இடைநிலைத் தளபதிகள். அதற்கடுத்த நிலைத் தளபதிகள், எல்லோரும் போராளிகள். போராளிகள் 150 பேர் உங்களுக்கு உணவு பரிமாறினார்கள். கழிவறைகளைக் கழுவினார்கள். இவர்கள் சாதி பார்த்து தொழில் செய்யவில்லை. சாதி தெரியாமலே, சாதி எதுவென உணராமலே கடமை செய்தார்கள்.

"அவர்களுக்கு நான் நன்றி சொல்லமாட்டேன். அது அவர்களுக்குப் பணி. இன்று இந்தப் பணி முடிந்துவிட்டால், நாளைக்கு அடுத்த பணிக்குச் சென்று விடுவார்கள்.

"திருமாவளவன் கருதுவது போன்ற தமிழீழம் அமைந்தால் அது மக்களுக்குச் செய்கிற மிகப்பெரிய துரோகம். வரலாற்றுத் துரோகம். சாதிப் பிரிவினைகள் பாராட்டுகிற தமிழீழம் அமையுமென்றால் அந்தத் தமிழீழம் எங்களுக்கும் வேண்டாம். உங்களுக்கும் வேண்டாம்".

புதுவை இரத்தினதுரையின் வாசகம், விடுதலை இயக்கத்தை, விடுதலைப்போரை எதற்காக, எதை நோக்கியதாக எடுத்துச் செல்ல வேண்டும் என்பதின் தெளிவான விடையாக அமைந்திருந்தது.

எழுபது தொடக்கத்தில் இருந்த ஈழம் அல்ல, அந்த ஈழம் என்றைக்கோ எங்கேயோ காணாமல் போய்விட்டது. இது புதிய ஈழம்.

இன்றைக்கு இருப்பவன் 1970-க்கு முன்னாலிருந்த தமிழன் அல்ல, இவன் புதிய தமிழன்.

மாநாட்டில் தனது உரையில் கவிஞர் நிலாந்தன் குறிப்பிட்டது போல், இப்போது இருக்கிற இவன் கோபக்காரத் தமிழன்.

விடுதலை நேசிப்பில் வாழ்வை உருக்கிக் கொண்ட இந்த கோபக்கார தமிழனுக்கு இன்று முப்பது வயது நிறைவடைகிறது. விடுதலைப்புலியாக அவன் எழுந்தது 1975 மே ஐந்தாம் நாளில்.

போரே அவர்களுடைய வாழ்க்கையாகிவிட்டது. போரியல் அவர்களுடைய வாழ்வியலாக வடிவெடுத்துக் கொண்டது. அரசியல், வரலாறு, கல்வி, பண்பாடு எல்லாமே போரியலோடு தொடர்புடையதாய், போரியல் குணாம்சம் கொண்டதாய் பரிணாமம் கொண்டுவிட்டது. இனி விடுதலைக்குப் பின்னான காலமே, அவர்களுக்கு இன்னொரு புதிய வாழ்வியலை வழங்கும்.

1724 - இந்தியாவை அடிமை கொள்ள நடந்த பிளாசியுத்தம், ஒரு திருப்புமுனை. பிளாசியில் மன்னர் ஸிராஜ் உத்தௌலாவை தோற்கடித்த ராபர்ட் கிளைவ், அந்த நகர் வழியாக படை நடத்தி வருகிறான். படையில் இருந்தவர்கள் 170 சிப்பாய்கள். இந்த சிப்பாய்கள் நடந்து போவதை நகரின் வீதிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். நெஞ்சு நடுங்கத்தான் ராபர்ட் கிளைவ் நகரைக் கடக்கிறான். நகர எல்லை தாண்டிய பிறகே, நெஞ்சுப் படபடப்பு அடங்கி ஆசுவாசம் கொள்கிறான். அப்போது அவன் சொன்னான்.

"இப்போதுதான் உயிர் வந்தது. வழிநெடுக் கூடியிருந்த மக்கள் கோபமடைந்து, ஆளுக்கொரு கல் எடுத்து வீசியிருந்தால் கூட நாங்கள் அத்தனை பேரும் இல்லாமல் போயிருப்போம்".

வரலாற்றின் முக்கிய சந்திப்புகளில் மக்கள் மௌனம் கொண்டதை பிளாசி யுத்தம் நமக்குத் தெரிவிக்கிறது. அது மக்களுடைய குற்றமல்ல, வரலாற்றுப் போக்கை முன்னுணர்த்தி, அவர்களை காரியமாற்றக் கற்றுக் கொடுக்காத வழி நடத்திகளின் குற்றம். அவர்கள் கோபமடையக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். வரலாற்றில் அவர்களுக்குரிய வகிபாகம் ஆற்றிட வழி நடத்தியிருக்க வேண்டும்.

இன்று ஈழத்தில் ஆதிக்கக்காரர்களின் முகம் ரத்தக் காயம் கொள்ளும்படி, முதல் கல்லெறிகிறவன் போராளியாக இருக்கிறான். தொடர்ந்து, இணைந்து கல்லெறிகிறவர்களாக மக்கள் இருக்கிறார்கள்.

மக்கள் மீது வீசப்படும் ஒவ்வொரு அடக்குதலும், போர்க் குணத்தில் ஒவ்வொரு படியாக அவர்களை ஏற்றி வைக்கிறது. வாழவே முடியாதபோது, போராடித்தான் வாழுவது என்பது நியதி.

களத்தில் பலியாகி வீரச் சாவு அடைந்தவர்களின் குடும்பங்களின் குழந்தைகள் அனாதையாகி விடாமல் காக்கும் "செஞ்சோலை" வன்னியில் இயங்குகிறது. மூன்று குழந்தைகளின் தாய், தன்னுடைய மூன்று குழந்தைகளையும் செஞ்சோலை இல்லத்தில் விட்டுவிட்டு, போரில் கலந்து களச்சாவு எய்துகிறாள்.

அதேபோல் மூன்று குழந்தைகளின் தந்தை அவர். போர் எழுச்சிக் குழுக்கள், போராளிகளுக்கு பின்புலமாக மக்களின்

ஆதரவை நாடியபடி கிராமங்களுக்குச் சென்றபோது, தனது குழந்தைகளை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு, போர்க் களத்திற்கு நேரே செல்கிறார்.

இன்றைய ஈழமக்கள் ஆதிக்கப்படை நடந்தபோது, வீதியோரம் நின்று வேடிக்கை பார்த்தவர்கள் அல்ல, அவர்கள் உரு அழிந்தவர்கள்; பழைய உரு அழிந்து, புதிய உருத்திரட்சி கொண்டவர்கள்.

அவர்கள் சொல்கிறார்கள்.

"எங்களுக்கு ஆயுதந் தாருங்கள், ஆயுதந் தாங்கிப் போரிட பயிற்சி அளியுங்கள். யுத்த களத்தில் போராளிகள் மட்டுமே நின்று போரிட வேண்டியதில்லை. நாங்களே எதிரிகளை எதிர் கொள்வோம்" *(வீரகேசரி - 16-8-2005)*.

அமைதி ஒப்பந்த காலத்திலும் ராணுவம் நடத்தும் அட்டூழியங்களைக் கண்டு கொதிக்கும் யாழ் மக்களின் வாசகம் இது.

ஈழத்தில் நாங்கள் புதிய தமிழனைக் கண்டோம். புதிய மனிதர்களைத் தரிசித்திருந்தோம்.

★★★



சூரியதீபன் வெறும் பார்வை யாளனாக நிற்காமல், தோற்றத் துக்குப் பின்னுள்ள சூத்திரக் கயிறுகளைப் பிடித்து இழுத்துப் பார்க்கும் ஒரு சமூக விஞ்ஞானி யாகவும் நிற்கிறார்...

...போர் நடந்த அந்தப் பூமியை தோழர் சூரியதீபன் அள்ளிக் கொண்டு வந்திருக்கிறார். அந்த மண்ணின் கதவுகளைத்
திறந்து விட்டிருக்கிறார்.

இது தமிழகத்தின் மனங்களை அசைக்கும் என்று நம்புகிறேன்.

-இன்குலாப்

தோழமை வெளியீடு